# நீயும் நானும் ஒன்று

கலைவாணி சொக்கலிங்கம்

## உள்ளே...


1. நீயும் நானும் ஒன்று 5

2. இளைய இதயங்கள் இனிய ராகங்கள் 140


# நீயும் நானும் ஒன்று

## 1

வீசும் காற்றினில் ஒலித்துக்
கொண்டே இருக்கிறது - நீயும்
நானும் பேசிய வார்த்தைகள்!

திருவனந்தபுரம். விருந்தினர் மாளிகையின் மூன்றாவது மாடியின் பால்கனியில் மூங்கில் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்திருந்தான் நந்தகுமாரன். அழகிய சிவந்த முகம் லேசாய் வாடியிருந்தது. கருகருவென சுருண்ட கேசம்

வாரப்படாமல் அலட்சியமாய் கிடந்தது. காந்தக் கண்கள் துள் நீரோடு கலங்கியிருக்க, எப்போதும் குடி கொண்டிருக்கு புன்னகையைத் தொலைத்த உதடுகள் உலர்ந்து வெடிப்போ தெரிந்தது.

உயர்ந்து நின்ற பாக்குமரத்தையே வெறித்து கொண்டிருந்த கண்களில் தேங்கியிருந்த நீர் விழட்டும வேண்டாமா என யோசித்துக் கொண்டிருந்த வேளையில் பால்கனியின் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு கலைந்தான் நந்தகுமாரன்.

தலைக்குக் குளித்து முடித்து தலையைத் துவட்டி கொண்டே வந்த ராஜகுமாரன் வியப்புடன் தம்பியை ஏறிட்டான்.

"நந்தா! இவ்வளவு சீக்கிரம் எழுந்திட்டியா? வாட் எ சர்ப்ரைஸ்!"

அண்ணனின் உற்சாகக் குரலில் வலுக்கட்டாயமா சிரித்து விட்டு எழுந்து நின்றான் நந்தகுமாரன்.

"என்ன அண்ணா? இப்பவே குளிச்சிட்டு எங்கே கிளம்பிட்டே?"

"நேத்து நைட் சாப்பிடும்போதே சொன்னேனே... மறந்துட்டியா?"

"சாரிண்ணா... ஞாபகம் இல்லை."

"நம்ம மானேஜரோட பொண்ணுக்கு இன்னிக்கு கல்யாணம். கல்யாணத்தை அட்டெண்ட் பண்ணிட்டு அப்படியே ஓட்டலுக்குப் போயிடுவேன்."



"ஓ... அப்போ இன்னிக்கும் என்கூட இருக்க மாட்டியா?"

தம்பியின் முகம் சோர்ந்து போனதைக் கண்டு அவனை நெருங்கினான் ராஜகுமாரன்.

"என்னாச்சு நந்தா? ஏன் முகமெல்லாம் வாடியிருக்கு. உடம்பு சரியில்லையா?" என்றவன் தம்பியின் முகத்தை, கையைப் பரிவோடு தொட்டுப் பார்த்தான்.

"ம்ப்ச்... அதெல்லாம் ஒண்ணுமில்லண்ணா."

"நைட் நீ சரியா சாப்பிடக்கூட இல்லையே. ஏன்டா... எதுவும் பிரச்சினையா? சொல்லுடா!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லண்ணா. நீ கல்யாணத் துக்குப் போகணுமே. கிளம்பு."

"அது இருக்கட்டும்டா. ரெண்டு நாளாவே உன் முகம் சரியில்லயே. சன்டே ஒரு நாள் தங்கவே அவ்வளவு யோசிப்பே. இப்ப வந்து நாலு நாளாகுது. அமைதியா இருக்க. சென்னைக்குப் போக வேண்டாமா?" கேட்டுக் கொண்டே தன் அருகே அமர்ந்த அண்ணனை தயக்கமாய் ஏறிட்டான் நந்தகுமாரன்.

"அண்ணா..."

"என்னடா... சொல்லு."

"நான்... நான் இனிமே... இங்கேயே இருந்திடவா?"

ஆச்சர்யமாய் நிமிர்ந்தான் ராஜகுமாரன். 'தந்தை எத்தனை முறை சொன்னாலும் கேட்காமல் வார இறுதி

நாளில் வந்துவிட்டு மறுநாளே கம்பெனி வேலை என்று பறந்து விடுபவன் இப்போது ஏன் இப்படிச் சொல்கிறான்? என்ன ஆயிற்று?'

"நந்து! என்னடா சொல்றே?" வியப்பாய்க் கேட்டான்.

"ஆமாண்ணா நான்... உன் கூடவே இருந்திடுறேன்."

"அப்போ... நம்ம கம்பெனியை யார் பார்த்துப்பா...?"

"அது... அதை வேண்டுமானால் அப்பா பார்த்துக் கொள்ளட்டுமே..."

"அப்பாவா? என்ன நந்து பேசுகிறாய். அப்பாவும் அம்மாவும் மலேசியா போய் முழுதாய் ஒரு வாரம்கூட ஆகவில்லையே. நம்ம அஞ்சலிக்கு இது ஒன்பதாம் மாதம். பிரசவம் முடிஞ்சு கொஞ்ச நாள் கூடவே இருந்து குழந்தையையும் அவளையும் கவனிச்சுக்க வேண்டாமா? அதுக்காகத்தானே போயிருக்காங்க."

"ஆமாம் இல்ல... அவங்க எப்போண்ணா வருவாங்க?" நந்தகுமாரனின் குரலில் ஏமாற்றமும் இயலாமையும் தொனித்தது.

"குறைந்தபட்சம் மூணு நாலு மாசம் ஆகுமேடா."

"நா... நாலுமாசம் ஆகுமா? அப்போ... அது வரைக்கும் கம்பெனியை யார் பார்த்துக்கிறது? நம்ம ஸ்ரீராம்கிட்ட பொறுப்பை ஒப்படைக்கலாமா?"

"வெயிட் நந்து! என்னாச்சு உனக்கு? அவன் உன்னோட பி.ஏ.டா. அவன் எப்படி பொறுப்பை ஏத்துக்கிட்டு செய்வான்? அது எப்படி சரியா வரும்?"



"வேற என்ன பண்ணலாம் அண்ணா?"

"முதல்ல என்கிட்ட உண்மையை மட்டும் பேசு நந்து. சென்னையில என்ன நடந்தது?" கண்களில் கூர்மையோடு ராஜகுமாரன் கேட்டதும் சற்று தடுமாறினான் அவன்.

"அது... வந்து... ஒண்ணுமே நடக்கலையே."

"பொய் பேசாதே நந்து. உனக்குப் பொய் சொல்லத் தெரியாது."

பொசுக்கென கண்ணீர் வழிந்தது. பதறிப் போனான் ராஜகுமாரன்.

"நந்து! என்னடா ஆச்சு. ஏன் அழறே?" பதறியவனின் கைகளைப் பற்றிக் கொண்டான் நந்தகுமாரன்.

"அண்ணா! நான்... நான் ஏமாந்துட்டேண்ணா..."

"நந்து! என்னடா சொல்றே?"

"ஆமாண்ணா. நான் ஏமாந்திட்டேன். ரொம்ப மோசமா ஏமாந்திட்டேன்." முகத்தை மூடிக் கொண்டான் நந்தகுமாரன். அவசரமாய் கைகளை விலக்கி விட்டான் ராஜகுமாரன்.

"என்னடா சொல்றே? யார்கிட்ட ஏமாந்தே... எப்படி?"

"அண்ணா! நம்ம கம்பெனியில..." எனத் தொடங்கியபோது வீட்டிற்குள் தொலைபேசி அடிக்கத் தொடங்கியது.

"ச்சே! இது வேற... நேரம் காலம் தெரியாம..." சலித்துக் கொண்டே ராஜகுமாரன் எழுந்து வீட்டினுள் செல்ல, கலங்கியிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டே அண்ணனின் பின்னே சென்றான் நந்தகுமாரன்.

"ம்... கிளம்பிட்டு இருக்கேன். வந்திடுறேன். நீங்க கிளம்புங்க. நான் கார்ல வந்திடுறேன். ஓ.கே." என்றவாறு போனை வைத்தான்.

"யாருண்ணா?"

"நம்ம ரித்தீஷ்தான். வொர்க்கர்ஸ் எல்லாரும் மேரேஜுக்கு போக புறப்பட்டுட்டாங்களாம்."

"நீ கிளம்புண்ணா. நாம அப்புறமா பேசலாம்."

"இல்ல... நீ சொல்லு... என்ன ஏமாந்தே?"

"அண்ணா... அதைப் பேச நிறைய டைம் வேணும். எந்த இடையூறும் இல்லாம பேசணும். முதல்ல நீ கல்யாணத்துக்குப் போ."

"சரி, அப்போ நீயும் கிளம்பு."

"நானா?"

"ஆமான்டா. உன்னைத் தனியா விட்டுட்டுப் போக எனக்கு மனசில்ல. நீயும் வா. கல்யாணத்துக்குப் போயிட்டு நாம நேரே வீட்டுக்கு வந்திடலாம். சீக்கிரம் குளிச்சிட்டுக் கிளம்பு."

"இல்லண்ணா. நான் இன்னும் ஷேவ் கூட பண்ணல. ஷேவ் பண்ணி குளிச்சிட்டுப் புறப்பட்டு வர்றதுக்குள்ள கல்யாணமே முடிஞ்சிடும். நீ போயிட்டு வாண்ணா. நான் குளிச்சிட்டு சாப்பிட்டு வெயிட் பண்றேன்."

"நந்து! நானும் மேரேஜுக்கு போகாம இருந்துட றேனே?"



"அண்ணே! பசுபதி எத்தனை வருஷமா நம்மகிட்ட மானேஜரா இருக்கார். அப்பாவும் இப்போ ஊர்ல இல்ல. நீ கண்டிப்பா போகணும். போயிட்டு வாண்ணா."

"ம். சரி... நீ சாப்பிட்டு ரெஸ்ட் எடு... எதைப்பத்தியும் கவலைப்படாதே. நான் வந்தப்புறம் எல்லாம் பேசிக்கலாம். சரியா?"

"சரிண்ணா."

"சரி, நான் கிளம்பறேன்" என்றவாறு தன் அறைக்குள் நுழைந்து பத்தே நிமிடத்தில் தயாராய் வந்து நின்ற அண்ணனைப் பார்த்து விழிகளை விரித்தான் நந்தகுமாரன்.

"அண்ணா! இந்த ட்ரெஸ்ல நீ ரொம்ப அழகா இருக்க."

"சரிடா... டயமாச்சு. வரட்டுமா?" தம்பியின் கன்னத்தில் லேசாய்த் தட்டிவிட்டு புறப்பட்டான் ராஜகுமாரன்.

புன்னகையோடு வாசல் வரை வந்து அண்ணன் காரில் ஏறி கையசைக்கும் வரை நின்று வழி அனுப்பிவிட்டு, அண்ணனின் கார் கண்ணை விட்டு மறையும் வரை நின்று கொண்டே இருந்தான் நந்தகுமாரன்.

அதுவரை மறைந்திருந்த சோகம் மீண்டும் வந்து சூழ்ந்து கொள்ள, கதவைப் பூட்டிவிட்டு மாடிப்படியேறி தன் அறைக்குள் வந்து நுழைந்து கொண்டான். துக்கம் தொண்டையை அடைக்க, மீண்டும் விழிகளில் நீர் சுரந்தது.

"பார்க்க அழகா இருக்கே. நிறைய படிச்சிருக்கே. நிறைய பணம் வெச்சிருக்க. உன்னைக் கல்யாணம்

பண்ணினா கடைசி வரை சந்தோஷமா இருக்கலாம்னு நினைச்சுத்தான் நீ கேட்டதும் சம்மதிச்சேன். அதுக்காக உன் உடம்புல இவ்வளவு பெரிய குறையை வச்சிக்கிட்டு எந்த தைரியத்துல என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படலாம்.'

'இதோ பார் நந்தா. உன்னோட குறை இப்பவே தெரிஞ்சதேன்னு சந்தோஷப்பட்டுக்க. ஏன்னா கல்யாணத்துக்குப் பிறகு தெரிஞ்சாலும் நான் இதே முடிவைத்தான் எடுத்திருப்பேன். கணவன் கண்கண்ட தெய்வம்னு நினைக்கிற ரகமில்லை நான். புரிஞ்சுதா? அதனால கோழை மாதிரி அழறதை விட்டுட்டு உனக்குன்னு எவளாவது நொண்டியோ, கூனோ, குருடோ கிடைப்பா. அவளைப் போய் கட்டிக்க... போ.'

எத்தனை முறை மறக்க நினைத்தும் மறக்க இயலாத வார்த்தைகள்.

'மீண்டும் சென்னைக்கு சென்று அவள் முகத்தில் விழிக்க முடியாது. அவளை மறந்துவிட்டு அவளது பேச்சுகளை மறக்க முடியாமல் இந்தக் குறையோடு வாழவும் முடியாது.

அண்ணா! என்னை மன்னித்து விடு. நம் தங்கையை, பெற்றவர்களை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நான் வேண்டாம் அண்ணா. உங்களுக்கு பாரமாய் தடையாய் இருக்கும் நான் வேண்டாம். நான் போகிறேன். என்னை மன்னித்து விடு.'

கண்ணீரை வழித்தெறிந்து விட்டு தன்னுடைய அலமாரியைத் திறந்து அதில் மறைத்து வைத்திருந்த



பொருட்களை எடுத்தான். அனைத்துமே ஆசை வரிகளை கொட்டியிருந்த வாழ்த்து அட்டைகள், கடிதங்கள், புகைப்படங்கள்.

அனைத்தையும் அள்ளிக் கொண்டு போய் குளியலறைக்குள் போட்டுக் கொளுத்தினான். அவளது சுவடுகள் எதையும் விட்டு வைக்காமல் அழித்துவிட்டு திருப்தியாய் அறையை சுற்றிப் பார்த்துக் கொண்டான்.

அண்ணனுக்குத் தகவல் சொல்லிவிட்டுப் போக வேண்டுமே. ஒரு முடிவோடு டேப்பை ஆன் பண்ணினான். சில நிமிடம் பேசிவிட்டு அதை செட் பண்ணிவிட்டு அறை விளக்கின் சுவிட்சோடு கனெக்ஷன் கொடுத்து விட்டு கதவைப் பூட்டினான். வெளியேற முயற்சிக்கையில் அவனது செல்போன் சிணுங்கியது.

மீண்டும் கதவைத் திறந்து கட்டிலில் கிடந்த செல்லை எடுத்து திரையைப் பார்த்தான். அப்பா!

பொங்கிய கண்ணீரை சமாளித்துக் கொண்டு, "அப்பா! நானே பேசணும்னு நினைச்சேம்ப்பா" என்றான் மெல்ல.

மறுமுனையில் ராஜதுரை சற்றே பதற்றமாய் பேசினார்.

"நந்துக்கண்ணா! நீ இப்போ அண்ணன் கூடவா இருக்க. என்னப்பா? உடம்பு எதுவும் சரியில்லையா? அப்பா கிளம்பி வரட்டுமா?"

"இல்லப்பா. சும்மா ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்திட்டுப் போகலாம்னு வந்தேம்ப்பா. இதோ கிளம்பிட்டே இருக்கேன்."

"கிளம்பிட்டியா? இப்பத்தான் ஸ்ரீராம்கிட்ட பேசினேன். நீ இங்க வந்திருக்கிறதா சொன்னான். அதான் கொஞ்சம் பயந்துட்டேன்."

"பயப்படுற மாதிரி ஒண்ணுமில்லப்பா. அம்மாகிட்ட போனைக் கொடுங்கப்பா. பேசணும் போல இருக்கு."

"அடடா! அம்மாவும் அஞ்சலியும் ஹாஸ்பிடலுக்கு போனாங்கப்பா. இன்னும் வரலியே."

"சரிப்பா... நான் கிளம்பணும். அப்புறம் பேசிக்கிறேன்."

"நந்து உடம்பு எப்படிப்பா இருக்கு? மருந்து, மாத்திரை எல்லாம் வேளாவேளைக்கு சாப்பிடுறியா?"

"ம்... ம்..."

"என்னப்பா ம் கொட்டுற... மாத்திரையெல்லாம் கரெக்ட்டா சாப்பிடுப்பா. அப்பத்தான் சீக்கிரமே குணமாகும். உனக்கு குணமான பின்னாலதான் ராஜாவுக்கு வரன் பார்க்கணும்."

"அண்ணனுக்கு பாருங்கப்பா. இனிமே என்னால எந்தப் பிரச்சினையும் வராது."

"என்னப்பா சொல்ற?"

"எனக்கு எல்லாம் சரியாகிடும்ப்பா. நீங்க தைரியமா அண்ணனுக்கு பொண்ணு பாருங்க."

"சரிப்பா... நான் வந்ததும் இதைப் பத்தி பேசிக்கலாம். உடம்பைப் பார்த்துக்கோ. போனை வெச்சிடவா?"



"சரிப்பா" என்றவாறு போனை வைத்தான் நந்தகுமாரன்.

ஒரு நீண்ட பெருமூச்சோடு அறையை மூடிவிட்டு கீழே இறங்கி கதவையும் பூட்டிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

வெற்றுக் கால்களோடு வெகுதூரம் நடந்து கடற்கரையை அடைந்தான். கடற்கரையின் சில்லிட்ட காற்று அவனை ஆரத் தழுவிக் கொண்டது.

குழந்தைகள், பெரியவர்கள் என அனைவரும் கடலில் உற்சாகக் குளியல் போட்டுக் கொண்டிருக்க, கூட்டத்தை விட்டு விலகி சற்றுத் தூரமாய் நடந்து சென்றான்.

ஆள் அரவமற்ற பகுதி வந்ததும் நின்றான். அந்த இடத்தில் கடல் கூட அமைதியாகவே இருந்தது. சுற்றிலும் பாறைக் கூட்டங்கள் தெரிய, இங்கு யாரும் குளிக்க மாட்டார்கள் என்று தெரிந்து அந்த இடத்தையே தேர்ந்தெடுத்தான்.

அலைகளற்ற அந்தக் கடல் அவனை வா வா என அழைக்க, நந்தா சற்றும் தாமதியாமல் கடலுக்குள் இறங்கினான். கடலின் எல்லைக்கே சென்று விடுபவனைப் போல ஒரு நேர்பார்வையோடு அவன் செல்ல, இரண்டே நிமிடத்தில் கடல் அவனைத் தனக்குள் அழைத்து அணைத்துக் கொண்டது.

சிப்பி பொறுக்கிக் கொண்டிருந்த சிறுவர்கள் தூரத்தில் தெரிந்த நந்தகுமாரனின் தலையைப் பார்த்துவிட்டு கூச்சலிட்டனர்.

# 2

என் உடம்பிலிருந்து வழியும்
ரத்தத்தின் துளியில் எல்லாம்
தெரிகிறது உன் பிம்பம்! – பிரிவிலும்
இணைந்தே இருப்போம் நானும் நீயும்!

**கார்** சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது. உடலு உள்ளமும் பதற காரை ஓட்டிக் கொண்டிருந்தா ராஜகுமாரன். கண்கள் கலங்கி சிவந்திருந்தன. எதிரில் வந் வாகனங்கள் மிரண்டு விலகின. காற்றை கிழித்துக் கொண் சீறி வந்து அந்த உயரமான மருத்துவமனை வளாகத்தினு நுழைந்து மூச்சு வாங்க நின்றது கார்.

காரை விட்டு இறங்கி ஓட்டமாய் ஓடி மருத்துவரி முன்வந்து நின்றவனைப் பார்த்தே சற்று மிரண்டா மருத்துவர்.

"சார்! நான் ராஜா. என்... என் தம்பி நந்தா... நந்தகுமாரன்..." அவன் பேச முடியாமல் திணற, மருத்துவ எழுந்தார்.

"நீங்கதான் பேஷன்டோட அண்ணனா? பிளீஸ் கம்."

"சார்... என் தம்பிக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே அவன் நல்லா இருக்கான்ல?"

"முதல்ல வந்து உங்க பிரதரைப் பாருங்க சார் அப்பறம் பேசலாம்" முகத்தில் ஒருவித இறுக்கத்துடன் மருத்துவர் முன்னே செல்ல, பதறும் இதயத்தோடு பின்னே சென்றான் ராஜகுமாரன்.



வியர்வையோடு கண்ணீரும் வெளியேற, அந்த அறைக்குள் நுழைந்தவன் தீயை மிதித்தாற்போல் துடித்து நிமிர்ந்தான்.

கட்டிலில் உடம்பின் பாகங்கள் அனைத்தும் காயத்திற்காக போடப்பட்டிருந்த கட்டால் மூடப்பட்டிருக்க முகம் மட்டுமே தெரிந்தது. கைகால்களில் பாண்டேஜ் கட்டுகளையும் மீறி ரத்தம் கசிந்திருந்தது.

உடல் முழுக்க மருத்துவ உபகரணங்கள் மூலம் சுற்றியிருந்த வயர்களுக்கு மத்தியில் தெரிந்த தம்பியின் முகத்தைப் பார்த்து வாய்விட்டு அழுதான் ராஜகுமாரன்.

மருத்துவர் பதறினார். "மிஸ்டர் ராஜா. கண்ட்ரோல் பவர் செல்ப். பிளீஸ்... அமைதியா இருங்க."

"எப்படி டாக்டர். இப்ப ஒரு மணி நேரம் முன்னால என்கூட சகஜமாக பேசிகிட்டு இருந்த என் தம்பி இப்படி கிடக்கிறதப் பார்த்ததும் என்னால... எப்படி?"

"ரிலாக்ஸ் மிஸ்டர் ராஜா. இவ்வளவு காயத்தோட உங்க தம்பி உயிர் பிழைச்சிருக்காரே. அதை நினைச்சு சந்தோஷப்படுங்க. பட்... இந்தக் காயங்கள் ஆற பல மாதங்கள் ஆகலாம்."

"டாக்டர்!"

"பேஷண்டை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். வாங்க என்னோட ரூமுக்குப் போயிடலாம்."

தம்பியை விட்டுப் பார்வையை விலக்க முடியாமல் நின்றவனின் தோளைப் பற்றி தன் அறைக்குள் அழைத்துச்

சென்று அமர வைத்தார் மருத்துவர். சில நொடி மவுனமாய் இருந்து விட்டு கேட்டார்.

"சொல்லுங்க ராஜா. உங்க பிரதருக்கு என்ன பிரச்சினை?"

"டாக்டர்! உங்க கேள்வி எனக்குப் புரியல்ல."

"தற்கொலை செய்யும் அளவுக்கு உங்க தம்பிக்கு என்ன பிரச்சினை?"

குபீரென எழுந்து விட்டான் ராஜகுமாரன். "என்ன? தற்...தற்கொலையா?"

"எஸ் மிஸ்டர் ராஜா. இது தற்கொலை முயற்சிதான்..."

"நோ... நோ டாக்டர். அவன்... குளிக்கப் போயிருப்பான்..."

"குளிக்கிற இடத்தை விட்டுட்டு அபாயம்னு அறிவிக்கிற பாறைக் கூட்டத்துக்கு ஏன் சார் உங்க தம்பி குளிக்கப் போகணும்?"

"டாக்டர்! நீ... நீங்க என்ன சொல்றீங்க?"

"எஸ் மிஸ்டர் ராஜா! உங்க தம்பி பாறைக்கூட்டத்தில் மாட்டினதினாலதான் அவர் உடம்புல இவ்வளவு காயம். அவர் கால்ல எலும்பு முறிஞ்சிருக்கு."

"கடவுளே!" நெஞ்சில் கைவைத்து அதிர்ந்தான்.

"சொல்லுங்கள் மிஸ்டர் ராஜா! என்ன பிரச்சினை?"

அவசரமாய் மறுத்தான். "நோ டாக்டர். அப்படியெல்லாம் எதுவுமில்லை. நீங்க நினைக்கிற மாதிரி என்



தம்பி ஒண்ணும் தற்கொலை பண்ணிக்கப் போயிருக்க மாட்டான்."

"பின்னே ஏன் சார்... என்னை விடுங்க... நான் சாகணும்னு உங்க தம்பி கத்தினார்."

மருத்துவர் அமைதியாய் கேட்க இன்னும் அதிர்ந்தான்.

"என்ன?"

"ஆமா! உங்க தம்பியை இங்கே கொண்டு வரும் போது நினைவோடதான் இருந்தார். சொன்ன ஒரே வார்த்தையைத்தான் திரும்பத் திரும்பச் சொன்னார்."

'நான் ஏமாந்திட்டேண்ணா' காலையில் தம்பி சொன்ன வார்த்தை காதில் மோத திடுக்கிட்டுப் போனான். 'தப்பு பண்ணிவிட்டேனே.. அவன் எதற்காகவோ மனமுடைந்து போயிருக்கிறான் என்று தெரிந்தும் அவனைத் தனியே விட்டுவிட்டு நான் போயிருக்கக் கூடாது. ஏன் இப்படிச் செய்தான்? உயிரையே விடும் அளவிற்கு யாரிடம் ஏமாந்தான்? எதை ஏமாந்தான்?'

இருகரங்களாலும் நெற்றியை இறுகப் பற்றிக் கொண்டான் ராஜகுமாரன். மருத்துவர் தொடர்ந்தார்.

"இந்தக் காலத்துப் பசங்களுக்கு உயிரோட அருமை தெரியல்ல. சின்ன விஷயத்திற்கெல்லாம் தற்கொலை முடிவை எடுத்திடுறாங்க. வீட்ல பெரியவங்ககிட்ட மனம் விட்டுப் பேசினாலே பிரச்சினையெல்லாம் தீர்ந்திடும். ஆனா அதை யாரும் செய்வதில்லை" என்றார் வருத்தமாக.

"சார்! இப்போ... தம்பியோட உயிருக்கு..."

"உயிருக்கு ஆபத்தில்லப்பா... ப்ளட் ரொம்ப லாஸாயிடுச்சு. ப்ளட் ஏத்தியிருக்கோம். வலி தெரியாம இருக்க இன்ஜெக்ஷன் போட்டிருக்கோம். நீங்க உங்க பேரண்ட்சுக்கு சொல்லிட்டீங்களா?"

"இல்ல சார். அவங்க இப்போ மலேசியாவில இருக்காங்க."

"ஓ.கே. இப்ப அவர் தூங்கட்டும். நினைவு திரும்பியதும் தரோவா செக் பண்ணிடலாம். அதுக்கப்புறம்தான் தெளிவா சொல்ல முடியும்."

"டாக்டர்... நான் ஒரு மேரேஜுக்கு போயிட்டு அப்படியே வந்திட்டேன். ஹாஸ்பிடல்ல பே பண்ண வீட்டுக்குப் போய் பணம் எடுத்திட்டு வரணுமே."

"போயிட்டு வாங்க. இங்க அவரை நர்ஸ் கவனிச்சிப்பாங்க. நோ ப்ராப்ளம்."

"தேங்க்யூ டாக்டர். நான் என் தம்பியை ஒருமுறை பார்க்கலாமா?"

"ஷ்யூர். டிஸ்டர்ப் பண்ணாம பார்த்திட்டுப் போங்க."

மீண்டும் ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு நந்தகுமாரன் படுக்க வைக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலின் அருகே அமர்ந்திருந்த நர்ஸ் எழுந்தாள். "யார் நீங்க?"

"சிஸ்டர்! இது என் தம்பி. ஒரு நிமிஷம் பார்த்திட்டுப் போயிடுறேன்."



"ஓ.கே. அவரை எழுப்ப வேண்டாம். அமைதியாப் பார்த்திட்டுக் கிளம்புங்க."

"ஓ.கே. சிஸ்டர். தேங்க்யூ சிஸ்டர்" என்றவாறு நந்தகுமாரனை நெருங்கி நின்றான்.

'தம்பி! என்னடா உன் பிரச்சினை? எத்தனை முறை சொல்லி விட்டுப் போனேன். இப்படி முட்டாள்தனமான காரியத்தை எப்படி செய்யத் துணிந்தாய்? எந்த ஒரு வேலையையும் என்னைக் கேட்டு விட்டுத்தானே செய்வாய்? இதை மட்டும் ஏன் எனக்குத் தெரியாமல் செய்தாய். இந்த நான்கு நாட்களில் ஒரு முறைகூட வாய்விட்டு சொல்லவில்லையே. பாவி! நானும் கேட்கவில்லையே. எப்படி உன்னை கவனியாமல் விட்டேன்.

அப்பா, அம்மாவிற்கு நான் என்ன பதில் சொல்வேன்? நீ எப்போது எழுந்து நடமாடுவாய். ஐயோ! கால் எலும்பு முறிந்து விட்டதாமே.'

விழிகளில் நீர் நிறைந்து பார்வையை மறைக்க, குனிந்து நந்தகுமாரனின் கால்களைப் பரிவோடு வருடினான்.

"சார்! கால் அசையாம இருக்கத்தான் கட்டுப் போட்டிருக்கு. தொடாதீங்க." நர்ஸ் பதறினாள்.

"சாரி சிஸ்டர். சிஸ்டர்! என் தம்பியை கொஞ்சம் பார்த்துக்கங்க. நான் வீடு வரைக்கும் போயிட்டு வர்றேன்."

"போயிட்டு வாங்க சார்."

மீண்டும் தம்பியை ஒருமுறை பார்த்துவிட்டு, அறையை விட்டு வெளியேறி காரில் ஏறி வீட்டை அடையும்

முன் நூறு முறை மனம் கேட்டது. 'யாரிடம் ஏமாந் போனான்?'

வீட்டை அடைந்து கதவைத் திறந்ததுமே அந் வாசனை நாசியை நெருடியது. என்ன வாசனை இது ஏதோ பேப்பர் எரிவது போல...

பரபரவென வீட்டின் ஜன்னல்களை திறந் வைத்துவிட்டு கதவைத் திறக்க, அறையின் மூலையி இருந்த குப்பைக் கூடையில் இருந்து எரிந்து போன காகித துணுக்குகள் காற்றில் பறந்து வந்தன.

ஓடிச் சென்று பார்த்தவன் அதிர்ந்தான். கூடை நிறை எரியூட்டப்பட்ட காகிதங்கள். இதை நான் போடவில்லையே அப்படியென்றால் இது நந்தாவின் வேலையா? எ எரித்தான்? ஏன்? எதற்காக?

யோசனையோடு தம்பியின் அறையைத் திறந்தான் அறை முழுவதும் இருட்டாய் இருக்க, சுவிட்சைத் தட்டினான் விளக்கு எரிய அதனுடன் சேர்ந்து சவுண்ட் பாக்சும் 'கும்ம் என்றது.

சிவப்பு விளக்கு ஒளிர்ந்து டேப் சுழல, இதை ஏ போட்டிருக்கேன் என்ற எண்ணத்தில் அதை நிறுத் முயற்சிக்கும்போது நந்தகுமாரனின் குரல் கேட்டது.

"அண்ணா" நான்கு ஸ்பீக்கரிலும் தம்பியின் குர கேட்டுத் துள்ளி நிமிர்ந்தான் ராஜகுமாரன்.

"அண்ணா! நீ என்னைத் தேடுவேன்னு தெரியும் அதனாலதான் உன்கிட்ட மட்டும் பேச இந்த ஏற்பா பண்ணினேன். அநேகமா நீ இதைக் கேட்கும்போது நான் உயிரோட இருக்க மாட்டேன்."



பிசிரற்ற குரலில் நந்தகுமாரன் பேசிக் கொண்டிருக்க தள்ளாடிய கால்களை சமாளித்து நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான். காதுகள் கூர்மையாயின.

"என்னைத் தேடாதேண்ணா. நான் ஒரு முட்டாள், ஏமாளி, கோழை. நான் ஒரு... நோயாளிண்ணே... நான் வேண்டாம். நான் யாருக்குமே வேண்டாம்."

தம்பியே நேரில் அமர்ந்து பேசுவதைப் போல் பதறி கைநீட்டித் தடுத்தான் ராஜகுமாரன்.

"அண்ணா! அடிக்கடி சொல்வியே இதெல்லாம் பெரிய குறையே இல்லன்னு. அது என்னை சமாதானம் பண்றதுக்குன்னு மட்டும்தான்னு தெரியாமப் போச்சே. அது எவ்வளவு பெரிய குறைன்னு எனக்கு இப்பத்தாண்ணா புரியுது."

கண்களில் நீர் சுரக்க அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அண்ணா! இந்தக் குறையை யார் சொல்லியிருந்தாலும் நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். ஆனா நான் நேசிச்ச ஒருத்தி என்னைக் குப்பைய மாதிரி தூக்கி வீசிட்டா அண்ணா. "

திடுக்கிட்டு நிமிர்ந்தான். மனம் பலமாய் அடித்துக் கொண்டது.

"நான் வலிப்பு நோய்க்காரனாம். நானெல்லாம் திருமணம் செய்யவே ஆசைப்படக் கூடாதாம். அந்த அருகதை எனக்கில்லையாம்...

அண்ணா எனக்கு வாழப் பிடிக்கவில்லை அண்ணா. அவள் என்னை வெறுத்து விட்டாள் என்பது மட்டும் காரணமல்ல....”

வேறென்ன என்பது போல் நிமிர்ந்தான் ராஜகுமாரன்.

“எனக்குக் குணமான பிறகுதான் நீ கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னியே. எனக்கு எப்போ குணமாகுமோ? எனக்கு அந்த நம்பிக்கையும் இல்லை. ஆசையும் இல்ல. அதனால நான் போறேன்...

அண்ணா! அவளை நான் ரொம்ப நேசிச்சேன். அவளுக்காக இந்த உலகத்தையே வாங்கிக் கொடுக்கிற அளவு விரும்பினேன். அவளும் அப்படித்தான் என்னை விரும்பினா. ஆனா இந்த நோய் எனக்கு இருக்குன்னு தெரிஞ்சதுமே தூக்கி வீசிட்டாண்ணா. அதே மாதிரி... அதே மாதிரி... நீங்க யாரும் என்னைத் தூக்கி வீசிடக் கூடாதில்ல. அதான்... இந்த முடிவை எடுத்தேன்.”

“முட்டாள்! முட்டாள்! அவளும் நாங்களும் ஒன்றா? நீ... நீ என் தம்பிடா... அப்பாவின் செல்ல மகன். அம்மாவின் உயிர்” அரற்றினான்.

“அண்ணா! என் முடிவுக்கு யாரும் காரணமல்ல. இது நானே எடுத்த முடிவு. உன்கிட்ட கூட சொல்லாமப் போயிருக்கலாம். மனசு கேட்கல்ல. அண்ணா! இது எல்லாமே உன் மனசோட இருக்கட்டும். யாருக்கும் தெரிய வேண்டாம். அது அவமானமா இருக்கும்.

அந்தப் பொண்ணு யாரு என்னன்னு நீ ஆராய வேண்டாம். நான் அவளை விரும்பியது வேறு யாருக்கும் தெரியாது. எனக்கும் அவளுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். அதை நீ கிளற வேண்டாம்.



என் நினைவுகளையும் அழித்து விட்டு உன் வருங்காலத்தை இனிமையானதாய் அமைத்துக் கொள். இன்னொரு பிறவி உண்டு என்றால் அதிலும் உனக்கே தம்பியாக முழு ஆரோக்கியமாக நான் பிறக்க வேண்டும். இதுதான் என் கடைசி ஆசை. நான் போகிறேன் அண்ணா.”

பேச்சு முடிந்துவிட, ‘கிஸ்ஸ்...’ என இரைச்சல் தொடர்ந்தது. கனமான மனதோடு எழுந்து சுவிட்சை ஆஃப் பண்ணினான் ராஜகுமாரன்.

அப்படியே கட்டிலில் மல்லாந்தான். தம்பி பேசிய வார்த்தைகள் அனைத்தும் ஒரு வரி விடாமல் மனம் அசை போட்டது. ஆராய்ந்தது.

“சத்துக்குறைவால் ஏற்பட்ட வலிப்பு நோய்தான். இது பரம்பரை நோயல்ல. தீராத நோயும் அல்ல. மருந்து மாத்திரையும் சத்துள்ள ஆகாரமும் சரியாக சாப்பிட்டாலே குணமாகிவிடும். இதற்கும் திருமண உறவிற்கும் எந்தப் பாதிப்பும் கிடையாது” என நந்துவிடமே டாக்டர் பலமுறை சொல்லியிருக்கார்.

அதனால் கண்டிப்பாக இந்த நோயை எண்ணி பயந்து இந்த முடிவை அவன் எடுக்கவில்லை. அவள்... அந்தப் பெண் ஏமாற்றியதால் அந்த வலியைத் தாங்க முடியாமல்தான் உயிரை மாய்த்துக் கொள்ள துணிந்திருக்கிறான்.

'யாரவள்? யார் அந்த நயவஞ்சகி?' கோபமாய் எழுந்து தம்பியின் அறை முழுக்க தலைகீழாக புரட்டிப் போட்டான். போனில் தேடிப் பார்த்தான். ம்ஹூம்... பலன் கிடைக்கவில்லை. அவளைப் பற்றிய தடயங்களை சுத்தமாய் அழித்திருந்தான் நந்தா.

சலித்துப் போனவனாய் குப்பைத் தொட்டியை எடுத்துக் கவிழ்த்தான். கரும் துகள்கள் அறை முழுக்க பறக்க, கண்களைக் கூர்மையாக்கித் தேடினான் ராஜகுமாரன்.

தேடலுக்கு பலன் இருந்தது. அந்தக் குப்பையில் ஒ இஞ்ச் அளவிற்கு எரியாமல் போன காகிதத் துண்டு கிடக்க ஆவலாய் அதை எடுத்தான். கடிதத்தின் கீழே இருந் முனைப்பகுதி அது. கையெழுத்துடன் இருந்தது.

உற்றுப் பார்த்தான். ஆங்கிலத்தில் கையெழுத்திட பட்டிருந்தது. பெயரின் பின்பாதியாக இருக்க வேண்டும் எழுத்துக்களை தனியே ஒரு பேப்பரை எடுத்து எழுதி பார்த்தான். ஈ.ஈ.என்.ஏ. என அந்தப் பெயர் முடிந்திருந்தது ஈக்கு முன்னால் லேசாய் ஒற்றைக்கோடு கூட கண்ணி பட்டது.

ராஜகுமாரனின் மூளை வேகமாய் செயல்பட்டது.

'இதுதான் அந்தப் பெண்ணின் பெயரா நந்தகுமாரனுக்கு வெளியில் அதிக பழக்கங்கள் கிடையாது கம்பெனியைத் தவிர வேறெங்கும் சுற்றுபவனும் அல்ல.

கண்டிப்பாக இவள் நம் அலுவலகத்தில் பணிபுரி வளாகத்தான் இருக்க வேண்டும். காலையில்கூட ந கம்பெனியில... என்று தொடங்கினானே. தொலைபே அழைப்பு வந்ததால்தானே பேச்சு நின்று போனது நிச்சயமாய் இவள் நம்மிடம்தான் வேலை செய்து கொண்டிருப்பாள்.

இதோ கண்டுபிடிக்கிறேனடி... என் தம்பியை மரணத்தின் விளிம்பில் நிற்க வைத்துவிட்டு நீ கொண்டாட்ட போடுகிறாயா அங்கே? விடமாட்டேன்.'



தனது செல்போனை உயிர்ப்பித்து சென்னைக்கு தொடர்பு கொள்ள மறுமுனையில் நந்தகுமாரனின் நண்பனும் அலுவலக மானேஜருமான ஸ்ரீராம் கிடைத்தான்.

"ஸ்ரீராம்! நான் ராஜா பேசறேன்."

"சார்! சொல்லுங்க சார்."

"கம்பெனி எப்படி போயிட்டிருக்கு? எனி பிராப்ளம்?"

"நோ சார். ஸ்மூத்தா போயிட்டிருக்கு. நந்தா சாருக்கு உடம்பு பரவாயில்லயா சார்?"

"ம்... உங்கிட்ட என்ன சொல்லிட்டு வந்தான்?"

"காய்ச்சல்... ஜாண்டிஸ் மாதிரி இருக்குன்னார்."

"ஆமாம். இன்னும் சரியாகவில்லை. ஸ்ரீராம் அவனுக்கு குணமாகும் வரை நான்தான் அங்கு இருப்பேன். இன்னும் ஒன் வீக்ல வந்திடுவேன்."

"ஆல்மோஸ்ட் வெல்கம் சார்."

"ஓ.கே. ஸ்ரீராம். நம்ம கம்பெனி ஸ்டாஃப் லிஸ்ட் வேணும் எனக்கு."

"ஷ்யூர் சார். எப்போ வேணும்?"

"பத்து நிமிஷத்துல வேணும். லிஸ்ட் ரெடி பண்ணிட்டு என்னோட மெயில்ல அனுப்பி வெச்சிடு."

"எஸ் சார்" என்றதோடு அடுத்த பத்தாவது நிமிடம் அனுப்பியும் விட்டான்.

கணினியின் முன் பரபரப்பாய் அமர்ந்து அதை இயக்கினான் ராஜகுமாரன். பச்சை நிறத்தில் ஒளிர்ந்த

எழுத்துக்களில் வரிசையாய் தேடினான். முதல் வரிசையி
அனைத்தும் ஆண்களின் பெயர்களே இருக்க, அடுத்
வரிசையில் தேடினான்.

ஆவலாய் தேடிய கண்கள் ஓரிடத்தில் நிலைத்து நிற்
முகம் செந்தணலாய் மாறியது. அவன் தேடிய பெய
இருக்க, அதற்குமேல் பார்வையை விலக்காமல் தன
செல்லை உயிர்ப்பித்தான்.

"ஸ்ரீராம்! நான் ராஜா."

"ஸ்டாஃப் லிஸ்ட் அனுப்பிட்டேன் சார்."

"ம்... வந்தது. பார்த்திட்டேன். அதில மிஸ். மீனான்
பேர் இருந்தது. அவங்க இன்னிக்கு ஆபீ
வந்திருக்காங்களா?"

"வந்திருக்காங்க சார்."

"அவங்க என்ன வேலையில இருக்காங்க."

"அக்கவுண்ட் செக்ஷன் சார்."

"ஓ.கே. நான் வந்து பார்த்துக்கிறேன். வெச்சிடு
போனை ஆஃப் பண்ணிவிட்டு கணினியின் திரையி
தெரிந்த பெயரையே வெறித்தான்.

"மீனா! யாரையும் விரோதியாகப் பார்க்க எனக்கு
தெரியாது. ஆனால் இன்று முதல் இந்த உலகில் நா
வெறுக்கும் ஒரே நபர் நீ... நீ மட்டும்தான்."

ராஜகுமாரனின் கண்கள் ரத்தமெனச் சிவந்தது.



# 3

என் எண்ணங்களில் - என்
செயல்களில் நினைவலைகளில்
என் பார்வையில் எங்கும்
நிறைந்திருக்கிறோம் நீயும் நானும்!

"மீனா..." என்றவாறு தன் முன் வந்து நின்றவனிடம் நிமிர்ந்தாள் அந்த அழகான மீனா. மீன் போன்ற நீண்டு வளைந்த கருவிழிகள். அந்தக் கண்களைப் பார்க்கும் போதெல்லாம் தடுமாறும் ஸ்ரீராம் இன்றும் தடுமாறி நிற்க, புன்னகையோடு கேட்டாள் மீனா.

"என்ன சார்?"

சட்டென சுதாரித்துக் கொண்டு லேசாய் சிரித்தான் ஸ்ரீராம்.

"வந்து... ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே."

"கேளுங்க சார். பட்... அலுவலக சம்பந்தமா கேளுங்க."

"கண்டிப்பா! உங்களுக்கு ராஜகுமாரன் சாரைத் தெரியுமா?"

புருவம் சுருக்கினாள். "ராஜகுமாரனா? அது யாரு?"

"நம்ம நந்தா சாரோட அண்ணன்."

"சாரி சார்... தெரியாது."

"ஆனா அவருக்கு உங்களைத் தெரியும்னு நினைக்கிறேன்."

"என்ன?"

"ஆமா மீனா! உங்களைப் பத்தி எங்கிட்ட விசாரிச்சாரே..."

"வ்வாட்..." குழப்பமாய் அதிர்ந்தாள். "என்னைப் பத்தி விசாரிச்சாரா? எப்போது? எதுக்காக?"

"நம்ம நந்தா சாருக்கு உடம்பு சரியில்லையாம். அதனால அவர் குணமாகிற வரைக்கும் ராஜா சார்தான் இங்குள்ள பொறுப்பை கவனிக்கப் போகிறாராம். அதனால இங்குள்ள ஸ்டாஃப் லிஸ்ட் எங்கிட்ட கேட்டாரு."

மீனா பொறுமையிழந்தாள். "ஸ்ரீராம் சார். எனக்கு நிறைய வேலை இருக்கு. சட்டுன்னு சொல்லிடுங்க."

"இதோ சொல்லிட்டேன். அப்படி நான் அனுப்பின லிஸ்ட்டைப் பார்த்திட்டு உங்களைப் பத்தி மட்டும்தான் விசாரிச்சார்."

"என்னன்னு?"

"நீங்க என்ன செக்ஷன்ல இருக்கீங்க? இன்னிக்கு வேலைக்கு வந்திருக்கீங்களான்னு கேட்டார்."

"ப்பூ! இவ்வளவுதானா? நான் அக்கவுண்ட் செக்ஷன்ல இருக்கேன். அதனால கணக்கு வழக்கெல்லாம் பார்க்க வேண்டியிருக்குமேன்னு என் பேரைக் கேட்டு வெச்சிருக்கலாம்."



"இல்லங்க... நான் உங்க பேரை மட்டும்தான் அனுப்பியிருந்தேன். அவரு கேட்ட பிறகுதான் நீங்க அக்கவுண்ட் செக்ஷன்னு சொன்னேன்." ஸ்ரீராம் சொன்னதும் மீண்டும் மீனாவின் முகம் குழம்பியது.

"அப்படியா? என்னை மட்டுமா விசாரிச்சார்?"

"அட ஆமாம் மீனா. நான் நினைக்கிறேன், அவரு உங்களை எப்பவோ பார்த்திருப்பார்னு. அதான் மறக்காம விசாரிக்கிறாரு. நீங்க அவரைப் பார்த்ததில்லையே."

"இல்ல."

"நம்ம நந்தா சாரோட ஜெராக்ஸ் மாதிரி இருப்பார். இன்னும் கொஞ்சம் உயரமா கம்பீரமா சும்மா ராஜகுமாரன் மாதிரியே இருப்பார்."

"ஓஹோ" மேலோட்டமாய் சொன்னாலும் மீனாவின் மனதிற்குள் லேசான பயம் தோன்றியது. 'தன்னைப் பற்றி மட்டும் ஏன் விசாரித்தார். எதற்காக?'

"ஸ்ரீராம் சார்... ராஜா சார் எப்படி? நந்தா சார் மாதிரி சாஃப்ட் கேரக்டரா? இல்ல அதிரடியா இருப்பாரா?" சகதோழி ரமா கேட்டாள்.

"எனக்கு ரொம்பவும் பழக்கம் இல்ல ரமா. சில சமயம் மீட்டிங்ல பார்த்திருக்கேன். பார்க்க கொஞ்சம் பயமாத்தான் இருக்கும்."

"ஐயோ! அப்போ மிலிடரி ஆபீசர் மாதிரி இருப்பாரா?" அனிதா சற்று பயமாய் கேட்டாள்.

"ம்... அவர் பேச்சு அப்படித்தான் இருக்கும். பட் ரொம்ப நல்லவர்."

"கடவுளே! நந்தா சாருக்கு சீக்கிரம் குணமாகட்டும்" என்ற அஜிதாவைப் பார்த்து மீனா கேலியாய் சிரித்தாள்.

"என்ன? திடீர்னு சாமியெல்லாம் கும்பிடுற?"

"ஆமாம்ப்பா. நமக்கெல்லாம் நந்தா சார் மாதிரி ஜாலி டைப்தான் சரி. உர்ருன்னு இருந்தா நம்மால சகஜமா வேலை செய்ய முடியாதில்ல. பயத்திலேயே தப்பு பண்ணிடுவோம்."

"ஆமா! நீ நினைச்சப்பெல்லாம் லீவு எடுக்கலாமே. லேட்டா வரலாம்."

"ஆமாம்டி. ஒரு நாள் கூட சாருக்கு கோபமே வராது. திட்டவே மாட்டார்."

"அதான் நல்லா மொளகா அரைக்கிற." ரமா இடித்தாள்.

"சேச்சே! தப்பா பேசாதப்பா... சார் ஜென்டில்மேன் தெரியுமா?"

"அது எங்களுக்கும் தெரியும். நான் பொதுவா சொன்னேன்."

"இங்கே என்ன வெட்டிப்பேச்சு? வேலை நேரத்தில என்ன அரட்டை வேண்டிக் கிடக்கு? ஸ்ரீராம் நீயுமா அரட்டை அடிக்கிற?" என்றவாறு அங்கே வந்தார் சபாபதி. அலுவலகத்தின் மூத்த கணக்கர்.

"சாரி சார்... ஒரு முக்கியமான டிஸ்கஸ்" அஜிதா இழுத்தாள்.



"எந்த டிஸ்கஸ்ஸா இருந்தாலும் ஒர்க்கிங் ஹவர்ஸ்ல பேசக்கூடாது. உங்க சீட்டுக்குப் போங்க."

"ம்க்கும்... இதைவிட பெரிய மிலிடரி ஆபீஸரா வரப்போறாரு" முனகிக்கொண்டே தன் இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

"ரமா! உனக்கு தனியா சொல்லணுமா?"

"இல்ல சார்... இந்தக் கணக்கை நானும் மீனாவும் சேர்ந்துதான் முடிக்கணும்."

"ஓ.கே. ஸ்ரீராம்! உன் டேபிள்ல அந்த எக்ஸ்போர்ட் ஃபைல் வெச்சேன். சரி பார்த்திட்டு அனுப்பிடு."

"சரி சார்" என்றவாறு ஸ்ரீராம் விலகிச் செல்ல, மீனாவை நெருங்கினார் சபாபதி.

"ஏம்மா! போன வாரம் பொண்ணு பார்க்க வந்தாங்களே... என்ன சொன்னாங்க?"

ரமா நமட்டுச் சிரிப்போடு குனிந்து கொள்ள, "அவங்களுக்கு ரெண்டு லட்சம் ரொக்கம் வேணுமாம் சார்" என்றாள் மீனா.

"ஏன் அவனுங்களுக்கெல்லாம் கண்ணு தெரியாதாமா?"

"ஏன் சார் அப்படிக் கேட்கறீங்க?"

"பின்னே! சொக்கத்தங்கம் மாதிரி இருக்கிற உன்னைக் கட்டிக்க கூலி கேட்கிறானே... கண்ணு அவிஞ்ச பய."

"சுத்தத் தங்கமாவே இருந்தாலும் இப்ப யாரு சார் வரதட்சணை வாங்காம கல்யாணம் பண்றாங்க?"

"அது சரி. கொடுக்கிறவனும் கொடுத்திட்டேதான் இருக்கிறான். வாங்குகிறவனும் வாங்கிட்டேதான் இருக்கிறான். இதுல மாட்டிகிட்டு தவிக்கிறது நம்மை மாதிரி நடுத்தர வர்க்கம்தான்."

"விடுங்க சார். அது நாம வாங்கி வந்த வரம்."

"நீ கலங்காதம்மா. உனக்குன்னு பொறந்த ராஜ குமாரன் கண்டிப்பா உன்னைத் தேடி வருவான். பைசா வரதட்சணை கேட்காம உன்னைக் கொத்திகிட்டு போயிடுவான் பாரேன்."

'களுக்'கென சிரித்து விட்டாள் ரமா.

"ஏன்டி பெண்ணே! சிரிக்கிற?"

"ஏன் சார்... எங்களைச் சொல்லிட்டு நீங்க இப்போ என்ன பண்றீங்களாம்?"

"நான்... நான் என் பொண்ணோட பேசிட்டு இருக்கேன்."

"யாரா இருந்தாலும் ஒர்க்கிங் ஹவர்ஸ்ல பேசக்கூடாது உங்க சீட்டுக்குப் போங்க." அவரைப் போலவே பேசிக் காட்டினாள் ரமா.

"வாயாடிப் பெண்ணே! அஜிதா கூட சேர்ந்து நீயும் ரொம்பப் பேசுற."

"சார்! உங்க பிரச்சினையில ஏன் சார் என்னை இழுக்குறீங்க?"

அஜிதா கேட்க, அனைவரும் சிரித்தனர்.



"அப்போ நீதான் அங்கே இருக்க. உன் காது இங்கதான் இருக்கு" என்றார் சபாபதி.

"கைதான் வேலை பார்க்கும். காது கேட்கத்தானே செய்யும்."

"அம்மாடி! இந்தக் காலத்துப் பொண்ணுங்ககிட்ட வாயைக் கொடுத்திட்டு மீள முடியாதும்மா. நான் போறேன்."

"அப்படி வாங்க வழிக்கு. இந்த வாய்கூட பேசலன்னா உங்களை மாதிரி ஆட்களை எப்படி சமாளிக்கிறதாம்?"

"போதும் அஜிதா! சீக்கிரமா அந்த ஃபைலை முடி. இன்னும் நிறைய வேலை இருக்கு" மீனா அதட்டினாள்.

"யார் என்ன பேசினாலும் நீ மட்டும் வேலையிலயே கண்ணாய் இரு. பத்து நிமிஷம் கொடு. இப்ப முடிச்சிடுறேன்" சொன்ன அஜிதா தன் வேலையில் மூழ்கிவிட, சபாபதி சிரித்தவாறே தன் அறைக்குச் சென்றார்.

"சபாபதி சார் இல்லன்னா நமக்கெல்லாம் போரடிச்சிடும் இல்ல மீனா" ரமா கேட்டாள்.

"ஆமா! கலகலப்பு, பொறுப்பு, அமைதி, அனுபவம், அலுவலகத் திறமை எல்லாமே அவர்கிட்ட இருக்கிறதாலதான் இத்தனை வயசுக்கப்புறமும் நிர்வாகம் அவரை வீட்டுக்கு அனுப்பாம வெச்சிருக்கு."

"அதோட நந்தா சார் அப்பாவோட நண்பராம். இன்னும் நட்பு தொடருதில்ல."

"மீனா! சபாபதி சார் சொன்னதை கவனிச்சியா?"

"என்ன?"

"உனக்குன்னு பொறந்த ராஜகுமாரன் உன்னைத் தேடி வருவானாமே. ஒருவேளை அது நம்ம பாஸ் ராஜகுமாரனா இருக்குமோ."

"ஏய் வாயை மூடு. என்ன பேசுற?" படபடப்பானாள் மீனா.

"ஏய்... ஒரு பேச்சுக்குச் சொன்னேன். அதுக்கு ஏன் இப்படிப் பதறுறே?" ரமா இயல்பாய்க் கேட்டாலும், மீனாவிற்குள் ஏதோ படபடத்தது. சற்றுமுன் ஸ்ரீராம் சொன்னது நினைவுக்கு வர உள்ளம் இனம்புரியாமல் தடுமாறியது.

# 4

நம் நான்கு விழிகளில்
காணும் காட்சிகளில் - ஒரே
உருவம்தான் தெரிகிறது
அது நீயும் நானும்தான்!

"அப்பா! நான் ராஜா பேசறேன். நந்துவுக்கு சென்னை வெயில் ஒத்துக்கல்ல போலிருக்கு. இப்ப என்கூடத்தான் கொஞ்சம் உடம்பு முடியாம இருக்கான்."

மறுமுனையில் ராஜதுரை பதறினார். "என்னாச்சுப்பா? நான் கேட்டதுக்கு சரியாப் போச்சுன்னானே."

"வெறும் காய்ச்சல்தாம்பா... இப்ப நல்லா இருக்கான். இருந்தாலும் அவனை அங்கே அலைய வேண்டாம்னு இங்கே உள்ள வேலையைப் பார்த்துக்கச் சொல்லி



இருக்கேன். நான் போயி கம்பெனிய கவனிக்கலாம்னு இருக்கேன். நீங்க என்னப்பா சொல்றீங்க?"

"செய்யுப்பா. தம்பி இங்கே தனியா இருந்துப்பானா?"

"பெரியம்மாவையும் பெரியப்பாவையும் வரச் சொல்லி இருக்கேன். கொஞ்ச நாள் இருக்கட்டும். பிறகு அவனே சமாளிச்சிடுவான்."

"நான் வேணும்னா வந்திடவாப்பா."

"இல்லப்பா. நீங்க அங்கே இருப்பதுதான் நல்லது. அஞ்சலி கூட இருங்க. பிரசவ நேரம் பெரியவங்க துணை அவசியம். இங்க நாங்க சமாளிச்சுப்போம். பெரியம்மா இன்னிக்கு வந்திடுவாங்க. நான் இன்னும் ரெண்டு நாள்ல சென்னைக்குக் கிளம்பிடுவேன்."

"தம்பிகிட்ட போனைக் கொடுக்கிறியாப்பா?"

"அவன் சாப்பிட்டு தூங்குறாம்ப்பா. விழிச்சதும் பேசச் சொல்றேன். அப்பா! அம்மாவுக்கு இதெல்லாம் தெரிய வேண்டாம்."

"ஏம்பா?"

"தெரிஞ்சா அங்க இருக்க முடியாது அவங்களால. ரொம்ப வருத்தப்படுவாங்க. அப்புறம் அவங்க உடம்புக்கு ஒண்ணுன்னா கஷ்டமாயிடும். அதனால எதுவும் சொல்ல வேண்டாம். எப்பவும் போல போன் பண்ணி பேசுங்க. சரியா?"

"கம்பெனி கணக்கு வழக்கெல்லாம்..."

"அப்பா! அதெல்லாம் நான் ஸ்ரீராம்கிட்ட பேசிட்டேன். சபாபதி சார் இருக்கார். நான் சமாளிச்சுப்பேன்."

"இங்க உள்ள வேலையெல்லாம்..."

"அதெல்லாம் நித்திஷ்கிட்டயும் மானேஜர்கிட்டயும் சொல்லிட்டேன். தம்பிக்கு நம்ம ஓட்டல்லயே தங்கிக்க ஏற்பாடு பண்ணிட்டேன். அதனால அவனுக்கு எந்த அலைச்சலும் இல்ல. இருந்த இடத்தில இருந்தே மேற்பார்வையிட்டா போதும்."

"நீயும் அப்பப்போ வந்து பார்த்துக்கப்பா."

"கண்டிப்பா. சன்டே முழுக்க தம்பியோடதான் இருப்பேன்."

"தினமும் போன் பண்ணிடுப்பா."

"சரிப்பா. அம்மாகிட்டயும் அஞ்சுகிட்டயும் அப்புறம் பேசுறேன்... வெச்சிடவா."

"சரிப்பா" என ராஜதுரை போனை வைத்ததும் தனது போனை ஆஃப் பண்ணினான் ராஜகுமாரன்.

அதுவரை அமைதியாய் இருந்த நந்தகுமாரன் சற்று வருத்தமாகவும் கோபமாகவும் தமையனை ஏறிட்டான்.

"அண்ணா! இதெல்லாம் எனக்கு சுத்தமா பிடிக்கல்ல."

"எதெல்லாம்?" தன்னுடைய உடைகளை எடுத்துப் பெட்டியினுள் அடுக்கியபடியே கேட்டான் ராஜகுமாரன்.

"இந்த ஏற்பாடு எதுவுமே பிடிக்கல."

"ஏன் பிடிக்கல்ல?"



"இப்ப நீ எதுக்காக சென்னைக்குப் போற?"

"இது என்னடா கேள்வி? நீ இங்க வந்திட்ட. அங்க உள்ள வேலையைப் பார்க்க வேண்டாமா?"

"அதற்காக மட்டுமா அங்கே போகிறாய்?"

"வேறு எதற்கு?"

"அண்ணா! நீ என் அறைக்குப் போனாயா?"

"ஆமாம்! அதற்கென்ன?"

"நீ எதுக்கு சென்னைக்குப் போறேன்னு எனக்குத் தெரியும்."

"நந்து! நீ அதிகம் பேசக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். பேசாம ரெஸ்ட் எடு."

"ஒரேடியா ரெஸ்ட் எடுக்கலாம்னு பார்த்தேன்... மரணத்திற்குக் கூட என்னைப் பிடிக்கல்ல போலிருக்கு."

பெட்டியை மூடிவிட்டு தம்பியின் அருகே வந்து அமர்ந்தான்.

"இதோ பார் நந்து! இந்த மாதிரியெல்லாம் பேசக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல. இந்த விஷயம் நம்ம பேரண்ட்சுக்கு தெரியக்கூடாது. பெரியம்மாகிட்ட கூட சின்ன ஆக்ஸிடெண்ட்னுதான் சொல்லி வெச்சிருக்கேன். நீ இப்படி எதையாவது அவங்க முன்னாடி உளறி வெக்காதே."

பதில் பேசாமல் அமைதியாய் இருந்த நந்தகுமாரனைக் கண்டதும் மனம் இளகியது. பரிவோடு அவனது தலையை வருடினான்.

"நந்து! நீ எவ்வளவு பெரிய அறிவாளி. புத்திசாலி. நீ இப்படியெல்லாம் நடந்துக்கலாமா? உனக்கு உடம்பு சரியில்லன்னு சொன்னதற்கே அப்பா துடிச்சுப் போயிட்டாங்க. இதுல நீ செய்த காரியம் தெரிஞ்சா..."

"சொல்லிடாதே அண்ணா."

"அதெப்படிச் சொல்வேன். இதோ பாரு நந்து... அம்மாகிட்ட அப்பப்போ போன் பண்ணிப் பேசு. இங்குள்ள வேலையைக் கவனி. கால் நல்லா குணமானதும் நாம போயி அஞ்சுவ பார்த்திட்டு வருவோம்."

"ம்..."

"நம்மள மாமான்னு கூப்பிட ஒரு புது ஜீவன் பொறக்கப் போகுதுடா. அதைக் கூடப் பார்க்காமப் போக உனக்கு எப்படிடா மனசு வந்தது?"

பதிலின்றி அமைதியாய் இருந்தான்.

"ஏன்டா! எவளோ ஒருத்திக்காக இத்தனை வருஷமா உன்னை வளர்த்தவங்கள, கூடவே பொறந்து வளர்ந்தவங்கள விட்டுட்டுப் போக எப்படி மனசு வந்தது?"

"அண்ணா! அந்த நேரம் அவ பேசினது மட்டும்தான் நினைவுல இருந்தது. வேற எதையும் நான் யோசிக்கலை."

"யோசிக்கணும்டா. நீ படிச்சவன். புத்திசாலி. ஒரு கம்பெனியை நிர்வகிக்கும் திறமைசாலி. இதையெல்லாம் யோசிக்க வேண்டாமா?"

"நீ சும்மா என்னைப் பாராட்டுற அண்ணா. நான் ஒரு நோயாளிதானே."



"இதெல்லாம் ஒரு நோயாடா? ஒரு நாள் ஹாஸ்பிடல் பக்கம் போய்ப் பார். எத்தனை வகை நோய், எத்தனை விபத்துக்கள், எத்தனை இழப்புக்கள். அதையெல்லாம் பார்த்தால் உன் குறை உனக்குப் பெரிதாய் தெரியாது.

நேற்றுகூட ஒரு ஆக்ஸிடெண்ட் கேஸ் வந்ததே. பாவம் அந்த ஆளுக்கு இரண்டு காலும் சிதைந்து விட்டது. ஆனாலும் அந்த அம்மா தன்னோட புருஷனுக்கு உயிரையாவது காப்பாத்திக் கொடுங்க டாக்டர்னு கதறினாங்களே. நீயும் பார்த்தாயே. உயிரோட மதிப்பு தெரிந்ததா உனக்கு?"

முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தான் நந்தகுமாரன். "தப்புப் பண்ணிட்டேண்ணா. எதையும் யோசிக்காம தப்புப் பண்ணிட்டேன்."

"ஷ்! அழக்கூடாது. போனதை நினைச்சு அழக்கூடாது. இனிமே நடக்கப் போறதைப் பத்தித்தான் யோசிக்கணும். நடந்ததையெல்லாம் ஒரு பாடமா நினைச்சுக்க."

"அண்ணா."

"ஆமாம் நந்து. அனுபவம்தான் சிறந்த பாடம். இப்போ அந்தப் பெண்ணோட சுயரூபம் தெரிஞ்சதால நீ ஏமாறல்ல. இனிமே உஷாரா இருப்ப. தெளிவா யோசிச்சு முடிவெடுப்ப."

"இல்லண்ணா... நான் ஏமாந்திட்டேன்."

"அப்படி ஏன் நினைக்கிற? தப்பிச்சுட்டேன்னு சொல்லிப் பாரு. ஒரு வேளை இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணின பிறகு அவ சுயரூபம் தெரிஞ்சிருந்தா உன் லைஃப் என்ன ஆகியிருக்கும்? நரகமாயிடாதா? அது

உன்னை மட்டுமா பாதிக்கும்? நம் மொத்தக் குடும்பத்தோட நிம்மதியையும் சந்தோஷத்தையும் அழிச்சிடாதா? இந்த அழிவிலிருந்து நீ தப்பிச்சிட்டேன்னு நினைச்சுக்க."

"ஆனா அண்ணா! அவ சொன்னது உண்மைதானே."

"என்ன உண்மை. நீ ஒன்றும் ஊனமானவனில்லை. இது ஒரு சாதாரண நோய். மருந்து சாப்பிட்டாலே சரியாகிவிடும். அது அந்த முட்டாளுக்குத் தெரியவில்லை. அதுவும் நல்லதுதான். இல்லையென்றால் நீ இன்னும் கஷ்டப்பட்டிருப்பாய். சரி. போனது போகட்டும். இனி அதைப்பற்றி பேச வேண்டாம். அவள் பெயரென்ன?"

"வேண்டாம் அண்ணா. வற்புறுத்தாதீர்கள். உண்மையைச் சொன்னால் அவள் மீது எந்தத் தப்பும் இல்லை. நான்தான் ஏமாளியாய் இருந்தேன். ஏமாறு பவர்கள் இருக்கும்போது ஏமாற்றுபவர்கள் மீது தப்பு சொல்லக் கூடாது."

"அப்போ அவளை அப்படியே விட்டுவிடுவதா?"

"அவசியம் இல்லண்ணா. அவளே வேலையை விட்டுட்டுப் போயிருப்பா. அவங்க மாமா பையனையே கட்டிக்கப் போறதா சொன்னா."

"அவளே அத்தனை துணிவாய் சொன்ன பிறகு நீ ஏன்டா இப்படி முட்டாள்தனமாய் முடிவெடுத்தாய்? அவள் முன்பு வாழ்ந்து காட்ட வேண்டாமா?"

"ம்ப்ச்! இதெல்லாம் பேசும்போது நல்லாத்தான் இருக்கும். ஆனா... என் மனசுல உள்ள வலி... அந்த வலியோட ஆழம் உங்களுக்குப் புரியாது."



"ஏன்டா புரியாது?"

"அண்ணா! நாம விரும்புற ஒருத்தர், நம்மை விரும்பின ஒருத்தர் நம்மை ஒதுக்கிட்டா, மறுத்திட்டா ஏற்படுற வலி இருக்கே அது உணர்ந்தவங்களுக்குத்தான் தெரியும்."

"அப்படி ஒரு வலியை ஏன் தேடிக்கிறீங்க? தேவையா அது?"

"இப்போ புரியுது. அப்போ புரியலையே."

"இப்போ புரியுதில்ல. இனிமே கண்டதையும் நினைச்சு உடம்பையும் மனசையும் வருத்திக்காதே. மறக்கணும்னு நினைக்கிற ஒன்றைப் பார்க்காம இருந்தாலே போதும். அது நம்மை விட்டு மறைஞ்சிடும்."

"மறந்திடுமா?"

"நிச்சயமா. அதனாலதானே உன்னை அனுப்பாம நான் போறேன்."

"அண்ணா... நீ போ. வேலையைக் கவனி. ஆனா அவளைப்பத்தி எதையும் ஆராய வேண்டாம்."

"நான் ஏன் ஆராயப் போகிறேன். விட்டது சனியென்று சந்தோஷப்படு."

"சரிண்ணா. முயற்சி பண்றேன். எனக்கு ஹாஸ்பிடல்ல இருக்கப் பிடிக்கலண்ணா. என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடேன்."

"இன்னும் ரெண்டு நாள் நாம இங்கே இருந்துதான் ஆகணும். தையல் பிரிக்கணுமே. அப்புறமா வீட்டுக்குப் போகலாம்."

"கால் எப்போண்ணா சரியாகும்?"

"எப்படியும் ரெண்டு மாசம் ஆகும்னு டாக் சொன்னார். அப்புறம் இவரே உன்னோட பிட்ஸ்க்கு ட்ரீட்மெண்ட் பண்றேன்னு சொல்லிட்டார். ஸோ... சீக்கிரமே குணமாகிடுவே."

"நிஜமாவாண்ணா." மலர்ச்சியாய்க் கேட்டா நந்தகுமாரன்.

"நிஜம்மா."

"அப்போ சீக்கிரமே உனக்குக் கல்யாணம் நடக்கும்"

"நம்ம ரெண்டு பேருக்குமே சேர்ந்து நடக்கட்டுமே அப்பாகிட்ட சொல்லி ரெண்டு பொண்ணு பார்க்க சொல்லிடுவோம்."

"விளையாடாதே அண்ணா! எனக்கு எதற்கு கல்யாணம்?"

"டேய்! முதல்ல இந்தத் தாழ்வு மனப்பான்மையை விட்டுத் தள்ளு. எப்பவும் சந்தோஷமா உற்சாகமா இருக்கணும். சரியா?"

"சரிண்ணா."

"வெரிகுட். நீ ரெஸ்ட் எடு. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்."

"அண்ணா."

"ம்?"

"நீ எப்போ ஊருக்குக் கிளம்புற?"



"உன்னை டிஸ்சார்ஜ் பண்ணின பிறகு. ஏன்டா?"

"என்னைப் பார்க்க வருவேல்ல."

"இது என்ன கேள்வி? நீ சனிக்கிழமை ஓடி வருவியே... அதே மாதிரி நான் வந்திடுவேன். சன்டே ஃபுல்லா நாம ஜாலியா என்ஜாய் பண்ணுவோம்."

"சரிண்ணா. நான் சொன்னது நினைவிருக்கட்டும்."

"ம்... ம்... நினைவிருக்கு."

"ஒருவேளை அவ வேலையை விட்டுப் போகாம இருந்தாலும் கூட நீ அவளை எதுவும் விசாரிக்கக் கூடாது."

"டேய்... அவ பேர் கூட சொல்ல மாட்டேனுட்டே... பிறகெப்படி நான் அவளை விசாரிக்கிறது?"

"அண்ணா! நான் ஒண்ணு சொல்லட்டுமா?"

"சொல்லேன்."

"நீ என்னை விட புத்திசாலி."

"இது பெரிய கண்டுபிடிப்பு. இதற்காகவே உனக்கு ரெண்டு கிளாஸ் சாத்துக்குடி ஜூஸ் கொடுக்கணும்" என்றவாறு சிரித்த ராஜகுமாரனோடு இணைந்து சிரித்தான் நந்தகுமாரன்.

பாறையாய் மனதை அழுத்திய பாரமும் கவலையும் பனியாய் விலகிவிட கண்களில் நீர் வரும் வரை சிரித்துக் கொண்டே இருந்தான்.

# 5

எதிரும் புதிருமாய்
இருந்தபோதும் - மனதோடு
இணைந்தே இருக்கிறோம்
நீயும் நானும்!

**வி**டிந்ததில் இருந்து எதுவுமே சரியில்லை. ஒரு வழக்கமாய் எழுப்பும் அலாரம் அடிக்காமல் போனதில் ஒரு மணிநேரம் தாமதமாகவே எழுந்தாள் மீனா. அதிகாலையிலே பவர்கட். அம்மாவுக்கு சமையலில் உதவி செய்து அம்மியில் சட்னி அரைத்து, குளித்து முடித்து அரக்க பறக்க ஓ வந்தால்... வழக்கமான பஸ்சும் போய்விட்டது.

சட்டென்று ஆட்டோ பிடிக்கலாம் என்றால் மாதக் கடைசியில் பர்ஸ் கனமின்றி இருந்தது. வந்த ஒரு சில பேருந்தும் நிரம்பி வழிந்த காரணத்தால் நிறுத்தத்தைக் கண்டுகொள்ளாமல் சென்றது.

அரை மணிநேரமாய் நின்றும் பயனின்றிப் போகவே, சற்று தூரம் நடந்து அடுத்த நிறுத்தத்தில் ஏறிக் கொள்ளலாம் என்ற முடிவுடன் நடக்க ஆரம்பித்தபோது, எதிரே வந்த தரகரிடம் மாட்டிக் கொண்டாள்.

“என்னம்மா மீனா? ஆபீஸ் போகல்ல?”

“ம்... போயிட்டே இருக்கேன்.”

“நடந்தா போவாய்? அது அண்ணாநகர்ல தானே இருக்கு.”



"ஆமா சார். பஸ் இங்க நிற்கவில்லை. அதான் அடுத்த ஸ்டாப்ல போய் ஏறலாம்னு போயிட்டு இருக்கேன்."

"நல்ல ஐடியா. அது காலேஜ் ஸ்டாப் ஆச்சே. கண்டிப்பா எல்லா பஸ்சும் நிக்கும். வாம்மா சேர்ந்தே போகலாம்."

"நீங்க எங்கே சார் வர்றீங்க?"

"எல்லாம் உன் விஷயமாத்தான் போயிட்டு இருக்கேன். தேனாம்பேட்டை போகணும்."

பதில் பேச விருப்பமின்றி விடுவிடுவென நடந்தாள். அவள் நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் மூச்சு வாங்கினார் சற்றே வயதான வைத்தியநாதன்.

"கொஞ்சம் மெல்லமா போம்மா. என்னால வேகமா நடக்க முடியல்ல."

"சார்! ஏற்கனவே எனக்கு ரொம்ப லேட்டாச்சு. இதில நீங்க வேற..."

"கோவிச்சுக்காதம்மா. உன்னைப் பார்த்துப் பேசவே முடியல்ல. அதான் இப்பப் பேசிடலாம்னு..."

"என்ன சார் பேசணும்?"

"இந்த சாமிநாதன் ஏன் இப்படிப் பண்றார்?"

"யாரு அப்பாவா? அவர் உங்களை என்ன செய்தார்?" சற்றே கோபமாய்க் கேட்டாள்.

"பின்ன என்னம்மா? வயசுக்கு வந்த பொண்ணை இத்தனை நாள்தான் வீட்லயே வெச்சிருப்பார்."

"உங்களுக்கு ஏன் சார் கவலை?"

"கவலைப்படாம எப்படிம்மா இருக்க முடியும் இத்தனை நாள் பழகி இருக்கோமே. போன வாரம் வந் வரன் எவ்வளவு அருமையான இடம் தெரியுமா? அதைய விட்டுட்டார்."

"அவங்க என்ன சும்மாவா கேட்டாங்க. ரெண்டு லட்ச கையில கொடுத்தா உடனே நிச்சயம் பண்ணிடலாம் கறாரா பேசினாங்களே."

"ரெண்டு லட்சம்தானேம்மா. அதைக்கூட கொடுக் லேன்னா எப்படி?"

சட்டென நின்றாள். "சார்! எங்க நிலைமை தெரிஞ் விளையாடுறீங்களா?"

"இல்லம்மா! உன் வயசு புள்ளைங்கல்லா கல்யாணம் பண்ணி புள்ளகுட்டியோட இருக்கிறப்ப மட்டும்..."

கையை உயர்த்தித் தடுத்தாள். "இதோ பாருங் சார். யாருக்கு எப்ப எது நடக்கணுமோ அப்ப நடக்கு சும்மா கண்டதையும் பேசி என் நேரத்தை வீணாக்காதீங் இனிமே மாப்பிள்ளை அது இதுன்னு பேசிட்டு வீட் பக்கம் நீங்க வரவேண்டாம். உங்களுக்குப் புண்ணியமா போகும்."

"என்னம்மா இப்படிச் சொல்லிட்டே! இப்பக் உனக்கு பேங்க்ல வேலை பார்க்கிற வரனைப் பார்க் தான் போயிட்டு இருக்கேன்."



"சரிதான். பேன்ஸி ஸ்டோர் வெச்சிருக்கிறவனே ரெண்டு லட்சம் கேட்கிறான். இதுல பேங்க் ஆபீஸர் கேப்பா?"

"இந்த வரன் அப்படியில்லம்மா. பணம் நகை போடுறது போதும். ஆனா பையன் பேங்குக்கு போய்வர ஒரு கார் மட்டும் வேணும்னு கேட்கிறாங்க."

வைத்தியநாதனை எரித்து விடுவதைப் போல் பார்த்தாள் மீனா.

"மாப்பிள்ளைக்குக் கால் ஊனமா? இல்ல காலே இல்லையா?"

"ஐயோ! திடகாத்திரமா இருக்காரம்மா."

"அப்போ நடந்தே போகச் சொல்லுங்க." கடுப்பாய்க் கூறிவிட்டு வேகமாய் நடக்க ஆரம்பித்தாள். கூடவே ஓடி வந்தார்.

"என்னம்மா... நீயும் இப்படிப் பேசறே! ரொம்பப் பெரிய இடம்மா இது."

பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள். "வைத்திய நாதன் சார். என் பொறுமைக்கும் எல்லை உண்டு. உங்க வேலையைப் பார்த்திட்டுப் போங்க. கைநிறைய பணத்தைச் சேர்த்து வெச்சிட்டு மாப்பிள்ளைக்காக காத்திருக்கிற இடத்தைத் தேடிப் போங்க. எங்களை விட்டுடுங்க. எனக்குன்னு இன்னொருத்தன் பொறந்தா வரப்போறான். ஏற்கனவே பிறந்திருப்பானில்ல. அவன் வரட்டும், பார்க்கலாம். இப்பக் கிளம்புங்க" என்றவாறு சாலையைக் கடக்க முயல, சீறிப் பாய்ந்து வந்த கார் கீறீச்சிட்டு நின்றது.

ஆத்திரமாய் நிமிர்ந்தாள். வைத்தியநாதன் மீதிருந்த மொத்தக் கோபமும் காரோட்டியின் மீது திரும்பியது. கண்ணாடியை மூடியிருந்த காரைப் பார்த்து,

"கார்ல வந்தா கண்ணு தெரியாதா? பிளைட்ல போறதா நினைப்பு. நான்சென்ஸ்... ரோட்ல போறோம்கிற நினைப்பு இருக்கட்டும்" சத்தமாகவே திட்டிவிட்டு நிற்காமல் நடந்தாள்.

கார் ஒரு நிமிடம் தயங்கி நின்று விட்டு மீண்டும் வேகமெடுத்துக் கிளம்பியது.

"பொறுப்பில்லாத ஆளுங்க. இப்படி வேகமா போனா ஏன் ஆக்ஸிடென்ட் நடக்காது. எத்தனை விபத்து நடந்தாலும் இவங்க திருந்தப் போறதில்லை" முணுமுணுத்துக் கொண்டே போனவளை ஒரு சிலர் திரும்பிப் பார்க்க கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

கல்லூரி நிறுத்தத்தில் வந்து நின்று, பாரம் தாளாமல் ஊர்ந்து வந்த பஸ்சில் தானும் தொற்றிக் கொண்டாள். மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள்.

"போச்சு! ஒரு மணிநேரம் லேட். பஸ் போற வேகத்தைப் பார்த்தா இன்னும் ஒரு மணிநேரம் ஆகும் போலிருக்கே." தவிப்பாய் புலம்பினாள்.

அவளது தவிப்பை இன்னும் அதிகரிக்க, சிக்னலில் நின்று ட்ராபிக்கில் ஜாமாகி, பாலம் கட்டும் பணி நடைபெறுவதால் மாற்றுப்பாதையில் சென்று ஒருவாறாக அலுவலகத்தில் கால் வைத்தபோது மணி பதினொன்று ஆகியிருந்தது.



நெஞ்சு தடதடக்க, உள்ளே நுழைந்தவளை பதற்றமாகவே எதிர்கொண்டான் ஸ்ரீராம்.

"என்ன மீனா! இவ்வளவு லேட் பண்ணிட்டீங்க?"

"சாரி சார். பஸ்சைத் தவற விட்டுட்டேன். அப்புறம்..."

"நோ... எக்ஸ்க்யூஸ். இன்னிக்கு புது எம்.டி. வந்திட்டார். நான் ஒண்ணும் பண்ண முடியாது. அவர்கிட்ட பேசிக்கங்க."

மீனாவிற்கு உதறல் எடுத்தது. நாக்கு ஒட்டிக் கொண்டது.

'பணியில் சேர்ந்த இந்த இரண்டு வருடத்தில் ஒருமுறை கூட தாமதமாக வந்ததில்லையே. போயும் போயும் இன்றுதானா தாமதிக்க வேண்டும்.

பத்து நாட்களாய் அதோ வருகிறார், இதோ வருகிறார் என்ற எம்.டி. இன்றா வரவேண்டும். கடவுளே! இதென்ன சோதனை. வந்த அன்றே வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமா? நந்தா சார் என்றால் பிரச்சினையை முழுவதும் கேட்டு விட்டுப் பேசுவார். இவர் எப்படியோ தெரியவில்லையே.'

"மீனா! என்ன நிக்கறீங்க. போங்க... ஏற்கனவே நாலுவாட்டி உங்களைத் தேடிட்டார்." ஸ்ரீராம் அடிக்குரலில் எச்சரித்தான்.

"நாலுவாட்டியா? எதுக்கு?" வெலவெலத்துப் போனாள்.

"இதை நீங்க அவர்கிட்டத்தான் கேட்கணும்."

"சாரி சார்... இதோ போயிடுறேன்." வேகமாக தன் கேபினுக்குள் நுழைந்து பேகை கழற்றி வைத்தாள். தொண்டை வறண்டு போக, வாட்டர் பாட்டிலைத் திறந்து கடகடவென குடிக்கும்போது, அஜிதா கையில் ஃபைலோடு நெருங்கினாள்.

"மீனு! ஏன் இவ்வளவு லேட்?"

"எம்.டி. கூப்பிட்டாராம். போயிட்டு வந்திடுறேன்."

"போ போ... நாங்கள்லாம் அறிமுகப்படுத்தியாச்சு. நீதான் பாக்கி."

"அஜி! அவர் எப்படிப் பேசினார். ரொம்ப டஃப்பா பேசறாரா?"

"அப்படித் தெரியல்ல. பட்! முகத்துல சிரிப்பே இல்ல. ஹாய், ஹலோவோட சரி. ஒரு ஸ்மைல் கூட பண்ணல. ஆனா பார்க்கிறதுக்கு ஹீரோ மாதிரி இருக்கிறாரடி."

"அஜி! சும்மா வளவளக்காதே. நாம பேசறது அவருக்குத் தெரியும். உன் சீட்டுக்குப் போ. நீ போ மீனு." ரமா தன் முன் இருந்த கணினியை விட்டுப் பார்வையை விலக்காமலே சொல்ல, கர்ச்சீப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டு எம்.டியின் அறையை நோக்கிச் சென்றாள் மீனா.

கதவைத் திறந்து வெளியே வந்து கொண்டிருந்தார் சபாபதி.

"என்னடாம்மா. இத்தினி நாளா இல்லாம இன்னிக்கு ஏன் லேட்டா வந்தே? சரி உள்ளே போ. கொஞ்சம் கோபமா இருக்கார்." கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு நகர்ந்தார்.



மீனாவிற்கு ஏனோ சிங்கத்தின் குகைக்குள் நுழைவது போலவே இருந்தது. ஆளாளுக்கு பயமுறுத்தியதில் உடல் சில்லிட்டுப் போயிருந்தது. கதவருகே போகும்போதே, "கமின்" என்ற அதிகாரக் குரல் கேட்டது.

திடுக்கிட்டு சுற்றிலும் பார்த்தாள். எங்கே இருக்கிறார், எப்படிப் பார்த்தார், யாரைக் கூப்பிடுகிறார்?

"மிஸ் மீனாம்பிகை... பிளீஸ் கம் இன்."

வேகமாய் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். கணினியின் முன் அமர்ந்து கொண்டிருந்த அவனின் முகம் தெரியவில்லை. கைகள் மட்டும் பட்டனோடு விளையாடிக் கொண்டிருக்க பக்கவாட்டுத் தோற்றம் லேசாய்த் தெரிந்தது.

"கு... குட்மார்னிங் சார்..."

"குட் ஆஃப்டர்நூன்." திரும்பாமலே பதில் வந்தது.

"சாரி சார்... கொஞ்சம் லேட்டாயிடுச்சு."

"சாரி சொல்றவங்களை எனக்குப் பிடிக்காது."

"ச... சார்."

"தப்புப் பண்றவங்கதான் சாரி சொல்வாங்க. ஸோ... தப்புப் பண்றவங்களை எனக்குப் பிடிக்காது."

"நான்... நான் என்ன தப்புப் பண்ணினேன்?"

"எத்தனை மணிக்கு ஆபீஸ்?"

"ஒ... ஒன்பது மணிக்கு..."

"இப்ப டயம் என்ன?"

"பதினொன்றரை."

"ஒன்பது மணிக்கு வராம மத்தியானம் வந்தா அ
தப்பில்லையா?"

"அது முழுக்க என் தப்பு மட்டும் இல்ல சார்." பய
விலகிவிட சற்று தைரியமாகச் சொன்னவளை வியப்பா
திரும்பிப் பார்த்தான்.

அதுவரை அவனது முதுகையே பார்த்துக் கொண்
டிருந்தவள் அவன் திடீரென திரும்பி அமர்ந்ததும் சற்று
தடுமாறினாள். நந்தகுமாரனை பார்க்கும் போது ஏற்படு
சகோதர உணர்வோ, தோழமை உணர்வோ ஏற்ப
வில்லை. மாறாக இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்த

"வேற யார் தப்பு?"

"காலையில அலாரம் அடிக்காம கைவிட்ட என்
டைம்பீஸ். அப்புறம் மின்சார வாரியம். கரண்ட் போனதா
சீக்கிரம் சமைக்க முடியல்ல. அப்புறம் பஸ். கூட்டத்தோ
வர்றதைக் காரணம் காட்டி எந்த பஸ்சுமே ஸ்டாப்பிங்
நிக்கிறதில்ல. அப்புறம் ஒரு ரம்பத்தைவிட மோசமா
தரகர்..."

சொல்லிக் கொண்டே போனவளின் பேச்சு சட்டெ
நின்றது. காரணம் அவனது பார்வை. இருக்கையில் சாய்ந்
நிலையில் இடக்கையால் முகத்தைத் தாங்கியவாறே லேசா
ஏளனம் அல்லது கிண்டல் கலந்த பார்வை.

"ம்? வேற யார்... ரோட்டுல போற கார்... ஆட்டோ..."



"ஆமா சார். அதை விட்டுட்டேனே. இதில ஒரு கார்காரன் வேற என்னோட ரெண்டு நிமிஷத்தை வீணாக்கிட்டான்."

"ஓஹோ... நீங்க யாரோடாவது பேசிக்கிட்டே ரோட்டைக் கிராஸ் பண்ணுவீங்க. ஐயோ அடிபட்டுடக்கூடாதேன்னு நாங்க பிரேக் போட்டா 'கார்ல வந்தா கண்ணு தெரியாதா'ன்னு திட்டுவீங்க. அடிச்சிப் போட்டுட்டுப் போயிட்டா அதுக்கும் சாபம். இது எந்த ஊர் நியாயம்?"

வாயடைத்துப் போனாள் மீனா. 'காரில் வந்தது இவனா? ஐயோ...' கண்களில் திகில் படர்ந்தது.

"ச... சார்..."

"ரோட்டுல நடந்து போறோம்ற நினைப்பு உங்களுக்கு இருக்கணும்."

"தப்புதான் சார். எல்லாம் அந்தத் தரகரால வந்த வினை."

"உங்க சொந்த விஷயத்தை நான் கேட்கல்ல. பட்... இதுதான் லாஸ்டா இருக்கணும். இனிமே லேட்டா வந்தா வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும்."

"லீவு கொடுத்திடுவீங்களா சார்."

"நக்கலா? ஒரேடியா வீட்டுக்கு அனுப்பிடுவேன்."

பிரட்டலாய் ஒலித்த அவன் குரலில் கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

"நான் போகட்டுமா சார்?"

"எங்கே வீட்டுக்கா?"

"இல்ல. என் சீட்டுக்கு."

"போகலாம். போகலாம்... வந்து இவ்வளவு நேரமாச்சே... நந்தாவைப் பத்தி எதுவுமே கேட்கத் தோணலையா?"

"சார்..."

"இல்ல கேட்கிற அளவுக்க அவனுக்கு முக்கியத்துவம் கிடையாதா?"

"ஐயோ! அப்படி இல்ல சார். நந்தா சாரை எங்க எல்லாருக்குமே ரொம்பப் பிடிக்கும்."

"உனக்கு?" பார்வையைக் கூர்மையாக்கினான்.

புரியாமல் விழித்துவிட்டு, "எனக்கும்தான்" என்றாள்.

"பிறகெப்படி பிடிக்காமல் போனது. நோயைப் பற்றி தெரிந்ததும் பிடிக்கவில்லையோ?"

"சார்! நீங்க... என்ன சொல்றீங்க?"

"நீ இந்த ஆபீஸ்ல வேலைக்குச் சேர்ந்து எவ்வளவு நாளாச்சு?"

"ரெண்டு வருஷம் சார்."

"இந்த ரெண்டு வருஷத்துல என் தம்பியைப் பத்தி நல்லாத் தெரிஞ்சிருக்குமே."

"ம்... தெரியும்."

"அவன் எப்பவாவது ஆபீஸ்ல உடம்பு முடியாம விழுந்திருக்கானா?"



"இல்லையே சார்! ஏன் இதெல்லாம் கேட்கிறீங்க?" உண்மையிலே எதுவும் புரியாமல்தான் கேட்டாள்.

"அவன் ஆரோக்கியமானவன்தான். அவனது குறை ஒன்றும் குறையில்லை. பரிபூரணமா குணமாகி விட்டான் தெரியுமா?"

"ஜான்டிஸ் சரியாகிப் போச்சா சார்?" வெகுளியாய்க் கேட்டவளைப் பார்த்து லேசாய் வியந்தான் ராஜகுமாரன்.

"என்னது?"

"நந்தா சாருக்கு ஜான்டிஸ்ன்னுதான் ஸ்ரீராம் சார் சொன்னார்."

"வேற... வேற எதுவும் உனக்குத் தெரியாதா?"

"வேறன்னா? எனக்குப் புரியலையே."

"ம்... பிரமாதமான நடிப்புதான். சரி, கல்யாணம் முடிவாகிடுச்சா?"

"சார்! உங்களுக்கு... எப்படி?"

"எல்லாம் தெரியும். நந்து எங்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டான்."

"அப்படியா? ஆமா சாருக்குத் தெரியும். மாசத்துல ரெண்டு நாள் லீவு போட்டுட்டுப் போவேனே... பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு."

"அவன்கிட்டயே சொல்லிட்டுப் போவியா? உனக்குக் கொஞ்சம் கூட கஷ்டமா இருக்காதா?"

"கஷ்டமாத்தான் சார் இருக்கும். பட் லீவு கேட்டா ரீசன் சொல்லணுமே."

"வீட்லதான் வரன் பார்த்திட்டு இருக்காங்களே பிறகேன் என் தம்பி வாழ்க்கையில் விளையாடினாய் பொழுது போக்கிக் கொள்ளவா? வெட்கமாக இல்லை இதெல்லாம் ஒரு பிழைப்பா? உன் விளையாட்டிற்கு என் தம்பிதான் கிடைத்தானா?" ராஜகுமாரன் பேசிக் கொண்டே போக, மீனா திணறிப் போனாள்.

தன்னைப் பற்றி தவறாகப் பேசுகிறான் என்று புரிந்து அதைத் தடுக்க முனைந்த போது, கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

## 6

முதல் சந்திப்பே முரணாகிப்
போனது - இனி எப்போது
இணைவோம் நீயும் நானும்!

கதவு தட்டப்பட்டதும் நிமிர்ந்தான் ராஜகுமாரன்.

"எஸ்... கமின்."

ஸ்ரீராம் உள்ளே நுழைந்தான். "சார்... போர்டு மீட்டிங் ரெடி சார்... எல்லாரும் வந்து வெயிட் பண்றாங்க."

"நீ போ... வர்றேன்."

"எஸ் சார்." அவன் வெளியேறியதும் கோபமாக அவனை ஏறிட்டாள் மீனா.

"சார்! என்ன நினைத்துக் கொண்டு இப்படியெல்லாம் பேசறீங்க... ஒன்றும் தெரியாமல் உளறாதீர்கள்."



"யார் உளறுவது? நானா? உனக்கு இருக்குடி. என் தம்பி பட்ட வேதனையெல்லாம் நீ பட வேண்டாம். அதற்குத்தானே நான் வந்திருக்கிறேன்."

"சார்... என்னவெல்லாமோ பேசறீங்களே. எனக்கு எதுவுமே புரியலையே."

"புரியும். புரிய வைப்பேன்" என்றவாறு இருக்கையை [illegible] எழுந்தான். உயரமாய் நின்றவனைப் பார்த்து [illegible]மாய் விழித்தாள்.

"இப்படி முகத்தை வைத்துக் கொண்டால் ஏமாற நான் [illegible]றும் நந்தகுமாரனல்ல. போ... போய் வேலையைப் [illegible]" என்று சொல்லிவிட்டு சரேலென வெளியேறினான்.

'எதற்காக தன்மீது இத்தனை வெறுப்பைக் [illegible]டுகிறான்? அப்படி என்ன செய்தேன் நான்? [illegible]குமாரனிடம் ஒரு வார்த்தைகூட தேவையின்றி [illegible]தில்லையே. இவன் பேசுவதைப் பார்த்தால்... ஐயோ! [illegible] நடந்தது? எனக்குத் தெரியாமல் எதுவும் நடந்து [illegible]டிருக்கிறதா? நான் என்ன செய்யப் போகிறேன்?'

பலவாறாக சிந்தித்தவாறே தன் இருக்கையை வந்து [illegible]ந்தாள்.

"ஏய்! இவ்வளவு நேரம் என்னப்பா பேசினீங்க? [illegible]டெல்லாம் ஒரு வார்த்தை கூட நின்னு பேசலையே. [illegible] அப்படி என்னதான் பேசினார்?" ஆவலாய்க் கேட்ட [illegible]வை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை.

"[illegible]ச் டயத்தில கேட்போம். இப்ப அவளை வேலை [illegible] விடு" என்ற ரமாவை நன்றியோடு பார்த்தாள்.

யாரிடமும் பேசத் தோன்றாமல் வேலையில் மூழ்க
தொடங்கினாள்.

மனம் முழுதாய் ஒத்துழைக்க மறுத்தது.

'என்ன வார்த்தை சொல்லிவிட்டான்? என்னைப் பற்
என்ன தெரியும் இவனுக்கு? என்னை வேதனைப்படுத்
வந்திருக்கிறானாமே. அப்படியென்ன நான் இவன் தம்பி
வருத்திவிட்டேன். நந்தாவிடம் வேடிக்கையாகக் கூடப் பேசி
தில்லையே.

இவன் ஏதோ தவறாய் புரிந்து கொண்டு பேசுகிறான்
மீட்டிங் முடியட்டும். பேசி தெளிவுபடுத்திவிட வேண்டு
அதுவரை வேலை ஓடாது. இந்த மனநிலையில் வேலை
செய்து தவறாகி விடக்கூடாது.'

நெற்றியைப் பற்றிக் கொண்டு கண்களை இறு
மூடினாள்.

'காலையிலிருந்து இன்று நடந்தது எல்லாமே த
தான். ச்சே! இன்று விடுமுறையாவது போட்டிருக்கலாம்

மேஜை மீதிருந்த போன் வீறிட்டது. சலிப்
எடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் காமாட்சி கண்ணீரோடு பேசின
"மீனாம்மா! நான் அம்மா பேசறேன்டா."

சட்டென நிமிர்ந்தாள். "அம்மா! என்னம்மா...
குரல் ஒரு மாதிரி இருக்கு?"



"மீனு! அப்பா படிக்கட்டுல இருந்து தவறி விழுந்
திட்டாரும்மா. சுய நினைவு இல்லாமக் கிடக்கிறாங்க..."

"ஐயோ! என்னம்மா? அப்பா இப்போ எங்கே?"

"வீட்லதாம்மா படுக்க வச்சிருக்கேன். பக்கத்துல வேற
யாரும் இல்லம்மா."

"அம்மா! நீங்க போனை வச்சிட்டு வீட்டுக்குப் போயி
அப்பா பக்கத்துல இருங்க. நான் லீவு சொல்லிட்டு
வர்றேன்."

"சீக்கிரம் வந்திடும்மா. எனக்கு பயம்மா இருக்கு."

"உடனே வர்றேம்மா. அழாதீங்க..." போனை
வைத்துவிட்டு எழும்போதே மற்றவர் கூடினர்.

"என்ன மீனு என்ன ஆச்சு?"

"அப்பா கீழே விழுந்து மயக்கம்மா இருக்காங்களாம்.
நான் உடனே போகணும்."

"சார் மீட்டிங்ல இருப்பார். போ... சொல்லிட்டுக்
கிளம்பு."

அவசரமாய் பேகை எடுத்துக் கொண்டு மீட்டிங்
ஹாலை நோக்கி ஓடினாள். முழுக்க கண்ணாடி சுவர்களால்
ஆன மீட்டிங் ஹாலில் பெரிய மேஜையின் இருபுறமும்
வரிசையாய் போடப்பட்டிருந்த இருக்கையில் நிறைய
நடுத்தர வர்க்க ஆண்கள் அமர்ந்திருக்க, நடுவே இருந்த
இருக்கையில் கம்பீரமாய் அமர்ந்திருந்த ராஜகுமாரன்
கம்பீரத்தில் உரையாடிக் கொண்டிருந்தான்.

அவனருகே சற்று தள்ளி அமர்ந்திருந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான் ஸ்ரீராம். வாசல் வரை வந்த மீனா தயங்கி நின்றாள்.

மீட்டிங்கின் நடுவே யாரும் உள்ளே செல்ல அனுமதி யில்லை. உள்ளே போகாமல் தவிப்பாய் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றாள்.

ஆபீஸ் பாய் கண்ணதாசன் சில நோட்டுகளை எடுத்துக் கொண்டு எதிரே வந்தான்.

"என்ன மேடம்... இங்க நின்னுட்டு இருக்கீங்க?"

"கண்ணா! நீ உள்ளேயா போகப் போற?" தவிப்பாய்க் கேட்டாள்.

"ஆமா மேடம். சார் போன வருஷத்து அக்கவுண்ட்ஸை எடுத்திட்டு வரச் சொன்னாங்க. அதான் கொண்டு போறேன்."

"கண்ணா! என் அப்பாவுக்கு உடம்பு முடியலியாம். கீழே விழுந்து மயங்கி விழுந்திட்டாங்களாம். இப்பத்தான் போன் வந்தது. நான் உடனே வீட்டுக்குப் போகணும். சார்கிட்ட கொஞ்சம் சொல்லேன்."

"இதோ சொல்றேன் மேடம்." வேகமாக உள்ளே நுழைந்தவன் அதே வேகத்தில் வெளியே வந்தான்.

"மேடம்! சார் இந்த வருஷத்து நோட்டையும் கேட்கறாங்க. என்னை எதுவும் பேசவிடல்ல. நான் போய் எடுத்திட்டு வர்றேன்" என்றவாறு அவன் விலகிவிட கண்ணன் எட்டிப் பார்த்தது.



நெஞ்சம் துடிக்க சற்று நகர்ந்து ராஜகுமாரனின் பார்வையில் படும்படி நின்று கொண்டாள். நேரம் சென்று கொண்டே இருக்க, கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

மற்றவர்களோடு பேசிக் கொண்டும், அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்டுக் கொண்டும் இருந்தவனது பார்வை வெளியே தவிப்பாய் நின்றவளின் மீது அவ்வப் போது பதிந்து மீண்டது. முகத்தில் எந்த உணர்வுமின்றி அவன் செயல்பட்ட விதம் மனதைத் தாக்க விம்மி அழுதாள்.

வெகு திடீரென நிமிர்ந்த ஸ்ரீராமின் கண்களில் அந்தக் காட்சி பட்டுவிட, படபடப்போடு ராஜகுமாரனை நோக்கினான்.

"சார்! மீனா மேடம் வெளியே வெயிட் பண்றாங்க."

"பண்ணட்டும்" என்ற ஒற்றை வார்த்தையோடு தன் பேச்சைத் தொடர்ந்தான்.

தயக்கமாய் வெளியில் நின்றவளைப் பார்த்துவிட்டு தன் பணியில் கவனத்தைத் திருப்பினான் ஸ்ரீராம். முழுதாய் பத்து நிமிடம் கழித்து பெரிய கணக்கு நோட்டோடு வந்தான் கண்ணதாசன்.

"மேடம்! நீங்க இன்னும் போகலியா?"

"கண்ணா! சார் இன்னும் என்னைக் கூப்பிடலியே. கொஞ்சம் சொல்லு கண்ணா. நான் வீட்டுக்குப் போகணும்." சொல்லும் போதே அழுகை பீறிட்டது.

"அழாதீங்க மேடம். இதோ சொல்றேன்" என்றவன் உள்ளே நுழைந்து ராஜகுமாரனிடம் ஏதோ சொல்வது தெரிந்தது. அவன் வெளியே திரும்பிப் பார்த்தான்.

அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டா மீனா. அவளது அழுது சிவந்த முகமும் கண்களும் மன வருத்த மனம் இளகியது.

"வரச் சொல்லு" என்றான் கண்ணதாசனிடம்.

கதவைத் திறந்து, "மேடம்! சார் கூப்பிடுறாரு" என்றா

"இதோ வந்துட்டேன்" பரபரப்பாய் உள்ளே நுழை தவள், சட்டென கதவில் மோதி, சமாளித்து ராஜகுமா அருகே சென்றாள்.

"சார்! அப்பாவுக்கு உடம்பு முடியல..."

"போயிட்டு வாங்க."

"சார்! வந்து..." தயக்கமாய் மற்றவர்களைப் பார்த்தா

"ஸ்ரீராம்! கேஷியர்கிட்ட சொல்லி இவங்களு ரெண்டாயிரம் ரூபாய் கொடுத்தனுப்பச் சொல்லுங்க" எ சொல்லிவிட்டு விட்ட இடத்திலிருந்து அவன் பேச தொடர, மீனாவின் கண்கள் நன்றியுணர்வோடு அவ பார்த்தது.

அதனைக் கவனியாதது போல் தன் பேச் மூழ்கிவிட, ஸ்ரீராமின் பின்னே ஓட்டமும் நடை வெளியேறினாள் மீனா.

× × ×

"ஏம்மா! உடம்பு சரியில்லாத மனுஷனை மா விடலாமா? ஆபரேஷனுக்கும் சம்மதிக்க மாட்டேன்னு வெறும் மாத்திரை மருந்தால நடமாடிக்கிட்டு இருந்தா



இனிமே அதுக்கும் வாய்ப்பில்லை." மருத்துவர் உதட்டைப் பிதுக்கினார்.

மீனா பதறித் துடித்தாள்.

"டாக்டர்! அப்படிச் சொல்லாதீங்க. எனக்கு எங்க அப்பா வேணும். அதுக்காக நான் என்ன வேணும்னாலும் பண்றேன், டாக்டர்."

"முதல்ல ஆபரேஷனுக்கு பணம் ரெடி பண்ணுங் கம்மா. அவரோட இடுப்பு எலும்பு முறிஞ்சிருக்கு. ஏற்கனவே எலும்பு தேய்மானம் வேற. கண்டிப்பா ஆபரேஷன் பண்ணியே ஆகணும்."

"எவ்வளவு சார் பணம் கட்டணும்."

"மொத்தத்துல எழுபதுல இருந்து எண்பதாயிரம் வரை ஆகும்மா. முதல்ல முப்பதாயிரம் கட்டுங்க. முடிஞ்சா நாளைக்கே கட்டிடுங்க. உடனே ஆபரேஷன் பண்றது நல்லது."

"டாக்டர்! நான் நாளைக்கு காலையில பணத்தோட வர்றேன். நீங்க ஆபரேஷனுக்கு ரெடி பண்ணுங்க."

"சரிம்மா! இதுல மாத்திரை மருந்தெல்லாம் எழுதி இருக்கேன். வாங்கிக் கொடுங்க. நான் ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்யறேன்" என்றவாறு மருத்துவர் வெளியேறி சாமிநாதன் வலியோடு முனகினார்.

"மீனாம்மா... என்னை வீட்டுக்கு கூட்டிட்டுப் போயிடும்மா."

“இல்லப்பா. நாளைக்கு ஆபரேஷன் பண்ணனும். அம்மா! அப்பாவைப் பார்த்துக்கங்க. நான் மருந்து, மாத்திரை வாங்கிட்டு வர்றேன்.”

காமாட்சி கண்ணீரோடு மகளை நெருங்கினாள். “பணத்துக்கு என்னம்மா பண்றது?”

“டெபாசிட்டை எடுத்துட்டுப் போறேம்மா.”

சாமிநாதன் பலஹீனமாய் மறுத்தார். “வேண்டாம் ராஜாத்தி. அது உன் கல்யாணத்துக்காக சேர்த்த பணம். அதை எடுக்காதேம்மா.”

“அப்பா! எப்பவோ நடக்கப் போறதை நினைச்சு உங்களை இழக்கச் சொல்றீங்களா? அது நீங்க கஷ்டப்பட்டு சேர்த்த பணம்ப்பா. உங்க உயிரை காப்பாத்த உதவட்டுமே.”

“சொன்னாக் கேளும்மா! நேத்துக் கூட வைத்தி ஒரு நல்ல இடம் வந்திருக்குன்னு சொன்னார்.”

“இனிமே அவர் வரமாட்டாருப்பா.”

“ஏம்மா?”

“நமக்கேம்ப்பா இந்தக் கல்யாண ஆசையெல்லாம் முதல்ல உங்க உடம்பை கவனிப்போம். மத்தது தானா நடக்கும்.”

“அப்படிப் பேசாதம்மா.”

“அம்மா! அப்பாவைப் பார்த்துக்கங்க. வீட்ல பேசிகிட்டே இருப்பாங்க” என்றவாறு மருந்துச் சீட்டுடன் வெளியேறினாள் மீனா.



“காமாட்சி! பணத்தை எடுக்க வேண்டாம் காமாட்சி. நம்ம புள்ளைக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்க வேண்டாமா?”

“ஏங்க! அதைப் பார்க்க நீங்க இருக்க வேண்டாமா? புள்ள கல்யாண வேலையை ஓடியாடி செய்ய நீங்க வேணுமே எனக்கு.” முந்தானையால் வாயை மூடிக் கொண்டு அழுத மனைவியைக் கண்டு வருத்தமாய் விழிகளை மூடிக் கொண்டார் சாமிநாதன்.

எத்தனை உழைப்பு உழைத்த உடம்பு. ஏன் திடீரென பலமிழந்து போனது. கூடுதலாய் ஒரு நான்கு வருடம் உழைத்திருந்தால் போதும். ஒரே மகளின் திருமணத்தை கண்குளிரப் பார்த்திருக்கலாம்.

ராஜதுரை அந்த ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தை ஆரம்பிக்கும்போதே உடனிருந்தவர் சாமிநாதன். அவரது உழைப்பும் சேவையும் கண்டு அவரை நிரந்தரப் பணியில் அமர்த்தியிருந்தார். பிறகு தொழில் விரிவடைந்து திருவனந்த புரத்திலும் நிறுவனமொன்றை ஆரம்பித்து ராஜதுரை அங்கே போனதும் சபாபதியும் சாமிநாதனுமே இணைந்து திறம்பட நடத்தி வந்தனர்.

ராஜதுரையின் பிள்ளைகள் வளர்ந்து பொறுப்பேற்ற பின்பும் கூட இவர்களுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கவில்லை. முடிந்தவரை உழையுங்கள் என்றுதான் ராஜதுரை சொல்லி யிருந்தார்.

இறுதிநிலையில் சாமிநாதன் கால்கள் நடக்க இயலாமல், எழ முடியாமல் தொய்ந்து விழுந்த பிறகே ஓய்வெடுத்தார்.

அவரது பணியை அவரது மகளுக்கே கொடுக்க தந்தை கூறியதும் நந்தகுமாரனும் ஏற்றுக் கொண்டான்.

சாமிநாதன் பார்சல்களை ஓட்டுவது, அதைக் கணக் கெடுப்பது, ஏற்றி அனுப்புவது, சில சமயம் சரக்குகளோடு பயணிக்கும் பணியில் இருந்தார்.

ஆனால் அவரது மகள் சின்னப் பெண் என்பதாலும் படித்த பெண் என்பதால் கணக்கெழுதும் பணியில் அமர்த்தப்பட்டாள்.

இதை ராஜதுரை மற்றும் சபாபதியும் நந்தகுமாரனும் நன்கு அறிந்திருந்தனர். ஆனால் எப்போதோ ஒருமுறை வந்து போகும் ராஜகுமாரன் அறிந்திருக்கவில்லை.

அதோடு தம்பியின் இந்த நிலைக்கு மீனாதான் காரணம் என்ற ஒரு எண்ணமே அவளை வெறுக்க, வேதனைப்படுத்த வைத்தது.

அன்று ஸ்ரீராம் அனுப்பியிருந்த பணியாளர்களின் பெயர்ப் பட்டியலை கடைசி வரை படித்துப் பார்த்திருந்தாலும் சற்று யோசித்திருப்பான்.

ஆனால் அவனது கண்கள்தான் மீனாவின் பெயருக்குப் பிறகு எதையும் பார்க்கவில்லையே.

ஒரு வேளை பார்த்திருந்தால்...

மீனாவை வெறுக்கும்படி நடந்து கொண்டிருப்பானா?



# 7

நிலவும் ஒளியும் போல்
கதிரும் வெப்பமும் போல்
இரவும் நிலவும் போல்
ஒன்றுக்குள் ஒன்றாய் கலந்தே
நிற்கிறோம் நீயும் நானும்!

**போ**னில் உரையாடிக் கொண்டிருந்த தம்பியை திருப்தியாய் பார்த்தான் ராஜகுமாரன்.

நந்தகுமாரன் நன்கு தேறியிருந்தான். மலையாளக் காற்றின் குளுமையும் பசுமையும் அவனைப் பளிங்காய் மாற்றியிருந்தது. உண்டு உறங்கி நிம்மதியாய் ஓய்வெடுத் ததில் முகம் பொலிவாய்க் காட்சியளித்தது. காயங்கள் பாதிக்கும் மேல் ஆறிவிட்டிருக்க கால்களில் மட்டும் பெரிய கட்டு இருந்து மனதை வருத்தியது.

கைகளில், தோளில் சிராய்த்திருந்த காயங்கள் ஆறி தழும்புகள் மட்டுமே மிஞ்சியிருந்தன. பாட்டிலில் இருந்த தைலத்தை எடுத்துத் தம்பியின் காலில் போடப்பட்டிருந்த பெரிதான கட்டின் மேல் பரவலாய் ஊற்றினான்.

ஒவ்வொரு வாரமும் வந்து மருத்துவரைச் சந்தித்து அவர் சொல்படி மருந்து மாத்திரைகளைக் கொடுத்து ஒரு நாள் முழுக்க தம்பியுடனே கழித்துவிட்டு செல்வது வழக்கமாகியிருந்தது.

போனை வைத்து விட்டு நிமிர்ந்தான் நந்தகுமாரன்.

"அண்ணா! நான் பேசினது சரிதானே. டீல் ஓ.கே.வா?"

"டபுள் ஓ.கே. பிஸினெஸ்ல பின்னுறேடா" மெச்சினா அண்ணன்.

"நீ மட்டும் என்னவாம்? ஒரே வாரத்தில் எல்லா கம்பெனியோடயும் பேசி ஏதோ புரட்சியெல்லா பண்ணிட்டியாமே... ஸ்ரீராம் சொன்னான்."

"அது அப்போ. இப்போ இன்னும் நிறைய பிளானி போட்டு வெச்சிருக்கேன். நீ வேணா பாரேன், இன்னு ரெண்டே மாசத்துல டர்ன் ஓவரை ஏத்திக் காட்டுறேன்."

"செய்யுண்ணா. எனக்கு இந்த இடமும் தொழிலு ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் இதையே கன்டினி பண்ணிக்கவா?"

"ஷ்யூர்! எனக்குக் கூட சென்னை வெயிலும் ந கம்பெனியும் ரொம்ப பிடிச்சிப் போச்சு. இனிமே நா சென்னைவாசிதான்."

"இதை அப்பாகிட்டயே சொல்லிட்டா என்ன?"

"ம்... சொல்லலாம். அப்பா வந்தபிறகு சொல்லிடலா

பேசிக் கொண்டிருக்கும் போதே மீண்டு நந்தகுமாரனின் செல் சிணுங்கியது.

"பெரிய பிஸினெஸ்மேன் ஆகிட்டே. உன்கிட்ட கொ நேரம் கூட உட்கார்ந்து பேச முடியலியே" எ அண்ணனிடம் "ஷ்" என்றான்.

"போன்ல அப்பா..." என்றவாறு போனை காதிற் கொடுத்தான்.



"ஹலோ அப்பா! எப்படி இருக்கீங்க? அம்மா, அஞ்சு, மாப்பிள்ளை எல்லாரும் சவுக்கியமா?"

"எல்லாரும் சவுக்கியம்ப்பா. நீ எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேம்ப்பா."

"உடம்பு நல்லா ஆகிடுச்சா?"

"ம்... பெர்ஃபெக்ட்லி ஆல்ரைட். அப்புறம் அஞ்சு எப்படி இருக்கா?"

"நல்லா இருக்காப்பா. இந்த வாரமே டெலிவரி ஆயிடும்னு சொல்லியிருக்காங்க."

"ஓ... சந்தோஷம் டாடி. குழந்தை பொறந்ததும் போன் பண்ணிடுங்க."

"சொல்றேம்ப்பா. ஆமா! இன்னிக்கு சன்டே ஆச்சே. அண்ணன் வந்தானா?"

"ம்... இதோ இருக்காம்ப்பா."

"போனை அவன்கிட்ட கொடு."

"அண்ணா! இந்தா பேசு" என நீட்டினான். வாங்கிப் பெரிய மகனிடம் நலம் விசாரித்துவிட்டு விஷயத்துக்கு வந்தார். "ராஜா! சாமிநாதனை ஆஸ்பத்திரியில சேர்த்திருக்காங்களாமே. நீ என்கிட்ட ஒரு வார்த்தை சொன்னயா?"

"யாருப்பா சாமிநாதன்?"

"நம்மகிட்ட கிட்டத்தட்ட இருபது வருஷத்துக்கும் மேலே உழைச்சவருடா. இப்போ அவருக்கு ஆபரேஷன் பண்ணி யிருக்காமே. நீ பணம் கொடுத்தியா?"

"அப்பா! அவரே யாருன்னு தெரியல்ல எனக்கு. பிறகெப்படி நான் பணம் கொடுக்கிறது?"

"ஏன்டா! அவரோட பொண்ணு உங்கிட்ட சொல்லலையா?"

"அவரோட பொண்ணு... யாரு..." சட்டென நினைவு வந்தது. நான்கு நாட்களுக்கு முன் ரமா சொன்னாளே... மீனா அப்பாவிற்கு ஆபரேஷனாம் சார். ஒரு வாரம் லீவு சொல்லி அனுப்பினாள் என்று.

"ஓ... அந்தப் பொண்ணாப்பா. அவ என்கிட்ட எதுவும் கேட்கலையே..."

"ராஜா! இதுக்கெல்லாம் கேட்காமலே உதவி செய்யணும்ப்பா. சாமிநாதன் நம்மகிட்ட இரவு பகலனு பாராம உழைச்சவருப்பா. வெறும் பணத்துக்காக செய்த வேலையில்ல அது. அதையும் தாண்டி இந்தக் கம்பெனிய எப்படியும் முன்னுக்குக் கொண்டு வரணும்னு எந்த எதிர்பார்ப்பும் இல்லாம பாடுபட்டவர்."

'ம்க்கும். அவருக்கும் சேர்த்துத்தான் மக நல்லா சுருட்டியிருக்காளே தம்பியிடம்' மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

"நீ நாளைக்குப் போன உடனே ஹாஸ்பிடலுக்கு போ. ஆபரேஷனுக்கு ஆன செலவை கம்பெனியே ஏத்துக்கும்னு சொல்லி பணத்தைக் கட்டிடு. பணமா கையில கொடுத்தா வாங்கிக்க கஷ்டப்படுவாங்கப்பா. அதனால ஹாஸ்பிடல்ல நீயே கட்டிடு சரியா?"

"சரிப்பா! அப்படியே பண்ணிடுறேன்."



"அப்புறம் சாமிநாதன் குணமானதும் முடிஞ்சா நம்மகிட்டயே வேலை பார்க்கலாம்னு சொல்லு. அந்த உற்சாகத்திலேயே எழுந்திடுவார்."

"சரிப்பா."

"நான் வந்த பிறகு பார்க்கிறேன்னு சொல்லு. முடிஞ்சா என்கிட்ட பேசச் சொல்லு."

"சரிப்பா" என்றான் கடுப்பை மறைத்தபடி.

"அப்புறம் அந்தப் பொண்ணு லீவு போட்டதுக்கு சம்பளத்தில பிடிச்சிடாதே. பாவம்! அந்தச் சம்பளம்தான் அவங்க குடும்பத்துக்கே சாப்பாடு போடுது."

"சரிப்பா. நான் பார்த்துக்கிறேன். ஆமா இதெல்லாம் உங்களுக்கு யாருப்பா சொன்னா?"

"தற்செயலா சபாபதிக்கு போன் பண்ணினேன். அவரும் சாமிநாதனை பார்க்கப் போயிருக்கிறார். அப்பத்தான் சொன்னார். சாமிநாதன்கிட்டயும் பேசினேன். நீயும் சொல்லு."

"சரிப்பா... வெச்சிடுங்க. அப்புறம் பேசறேன்" என்றவாறு போனை வைத்தான். முகம் கடுமையாய் மாறியிருந்தது.

"என்ன அண்ணா? அப்பா என்ன சொன்னாங்க?"

"ம்? நீ அள்ளிக் கொடுத்தது போதாதாம். நானும் கொடுக்கணுமாம்."

நந்தகுமாரனின் முகம் நொடியில் மாறியது. "என்ன சொல்ற அண்ணா?"

தம்பியின் முகத்தைக் கண்டதும் தன்னையே கடிந்து கொண்டான் ராஜகுமாரன்.

'இந்த சில நாட்களாகத்தான் அவன் தன் சோகத்தை மறந்து அவளைப் பற்றிய பேச்சையே எடுக்காமல் இருக்கிறான். அப்படியென்றால் அவளை மறக்கத் தொடங்கி யிருக்கிறான் என்றுதானே அர்த்தம். இன்று நாமே அவளைப் பற்றி பேசி அவனை வருத்தப்பட வைக்கப் பார்த்தேனே!'

"அண்ணா! உன்னிடம்தான் கேட்கிறேன்." நந்த மீண்டும் குரல் கொடுக்க, லேசாய் சிரித்தபடி சமாளித்தான் தப்பித்தவறி கூட அவள் பெயரை உச்சரிக்கக் கூடாது என்ற முடிவுடன்,

"அது வேறொண்ணுமில்ல நந்து! யாரோ சாமிநாதனாமே. அவருக்கு உடம்பு சரியில்லையாம் ஹாஸ்பிடல்ல இருக்காராம். அவருக்கு நாம பில் பே பண்ணனுமாம்" என்றான் சாதாரணமாய்.

"என்ன? சாமிநாதன் சாரா? அவர் ஏற்கனவே உடம்பு முடியாம இருந்தாரே. இப்ப என்ன ஆச்சு?" உண்மையில் பதறினான் நந்தகுமாரன்.

"நீ ஏன்டா இப்படிப் பதறுற?"

"ரொம்ப நல்லவருண்ணா அவர். சின்சியரான உழைப்பாளி. ரொம்ப நேர்மையானவர்கூட. உடம்பு முடியாம போனதாலதான் வேலையிலருந்து நின்னுட்டார் அவர் குடும்பம் கஷ்டப்படக்கூடாதுன்னுதான் அவர் பொண்ணையே வேலையில சேர்த்துக்கச் சொன்னார் அப்பா."



"ஓ... நம்ம அப்பாவோட சப்போர்ட் வேற இருக்கா அவளுக்கு?"

"அண்ணா! மீனா எப்படி இருக்காங்க?" ஆவலாய்க் கேட்டவனை வேதனையாய்ப் பார்த்தான்.

'நீ இன்னும் அவளை மறக்கலையாடா? ஆனா அவ உன்னைப் பத்தி ஒரு துளிகூட அக்கறையில்லாம இருக்காளே. உன்னை ஏமாற்றிவிட்ட குற்ற உணர்வே இல்லாமல் என்னிடமே நடிக்கிறாளே. அவளைப் பார்க்கும் போதெல்லாம் என் இதயம் பற்றி எரிகிறதே! நீ என்ன வென்றால் அவளைப் பற்றி இத்தனை ஆவலாய் விசாரிக் கிறாயே.' மனம் வலித்தது.

"பாவம் அண்ணா சாமிநாதன் சார். எப்படியாவது மீனாவோட கல்யாணத்தை முடிச்சிடணும்னு முயற்சி பண்ணினார். ஆனா வர்றவன் எல்லாம் அதிகமா எதிர்பார்க்கிறானாம். மீனாகூட பாவம்தான். இல்லண்ணா?"

"நீ ஏன்டா அதைப்பத்தியெல்லாம் கவலைப்படுற. அந்த பாவத்தைத் தொலைக்கட்டும்."

"அண்ணா."

"உண்மையைத்தான்டா சொல்றேன். யார் யார் என்ன பாவம் பண்றோமோ அதை அவங்கதானே தொலைக் கணும். நாம என்ன பண்ண முடியும்?"

"அதெல்லாம் இருக்கட்டும். நீ சாமிநாதன் சாரைப் பார்த்தியா?"

"இல்லடா. இப்ப அப்பா சொன்ன பிறகுதான் எனக்கே தெரியும்."

"அப்போ... மீனா... உங்கிட்ட சொல்லலையா?"

"டேய்... ஒருநாள் போர்டு மீட்டிங்ல இருக்கும்போ அப்பாவுக்கு உடம்பு முடியல, வீட்டுக்குப் போகணும் சொன்னா. போயிட்டு நாலு நாள் கழிச்சு வந்தா அதுக்கப்புறம் ஒரு வாரம் லீவு எடுத்திட்டுப் போனா. அப்புற ரமாகிட்ட எக்ஸ்ட்ரா ஒன் வீக் லீவு சொல்லி அனுப்பியிருக்கா

"லீவு முடிஞ்சு வந்ததும் மீனாகிட்ட அவங்க அப் பத்தி விசாரிச்சியா?"

"நான் ஏன்டா விசாரிக்கணும்?"

"அவங்க நம்ம ஸ்டாஃப் அண்ணா."

"இருக்கட்டுமே. அதுக்காக..."

"அண்ணா! உன் பேச்சே சரியில்ல. என் மீனாவோட எதுவும் பிரச்சினையா?" தம்பி கேட்டு உஷாரானான்.

"சேச்சே! எனக்கு என்ன பிரச்சினை?"

"பின்னே... இப்படிப் பேசற. அந்தப் பொண் ரொம்ப நல்ல பொண்ணுன்னா. ரொம்ப அமைதியா அடக்கமான பொண்ணு."

"போதும் போதும். நீ இப்படிக் கண்டதையும் நினை வருத்திக்காதே. நாளைக்குப் போறேன்ல. அப்ப விசாரிச் பணத்தைக் கட்டிடறேன்."

"அதைக் கொஞ்சம் சிரிச்சிகிட்டே சொல்லேன்... அ இருக்கும்."



"ஈ" என அத்தனை பல்லையும் காட்டினான் ராஜகுமாரன்.

"இது வாசல்ல கண் திருஷ்டிக்காக மாட்டுற படம் மாதிரியில்ல இருக்கு" என நந்தகுமாரன் சிரிக்காமல் சொல்ல, தம்பியின் முதுகில் அறைந்தான் அண்ணன்.

சற்று நேரம் சிரித்துவிட்டு அண்ணனின் முகத்தைத் தயக்கமாய் ஏறிட்டான் நந்தா.

"அண்ணா... ஆபீஸ்ல யாராவது வேலையை ரிசைன் பண்ணியிருக்காங்களா?"

"இல்லையே... ஏன் கேட்கிற?"

"இல்ல... சும்மாதான். யாராவது என்னை விசாரிப் பாங்களா?" ஆவலும் ஏமாற்றமுமாய் கேட்ட நந்தாவை மனம் வலிக்கப் பார்த்தான் ராஜகுமாரன். சட்டென முகத்தை மாற்றிக் கொண்டு,

"அட போப்பா உன்னை விசாரிக்காத ஆளே இல்ல. நந்தா சார் எப்படி இருக்காரு, எப்ப வருவாருன்னு ஒரே கேள்விதான் போ. என்னால பதில் சொல்லி மாளலை" என்றான் சிரித்தபடி.

"ஓ... அப்படியா?" என ஒப்புக்காக சிரித்துவிட்டு படுக்கையில் சாய்ந்து கொண்டான் நந்தா. அவனது முகவாட்டம் வருத்தத்தைத் தர, இனி இவனிடம் அங்கே நடப்பதைப் பற்றி மூச்சுவிடக் கூடாது என்ற முடிவுடன் படுத்தான்.

# 8

எத்தனை வெறுப்பாய்
ஒதுங்கினாலும் ஏதோ
ஓர் ஈர்ப்புசக்தியினால்
இணைகிறோம் நீயும் நானும்!

**க**ண் முன்னே நின்றவனை நம்ப முடியாத ஆச்சர்யத்துடன் விழிகளை விரித்துப் பார்த்தாள் மீனா. மென்மையான புன்னகையுடன் நின்றவனிடம் பேச வார்த்தை வரவில்லை. சாமிநாதன்தான் குரல் கொடுத்தார்.

"என்னம்மா அப்படியே நின்னுட்ட? தம்பி வந்து ரொம்ப நேரமாச்சும்மா. உனக்கு ஏம்மா இவ்ளோ நேரம்?"

"ம்! நல்ல தண்ணி வந்ததுப்பா. பிடிச்சு வெச்சிட்டு சமைச்சு எடுத்துட்டு வர லேட்டாயிடுச்சு. நீ... நீங்க எப்போ சார் வந்தீங்க?"

இதற்கும் தந்தையே பதிலளித்தார். "தம்பி அப்பவே வந்திடுச்சிம்மா. ஆஸ்பத்திரி பீஸைக் கூட கட்டிட்டாரும்மா."

"என்ன? பீஸ் கட்டினீங்களா? ஏன் சார்... இன்னும் ஒரு வாரத்தில பேங்க் டெபாசிட் கைக்கு வந்திடும். நானே கட்டிடுறேன்."

"சாமிநாதன் சாருக்காக அவரது சர்வீசுக்காக கம்பெனியே கட்ட முடிவு செய்தது. என் அப்பா சொல்லித்தான் கட்டினேன். நீங்க என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்."



காமாட்சி முந்திக் கொண்டாள். "நான் எவ்வளவோ சொன்னேன் தம்பி. பேங்க்ல இந்த மாசம் முடிஞ்ச பிறகுதான் பணத்தை எடுக்க முடியும்னு சொல்லிட்டாங்களாம். அதனால ஆபரேஷனும் பத்து நாள் தள்ளி வெச்சிட்டோம். அவரால ரொம்ப முடியாம போயிட்டதால நகைகளை அடமானம் வெச்சுத்தான் பாதி தொகை கட்டினோம்."

"அம்மா! சும்மா இருங்க" அதட்டினாள் மீனா.

"இரும்மா... அப்பக்கூட நான் சொன்னேன் தம்பி! ஆபீஸ்ல ஏதாவது லோன் கேளுன்னு... இவதான் மாட்டேன்னுட்டா."

"ஏன் மீனா? நீங்க கேட்டிருக்கலாமே."

"சாரி சார்... இதுவரை இப்படி எதுவும் கேட்டுப் பழக்கமில்லை. அதோட பேங்க் மானேஜர்கிட்ட அப்பாவோட நிலைமையைச் சொல்லிக் கேட்டேன். அடுத்த வாரம் பணம் கைக்கு வந்திடும்."

"எவ்ளோ டெபாசிட் பண்ணியிருக்கீங்க?"

"ஒரு லட்சம் சார்..."

"அது அப்படியே இருக்கட்டும். ஆபீஸ்ல லோன் போட்டு உங்க நகையைத் திருப்பிடுங்க. ஹாஸ்பிடல் பீஸ் முழுசும் கட்டியாச்சு."

"தம்பி! ரொம்ப நன்றி தம்பி. உங்க அப்பா என்னை மறக்காம வெச்சிருக்காரே. அவருக்கும் நன்றி சொன்னேன்னு சொல்லிடுங்க."

"இருக்கட்டும் சார். தங்கைக்கு குழந்தை பிறந்த பிறகு அப்பா வந்திடுவாங்க. உங்களைப் பார்க்க வர்றதா சொன்னாங்க."

"நல்லது தம்பி! தம்பிக்கு காபி கொடம்மா."

"இல்ல சார்... வேண்டாம். நான் ஆபீஸ் கிளம்பணும். மீனா! நீங்க எப்போ வருவீங்க. உங்க வேலையெல்லாம் பெண்டிங்காகி நிற்குது."

"நீ கிளம்பும்மா. எனக்குத்தான் இப்போ பரவாயில்லையே. அம்மா பார்த்துப்பா. நீ போயிட்டு வாம்மா."

"இன்னும் எத்தனை நாள் ஹாஸ்பிடல்ல இருக்கணுமாம்?" ராஜகுமாரன் அக்கறையாய் கேட்டான்.

"இன்னும் பத்து நாள் கழிச்சுத்தான் அனுப்புவாங்களாம்."

"சரி மீனா! அப்போ நீங்க வேணா ஹாஸ்பிடல்ல இருங்க. அப்பா டிஸ்சார்ஜ் ஆனதும் அபீஸ் வந்தா போதும்."

"இல்ல சார்! அவ்வளவு நாள் லீவு போட வேண்டாம். நான் இப்பவே வந்திடுறேன். நான் கிளம்பறேம்ப்பா."

"மீனா... நான் கார்லதான் வந்திருக்கேன். வாங்களேன் போகலாம்."

"இல்ல சார். நான் பஸ்லயே வந்திடுறேன். நீங்க கிளம்புங்க" தன்மையாய்ப் பேசி மறுத்ததும் ஏளனமாய் உதட்டை சுளித்துவிட்டு சாமிநாதனிடம் திரும்பினான்.



"ஓ.கே. சார். நான் கிளம்பறேன். எந்த உதவி வேண்டுமானாலும் தயங்காமக் கேளுங்க. வரட்டுமா?"

"போயிட்டு வாங்க தம்பி!" கணவனும் மனைவியும் இன்முகத்தோடு வழியனுப்பி வைக்க,

"மீனா! ஒரு நிமிஷம்" என்றவனைத் தொடர்ந்தாள்.

வாசல் வரை அமைதியாக வந்தவன், வெளியே வந்ததும் கதவைச் சாத்திவிட்டு, கண்ணாடி கதவின் வழியே உள்ளே படுத்திருந்த சாமிநாதனைப் பார்த்தான். கால்களில் கட்டோடு படுத்திருந்தவரை வெறித்து நோக்கினான்.

அதுவரை அவன் முகத்தில் குடிகொண்டிருந்த புன்னகையும் மென்மையும் மறைந்துவிட முகம் கடினமாகி இருந்தது. கண்களில் ஒருவித காழ்ப்புணர்ச்சி குடியேறி இருந்தது. தன்னிடம் ஏதோ பேசத்தான் அழைத்தான் என்ற எண்ணத்தில் கூடவே வந்து நின்றவள் அவனது பார்வை சென்ற இடத்தைப் பார்த்து அதிசயித்தாள்.

"என்ன சார்? அப்பாவையே பார்த்திட்டு இருக்கீங்க?"

"கடவுள் இருக்கிறார்" என்றான் பார்வையை விலக்காமலேயே. அவனது குரல் மாறியிருந்தது. திடுக்கிட்டுப் போனாள் மீனா.

"ச... சார்! என்ன சொல்றீங்க?"

"கடவுள் இருக்கிறார்னு சொன்னேன். என் தம்பியை இப்படித்தானே படுக்க வெச்சே. நான் எப்படித் துடிச்சேன்? இப்ப அதே மாதிரி உன் அப்பாவையும் படுக்க வெச்சிட்டாரு பார்த்தியா? கடவுள் இருக்கிறார்தானே" அவனது குரலில்

தெரிந்த ஆங்காரம் அவளை மிரளச் செய்தது. பேச்சற்று நின்றவளைப் பார்த்து இன்னும் கோபமானான்.

"என்ன பேச்சு வரமாட்டேங்குதா? எப்படி வரும். யாருக்குமே தெரியாதுன்னு நினைச்சிகிட்டு இருந்திருப்ப. அதான் இடிவிழுந்த மாதிரி நிற்கிற."

உண்மையில் இடிதான் தலையில் இறங்கிவிட்டாற் போல் உணர்ந்தாள் மீனா. 'எதையும் யோசிக்காமல் பேசிக்கொண்டே போகிறானே. இந்த நந்தா அப்படி என்னதான் சொல்லி வைத்தான். இவன் இப்படி நெருப்பை வாரிக் கொட்டுகிறானே.'

"சார்! நீங்க... என்ன சொல்றீங்க?"

"போதும்டி. உன் நடிப்பைப் பார்த்து ஏமாற நான் ஒன்றும் முட்டாளில்லை. அன்று பாறைக் கூட்டத்தில் அடிபட்டு உடல் முழுக்க கட்டோடு என் தம்பியைப் பார்த்த போது என் நெஞ்சு எப்படி தவித்தது என்று உனக்குத் தெரியுமா? எல்லாம் உன்னால்... உன் உதாசீனத்தால்... உன் ஒருத்திக்காக எங்கள் எல்லோரையும் வெறுத்து தன் உயிரையே விடப் போனான் என் தம்பி. அது தெரியுமா உனக்கு."

"ஐயோ!" காதை மூடிக் கொண்டாள் மீனா.

"இத்தனை துயரத்தையும் வெச்சிகிட்டு உன் அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லையென்றதும் வந்து பார்க்க என்னை விரட்டியடித்திருக்கிறான். இப்பவும் உன் மீதும் உன் குடும்பத்தின் மீதும் எத்தனை அக்கறை அவனுக்கு. அவனை உதறித் தள்ள உனக்கு எப்படி மனசு வந்தது?"



மீனா இன்னும் அதிர்ந்த நிலையிலேயே நிற்க, அதே கோபத்தோடு தொடர்ந்தான்.

"கால்ல கட்டோடு நடக்க முடியாமல் படுக்கையில் கிடக்கிறான். இல்லன்னா ஓடி வந்திருப்பான். ஒரு வயதான மனிதர் படுக்கையில் கிடப்பதைப் பார்த்து சந்தோஷப்படும் அளவிற்கு கொடூரமானவன் அல்ல நான். ஆனா நான் அனுபவிச்ச வேதனையை நீயும் அனுபவிக்கிறதைப் பார்த்து சத்தியமா நான் சந்தோஷப்படறேன். நீ என் தம்பிக்கு இழைத்த பாவத்திற்கு உன் அப்பா தண்டனையை அனுபவிக்கிறார். இப்போ வலிக்குதா உனக்கு?"

சிலையாய் நின்றவள் வாய் திறந்தாள். "வலிக்குது சார்... நீங்க பேசறது ரொம்ப வலிக்குது. ஆனா! நீங்க தப்பாப் புரிஞ்சிகிட்டுப் பேசறீங்க. நீங்கள் நினைப்பது போல் நான் எதுவும் செய்யவில்லை."

"இதை நான் நம்ப வேண்டுமா?"

"நம்பித்தான் ஆகவேண்டும் சார். சத்தியமாய் இது எதிலும் எனக்கு சம்பந்தமில்லை. நந்தா சாரிடம் அநாவசியமாய் ஒரு வார்த்தைகூட நான் பேசியதில்லை. என்னை நம்புங்கள்."

"வாயை மூடு. செய்வதையெல்லாம் செய்துவிட்டு சத்தியம் வேறு செய்கிறாயா?"

"இல்லை சார். இதுதான் உண்மை. ஒருவேளை எனக்கே தெரியாமல் உங்கள் தம்பி என்னை விரும்பியிருக்கலாம். சத்தியமா எனக்குத் தெரியாது."

"ஏய்... அறைந்து விடுவேன். உனக்கே தெரியாமலா? சாரிடம் கதை விடுகிறாய். நீ அவனை உதாசீனப்படுத்தி

வாய்க்கு வந்தபடி பேசியதால்தான் அவன் தற்கொலை முடிவிற்கே போனான். அவன் பிழைத்ததே பெரிய விஷயம்."

"என்னை விரும்பியதாக நந்தா சாரே சொன்னாரா?"

"அவன் எப்படிச் சொல்லுவான்? உன்னை விட்டுக் கொடுப்பானா? நீ அவனுக்கு எழுதிய லட்டரையெல்லாம் எரிச்சிட்டானே. உன்னைப் பத்தி மூச்சுகூட விடமாட்டேன் என்கிறானே."

"என்ன? நான்... லட்டர் எழுதினேனா. சார்... நீங்க மேலும் மேலும் தப்பு பண்றீங்க. நான் எதுவும் எழுதல. நந்தா சார் கிட்டயே கேளுங்க."

"ஏன்? அவன் தேறி வர்றது உனக்குப் பிடிக்கலையா? திரும்பவும் உன்னைப் பத்தி பேசி அவன் காயத்தை நான் கிளறி விடணுமா?"

தலையைப் பற்றிக் கொண்டாள் மீனா. ஏற்கனவே ஹாஸ்பிடல், வீடு என மாறி மாறி அலைந்ததில் சரியாகச் சாப்பிடாமல், உறங்காமல் தவித்ததில் உடல் தளர்ந்து போயிருந்தது. இதில் இவன் அடுக்கடுக்காய் சாட்டிய குற்றச்சாட்டில் மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

உடல் தள்ளாட வெளியே வரிசையாய் போடப் பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"நான் கிளம்பறேன். உனக்கு எப்ப தோணுதோ அப்போ வா. வராவிட்டாலும் கவலைப்பட மாட்டேன்!" என்று விட்டு விடுவிடுவென விலகிப் போனான்.

தனக்குள்ளே குமைந்து கொண்டிருந்தவள் காமாட்சி வந்து அசைத்த பின்னரே எழுந்தாள். பதற்றமாய் மகளிடம் கேட்டாள்.



"என்னடா கண்ணு? ஆபீஸ் போகலையா?"

"ம்... இல்லம்மா. கொஞ்சம் டயர்டா இருந்தது. அதான் சாய்ந்திட்டேன்."

"நேரமாகிப் போச்சே... சாப்பிட்டு போறியாடா?"

"பசியில்லம்மா. நான் போயிட்டு வர்றேன். அப்பாகிட்ட சொல்லிடுங்க." இயந்திரத்தனமாய்க் கூறிவிட்டு பஸ் பிடித்து அலுவலகத்திற்கு வந்தபோது, அனைவருமே ஆவலாய் வரவேற்றனர்.

தந்தையைப் பற்றி அக்கறையாய் விசாரித்தவர்களிடம் பொறுமையாய் பதிலளித்துவிட்டு இருக்கையில் அமர்ந்தாள்.

பதினைந்து நாட்களாய் கிடந்த வேலைகளை மொத்தமாய் முடித்துவிட்டு நிமிர்ந்தபோது மணி ஆறு. இடையில் ஆகாரமோ துளி நீரோ பருகாதது நாவையும் தொண்டையையும் உலர வைத்தது.

ஏறத்தாழ அனைவரும் கிளம்பிப் போயிருக்க, தன் இருக்கையை விட்டு எழுந்தாள் மீனா. ஸ்ரீராம் அதற்காகவே காத்திருந்தது போல் அவளை நோக்கி வந்தான்.

"வேலையை முடிச்சிட்டீங்களா மீனா. உங்களுக்காகத்தான் வெயிட் பண்றேன்."

"எனக்காகவா? என்ன விஷயம் சார்?"

"அப்பாவுக்கு எப்படி இருக்கு?"

சோர்வாய் நிமிர்ந்தாள். "அதான் நான் வந்த உடனே கேட்டீங்களே சார். விஷயத்தைச் சொல்லுங்க" என்றாள் அலுப்போடு.

"வந்து... என் அண்ணனுக்கு கல்யாணம் முடிவ யிருக்கு மீனா."

"ஓ... சந்தோஷம் சார்."

"இன்னும் ஒரு அண்ணனும், ஒரு தங்கை இருக்காங்க."

"அப்படியா?"

"அவங்களுக்கும் கல்யாணமாகிட்டா என் கிளியராகிவிடும்."

"இப்போ எதுக்காக இதெல்லாம் எங்கிட்ட சொல்றீங்க சற்றே கோபம் தொனிக்கக் கேட்டாள். ஸ்ரீராம் எச்சி விழுங்கினான்.

"மீனா! ரொம்ப நாளாவே உங்ககிட்ட ஒரு விஷ சொல்லணும்னு இருந்தேன். பட்... நிலைமை சரியில்ல. வீட்ல கல்யாணத்துக்கு மூணுபேரை வெச்சிகிட்டு உங்க சொல்ல மனசு வரல்ல."

"ஸ்ரீராம் சார். ஏற்கனவே லேட்டாகிப் போச்சு. நா வீட்டுக்குக் கிளம்பணும்."

"இதோ ஒரு நிமிஷத்தில சொல்லிடறேன். மீ உங்களுக்கும் வர்ற வரனெல்லாம் அமையாமப் போயி ஒரு வேளை நீங்க எனக்குத்தான்னு கடவுளே மு பண்ணிட்டாருன்னு நினைக்கிறேன்."

"என்ன உளர்றீங்க ஸ்ரீராம்."

"என் மனசுல நீங்கதான் இருக்கீங்க மீனா. ஒரு வருஷம் வெயிட் பண்ணினா என் தங்கைக்



அண்ணனுக்கும் திருமணமான உடனே நானே உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். "

"ஸ்ரீராம்! என்ன பைத்தியக்காரத்தனமா பேசறீங்க. என் மனசில அப்படி எந்த எண்ணமும் இல்ல."

"தெரியும் மீனா. என் மனசில உள்ளதைச் சொன்னேன். நீங்க ஏத்துக்கிட்டா சந்தோஷப்படுவேன். இல்லேன்னா..."

"இல்லன்னா நீயும் தற்கொலை பண்ணிப்பியா?" என முகம் சிவக்கக் கேட்டாள். அதிர்ந்தான் ஸ்ரீராம்.

"மீனா! நீங்க என்னை..."

"வாயை மூடுறா. எத்தனை பேர் கிளம்பியிருக்கீங்க இதே மாதிரி. ஒரு பொண்ணு வீட்டை விட்டு வெளியேறி வேலைக்குன்னு வந்தா அவளுக்கு என்னென்ன கஷ்டம் வரும்னு யாரும் யோசிக்க மாட்டீங்களா? உங்க விருப்பத்துக்கு நாங்க தலையாட்டணுமா?"

"நான்... அப்படிச் சொல்லலை."

"சொல்லாம? நான் மறுத்திட்டா உடனே சூசைட் பண்ணிப்ப. எந்தத் தப்பும் செய்யாம நாங்க பழி ஏத்துகிட்டு அலையணும். ஏன்டா இப்படி இருக்கீங்க. வேலைக்குப் போற இடத்துல வேலையை மட்டும் பாருங்க. பொண் ணுங்களைப் பார்க்காதீங்க... எங்க கஷ்டத்தையும் கொஞ்சம் புரிஞ்சுக்கங்க."

"மீனா... சாரி. வெரி சாரி... நீங்க இவ்வளவு வருத்தப்படுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா சொல்லியிருக்கவே மாட்டேன். ஏதோ எம்மனசுல உள்ளதைச் சொல்லிட்டேன்.

மன்னிச்சிடுங்க." ஸ்ரீராம் பதறி மன்னிப்புக் கோர, சற்றே அமைதியானாள்.

"சாரி ஸ்ரீராம். நானும் கொஞ்சம் எமோஷனாகிட்டேன்... சாரி..."

"பவராயில்லீங்க. நான் கொஞ்சம் அவசரப்பட்டிருக்கக் கூடாது. ஏற்கனவே நீங்க அப்பாவுக்கு மெடிஷன் அலைச்சல்ல இருந்தீங்க. இதில நான் வேற..."

"ஸ்ரீராம் சார்... எனக்கு எப்பவுமே உங்க மேல மட்டுமில்ல, வேற எந்த ஆண்மேலயும் ஈடுபாடு கிடையாது. அந்த எண்ணம் வராது. வீட்ல பேரண்ட்ஸ் எதுக்காக இருக்காங்க. நமக்கு எப்ப எதைச் செய்தா நாம நல்லா இருப்போம்னு அவங்களுக்குத் தெரியாதா? இப்போ உங்களை விட மூத்தவர்தானே உங்க அண்ணன். அவரே பெத்தவங்க பார்த்து முடிக்கிற பெண்ணுக்காக இவ்வளவு நாள் வெயிட் பண்ணவில்லையா?"

ஸ்ரீராமின் முகம் வாடிப் போனது.

"உங்களைக் கஷ்டப்படுத்தணும்னு நினைக்கல்ல ஸ்ரீராம். நான் எங்க அப்பா பார்க்கிற மாப்பிள்ளையைத் தான், அது யாரா இருந்தாலும் அவரைத்தான் கட்டிக் கணும்னு இருக்கேன். அவங்க எம்மேல வெச்சிருக்கிற நம்பிக்கைய நான் கெடுக்க விரும்பல்ல. தயவு செய்து என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க."

"பரவாயில்லை மீனா. உங்களை மணந்தா சந்தோஷமா வாழ்வேன்னு தோணிச்ச. அதான் வாய்விட்டு கேட்டுட்டேன். மத்தபடி நான் உங்களை சங்கடப்படுத்த



[illegible]ட்டேன். எப்பவுமே உங்களை ஒரு நல்ல தோழியா நினைச்சுக்கிறேன். நான்... நான் கேட்டதை மனசில வச்சிகிட்டு என்னை வெறுத்திடாதீங்க மீனா... பிளீஸ்."

"இட்ஸ் ஓ.கே. ஸ்ரீராம். நான் கிளம்பறேன்" என்றவாறு வாசலை நோக்கித் திரும்பியவளின் முகம் வெளிறிப் போனது.

சாய்வு நாற்காலியில் அமர்ந்த நிலையில் தன் [illegible]ரே பார்வையுடன் ராஜகுமாரனைக் கண்டதும் உடல் முழுக்க தடதடத்தது. ஏற்கனவே இல்லாத குற்றத்தை எல்லாம் தன் மீது சுமத்தி வறுத்து எடுப்பவன் இன்று என்னவெல்லாம் சொல்லப் போகிறானோ என உதறல் [illegible]க்க அப்படியே நின்றாள்.

ஆனால் முகத்தில் எந்தக் கோபத்தையும் காட்டாமல் [illegible] யோசனையோடு எழுந்து வெளியேறினான் ராஜகுமாரன்.

## 9

தென்றலாய் சிலிர்க்க
வைக்கின்ற நீயே நெருப்பாய்
மாறி தகிக்க வைக்கிறாய்
எதற்காகப் போராடுகிறோம்
நீயும் நானும்...

தொடர்ந்து வந்த நாட்களில் ராஜகுமாரனிடம் இருந்து எவ்வித சொல் அம்புகளும் பாயாமல் இருந்ததில் நிம்மதியாய் மூச்சு விட்டாள் மீனா. ஸ்ரீராம் கூட இரண்டு

நாட்கள் வெகு அமைதியாய் இருந்துவிட்டு திரும்ப கலகலப்பாய் நடமாட லேசாய் உறுத்திக் கொண்டிரு மனம், பாரம் நீங்கி இயல்பான போது கையில் இனிப்பே வந்து நின்றான் ராஜகுமாரன்.

அனைவரும் வேலையை நிறுத்திவிட்டு நிமிர, "என் தங்கைக்கு குழந்தை பொறந்திருக்கு. ஸ்வீட் எடுத்துக்கங் என்றான் சிரித்தவாறே.

அனைவரும் உற்சாகமாகி வாழ்த்துத் தெரிவித் இனிப்பை எடுத்துக் கொள்ள அஜிதா கேட்டாள்.

"சார்! என்ன குழந்தை பொறந்திருக்கு?"

"ஆண் குழந்தை."

"ஏன் சார்... மருமகன் பொறந்த பிறகுதான் சிரிப்பேன்னு சபதம் எதுவும் எடுத்திருந்தீங்களா?"

"இல்லையே... ஏன் கேக்கறீங்க?"

"நீங்க வந்து இத்தனை நாளுக்கப்புற இன்னிக்குத்தான் சிரிச்சிருக்கீங்க. அதான் கேட்டேன்."

"ஓ! அப்போ என்னை அவ்வளவு டீப்பா வ பண்ணீங்களா?"

"அய்யோ! அப்படியெல்லாம் இல்ல சார்... சும்மா ஒ பேச்சுக்கு..."

"பரவாயில்ல. நான் தப்பா எடுத்துக்கல்ல."

"வெறும் ஸ்வீட்ஸ்தானா சார். உங்க சிஸ்டர் கல் ஆனதுக்கே எங்களுக்கு ஃபைவ் ஸ்டார் ஓட்டல்ல ட் வெச்சார் நந்தா சார்" என்றாள் ரமா.



"ஓ... எனக்கு இது தோணலையே. ஓ.கே. இன்னிக்கு ச் நம்ம செலவு. எல்லாருக்கும் பிரியாணி ஆர்டர் பண்ணிடலாமா?"

"ஐயோ! இன்னிக்கு வெள்ளிக்கிழமை" அவசரமாய் தொடங்கி விட்டு வாயை மூடிக் கொண்டாள் மீனா.

"ஓ... இது வேறா! ஓ.கே. இன்னிக்கு ஈவ்னிங் லாருமே வெளில எங்காவது போகலாம். நைட் நம்ம பனி வண்டியிலே எல்லாரையும் வீட்ல போய் டலாம். ஓ.கே.யா?"

"ஹேய்" என எல்லோரும் உற்சாகமாய் குரல் த்துக் கொண்டிருக்கும்போது உள்ளே வந்தான் வன்.

"யாருப்பா நீ? என்ன வேணும்?"

"சார். நான் எஸ்.எஸ். நகைக் கடையில இருந்து ன். இங்க நந்தகுமாரன்றது...?"

"என் தம்பிதான். என்ன விஷயம்?"

வந்தவன் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு பில்லை நீட்டினான்.

"சார்... இது நந்தகுமாரன் சார் வாங்கின நகைக்கான பாதி பணம்தான் கொடுத்தார். மிச்சத்துக்கு செக் றேன்னு சொன்னார். ஆனா இதுவரைக்கும் வரல்லை. னர் என்னை அனுப்பினார்."

"சரி... உள்ளே வா" என்றவாறு தன் அறைக்குள் ரசீதைப் பார்த்தவன் அதிர்ச்சியாய் நிமிர்ந்தான்.

"என்னப்பா இது? அஞ்சு லட்சமா? அவ்வள
தொகைக்கு என்ன வாங்கினான்?"

"என்னல்லாம் வாங்கினாங்கன்னு சரியாத் தெரிய
சார். ஆனா ஒரு வைர மோதிரம் மட்டும் 'என்
இன்ஷியலோட செய்யச் சொல்லி ஆர்டர் பண்ணினார்.
வாரம் கழிச்சி நான்தான் கொண்டு வந்து கொடுத்தேன்

'என்... என் ஃபார் நந்தாவா? வைர மோதிரம் அ
கையில் இல்லையே. அப்படியென்றால் இவளுக்காகத்
வாங்கியிருப்பானோ?' ராஜகுமாரனின் மனம் மீண்
உலைக்களமாகிப் போனது.

"ஏற்கனவே எவ்வளவு பே பண்ணினான். இன்
எவ்வளவு பாக்கி தரணும்?"

"மூணு லட்சம் கொடுத்திட்டாரு சார். இன்னும் இர
லட்சத்து ஐநூறு ரூபாய் கொடுக்கணும்."

"சரி நீ போ... நான் கடையில வந்து
பண்ணிடறேன்."

"உடனே வந்திடுவீங்களா சார்?"

"நீ போப்பா. உங்க ஓனர்கிட்ட நான் பேசறே
பணத்தை எடுத்திட்டு வர்றேன்னு சொல்லு."

"சரிங்க சார்." அவன் வெளியேறியதும் ரசீதில்
கடை தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொண்
"ஆமா சார். அவர் கூடவே ஒரு பொண்ணும் வந்
சார். எல்லா நகையும் அந்தப் பொண்ணுக்குத்
வாங்கினார்."



"சரி... நான் ஈவ்னிங் வந்து செட்டில் பண்ணிடறேன்" என்றவாறு போனை வைத்துவிட்டு, சில நிமிடம் யோசித்து விட்டு இன்டர்காமை எடுத்து மீனாவை அழைத்தான்.

சற்றே பயமாய் வந்து நின்றவளிடம் இதமாகவே கேட்டான்.

"மிஸ் மீனா! சமீபத்தில் எதுக்காகவாவது பெரிய அமவுண்ட் செலவானதா கணக்கில் வந்ததா?"

"பெரிய அமவுண்ட்டுன்னா... எவ்வளவு சார்?"

"லட்சக்கணக்கில்..."

"லட்சமா?" சில கண யோசனைக்குப் பிறகு, "ஆமா சார், ஆனால் அதை கணக்கில் எழுத வேண்டாம். பர்சனல் செலவு என்றார் நந்தா சார்."

"எவ்வளவு?"

"ரெண்டு லட்சம் சார்."

"ரெண்டு லட்சமா? இருக்காதே! நல்லா நினைவு படுத்திச் சொல்லுங்க. ரெண்டா மூணா?"

"இல்ல சார். எனக்கு நல்லா நினைவிருக்கு. ரெண்டு லட்சம்தான். நான்தானே கொண்டு போனேன்."

"என்ன?" கோபமாய் நிமிர்ந்தான்.

"ஆமா சார். நான்தான் பணத்தைக் கட்டினேன்."

"அப்போ நந்தாகூட நகைக் கடைக்கு நீதான் போனியா?"

"இல்ல சார். நான் ஆட்டோலதான் போனேன். சார் எனக்காக கடையில வெயிட் பண்ணிகிட்டு இருந்தார்."

"சபாஷ்! எப்படி? அன்னிக்கு ஹாஸ்பிடல்ல வெச்சு நான் கார்ல கூப்பிட்டேனே. அதேமாதிரி என் தம்பி கூப்பிட்டதும், அவனை முன்னே கார்ல அனுப்பிவிட்டு நீ நல்ல பிள்ளையா போய் இறங்கினியாக்கும்."

அவனது பேச்சின் தொனி மாறியதும் மீனாவின் முகம் கலவரமானது. அவனது பார்வை அவள் கை, கழுத்து, காதுகளை ஆராய்ந்தது.

"ஆமா! அஞ்சு லட்சத்துக்கு நகை வாங்கிட்டு ஏன் இப்படி பிச்சைக்காரி வேஷம் போட்டுட்டு இருக்கே. ஓ... புதுசு புதுசா மாட்டினா கேட்கிறவங்களுக்கு பதில் சொல்ல முடியாதுன்னு வீட்ல பூட்டி வெச்சிருக்கியா?"

"அஞ்சு லட்சத்துக்கு நகை வாங்கினேனா? சார் நீங்க என்ன சொல்றீங்க?"

"இனிமேலும் நடிக்காதே. நீயே பார். நீங்க ஜோடியா போய் நகை வாங்கின பில்" என பில்லை அவள் முகத்தில் விசிறியடித்தான்.

திகைப்பாய் அதை எடுத்துப் பார்த்தவள் பதறி, "சார் இது எதுவுமே நான் வாங்கலை. நந்தா சார்தான்..."

"ஆமா! அவன்தான் வாங்கினான். யாருக்கு? உனக்குத்தானே."

"ஐயோ! இல்ல... நான்..."



"இன்ஷியலோட மோதிரம் ஆர்டர் பண்ணி செய்தீங் [illegible]மே. எங்கே அது? அவனைக் கழட்டி விட்ட மாதிரி [illegible]தயும் கழற்றி விற்று விட்டாயா? அதுவே லட்சம் ரூபாய் [illegible]மே. பிறகேன் ஹாஸ்பிடல் செலவுக்காக வெறும் [illegible]தாயிரத்துக்கு நகைகளை அடமானம் வைத்ததாக [illegible]டம் பஞ்சப்புராணம் அளந்தார் உன் அம்மா."

"சார்!" மீனாவின் குரலும் உயர்ந்தது.

"குடும்பமே சேர்ந்து செய்த கூட்டுக்களவுதானே. [illegible]த குறைக்கு ஹாஸ்பிடல் சீன் போட்டு என்னிடமும் [illegible]ச்சு. என்ன மோசக்கார..."

"வாயை மூடுங்கள்..." மூச்சு வாங்கக் கத்தினாள் [illegible], "என் குடும்பத்தைப் பத்திப் பேச உங்களுக்கு எந்த [illegible]யும் இல்லை. என்ன சார் தெரியும் எங்களைப் பத்தி? [illegible] அப்பா எவ்வளவு நேர்மையானவர்னு உங்க [illegible]வுக்குத் தெரியும்."

"ஆனால் உன்னைப் பத்தித் தெரியாதே."

"எனக்கு உங்களைப் பத்தி தெரிஞ்சு போச்சு சார். [illegible] ஏதோ திட்டத்தோடதான் இங்கே வந்திருக்கீங்க. ஏதோ [illegible] என்ன? என்னை வேலையை விட்டு அனுப்பும் [illegible]தான் வந்திருக்கீங்க."

[illegible]குமாரன் முகத்தில் எந்த அதிர்ச்சியையும் [illegible] ஆமோதித்தான்.

"ஆமாம்... அதற்காகத்தான் வந்தேன்" என்றான் [illegible].

மீனாவின் கண்களில் துளிநீர் எட்டிப் பார்த்தது. "ஏன் சார்... இதை நீங்க வந்த அன்றே சொல்லியிருந்தால் நானே போயிருப்பேனே. எதற்காக என்மீது இத்தனை வீண்பழி அவதூறு. கொடும் மொழிகளைச் சுமத்துகிறீர்கள்?"

"நான் சொன்னது அனைத்தும் உண்மை" அடித்துக் கூறியவனிடம் அடிபட்ட நாகமாய் சீறினாள்.

"எது உண்மை? உங்க தம்பி என்னை ஒரு தலையா விரும்பியிருக்கலாம். அதில் நான் எப்படி சம்பந்தமாவேன்"

"ஒருதலையாகவா? இப்போதுதானே உன் வாயா சொன்னாய். நகைக் கடைக்குப் போனேன் என்று."

"ஆமாம் போனேன். நந்தா சாரிடம் இருந்து எனக்கு போன் வந்தது. 'நகைக் கடைக்கு வந்தேன், பணம் போதவில்லை. கேஷியரிடம் சொல்லி எவ்வளவு தேவை இருக்கோ அதை வாங்கிட்டு தி.நகர்ல இருக்கிற ஷாப்புக்கு வாங்க'ன்னு சொன்னார். நானும் பணத்தை வாங்கிட்டு போனேன். நான் போகும்போது சார் மட்டும்தான் வெயிட் பண்ணிகிட்டு இருந்தார். பணத்தை வாங்கினதும் என்னை போகச் சொல்லிவிட்டார்.

ராஜகுமாரனின் முகம் மாறியது.

"அதற்கப்புறம் மறுநாள்தான் ஆபீஸ் வந்தார். இந்த பணத்திற்கு கணக்கெழுத வேண்டாம் என்று சொன்னதும் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வாங்கியிருப்பார் என்று நினைத்து நான் எதையுமே கேட்கவில்லை."

"அப்போ வைர மோதிரம்?"



"என்னைக் கேட்டால்? உங்கள் தம்பியிடம் போய்க் கேளுங்கள்."

"அவனிடம்... எப்படி நான்?" சற்றுத் தடுமாறினான்.

ஏளனமாய் சிரித்தாள் மீனா.

"ஏன் சார்... உங்க தம்பி மனம் கஷ்டப்படக்கூடாது என்று இப்படித் தயங்குகிறீர்களே. என்னை... என் குடும்பத்தை எவ்வளவு கேவலமாகப் பேசினீர்கள். அதுக்கு என்ன சார் அர்த்தம்? உங்களிடம் வேலை செய்பவர்கள் தானே என்ற அலட்சியமா?"

"நோ... நோ... அப்படி இல்லை" பதறி மறுத்தான்.

"அதுதான் உண்மை. உங்கள் அதிகாரவர்க்கத் திமிர்தான் இது. தம்பி விரும்புவது ஒரு ஏழைப் பெண் என்று தெரிந்ததும் அவள் மீது வீண்பழி சுமத்தி அசிங்கப்படுத்தி வெளியேற்றி விடுவதுதானே உங்கள் திட்டம்?" முகம் சிவக்கக் கேட்டவளிடம் பதற்றமாய் மறுத்தான்.

"அப்படியில்லை மீனா... எங்கோ தப்பு நடந்து விட்டது..."

"என் தப்புதான் சார். நீங்க வந்த அன்று பேசிய வார்த்தைக்கே நான் வேலையை விட்டுப் போயிருக்க வேண்டும். பைத்தியக்காரி! முட்டாளாய் இருந்து விட்டேனே. அதற்குத்தானே இன்று இவ்வளவு பெரிய பழியை என்மீது போட்டு இருக்கீங்க."

"இல்ல மீனா. நான் நினைத்ததே வேறு. உன்னிடம் பேசி தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். என் அவசரப் புத்தியால்..."

"என்னை எங்கே பேசவிட்டீர்கள். நீங்களே பேசி என்னைத் தவறானவளாய் முடிவு பண்ணி... என் குடும்பத்தையும் அவமதித்து... ச்சே! இதற்கு மேலும் உங்களிடம் வேலை செய்ய நான் ஒன்றும் மானங் கெட்டவளில்லை. இப்போதே என் வேலையை ராஜினாமா செய்கிறேன்."

"மீனா பிளீஸ்! அவசரப்பட வேண்டாம்."

"போதும் சார்... நீங்க பேசினதும் போதும். நான் கேட்டதும் போதும். ஒரு நிமிஷம்... என்னோட ரிசைன் லட்டர் தந்திட்டுப் போயிடுறேன்" என்றவாறு சரேலென அறையை விட்டு வெளியேறினாள்.

எதிரே வந்த ஸ்ரீராமின் மீது மோதி தடுமாறி, கண்ணீரோடு விலகி ஓடி தன்னுடைய ராஜினாமா கடிதத்தை எழுதத் துவங்கினாள். அருகே இருந்தவர்கள் பதறி விசாரிக்க, யாருடைய பேச்சையும் கேட்காமல் மளமளவென எழுதியவளை ஸ்ரீராம் யோசனையோடு பார்த்தான்.

ஏதோ தோன்ற சட்டென அங்கிருந்து வெளியேறி தன் கேபினுக்குள் நுழைந்து தன் செல்லை எடுத்து நந்தகுமாரனைத் தொடர்பு கொண்டு தந்தி வேகத்தில் தகவல் தந்தான்.

எதிர்முனையில் நந்தகுமாரனின் முகம் கோபச் சிவப்பானது.



# 10

நெருங்கி வந்த என்னை
விலக்கி விட்டாய் - இப்போது
வெகுதூரம் பிரிந்து போகிறோம்
நீயும் நானும்...

தன் அறைக்குள் குழப்பமாய் நடைபோட்டுக் கொண்டிருந்த ராஜகுமாரனை தொலைபேசி அழைத்தது. எடுத்துக் காதில் வைத்ததுமே எதிர்முனையில் நந்தா ...ினான்.

"அண்ணா! அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" தம்பியின் குரலில் கோபம் தொனிக்க, சற்றே ...க்குற்றான்.

"என்னடா கேள்வி இது? வேலைதான் செய்கி..."

"அதுதான் கேட்கிறேன். என்ன வேலை செய்கிறாய்?"

"என்ன வேலையென்றால்..."

"மீனாவை என்ன சொன்னாய்? எதற்காக அவங்க ரிசைன் லட்டர் எழுதுறாங்க?"

"ஓ! அவ்வளவு பாஸ்ட்டா உனக்குத் தகவல் வந்திடுச்சா?"

"கேட்டதற்குப் பதில் சொல்லு. என்ன சொன்னாய்?"

"நான் ஒன்றும் சொல்லவில்லை. கேட்டேன்."

"என்ன கேட்டாய்?"

"ம்? அஞ்சு லட்சத்திற்கு நகை வாங்கினாயே... அதெல்லாம் எங்கேன்னு கேட்டேன்."

நந்தகுமாரனின் பேச்சு நின்றது. கணநேர அமைதிக்குப் பின், "ஓ! பில் பே பண்ண மறந்திட்டேன். உனக்கெப்படித் தெரிந்தது?"

"கடைக்காரப் பையன் ஆபீசுக்கே வந்து விட்டான். அதான் கேட்டேன்."

"அதை நீ என்னிடம்தானே கேட்டிருக்க வேண்டும்?"

"ஆமா! உன்னிடம்தான் கேட்டிருக்க வேண்டும். நீ மறந்து விட்ட ஒன்றை எதற்காக நினைவுபடுத்த வேண்டும் என்றுதான்..."

"நான் மறந்துட்டேன் என்று உனக்கு யார் சொன்னது?"

"நந்து..."

"அது என் கஷ்டம்... விடு. நீ ஏன் மீனாவிடம் கேட்டாய்?"

"அது... வந்து.. நீ விரும்பிய பெண்... இந்த மீனா என்று நினைத்து..."

அண்ணனின் பேச்சில் வெகுண்டெழுந்தான் நந்தகுமாரன்.

"நீயாகவே முடிவு செய்து கொண்டாயா? கடவுளே! உனக்கேன் இந்த வேலை? உன்னிடம் எத்தனை முறை சொல்லி அனுப்பினேன். உன் கோபத்தால் காயப்பட்டு



...னது ஒரு நல்ல பெண் அண்ணா. மீனா பாவம். ...வங்களுக்கும் எனக்கும் எந்த உறவுமில்லை."

"நந்து! நீ... நீ என்ன சொல்கிறாய்?" ராஜகுமாரனின் ...ரல் உள்ளே போயிற்று.

"சத்தியம் அண்ணா. மீனா எனக்கு ஒரு சகோதரி ...போல..."

"அப்போ... நீ விரும்பிய பெண் யாருடா?"

"ஏன்? அவளையும் இம்சிக்கப் போகிறாயா? ஒரு ...பெண்ணின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது ...போதாதா?"

"இல்லை நந்து! நான்..."

"நீ எதுவும் பேசாதே. முதல்ல மீனாகிட்ட சாரி கேள். ...அவங்களை சமாதானப்படுத்து. வேலையை விட்டுப் ...போய்விட்டால் அவர்கள் குடும்பம் என்ன ஆகும் தெரியுமா? ... குடும்பத்தின் மொத்த சாபத்தையும் சம்பாதிக்கவா அங்கு ...போனாய்?"

"நந்து! ஏதோ அவசரப்பட்டுப் பேசிவிட்டேன்..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் இன்னும் ...த்து நிமிஷத்தில உனக்கு போன் பண்ணுவேன். ...அதுக்குள்ள நீ மீனாவை சமாதானப்படுத்தி எங்கிட்ட பேச ...வைக்கணும். இல்லே! கால் நொண்டியாவே ஆனாலும் ...பரவாயில்லைன்னு நான் கிளம்பி வந்துடுவேன்."

"டேய் நந்து! வேண்டாம்டா. காலை அசைக்காதடா. ...இப்பத்தான் எலும்பு ஒண்ணா சேர்ந்திருக்குன்னு டாக்டர் ...சொன்னாரே. பிளீஸ்டா... காலை அசைச்சிடாதேடா."

"ஐ டோண்ட் கேர். இன்னும் பத்து நிமிஷத்துல போன் பண்றேன். போ... மீனாகிட்ட சாரி கேள்." போனை வைத்து விட்டான்.

"நந்து! நந்து..." என குரல் கொடுத்துப் பார்த்துவிட்டு ஏமாற்றமாய் போனை வைத்துவிட்டு நிமிரும்போது மீனா உள்ளே நுழைந்தாள். கைகளில் நான்கைந்து பெரிய நோட்டுகள். அதன் மேலே வெள்ளைக் காகிதம்.

தவிப்பாய் ராஜகுமாரன் பேசத் துவங்கும் முன்பே மீனா பேசினாள்.

"இதுல எல்லா அக்கவுண்ட்சும் கிளியரா இருக்கு எதுவும் டவுட்ன்னா ரமாகிட்ட கேட்டுக்குங்க. வவுச்சர் பில் அக்கவுண்ட் எல்லாம் அஜிதாகிட்டே இருக்கு. இந்தாங்க என்னோட ராஜினாமா கடிதம்."

"மீனா! ஏன் இத்தனை அவசரப்படுறீங்க. நான் சொல்றதை..."

"சம்பள பாக்கி... அது இதுன்னு எதுக்கும் என்னைத் தொந்தரவுப்படுத்த வேண்டாம். நான் திரும்பவும் உங்களை பார்க்க விரும்பல்ல. நான் போறேன்" எனத் திரும்பி நடந்தாள்.

"மீனா... பிளீஸ். ஒரு நிமிஷம் நான் சொல்றதைக் கேளுங்க."

"வேண்டாம். நீங்க பேசத் தொடங்கினாலே எனக்கு உடம்பெல்லாம் பதறுது. எப்போ என்ன வார்த்தையைக் கொட்டுவீங்களோன்னு பயமா இருக்கு. நீங்க பேசினதே



இந்த ஜென்மத்துக்குப் போதும். இனி பேச முயற்சிக்க வேண்டாம்."

"பிளீஸ் மீனா... போயிடாதீங்க. இப்பத்தான் நந்தா பேசினான். எல்லாமே சொன்னான். நான்தான் உங்களைத் தப்பாப் புரிஞ்சிகிட்டு..." அதற்கு மேல் அவள் அங்கு நிற்கவில்லை. அறையை விட்டு வெளியேறிச் சென்றவளை ஓடித் தடுக்க முடியாமல் திண்டாடிப் போனான்.

'அவசரம்! என்னுடைய அவசரப் புத்தியால் மனம் காயப்பட்டுப் போகிறாளே! அன்று ஸ்ரீராமிடம் அவள் பேசியதை நானும்தானே கேட்டேன். அதற்குப் பிறகாவது நான் மாறியிருக்க வேண்டும். பாவம்! ஒரு பாவம் அறியாத பெண்ணை பேசிப் பேசியே கொன்றேனே.

என் முகத்தில் விழிக்கவோ என் பேச்சைக் கேட்கவோ விருப்பமின்றி போகிறாளே. கொஞ்சமா பேசியிருக்கிறேன். எத்தனை இழிவாய்... அலட்சியமாய் பேசியும் என்னை ஒரு வார்த்தைகூட மரியாதையின்றிப் பேசவில்லையே.

நந்தாவிற்கு என்ன பதில் சொல்வேன். மற்ற பணியாளர் முன் எப்படிப் பேசுவேன். மீனா பிளீஸ். திரும்பி வந்துவிடேன். போகாதே மீனா...'

துடிக்கும் மனதோடு மாடியின் ஜன்னல் வழியே கீழே எட்டிப் பார்த்தான்.

மீனா வேகமாக வெளியேறுவது தெரிந்தது. ஏனோ மனம் கனத்தது. லேசாக வலித்தது. 'அன்று நந்து சொன்னானே. அந்த வலியை உணர்ந்தால்தான் புரியும் என்று. அது இந்த வலியைத்தானோ.

ஓ. காட். அப்படியென்றால் நான் இவளை விரும்புகிறேனா? அதனால்தான் என் மனம் இப்படித் தவிக்கிறதா? நோ. அதெப்படி? இவளை நான் வெறுக்கத்தானே செய்தேன். 'வெறுக்கவே என்றாலும் இருபத்தி நான்கு மணிநேரமும் இவளை மட்டும்தானே நினைத்துக் கொண்டிருந்தாய்' என்று மனசாட்சி இடித்தது.

அன்று சாமிநாதன் எத்தனை உயர்வாய் பேசினார். இன்று மகள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு தன்னை ஒரு மனிதனாகக் கூட மதிக்க மாட்டாரே. என்னுடைய அவசரப்புத்தி எத்தனை அவலங்களை ஏற்படுத்தி விட்டது.

இத்தனைக்கும் காரணமான அந்தப் பெண் யார்? அவள் மட்டும் இந்த நிமிடம் என் எதிரில் வந்தால்... ராஜகுமாரன் நினைத்த கணமே அந்த இனிமையான குரல் செவியைத் தீண்டியது.

"நந்து..." கொஞ்சலாய் உரிமையாய் அழைத்த குரலில் கலைந்து திரும்பும் முன் இரு மெல்லிய கரங்கள் பின்புறமிருந்து அவனைக் கட்டிக் கொண்டது.

"நந்து! வந்திட்டேன் நந்து. என்னால முடியல்ல நந்து உன்னைப் பார்க்காம உன் குரலைக் கேட்காம என்னால இருக்க முடியாது. அதான் எல்லாத்தையும் உதறிட்டு வந்திட்டேன் நந்து. சாரி நந்து. வெரி சாரி... நந்து. மை ஸ்வீட் நந்து" பேசிக் கொண்டே இறுக்கிக் கொண்டவளை பதறி விலக்கினான் ராஜகுமாரன்.

அவன் உதறியதில் சற்றுத் தள்ளிப் போய் விழுந்தவள் ராஜகுமாரனைக் கண்டதும் திடுக்கிட்டுப் போய்



எழுந்தாள். தன் செயலுக்காக ஒரு கணம் குறுகிப் போனவள், மறுகணமே கோபமாய் அவனை ஏறிட்டாள்.

"யார் சார் நீங்க? இங்கே என்ன பண்றீங்க?"

"இது நான் கேட்க வேண்டிய கேள்வி. யார் நீ?"

"நான் யாரா? அதைக் கேட்க நீங்க யார் சார்?"

"நான் ராஜகுமாரன். நந்தகுமாரனின் அண்ணன்" அழுத்தம் திருத்தமாய் அவன் சொல்ல, அந்தச் சின்னப் பெண் வெலவெலத்துப் போனாள்.

"ஐயோ! நீங்களா அவர் அண்ணன். சாரி சார்... மன்னிச்சிடுங்க சார்..."

"ஆமா! நீ யாரு?"

"சார். என் பேர் நீனா. இந்த ஆபீஸ்லதான் வேலை செய்யறேன். ஒரு மாத விடுப்பு எடுத்திருந்தேன். இன்னிக்குத்தான் வேலையில ஜாயின் பண்ண வந்தேன். வணக்கம் சார்..." என தன் பட்டுக் கைகளைக் குவித்தாள்.

அவள் பெயரைக் கேட்டதுமே ஆடிப் போயிருந்தான் ராஜகுமாரன். 'ஒரே ஒரு எழுத்து மாறிப் போனதால் எத்தனை பெரிய பிழையை செய்து விட்டேன். இவளா? இவள்தான் அவளா? என் தம்பியின் பெயரை இத்தனை உரிமையாய் அழைத்துக் கட்டியணைக்கும் அளவிற்குப் பழகிறாள் என்றால் இவள்தான் நந்துவின் மனம் கவர்ந்தவளா?'

அவனது நினைப்பை உறுதியாக்கும் வகையில் நீண்டிய அவளது வலது கரத்தில் மோதிர விரலில்

பளிச்சிட்டது வைர மோதிரம். 'என்' இன்ஷியலோடு சவுடி வைரமோதிரம். நந்தா, நீனா இருவருக்குமே முதல் எழுத்து 'என்'தானே.

நீனா ராஜகுமாரனின் பார்வையைக் கண்டு அவசரமாய் கைகளை தழைத்துக் கொண்டாள். அவனது கண்கள் கோபச்சிவப்போடு அவளை ஏறிட்டது.

"இன்னும் என்ன வேண்டுமென்று வந்திருக்கிறாய்?" நேரிடையாகவே அவன் கேட்டதும் தடுமாறினாள் நீனா.

"நான்... நந்துவைப் பார்த்து..."

"பார்க்க முடியாது."

"ஏன் சார்! நந்தாவுக்கு எதுவும்...."

"அப்படி ஆகவேண்டுமென்று நினைத்துத்தானே அவனைத் தூக்கியெறிந்தாய்."

"இல்ல சார்... சத்தியமா இல்ல. நான் நந்துவை வெறுத்து ஒதுக்கவில்லை. என்னால் என் நந்துவை வெறுக்கவும் முடியாது."

"இது என்ன புதுக்கதை?"

"கதை இல்லை சார்... உண்மை. ஆனால் அதை ஒரு வரியில் சொல்லிவிட முடியாது. அதற்கு முன் என் நந்து எங்கே இருக்கிறார், எப்படி இருக்கிறார் என்று சொல்லி விடுங்கள். நன்றாக இருக்கிறாரா?" அவளது கண்களில் உண்மையான தவிப்பு இருந்தது.

சற்று முன்னர் மீனா தன்னை விட்டு விலகிப் போனபோது தனக்குள் ஏற்பட்ட அதே தவிப்பு.



"சொல்லுங்க சார்... என் நந்து எப்படி இருக்கிறார்?"

"எங்கள் நந்து நன்றாக இருக்கிறான். நீ ஒன்றும் உரிமை கொண்டாட வேண்டாம்."

"ஆமாம் சார்! அதற்காகத்தான்... அதற்காகத்தான் என் நந்துவை இல்லை... உங்கள் நந்துவை விட்டு நான் விலகிப் போனேன்."

"எதற்காக?"

"சார்! நான் ஒரு அனாதை. என்னை என் மாமாதான் வளர்த்து பாதுகாத்து வந்தார். அவருக்கும் மூன்று பெண் குழந்தைகள். என் மாமாவால எல்லோரையும் படிக்க வைக்க முடியல்ல. வீட்ல உட்கார வச்சு சாப்பாடும் போட முடியல்ல.

அதனால சபாபதி சார்கிட்ட பேசி, கெஞ்சி உங்க மில்ல பேக்கிங் செக்ஷன்ல என்னைச் சேர்த்து விட்டாரு என் மாமா. வந்த புதில் வேலை செய்ய முடியாமல் நான் ரொம்ப கஷ்டப்பட்டேன்."

அவளது மெல்லிய உடலைப் பார்த்து சற்றே வருத்தப்பட்டான் ராஜகுமாரன். அவள் தொடர்ந்தாள்.

"அப்பத்தான் நந்தா சார் என்னைப் பார்த்தார். இல்லைன்னா இன்னும் ஒல்லியா இருப்பேன். நந்தா சாருக்கு ரொம்ப இளகிய மனசு. நான் கஷ்டப்படுவதைப் பார்த்து அதோடு எனக்கு பேக்கிங் கணக்கெடுக்கிற வேலையை மட்டும் பார்த்துக்கச் சொன்னார்.

அப்புறம் என் குடும்பக் கஷ்டம் தெரிஞ்சு எனக்கு ரொம்ப உதவி பண்ணினார். அதுல முதல் உதவி என்

உடைகள்தான். ரொம்ப நைந்துபோன என் மாமா பெண்கள் கிழித்துப் போட்ட உடைகளோடுதான் நான் வேலைக்கு வருவேன். அதைப் பார்த்துவிட்டு அவர் எனக்கு நிறைய புது டிரஸ் வாங்கித் தந்தாரு.

நல்ல மனசோடதான் அவர் வாங்கித் தந்தார். நானும் அதை வீட்டுக்குக் கொண்டு போனேன். எல்லாம் விலை உயர்ந்த துணிமணிங்க. அதைப் பார்த்ததும் என் மாமாவுக்கும் அத்தைக்கும் ரொம்ப ஆசை வந்திடுச்சு.

நந்தா சார் எனக்காக... என்னை விரும்பி இதெல்லாம் வாங்கித் தந்ததா நினைச்சி பேராசைப்பட ஆரம்பிச்சிட்டாங்க. படிப்புச் செலவு, சாப்பாட்டுச் செலவு என எங்கிட்ட சொல்லி சொல்லி நந்தா சார்கிட்ட பணம் பறிக்க ஆரம்பிச்சாங்க.

முதல்ல எனக்கு விவரம் தெரியாம இருந்திட்டேன். அப்புறம் இவங்க புத்தி தெரிஞ்சதும் நான் எதையும் வாங்க மறுத்திட்டேன். இந்த நிலையில உங்க தம்பி என்னை விரும்புறதாகவும் என்னை மணக்கவும் என் மாமாவிடம் சம்மதம் கேட்டிருக்கிறார்.

மாமாவோ கிடைத்த வாய்ப்பை நழுவ விடவில்லை. எனக்கு முன்பாக நந்தா சார் பணத்தை வைத்தே தன் பெண்களை கரையேற்றிவிட வேண்டும் என்று தீர்மானித்து எனக்குத் தெரியாமலேயே பணமாகவும் நகையாகவும் வாங்கியிருக்கிறார்.

சிறுவயது முதலே கஷ்டத்தையும் வறுமையையும் என் அத்தையின் வெறுப்பையும் மாமா குழந்தைகளின் அலட்சியத்தையுமே பார்த்து வளர்ந்த எனக்கு நந்துவின்



அன்பு பெரிய வரமாகத் தோன்றியது. என் மனம் நந்துவை விரும்பத் துவங்கிய போதுதான் இந்த மோதிரத்தை அணிவித்து, தன் விருப்பத்தை என்னிடம் சொன்னார் நந்து" என தன் மோதிர விரலைக் காட்டினாள்.

ஏதோ பேச வாயெடுத்த ராஜகுமாரனைத் தடுத்தாள். "பொறுங்கள் சார். நான் சொல்லி முடித்து விடுகிறேன். இந்த மோதிரத்தை என் விரலில் நந்து என்று மாட்டினாரோ அன்றில் இருந்தே அவர்தான் என் கணவர் என்று வாழ்ந்து வந்தேன்.

நந்துவை என் தாயாய் என் தந்தையாய் என் உயிராய் நினைத்து வாழத் துவங்கினேன். வாரத்தில் ஒரு நாள்தான் அவர் உங்களைக் காணவென்று ஊருக்கு வருவார். அந்த ஒருநாள்கூட அவரைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. தவித்துப் போய் விடுவேன்."

"நீ மட்டுமா? அவனும்தான். வந்து இறங்கிய நேரம் முதலே புறப்பட வேண்டும் என்று பறந்து கொண்டே இருப்பானே."

"அந்தக் களங்கமில்லாத அன்புதான் பெரிய ஆபத்தாய் போயிற்று. இந்த மோதிரம் வாங்கப் போன அன்று என் மாமா நந்துவைச் சந்தித்திருக்கிறார். நீனாவுக்குக் கம்மல் வாங்க வந்தேன். பணம் கொஞ்சம் குறைந்து விட்டது என்று சொல்லியதால் நந்தா என் மாமாவின் குணம் தெரியாமல் நீங்கள் வாங்கி விட்டு பில்லை என்னிடம் அனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறார்."

"உன் மாமா இதுதான் சமயம் என்று லட்சக்கணக்கில் பில்லைத் தீட்டிவிட்டார்" என்றான் ராஜகுமாரன்.

அவமானத்தோடு அதை ஒப்புக் கொண்டாள் நீனா.

"ஆமா சார். இந்த விஷயம் பத்து நாள் கழிச்சுத்தான் தெரியும். அப்பக்கூட நந்து சொல்லவே இல்லை. என் மாமா தன் இரு பெண்களுக்கும் ஒரே முகூர்த்தத்தில் திருமணம் வைத்தார். அப்போதுதான் திருமணத்திற்கான நகை எப்படி வந்தது என்று எனக்குத் தெரிந்தது. நான் சண்டை போட்டேன். அதற்கு என் மாமா என்ன சொன்னார் தெரியுமா?" கேட்டுவிட்டு ஒரு கணம் அமைதியானாள் நீனா. விழிகளில் கோர்த்திருந்த நீரைச் சுண்டியெறிந்தாள்.

"என்ன சொன்னார்?" தயக்கமாய்க் கேட்டான் ராஜகுமாரன்.

"இத்தனை வருஷம் உனக்கு சோறு போட்டு வளர்த்தேனே. அதை வட்டியும் முதலுமா நான் வாங்க வேண்டாம். உன் நல்லநேரம் ஒரு ஏமாளிப்பய கிடைச்சிருக்கான். வேற எவனாவது இப்படிக் கேட்கும் போதெல்லாம் பணம் தருவானா? அதனால முடியும் வரைக்கும் கறந்திடுவேன்னு ரொம்ப இளக்காரமா பேசினாரு.

என் நந்து இளகின மனசுள்ளவர். தயாள மனசுள்ளவர்னு எனக்குத் தெரியும். ஆனா அந்த மனசு என் மாமா மாதிரி சுயநலவாதிக்கு ஏமாற்ற வசதியா போச்சு. என்னைக் காட்டித்தான் அவர் நந்துகிட்ட பணம் பறிக்கிறார்னு தெரிஞ்சதும் எனக்கு உடம்பெல்லாம் கூசிப் போச்சு.

ஏதோ தவறான தொழில் செய்து சம்பாதிக்கிற மாதிரி ஒரு அருவருப்பு. நந்தாகிட்ட சொல்லிப் பார்த்தேன். அவர்



பணம் கொடுக்கிறத நிறுத்தல. உனக்காக என்ன வேணாலும் செய்வேன்னு சொன்னார். பணம் தண்ணியா செலவழிச்சதால கம்பெனி நஷ்டத்தில போயிடுமோன்னுதான் நான்... என் மனசை வெறுத்து... என் உயிரை வெறுத்து அந்த முடிவை எடுத்தேன்."

"எ... என்ன முடிவு?"

"நந்துவை விட்டு விலகுற முடிவு. நான் விலகிப் போனாத்தான் என் நந்து ஏமாளியா இல்லாம பிஸினெஸ்ல ஜெயிப்பாருன்னு முடிவெடுத்தேன். என்னை முழுதாய் விரும்பிய தைரியத்தில் நம்பிக்கையில் படிக்கும் காலத்தில் சிலநேரம் தனக்கு வலிப்பு வருவதாக என்னிடம் சொல்லி இருந்தார்.

அவரைப் பிரிய, அவர் என்னை வெறுக்க, நான் அதையே காரணமாக்கிக் கொண்டேன். அவரை ரொம்ப அவமானப்படுத்தியும், வேறொருத்தரை திருமணம் செய்ய இருப்பதாகவும் கூறினேன்.

இங்கு இருந்தால் அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தால் என்னால் நடிக்க முடியாதுன்னுதான் ஒரு மாசம் லீவு போட்டுவிட்டு போயிட்டேன். இதே ஊர்ல இருந்துகிட்டே வேலை தேடி அலைஞ்சேன். ஒவ்வொரு நாளும் என் நந்துவை நினைச்சுகிட்டே, பார்க்கவும் முடியாம..." அதற்கு மேல் பேச முடியாமல் விம்மி வெடித்து அழ ஆரம்பித்தாள் நீனா.

# 11

நம் பிரிவுத் துயரைத்
தீர்க்கும் மருந்தாய் இருக்கிறோம்
எனக்கு நீயும்
உனக்கு நானும்!

**நீ**னா அழுது ஓயும் வரை அமைதியாக இருந்தான் ராஜகுமாரன். மனதில் இருந்த பாரமெல்லாம் கரைந்து விட்டது போல் அப்படியொரு நிம்மதி. நந்து ஏமாறவில்லை அமைதியான அன்பான பெண்ணிடம்தான் மனதைத் தொலைத்திருக்கிறான். இதோ அவளே திரும்பியும் வந்துவிட்டாள். இனி தம்பியின் வாழ்வில் சோகமில்லை என்ற எண்ணமே உற்சாகத்தைத் தந்தது.

நீனா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்தாள்.

"சார் நான் செய்தது தப்பா?" என்றவளிடம் இருக்கையைக் காட்டினான்.

"முதலில் உட்கார். என் தம்பிக்குத் தெரிந்தால் திட்டுவான்."

"ஏன் சார்?"

"பின்னே! இந்தக் கம்பெனியோட ஓனரம்மாவை எவ்வளவு நேரம் நிற்க வைத்தே பேசுவதாம். முதலில் உட்காரும்மா."

நீனாவின் கண்கள் சந்தோஷமாய் மலர்ந்தது. "சார் நீங்க சொல்றது எனக்குப் புரியல்ல."



"எல்லாம் புரியும்படியாகவே சொல்றேன். பிளீஸ் சிட்டவுன்."

அவள் அமர்ந்ததும் அவளது பிரிவிற்குப் பின் நிகழ்ந்ததை நந்தாவின் தற்கொலை முயற்சி முதல் மீனாவின் பிரிவு வரை சொல்லி முடித்தபோது தொலைபேசி அழைத்தது.

"உனக்குத்தான் பேசு!" என்றான் ராஜகுமாரன்.

"எனக்கா?"

"நந்துதான் பேசுவான். மீனா வேலையை விட்டுப் போனதால் கொதித்துப் போயிருப்பான். நான் பேசினால் திட்டித் தீர்த்து விடுவான். அதனால் முதலில் நீ பேசு. நான் வெளியே வெயிட் பண்றேன்."

"வேணாம் சார். இங்கேயே இருங்க."

"ஏம்மா! ஒரு மாதப் பிரிவை பேசித் தீர்க்க வேண்டாமா? நான் எதற்கு நந்தியாய்! பேசு பேசு" என்றவாறு அவன் வெளியேற தயக்கமும் ஆர்வமுமாய் அடித்துக் கொண்டிருந்த தொலைபேசியை எடுத்தாள்.

காதில் வைத்ததுமே நந்தகுமாரனின் கோபக்குரல் கேட்டு உடல் முழுக்க சிலிர்த்தாள். உள்ளம் நெகிழ கண்ணீர் சுரந்தது.

"அண்ணா! என்ன ஆச்சு? மீனாகிட்ட பேசினியா? அவங்க பக்கத்துல இருக்காங்களா?"

"நந்து!" தொண்டையடைக்க ஒலித்த குரலில் கூப்பிட்டான் நந்தா. உள்ளம் படபடவென அடித்துக் கொண்டது.

"யா... யாரு?"

"நான்தான் நந்து."

"யாரு? நீனுவா?"

"ம்."

"நீனு! நீ... நீ எப்படி... எப்போ வந்தே. எப்படி இருக்க?" நந்தா தவிப்பாய்க் கேட்க, அதற்கு மேலும் தாளாமல் அழுதே விட்டாள் நீனா.

"நீனு பிளீஸ்! அழாதே. ஏன்டா... என்னாச்சு?"

"நந்து! உனக்கு எம்மேல கோபமே இல்லையா?"

"கோபமா? உன் மீதா? சேச்சே! உங்கிட்ட கோவிச்சுப்பேனா?"

"என் நந்து! நீ என் நந்து. நீ மாறவே இல்ல நந்து."

"நான் எப்படி மாறுவேன்னு நினைச்சே நீனு?"

"தப்பு நந்து! நான் உன்னை விட்டு போயிருக்கவே கூடாது. எனக்காக... உன் உயிரையே விடப் போனியாமே."

"அதான் பொழைச்சு வந்திட்டேனே. சரி... நீ எங்கே போனே?"

"நான் எங்கேயும் போகல்ல. இங்கதான் ஒரு லேடீஸ் ஹாஸ்டல்ல தங்கியிருந்தேன்."

"லேடீஸ் ஹாஸ்டலா? ஏன் மாமா வீடு என்னாச்சு?"

"மாமா என்னை வெளியே போன்னு சொல்லிட்டார்."

"என்ன?" நந்தகுமாரன் அதிர்ந்து போனான்.



"ஆமா நந்து! என் மாமாவுக்காகத்தான் உன்னையே பிரிந்து போனேன். இப்ப நான் அநாதையா நிக்கிறேன் நந்து."

"சீச்சி! ஏன்டா இப்படிப் பேசறே? நான் இருக்கேன். நம்ம வீட்ல எல்லாரும் உன்னைத் தங்கமாப் பார்த்துப் பாங்க. அழக்கூடாது. ஆமா அண்ணன் எங்கே? நீ எப்படிப் போனை எடுத்தே?"

"உங்க அண்ணன்கிட்ட எல்லாம் சொல்லிட்டேன். போன் வந்ததும் என்னைப் பேசச் சொல்லிட்டு வெளியே நிக்கிறார்."

"நீனு! போனை அண்ணன்கிட்ட கொடேன்."

"இதோ கொடுக்கிறேன்" என்றவள் ரிஸீவரை மேஜைமேல் வைத்துவிட்டு ராஜகுமாரனை அழைத்தாள்.

"சார்! சார்... நந்து உங்ககிட்ட பேசணுமாம்..." என்றதும் வியப்பாய் உள்ளே நுழைந்தான்.

"என்ன ஆச்சர்யம்? அதுக்குள்ள பேசி முடிச்சிட்டீங்களா? எப்படியும் ஒன் அவர் ஆகும்னு நினைச்சேனே" என்றவாறு ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தான்.

"உன்னை வெளியே நிற்க வைத்து விட்டு நான் ஒரு மணிநேரம் பேசுவேன் என்று நினைத்தாயா?" என்றான் நந்து.

"இதுல என்னடா இருக்கு? இந்த நிமிஷம் நீனுவோட கண்ணீருக்கு உன் பேச்சுதான் மருந்தா இருக்கும். அதான் பேசச் சொன்னேன். பேசிட்டியா?"

"அண்ணா! தேங்க்ஸ் அண்ணா."

"எதற்கு?"

"நீனுவை ஏற்றுக் கொண்டதற்கு."

"நந்து! உன் மனசு போல எல்லாம் நடக்கும். அப்பாவிடம் நான் பேசி உங்க திருமணத்தை நடத்தறேன்."

"அண்ணா! அது தப்பில்லையா?"

"எது?"

"வீட்டில் மூத்தவனை வைத்துக் கொண்டு நான் எப்படி?"

ராஜகுமாரனிடம் பேச்சில்லை. ஏனோ மீனாவின் நினைவு வந்து ஆட்கொண்டது. அவளது கண்ணீர் ததும்பிய கண்கள் இம்சித்தது.

"என்ன அண்ணா! பேச்சையே காணோம்."

"விடுடா. இப்போ உனக்கு நீனுவைப் பார்க்கணும் போலில்லையா?"

"ஐயோ! கொள்ளை ஆசை. ஆனா என்னால ரூமை விட்டு வெளியே வர முடியவில்லையே. பிறகெப்படி அங்கே வருவதாம்?"

"அதற்கென்ன நாங்கள் அங்கே வருகிறோம்."

"அண்ணா! நிஜமாகவா சொல்கிறாய்?"

"ஆமான்டா. பாவம் நீனா. ரொம்ப கலங்கி போயிருக்கா. நாங்க இன்னிக்கே கிளம்பி வர்றோம்."



"ஹய்யோ! என் சக்கரைக்கட்டி அண்ணா. தேங்க்யூ அண்ணா. தேங்க்யூ ஸோ மச்."

"போதும்டா. மத்ததை நேர்ல பேசிக்கலாம்."

"அப்புறம் அண்ணா! மீனா மேட்டர் என்னாச்சு? கேட்க மறந்திட்டேனே."

"நந்து! உங்கிட்ட நிறைய பேசணும். நேர்ல பேசுவோமே. போனை வெச்சிடவா?"

அண்ணனின் குரலில் ஏதோ ஒரு ஏக்கம் இழையோடியதை புரிந்து கொண்ட நந்தகுமாரன், "சரி அண்ணா, வெச்சிடு" என்றான் அமைதியாக.

× × ×

இதோடு ஏழாவது கம்பெனியை ஏறி இறங்கியாகி விட்டது. இதுவரை வேலை கிடைத்தபாடில்லை. வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது என்பார்களே. அதை இப்போதுதான் முழுக்க உணர்ந்து கொண்டாள் மீனா.

தந்தையின் கம்பெனியில் சுலபமாய் கிடைத்ததுபோல் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில்தான் தனது வேலையை உதறிவிட்டு வந்ததை பெற்றோர்களிடம் சொல்லாமல் மறைத்திருந்தாள்.

வேறு வேலை கிடைத்து அதில் சேர்ந்த பின் பொதுவாகச் சொல்லிக் கொள்ளலாம் என்றுதான் காலையில் வழக்கம் போல் புறப்பட்டு ஒவ்வொரு கம்பெனியிலும் ஏறி இறங்கி மாலையில் வீடு போய் சேர்ந்து விடுவாள்.

ஆனால் வாரம் ஒன்று ஆனபின்பும் வேலைதான் அமையவில்லை. அனைவருமே இதற்கு முன் பார்த்த

வேலையை ஏன் விட்டீர்கள். நீங்களாக விட்டீர்களா? இல்லை அவர்களே அனுப்பினார்களா என்ற ஒரே கேள்வியையே கேட்டுத் திணற வைத்தார்கள்.

ஒரு கார்மெண்ட்ஸ்காரரர் உடனே வேலை தருவதற்கு சம்மதித்தார். ஆனால் அவரது பேச்சும் சைகையும் வயிற்றில் புளியைக் கரைக்க, விட்டால் போதும் என்று ஒரே ஓட்டமாய் ஓடி வந்து விட்டாள். இனி எங்கே போவது?

நேரம் மாலையை நெருங்கிக் கொண்டிருந்ததால் மெதுவாக அருகே இருந்த பூங்காவிற்குள் நுழைந்து புல்வெளியில் போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தாள். மதிய உணவு அப்படியே டிபன்பாக்ஸில் இருந்தது. இதைக் கொண்டு போனால் ஏன் சாப்பிடவில்லை என அம்மா ஆயிரம் கேள்வி கேட்பார் என்பதை உணர்ந்து டிபன் பாக்ஸைத் திறந்தாள்.

காலையில் கிளறிய தக்காளி சாதம் லேசாய் வாசம் வீசியது. சுற்றுமுற்றும் பார்த்தாள்.

ஓர் உடல் வற்றிய பெண் நாய் தன் நான்கு குட்டிகளோடு மரத்தடியில் படுத்திருந்தது. எலும்பும் தோலுமாய் இருந்த நாயின் குட்டிகள் கொழுகொழுவென விளையாடிக் கொண்டிருந்தன. அதில் ஒன்று தாயின் மீது ஏறி விளையாடிக் கொண்டிருந்தது.

தாய் நாயைப் பார்க்கையில் மீனாவின் மனம் வருந்தியது. இந்த நாய் சாப்பிட்டு எத்தனை நாளாச்சோ? பரிவாய் ஒரு கவரை விரித்து அதில் சாப்பாட்டைக் கொட்டி நாயின் அருகே வைத்தாள்.



பசியோடு இருந்த நாய் ஆவலாய் விரைந்து சாப்பிட்டது. சாப்பிட்டு விட்டு மீனாவின் அருகே வாலாட்டிக் கொண்டிருக்க, அவளது முகம் புன்னகை பூத்தது.

"ஒருவேளை சாப்பாட்டிற்கே இத்தனை நன்றியா? நன்றியுள்ள பிராணி என்று உன்னைச் சொல்வது ரொம்பச் சரி" என்றவாறு குட்டிகளின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருக்கையில் வெகு பரிச்சயமான குரல் அழைத்தது.

"ஏய் மீனு! வாட் எ சர்ப்ரைஸ். உன்னை இங்கு பார்ப்பேன்னு நினைக்கவே இல்லை. எப்படி இருக்கே?" என ஆர்ப்பாட்டமாய் வந்தாள் அஜிதா. கூடவே சற்று சங்கோஜமாக வந்தவன் ஸ்ரீராம்.

மீனா வியப்பாய் அஜிதாவைப் பார்க்க, அஜிதா வெட்கமாய் சிரித்தாள்.

"அப்படிப் பார்க்காதேடி... எனக்கு வெட்கமா இருக்கு."

"அஜி! என்னடி இதெல்லாம்? எப்போ இருந்து?"

"நேற்றுத்தாம்ப்பா சொன்னேன். ஸ்ரீயை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனா வீட்ல அக்காவை வெச்சிகிட்டு நான் எப்படி... அப்படின்னு தயங்கிச் சொல்லாமலே இருந்திட்டேன்."

"இப்போ எப்படிச் சொன்னே?"

"என் அக்காவைத்தான் ஸ்ரீயோட அண்ணனுக்கு பேசி முடிச்சிருக்கு. இன்னும் கொஞ்ச நாள்ல எங்க கல்யாணத்தையும் வெச்சிடலாம்னு பெரியவங்க பேசிக் கிட்டாங்க. அதான் இன்னிக்குத்தான் மொதமுறையா

வெளியே வந்தோம்." அஜிதா நாணச் சிவப்போடு சொல்ல, மீனா ஸ்ரீராமைப் பார்த்தாள்.

"ஸ்ரீராம் சார்! உங்களுக்கு தங்கை இருக்கான்னு சொன்னீங்களே!"

"அவ மேல படிக்கணும்னு ஆசைப்பட்டா மேடம். அதுக்கு அப்பாவும் சம்மதம் சொல்லிட்டாங்க. படிப்பு முடிஞ்சதும்தான் வரன் பார்க்கணும்."

"எப்படியோ உங்க ரூட் கிளியராயிடிச்சி."

"நாம விரும்புற பொண்ணைவிட நம்மளை விரும்புற பொண்ணை மணந்தா வாழ்க்கை நல்லா இருக்கும்னு பெரியவங்க சொல்வாங்க."

"தத்துவம்! ஒரு பொண்ணுகூட இருந்தா உங்களுக்குத் தத்துவம், கவிதை எல்லாம் கொட்டுமே."

"ஏய்! எங்களை விடு. இப்ப நீ என்ன பண்ணிகிட்டு இருக்கே?"

"நானா? வேலை தேடிக்கிட்டு இருக்கேன்."

"ஏங்க! உங்களுக்கு ஏன் இந்தக் கஷ்டம்? நம்ம ஆபீஸ்லயே தொடர்ந்து வேலை பார்க்கலாமே. உங்க ரிசைன் லட்டர் இன்னும் எங்கிட்டதான் இருக்கு."

"ஏன்?"

"அதை எடுத்துக்க வேண்டாம்னு ராஜா சார் சொல்லிட்டாரு."

"எதற்கு?" முகம் கடுப்பாகிவிட கேட்டாள்.



"மீனா! நீ கிளம்பிப் போனபிறகு என்னவெல்லாமோ நடந்து போச்சுடி."

"என்ன?" அசுவாரஸ்யமாய் கேட்டாள்.

"ஏய்! நம்ம நந்தா சார் உடம்பு சரியில்லாமதானே இங்க வரல்லன்னு நாம நினைச்சிகிட்டு இருந்தோம்."

"ஆமா..."

"இல்லப்பா. நந்தா சார் சூஸைட் அட்டெம்ப்ட் பண்ணி இப்போ ஹாஸ்பிடல்ல இருக்காராம். பொழச்சதே பெரிய விஷயமாம். கால்ல பலமான அடியாம். எதற்காக தற்கொலை முயற்சின்னு தெரியுமா?" அஜிதா சஸ்பென்சாய் கேட்க, மீனா சற்றுக் கோபமானாள்.

"எதுக்குன்னு தெரியும்... யாரு? யாரால?"

"ஏய்! அது யாருன்னு தெரிஞ்சா நீ ஷாக்காயிடுவே?"

"அஜி! பிளீஸ்... விளையாடாதே. யாரு?"

"அதாம்ப்பா! நம்ம ஒல்லிக்குச்சி உடம்புக்காரி நீனா!"

"என்ன?"

"சொன்னேனில்ல... நீ ஷாக்காயிடுவேன்னு. அவளுக்காகத்தான் தன்னோட உயிரையே விடத் துணிஞ்சாராம்."

"இது... எப்போ தெரிஞ்சது?"

"நீ வெளியே போனதும் இவ வந்தா. நேரே ராஜா சாரைப் பார்க்கப் போனா... அங்கே என்ன பேசினாங்களோ தெரியாது. இப்போ கல்யாணத்துல வந்து நிற்குது."

"கல்யாணமா? யாருக்கு?"

"இது என்னடி கேள்வி? நந்தா சாருக்கும் நீனாவுக்கும்தான்."

"முடிவு பண்ணிட்டாங்களா?"

"ஆமாம்ப்பா. ராஜதுரை சார் கூட வந்தாச்சாம். பெரிய பிள்ளைக்கும் பொண்ணு பார்த்திட்டு ரெண்டு கல்யாணத்தையும் ஒரே மேடையில வைக்கப் போறாங்களாம்."

"ஓ! சரி... எனக்கு லேட்டாகுது. நான் கிளம்பறேன்."

"என்ன மீனு! கிளைமாக்ஸ கேட்காம கிளம்பிட்ட?"

"ம்ப்ச்! இது அவங்க வீட்டு விஷயம். நமக்கென்ன வந்தது?"

"அப்படிச் சொல்லாதே! ராஜா சாருக்குப் பார்க்கறதா சொன்னேனில்ல. பொண்ணு யாரு தெரியுமா?"

"யாரு?"

"ஹேய்! அது..."

"அஜிம்மா! போதும். மிச்சத்தை அவங்களே தெரிஞ்சுக்கட்டும். அப்பத்தான் சுவாரஸ்யமா இருக்கும்." ஸ்ரீராம் சொல்ல உற்சாகமாய் தலையாட்டினாள் அஜிதா.

"ம்! இதுவும் சூப்பர் ஐடியாதான். சரி மீனு... உனக்கு லேட்டாகுமே. நீ கிளம்பு. நாங்க பீச் வரைக்கும் போகணும்." குறுஞ்சிரிப்போடு சொல்லிவிட்டு நகர குழப்பமானாள் மீனா.



"என்ன பெரிய சஸ்பென்ஸ்? அவன் ஒரு சரியான சிடுமூஞ்சி. எவளையாவது கட்டிட்டுப் போகட்டும். எனக்கென்ன?" சத்தமாகவே கூறிவிட்டு டிபன்பாக்ஸை மூடி பையினுள் வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

ஸ்ரீராம் திரும்பி வந்தான். "மீனா! ஒரு நிமிஷம்."

"ம்?" என்றவாறு நின்றாள்.

"வாழ்த்துக்கள்!"

"எதுக்கு?"

"ஹேப்பி மேரீட் லைஃப்."

"வாட்! இதை நான்தான் உங்களுக்குச் சொல்லணும்."

"நானும் சொல்லலாம்."

"என்னாச்சு ஸ்ரீராம் உங்களுக்கு?"

"வீட்டுக்குப் போய் பாருங்க. உங்களுக்கே புரியும்."

"ஸ்ரீ! என்னைச் சொல்லிவிட்டு நீங்க என்ன நிக்கறீங்க. வாங்க டயமாகுது" சிணுங்கினாள் அஜிதா.

"வந்திட்டேன்... வந்திட்டேன்..." என்றவாறு அவன் ஓட, இன்னும் குழப்பமானாள்.

"என்னாச்சு இவர்களுக்கு?" புரியாமல் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

வீட்டை நெருங்கும்போதே காமாட்சி எதிரே வந்தாள். "என்ன மீனும்மா! இவ்வளவு நேரமாக்கிட்ட. வா... வா... அவங்கெல்லாம் காத்திருக்காங்க."

"யாரும்மா?"

"அதான் அப்பாவோட பழைய முதலாளி, அவர் புள்
எல்லாம் வந்திருக்காங்க. சீக்கிரம் வாம்மா."

சட்டென நின்றாள். "அப்பாவைப் பார்க்கத்தா
வந்திருப்பாங்க. நான் எதுக்கு?"

"இல்லம்மா. உன்கிட்ட ஏதோ பேசணுமாம்.
சம்மதிச்ச பிறகுதான் மத்ததைப் பேசி முடிவு பண்ணனுமா

அம்மா கைபற்றி அழைத்துப் போக மீனாவின் மு
இருண்டு போனது.

## 12

விலகியே செல்கிறோம் - நாம்
நம் வாழ்நாளில்
மீண்டும் சந்திப்போமா
நீயும் நானும்!

**வீ**ட்டினுள் நுழைந்தவள் இன்னும் குழ
போனாள். ராஜதுரை மட்டுமே நாற்காலியில் அ
திருந்தார். அருகே கட்டிலில் எழுந்து அமர்ந்திரு
சாமிநாதன். மற்றபடி வேறு யாருமே அங்கு இல்லை

அம்மா சொன்னது தன் காதில் சரியாக
வில்லையோ? அஜிதா சொன்ன வார்த்தைகளையே அ
போட்டுக் கொண்டு வந்ததால் அம்மா சொன்
தவறாகப் புரிந்து கொண்டேனா? தயக்க



ழைந்தவளை வாய்நிறைய சிரிப்போடு அழைத்தார்
மிநாதன்.

"வாம்மா! யார் வந்திருக்கான்னு பாரு."

முகத்தில் வரவழைத்துக் கொண்ட சிரிப்போடு
துரையைப் பார்த்து கை கூப்பினாள்.

"வாங்க சார். வணக்கம்..."

"நல்லா இருக்கியாம்மா. ஆபீஸ் போயிட்டு
றியாம்மா?"

"ம்... ஆ... ஆமா சார்."

"வேலையெல்லாம் பிடிச்சிருக்காம்மா?"

"சார்..."

"இல்ல... ராஜா வந்த பிறகு நிறைய மாற்றம்
திருக்கானாமே. அதான் அதெல்லாம் பிடிச்சிருக்கான்னு
டேன்."

"பிடிச்சிருக்கு சார்."

"சரிம்மா. நானும் அப்பாவும் பழைய கதையெல்லாம்
போரடிப்போம். நீ போய் ஏதாவது சாப்பிடும்மா."

"அம்மா! சாருக்கு காபி கொடுத்தீங்களா?"

"அதெல்லாம் ஆச்சும்மா. நாங்க வந்து ரெண்டு மணி
ச்சு."

"ஓ! சரி சார்... பேசிகிட்டு இருங்க" என்றவள் தன்
நகர்த்திக் கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தாள்.

"அம்மா! சார் எதுக்காக இங்கே வந்திருக்காராம்?" என்றாள் கிசுகிசுப்பாய்.

"அதான் சொன்னேனே... அவரு புள்ளைக்கு உன்னைப் பெண் கேட்டு வந்திருக்காங்க."

"என்ன?" துல்லியமாய் அதிர்ந்தாள்.

"ஆமான்டி... ஏற்கனவே அப்பாகிட்ட பேசி சம்மதம் சொல்லியாச்சு. எதுக்கும் உன்கிட்ட ஒரு வார்த்தை கேட்கணும்னுதான் இவ்வளவு நேரமா காத்திருக்காங்க."

மீனாவிற்கு தலை சுற்றியது. "அப்பா என்ன சொன்னார்?"

"அப்பாவிற்கு ரொம்ப சந்தோஷம் மீனு. முதல்ல எனக்கே கொஞ்சம் தயக்கம்தான். அவங்க பெரிய இடமாச்சேன்னு. ஆனா பெரியவர் எவ்வளவு தன்மையா பேசினார் தெரியுமா? பணம் ஒரு பிரச்சினையே இல்லை எம்புள்ளைங்களுக்குப் பிடிச்ச பொண்ணு அமைஞ்சா போதும்னு சொல்லிட்டாரு."

"என்ன?"

"ஆமா மீனு. அந்த சின்னத் தம்பிக்கும் ஏதோ கஷ்டப்பட்ட குடும்பத்துப் பெண்ணைத்தான் பேசி வெச்சிருக்காங்களாம். மூத்த பிள்ளைக்கும் உன்னைப் பேசி முடிச்சிட்டா ரெண்டு கல்யாணத்தையும் ஒரே மேடையில் வெச்சிடலாம்னு சொன்னாரு... சரின்னு சொல்லிட்டோம்."

"ஐயோ அம்மா! ஏன் இப்படி அவசரப்படறீங்க?"

"ஏன்டி! என்ன அவசரப்பட்டோம்."



"இல்ல... வந்து அம்மா! அவருக்கு என்னைப் பார்த்தாலே பிடிக்காதும்மா."

"அடி அசடே! என் தங்கத்தை யாருக்காவது பிடிக்காமப் போகுமா? சொக்கத்தங்கம்டி நீ."

"ஆமாமா! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்."

"ஏம்மா! சலிச்சுக்குறே. உன்னை அவங்க எல்லாருக்கும் ரொம்பப் பிடிச்சிருக்காம். மாப்பிள்ளையோட அப்பாவுக்கு ஏற்கனவே உன்னைப் பெண் கேட்கணும்னு எண்ணமாம்."

"அவர் எண்ணம் இருக்கட்டும். மாப்பிள்ளை என்ன சொன்னார்?"

"அவர் சொன்னதாலதான் எல்லாருமே புறப்பட்டு வந்திருக்காங்க. உன்னை ரொம்பப் புடிச்சிருக்காம். அதை உங்கிட்ட சொல்லாம அப்பாகிட்டயே பேசிடலாம்னு வந்தாங்களாம். நீதான் சொன்னியாமே..."

"நானா? நான் என்ன சொன்னேன்?"

"என் அப்பா பார்க்கிற மாப்பிள்ளை யாரா இருந்தாலும் கட்டிப்பேன்னு சொன்னியாமே. அதனாலதான் நேரா வீட்டுக்கு வந்திட்டாங்க."

மீனா புருவம் சுருக்கினாள். 'ஓ! அன்று ஸ்ரீராமிடம் பேசியதை இவனும்தானே கேட்டான். அந்த வார்த்தையைப் வைத்துக் கொண்டானாக்கும். தூற்றும் வரை தூற்றிவிட்டு இப்போதென்ன பெரிய அன்பு வேண்டிக் கிடக்கு? இவன் கேட்டால் நான் உடனே சம்மதித்து விட வேண்டுமா?

என்னவெல்லாம் பேசினான்? நான் சொன்னதை எதையாவது கேட்டானா? வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி மனதை கஷ்டப்படுத்தி வேலையை விட்டே வெளியேறும் அளவிற்கு விரட்டினானே. இப்போது தம்பியின் காதலி யாரென்று தெரிந்ததும் பெரிதாய் விமோசனம் பண்ண வந்து விட்டானோ?'

சிலையாய் நின்றவளை அசைத்தாள் அம்மா. "என்னடி? அப்படியே நின்னுட்டே. சீக்கிரமா முகம் கழுவி பவுடர் பூசி பட்டுப்புடவையைக் கட்டிட்டு வா. பூ வாங்கி வெச்சிருக்கேன். தலை நிறைய வெச்சுக்க. பெரியவங்களுக்கு நமஸ்காரம் பண்ணு."

"அம்மா! என்ன நடக்குது இங்கே?"

"உன்னைப் பொண்ணு பார்க்க வந்திருக்காங்கடி. பொம்பளைங்க வரலன்னு பார்க்கறியா? மாப்பிள்ளையோட தங்கைக்கு குழந்தை பிறந்திருக்குதாம். அதனாலே அவங்க அம்மா மகவீட்ல இருக்காங்களாம். இப்ப சும்மா பார்த்து பேசிட்டு அடுத்த மாசம் அவங்களெல்லாம் வந்தபிறகு தட்டு மாத்திக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்."

"என்னைக் கேட்காம முடிவே பண்ணிட்டீங்களா?"

அம்மாவின் பேச்சு நின்றது. மகளைப் பதற்றமாய் ஏறிட்டாள்.

"மீனும்மா! என்ன சொல்றே? உனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கலியா?"

"எனக்கு மட்டுமில்லம்மா. யாருக்குமே அவரை பிடிக்காது."



"வாயை மூடுடி. அந்தப் பிள்ளையை யாருக்குடி பிடிக்காமப் போகும். எத்தனை அடக்கமா அன்பா பேசுது. எவ்வளவு படிச்சிருக்கு. ராஜாவாட்டம் எவ்ளோ அழகா இருக்காரு."

"அழகா இருந்தா போதுமா? அவர் ஒரு சிடுமூஞ்சிம்மா. எப்பவுமே சீறிகிட்டே இருப்பாரு. அவரைப் பார்க்கவே பிடிக்கல்ல எனக்கு."

"ஷ்... மெல்லப் பேசுடி. எவ்வளவு அருமையான புள்ள. அதைப் போய் சிடுமூஞ்சி அது இதுன்னு உளறிகிட்டு இருக்கே."

"ஆமா! ஒரு நாள் பார்த்தவுடனே முடிவு பண்ணிட்டீங்களாக்கும்... அருமையான புள்ளைன்னு. நான்தான் ஒரு மாசமாப் பார்த்தேனே."

"என்னத்தைப் பார்த்தியோ. நாங்க ஒண்ணும் ஒரே நாள்ல முடிவு பண்ணல்ல."

"பின்னே!"

"ஏய்! அப்பா டிஸ்சார்ஜ் ஆகுற வரைக்கும் தினமும் வந்து பார்த்திட்டு போனாருடி. அப்பாவுக்கு ஒத்தாசையா எவ்வளவு காரியம் பண்ணினாரு தெரியுமா?"

"என்னம்மா சொல்றீங்க?"

"நீ தினமும் ஆபீஸ் போன பிறகு வருவார். தேவையானதெல்லாம் செய்து விட்டு பிறகு ராத்திரியும் வருவார். எல்லா உதவியும் செய்வார். சாப்பாடு கூட வாங்கிக் கொடுத்துட்டுப் போவார்."

"என்ன? கடையில வாங்கிப்பேன்னுதானே சொன்னீங்க?" கேட்கும்போதே குரல் தடுமாறியது.

"ஆமான்டி... உனக்கு ஆபீஸ்லயே ரொம்ப வேலை. அதோட இரவு வீட்டுக்குப் போயி சமைச்சு எடுத்திட்டு நீ அலைய வேண்டாம்னு அவர்தான் சொன்னாரு. இதெல்லாம் உனக்குத் தெரிய வேண்டாம்னும் சொன்னாரு."

மீனாவின் மனம் தடுமாறியது.

என் தந்தைக்காக அவன் பாடுபட்டானா? ஆனால் இதையெல்லாம் இவன் ஏன் செய்ய வேண்டும்.

அன்று அப்பாவைப் பார்த்துவிட்டு சொன்னாரே கடவுள் இருக்கிறார் என்று.

சட்டென அந்த நினைவு வந்ததும் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

"பாவமன்னிப்புக்காக விழுந்து விழுந்து கவனித்திருக் காரும்மா. உங்களுக்கு எதுவுமே தெரியாது. அவர் சரியான சுயநலவாதி" என்றாள் கோபமாய்.

"இல்ல அண்ணி! இதுல எந்த சுயநலமும் இல்லை. என் அண்ணன் சுயநலவாதியும் இல்லை" என்ற நந்த குமாரனின் குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.



# 13

எனக்கென நீ உனக்கென
நான் - இது தெரியாமலே
நமக்குள் மோதிக் கொண்டோம்
நீயும் நானும்...

மீனாவின் முன் அந்தத் துண்டுச் சீட்டை வைத்தான் நந்தகுமாரன்.

"இதுதான் இத்தனை குழப்பத்திற்கும் காரணம் அண்ணி. பிளீஸ் இதைப் பாருங்க."

அதைக் கையில் எடுத்துப் பார்த்தாள். "என்ன இது?"

"நீனுவின் மேல் இருந்த வருத்தத்தில் நான் தற்கொலை செய்யப் போகும் முன் எங்களுக்குள் பரிமாறிய கடிதங்கள், கிரீட்டிங் கார்டு எல்லாத்தையும் எரிச்சேன். அதில இந்தத் துண்டு மட்டும் எரியாம என் அண்ணன் கையில் கிடைச்சிருக்கு. இதுல உள்ள பேரைப் பார்த்திட்டு அது உங்க பேருன்னு முடிவு பண்ணிட்டாரு. அதனாலதான் இவ்வளவு பிரச்சினையும் வந்திருக்கு. மன்னிச்சிடுங்க அண்ணி."

"இது என்ன புதிதாய்... அண்ணி?"

"ஆமா அண்ணி! அண்ணன் மனசுல நீங்கதான் இருக்கீங்க. அதை அண்ணன் உணரும்போது நீங்க விலகிப் போயிட்டீங்க. நீங்க சொன்ன ஒரு வார்த்தையை வேதவாக்கா எடுத்திட்டு தவம் இருக்கான் அண்ணன்."

"தவமா?"

"ஆமா அண்ணி! உங்களைப் பார்க்க முடியாம பேச முடியாம தவிச்சிகிட்டு இருக்கான். அதோட உங்க மனசைக் காயப்படுத்தினதை நினைச்சு ரொம்ப வேதனைப்பட்டுகிட்டு இருக்கான்."

"அவர் மட்டும் அப்படிப் பேசலாமா? என்னை ஒரு வார்த்தை பேச விட்டாரா? எதையுமே விசாரிக்காமல் மொத்தப் பழியையும் சுமத்தினாரே. அப்பப்பா... என்ன வார்த்தைகள்?" மீனாவின் உடல் அதிர்ந்தது.

"தப்புதான் அண்ணி. பெரிய தப்புதான். ஆனா மன்னிப்பது தெய்வ குணம் இல்லையா? நீங்கள் மன்னிக்கக் கூடாதா?"

"நந்தா சார்... தப்பு செய்தது அவர். நீங்கள் ஏன் மன்னிப்பு கேட்கறீங்க. ஏன் அவர் பேச மாட்டாரோ?"

"ஐயோ! ஆயிரம் முறை உங்களிடம் மன்னிப்புக் கேட்க அவர் தயார். ஆனா உங்க பேச்சுக்கு கட்டுப்பட்டு நிற்கிறான்."

"என் பேச்சுக்கா? நான் என்ன சொன்னேன்?"

"நீங்கள் சொன்னீர்களாமே! அவன் முகத்தில் விழிக்கவோ அவன் பேச்சைக் கேட்கவோ விரும்பவில்லை என்று. அதை மீறி விடக்கூடாது என்று தவிக்கிறான்."

"போதும் நந்தா சார். இப்போ எதுக்கு எங்க வீட்டுக்கு வந்தீங்க?"

"அண்ணி! அப்பா வந்தது சாமிநாதன் சாரைப் பார்க்க. நான் வந்தது உங்ககிட்ட இதையெல்லாம் பேசி



புரியவைக்க. பெரியவங்களுக்கு நமக்குள்ள நடந்த குழப்பம் எதுவும் தெரியாது. ஆனா அப்பாவுக்கு உங்களைத் தன் மருமகளா ஆக்கிக்கணும்னு ஏற்கனவே எண்ணம் இருந்திருக்கு."

"என்ன?"

"ஆமாம் அண்ணி. இதுலேயும் நிறைய விஷயம் இருக்கு. அண்ணன் உங்க மேலே அவ்வளவு கோபப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம்."

"குழப்பாதீங்க நந்தா சார்."

"முதல்ல இந்த சாரை விடுங்க அண்ணி. நான் உத்தனை உரிமையாய் அண்ணி என்று அழைக்கிறேன்."

"சரி... விஷயத்தைச் சொல்லுங்க."

"அண்ணி! அப்பாவுக்கு உங்க மேலே ஒரு நல்ல அபிப்பிராயம். தன்னோட மூத்த மகனுக்கு உங்களைக் கட்டி வைக்கணும்னு ஆசை. இது எனக்குத் தெரியாது. ஆனா அண்ணனுக்குத் தெரியுமாம்."

"என்ன?"

"அட ஆமாம் அண்ணி. ஒரு ஆறு மாசம் முன்னால என்னைப் பார்க்க நம்ம கம்பெனிக்கு வந்தானே ஞாபகம் இருக்கா?"

ஒருகணம் யோசித்து விட்டு மறுப்பாய் தலை அசைத்தாள்.

"ஞாபகமில்லையே..."

"அதானே. நீங்க பார்த்திருக்க மாட்டீங்க. ஆனா சார் உங்களை நல்லாவே பார்த்து ரசிச்சிருக்காரு."

"நந்தா."

"கேளுங்க அண்ணி! அப்பாகிட்ட போயி இந்தப் பெண்ணை கட்டிக்க எனக்கு பூரண சம்மதம்னு சொல்லிட்டான். அதோட அப்போ இருந்தே உங்களை நேசிக்க ஆரம்பிச்சிருக்கான். உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா இதோ அவன் செல். இதைப் பாருங்க" என செல்போனைக் காட்டினான்.

தயக்கமாய் வாங்கிப் பார்த்தாள். மீனாவின் புகைப்படம் அதில் பதிவாகியிருந்தது. தனக்குத் தெரியாமலே எடுக்கப்பட்டிருந்த புகைப்படம் அது.

"இது... இது எப்படி?"

"மாப்பிள்ளை சார் உங்களைப் பார்க்க வந்தாரே அப்போ எடுத்திருக்கார். நீங்க நம்புறீங்களோ இல்லையோ ஆனா இதுதான் உண்மை."

மீனா பேச்சற்றுப் போனாள்.

"தான் விரும்பிய ஒரு பெண், தன் தம்பியை விரும்பி வெறுத்து உதறித் தள்ளியிருக்கிறாள் என்று தெரிந்த ஒரு ஆணின் மனநிலை எப்படி இருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்."

"நந்தா! நீங்கள் சொல்வது உண்மையாகவே இருக்கட்டும். அதுக்காக என்னைப் பற்றி அவரே எப்படித் தப்பான முடிவெடுக்கலாம். என்னிடம் பொறுமையாய் விசாரித்திருக்கலாமே."



"இதற்கான விடையை நான் சொல்லலாமா?" என்ற குரலில் மிரண்டு திரும்பினாள் மீனா. ராஜகுமாரன் நின்று கொண்டிருந்தான்.

"மீனு! உனக்குப் பிடிக்கலன்னா நான் போயிடுறேன். ஆனா நான் என் பக்கத்து நியாயத்தையும் சொல்லணு இல்லையா?" சற்றே பரிதாபமாய் அவன் கேட்க, "சொல்லுங்க" என்றவாறு சற்று விலகி நின்றாள்.

"என்னடா பசங்களா? இன்னுமா பேச்சு முடியல்ல!" ராஜதுரை முன் அறையிலிருந்து குரல் கொடுத்தார்.

"டாட்! நீங்க உங்க பழைய கதையைப் பேசுங்க. நாங்க இப்பத்தான் பேசவே ஆரம்பிச்சிருக்கோம். பிளீஸ்... டோண்ட் டிஸ்டர்ப் மீ" என்றான் நந்தகுமாரன்.

"சரிப்பா... நான் டிஸ்டர்ப் பண்ணல. நீங்களே பேசி முடிச்சிட்டு சொல்லுங்க. இந்தக் கால சிறுசுக நம்மளயே விரட்டுதுக சாமிநாதன்" என சிரித்தவாறே பேச்சைத் தொடங்கினார் ராஜதுரை.

ராஜகுமாரன் மீனாவைப் பார்த்தான். "மீனு! சத்தியமாய் நான் உன்னை வேண்டுமென்றே காயப் படுத்தலே. உன் பெயரை... சாரி... உன் பெயராக நான் நினைத்ததைப் பார்த்ததுமே எனக்கு பயங்கர ஷாக். அது நீயாக இருக்கக் கூடாது என்றுதான் இங்கு வந்தேன். உன் பெயரில் வேறு யாருமே இல்லையே. அதனால நீயாகத்தான் இருக்குமோ என்று பயந்துவிட்டேன். உன்னிடம் விசாரிக்கக் கூடத் தோன்றவில்லை. தம்பி மட்டுமில்ல... நானும் ஏமாந்து விட்டேனே என்ற ஆத்திரம்தான் என் கண்ணை மறைத்து விட்டது.

நந்தா மட்டும் அந்தப் பெண்ணின் பெயரை[ச்] சொல்லியிருந்தால் இத்தனை துன்பம் நேர்ந்திருக்காது. அவன் நீனாவைக் காப்பாற்றி நல்லவனாகி விட்டான். என் அவசரப் புத்தியால் நான் உன் முன் குற்றவாளியா[க] நிற்கிறேன்" என்றான் குற்ற உணர்வோடு.

"இது எல்லாத்துக்கும் நான்தானே காரணம் மீனா. நான் மட்டும் நந்துவை விட்டு விலகாமல் இருந்திருந்தா[ல்] இத்தனை குழப்பம் நேர்ந்திராதே. எல்லாம் என்னால்தானே" அப்போது அங்கு உள்ளே நுழைந்தபடி விசும்பினாள் நீனா.

"அழாதே நீனா... உன் மீது ஒரு தப்பும் இல்லை" பரிவோடு அவளைத் தேற்றினாள் மீனா. "[illegible] நந்தாவுக்காகத்தானே நீ அப்படி நடந்து கொண்டா[ய்]. உன் மீது எந்தத் தவறும் இல்லை."

"ஆமாம் அண்ணி! அவள் என்ன பேசியிருந்தாலு[ம்] எனக்கு அவள் மீது எந்தக் கோபமும் கிடையாது. அண்ணனால் அவளுக்கு எந்தக் கஷ்டமும் வந்துவிட[க்] கூடாது என்றுதான் அவள் பெயரைக்கூட சொல்லவில்லை" நந்தா கூற, ராஜகுமாரன் கோபமானான்.

"நீங்க செய்தது எல்லாமே சரி என்றால் நான் செய்த[து] மட்டும் எப்படித் தவறாகும்? தம்பி மீது உள்ள பாசத்தால் மரணம் வரை சென்று மீண்டவனை உடல் முழுக்க காயத்தோடு திரும்பக் கிடைத்தவனை நினைத்து அந்த வருத்தத்தில் கோபத்தில் கொஞ்சம் கடுமையாக பேசிவிட்டேன்.

அதுவும் அன்று ஸ்ரீராமோடு நீ பேசியதைக் கேட்ட பிறகு என் எண்ணம்தான் தவறானது என்று புரிந்த[து].



அமைதியாகத்தானே இருந்தேன். நகைக் கடை விஷயத்தில் [illegible] முதலில் பொறுமையாகத்தானே விசாரித்தேன். நீ சொன்ன பதிலில்தான் கோபப்பட்டு விட்டேன்."

"நான் சொன்ன பதிலை நீங்கள் முழுதாய்க் கேட்டீர்களா?"

"நீ மட்டும்? நான் கோபப்படும் போதே இதுதான் உண்மை என்று சொல்லியிருக்கலாமே."

"நானா? உங்கள் முன்னால் ஒரு வார்த்தை பேசவே முடியவில்லை."

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன். நானென்ன சிங்கமா புலியா? என்னைப் பார்த்தாலே ஏன் நடுங்குகிறாய்?" அவன் சீரியஸாகவே கேட்க, மீனாவிற்கு தன்னையும் மீறி புன்னகை வந்தது.

அவனது அறைக்குள் நுழையும் போதெல்லாம் சிங்கத்தின் குகைக்குள் நுழைவது போல எண்ணிக் கொள்வாளே!

"இப்போ ஏன் சிரிக்கறே? என்னைப் பார்த்தா [illegible] இருக்கா?"

"இல்ல! சிங்கம் மாதிரி இருக்கு. எப்பவும் இப்படியே கர்ஜனை பண்ணிக்கிட்டு இருந்தா அப்படித்தான் தோணும்."

"நீதான் அப்படி கர்ஜனை பண்ண வெச்சே..."

"நான் என்ன பண்ணினேன்?"

"என்னைப் பார்த்தாலே நடுங்குகிறாயே."

"ஆமாம். எப்பவுமே சீறிகிட்டே இருந்தால்..."

"அப்போதே எதிர்த்துப் பேசி வாயை அடைத்திரு வேண்டும். சும்மா பயந்திட்டே இருந்தால் மிரட்டத்தா தோணும்."

"தோணும்... தோணும்... கல்யாணம் ம முடியட்டும். அதுக்கப்புறம் பேசிப் பாருங்கள்... அப் தெரியும்."

"என்ன செய்து விடுவாயாம்?"

"பேசினால்தானே... வாயைத் திறந்தாலே தலை தட்டி அடக்கி விடுவேன்."

"ஐயோ! அடிப்பியா?"

"பின்னே! எத்தனை நாள் என்னை அ வெச்சிருக்கீங்க. பதிலுக்கு நான் பழிவாங்க வேண்டா

"என்னை பழிவாங்கத்தான் கல்யாணம் பண்ணி போறியா?"

"ஆமாம். அதிலென்ன சந்தேகம். என்ன ஆனா சரி, உங்களை விடப் போவதில்லை."

"அடிப்பாவி! பூனை மாதிரி இருந்துகிட்டு இப்போ பு மாதிரிப் பாய்கிறாளே. நந்தா! இவளிடம் மாட்டிக் கொ நான் என்ன பாடுபடப் போகிறேனோ தெரியவில்லை

"நீங்கள் இப்படியே சண்டை போட்டுக் கொ இருங்கள். நான் அப்பாவிடம் போய் நாள் கு சொல்கிறேன்" என்ற நந்தகுமாரன். "இனி நமக்கு



லையில்லை... வா நீனு..." என்று நீனாவை அழைத்துக் ண்டு வெளியேற,

அவர்களின் இனிய சண்டை தொடர்ந்து கொண்டே ந்தது. அதை தூரத்தில் இருந்தே பார்த்துச் சிரித்தனர் ற்றவர்கள்.

"வேண்டாம் மீனு! அடிக்காதே. எல்லாரும் க்கிறாங்க. பிளீஸ்... பிளீஸ்!" என அறை முழுக்க குமாரன் ஓட, வேடிக்கையாய் அவனை அடிக்க டினாள் மீனா.

ஓடியவன் சட்டென்று நின்றுவிட அவன் மீது மோதி றவளைக் கண்கள் நிறைய நேசத்துடன் கட்டிக் ண்டான் ராஜகுமாரன்.

இனி சுகம் சுகமே...

# இளைய இதயங்கள் இனிய ராகங்கள்

## 1

இதய வீணை தூங்கும் போது
பாட முடியுமா? - இரண்டு கண்கள்
இரண்டு காட்சி காண முடியுமா?
உதடு சிரிக்கும் போது உள்ளம் சிரிக்குமா?

**சி**ல்லென்ற காற்று முகத்தில் மோத கண்விழித்தான் ரவி. கார் சீரான வேகத்தில் சென்று கொண்டிருக்க, காரை ஓட்டிக் கொண்டிருந்த சந்தோஷ் புன்னகைத்தான்.



"நான் தான்டா கண்ணாடியை இறக்கிவிட்டேன். இயற்கைக் காற்றோட சுகமே தனிதான். அதான் ஏ.சி.யை நிறுத்திட்டேன். வெளியே பார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமை பசுமைதான். இதைப் பார்த்தாலே போதும்டா. மனசுக்கு நிறைவா இருக்கும். புத்துணர்ச்சி கிடைக்கும். இந்த காட்சிக்காகத்தான் மாதம்தோறும் எங்க ஊருக்கு ஓடி வந்திடுவேன். நீயும் பாரு அப்புறம் எங்க ஊரைவிட்டு வெளியேறவே மாட்டே" தன் கிராமத்தின் பெருமையை சந்தோஷ் கூற ரவி பார்வையை வெளியே வீசினான்.

உண்மைதான் அத்தனையும் பசுமை, குளுமை. செழிப்பான தென்னை மரங்கள் வரிசையாய் தங்கள் தலையில் கொழுத்த இளநீரோடு நிற்க, பனைமரமும், பாக்குமரமும் வரிசையாய் சென்றன. பச்சைப்பசேல் என்ற வயல்வெளியைப் பார்க்கையில் நிஜமாகவே உள்ளம் குளிர்ந்தது.

"டேய்! மெதுவாப் போடா. உண்மையிலே உங்க ஊர் ரொம்ப அருமையா இருக்கு." பார்வையை விலக்காமலேயே ரவி சொல்ல காரின் வேகத்தைக் குறைத்தான் சந்தோஷ்.

"ரவி! இது நம்ம ஊர் இல்ல. அதுக்கு இன்னும் [illegible]பது கிலோ மீட்டர் போகணும். இதெல்லாம் நம்ம ஊரைச் சுத்தி இருக்கிற கிராமங்கள். நீதான் பெரிய [illegible]ணாயிற்றே. அதனாலதான் இந்த சுற்றுப் பாதையில் வந்தேன். அதோ தெரியுது பார். அதுதான் கண்மாய், [illegible]ண்டா கம்மாக்கரைன்னு சினிமாவில சொல்வாங்களே [illegible]தான். வருஷம் பூரா தண்ணி வற்றவே செய்யாது. [illegible] அதிகம்தான். ஆனா அதுல குளிக்கிற சுகமே

தனிதான். இந்தப் பக்கம் உள்ள எல்லா கிராமங்களுக்கும் இதுல இருந்துதான் தண்ணீர் போகும். அந்த வரப்புமேல ஏறி நடந்தாலே நம்ம வீட்டுக்குப் போயிடலாம். அவ்ளோ நீளம்."

கண்களில் கிடைத்த அனைத்துக் காட்சிகளையும் ரசனையோடு பார்த்துக் கொண்டான் ரவி. பட்டணத்தில் இந்த போன்ற பசுமையும் அமைதியும் கிடையாது. பசுமைக்காக என்று சாலையில் நடுவே வைக்கப்பட்டிருக்கும் செடிகள் கூட புழுதியாலும், வாகனப் புகையாலும் மங்கிப் போய் தானிருக்கும். எப்போதும் கேட்கும் இரைச்சல் சில சமயம் இதமாகவும் பலசமயம் தலைவலிக்கு காரணமாகவும் அமைந்துவிடும்.

வரிசையாய் நெருக்கமாய் எழுந்து நிற்கும் கட்டிடங்கள் காற்றைக் கூட சுலபமாய் வீச விடுவதில்லை. அதனாலேயே மின் விசிறி, குளிரூட்டப்பட்ட அறை என அனைத்தும் இயந்தரத்தனமாகவே ஆகிவிட்டது. ஆனால் கிராமம் கிராமம்தான். எத்தனை அமைதி. என்ன சுகாதாரமான காற்று. ஒரு வீட்டிற்கும் இன்னொரு வீட்டிற்கும் எத்தனை இடைவெளி.

ஒவ்வொரு வீட்டின் முன்பும் வேப்ப மரமும், முருங்கை மரமும், கொய்யா மரமும் செழிப்பாய் பரந்து விரிந்திருந்தன. செம்பருத்தியும் மல்லிகைக் கொடியும் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தது. வாசலில் அழகாய் சாணி மெழுகி பெரிய பெரிய கோலமிட்டு அதன் நடுவே மஞ்சள் நிறத்தில் பூசணிப்பூவை சாணியில் சொருகி அழகு பண்ணியிருந்தது அற்புதமாய் இருந்தது.



வியப்பாய் நண்பனை அழைத்தான் ரவி. "சந்தோஷ் பாரேன் எவ்ளோ பெரிய கோலம். எல்லாப் பூக்களும் கம்பிகளுமாய் வளைந்து நெளிந்து... அடேயப்பா! கிராமத்தில் தான்டா உண்மையான ஓவியர்கள் இருக்கிறார்கள். இந்தப் பெண்கள் எங்கே போய் இதைக் கற்றுக் கொள்கிறார்கள். சந்தோஷ்"

"ம். காலேஜ்க்குப் போய் கத்துக்குவாங்க. போடா மவனே இதெல்லாம் நம்ம பெண்களோட கூடப்பிறந்த திறமைடா. சின்ன வயசுல இருந்தே அவங்களோட திறமையை வளர்த்துப்பாங்க. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்னு சொல்வாங்களே அந்த மாதிரிதான் இதுவும்.

இந்தக் கோலங்களைப் பார்த்தே பிரமிச்சிட்டியே. எங்க ஊர்ல திருவிழா நடக்கும்போது வெப்பாங்க. அப்போ பார்க்கணும் நீ. தெருவையே அடைத்து விதவிதமாய் கலர்க் கலராய் நிறைய கோலம் போட்டிருப்பாங்க. தெருவில நடக்கவே முடியாது. எந்தக் கோலத்தை முதல் பரிசாகத் தேர்ந்தெடுப்பதுன்னு நாங்களே திணறிடுவோம். அவ்ளோ அற்புதமா இருக்கும்..."

"அப்போ எல்லோருக்கும் பரிசு கொடுத்திட வேண்டியதுதானே" "ஆமா! அப்படித்தான் செய்வோம். பாவம்! அதிகாலையிலேயே எழுந்து பொறுமையா அழகா கோலம் போட்டு கலர் பொடி தூவி முதுகு ஒடிய கஷ்டப்படுவாங்களே. அதனால எல்லாருக்கும் பரிசு கொடுத்திடுவோம்."

"என்ன பரிசு கொடுப்பீங்க?"

"முன்னெல்லாம் தட்டு கிண்ணம்னு சிம்பிளா கொடுப்போம். இப்போ சில்வர்குடம் கொடுப்போம். முதல் பரிசுக்கு மட்டும் பெரிய பாத்திரம் கொடுப்போம்."

"இல்லடா! அது போதாது. இவங்க திறமையை மெச்சுறமாதிரி நீங்க தங்கத்தில ஏதாவது கொடுக்கலாமே. கோல்டு காயின் இல்ல, மோதிரம் அட்லீஸ்ட் மூக்குத்தியாவது கொடுக்கலாமே" என்ற ரவியை வியப்பாய்ப் பார்த்தான்.

"என்னடா விளையாடுறியா? தங்கம் விலை தெரியாம பேசுறியா? ஒரு கிராம் தங்கமே ரெண்டாயிரம் ரூபாயாகப் போகுது எங்க கிராமத்துல மட்டும் ஆயிரத்துக்கு மேல குடும்பம் இருக்கு. எப்படிக் கொடுக்க முடியும். கணக்குப் போட்டுப் பாரு." என்றான் சந்தோஷ்.

"அப்படியா? யாராவது ரிச் பேமிலிக்காரங்க இதைச் செய்யலாமே."

"அடப்போடா. அவங்கள்லாம் பாட்டுக் கச்சேரி, டான்ஸ் புரோகிராம்னா ஸ்பான்ஸர் பண்ணுவாங்க. நான் வருஷம் தோறும் அன்னதானம் பண்ற பொறுப்பை ஏத்துப்பேன்."

"அப்போ இனிமே உங்க ஊர் திருவிழாவுக்கு நீ கிளம்பும் போது சொல்லு. நான் பணம் தர்றேன். நீ சென்னையிலேயே மொத்தமா கிப்ட்டை வாங்கிட்டு வந்துடு" என்ற ரவியைப் பார்த்து பிரமித்துப் போனான் சந்தோஷ்.

"மச்சான்! எனனடா இவ்ளோ பெரிய மேட்டரை இவ்ளோ சிம்பிளாச் சொல்லி முடிச்சிட்டே. நிஜமாவே சொல்றியா?"



"பின்னே! இதுல போய் யாராவது விளையாடு வாங்களா? என்ன பெரிய அமவுன்ட். நம்ம ஒரு மாத இன்கம்தானே. திறமை இருப்பவர்களை ஊக்குவிக்க வேண்டும் சந்தோஷ். அவங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்கல்ல?"

"கிரேட். ரவி நீ பெரிய ஆள். எனக்கு கூட இது தோணலியே." என்றவாறு ஒரு பெரிய தென்னந்தோப்பின் அருகே ஓரமாய் காரை நிறுத்தினான்.

"என்னடா நிறுத்திட்ட? இதுக்குள்ளயா வீடு இருக்கு?"

"இல்லடா இது நம்ம தோப்பு. அப்பா இங்கதான் இருப்பாங்க. வா ரெண்டு இளநீர் சாப்பிட்டுப் போகலாம். சும்மா கற்கண்டு மாதிரி இனிக்கும்" என்றவாறே காரை விட்டு இறங்கினான்.

"இல்லடா எனக்கு வேண்டாம். நீ போய் குடிச்சிட்டு வாடா"

"ஏன்டா?"

"இல்ல அப்பாவுக்கு நான் வர்றது தெரியுமா?"

"ஆமா! நேத்தே போன் பண்ணிச் சொல்லிட்டேன். ஏன் கேட்கிற?"

"எ... எல்லாத்தையும் சொல்லிட்டியா?" தவிப்பாய்க் கேட்டான் ரவி.

"சேச்சே! என்னடா நீ. இத்தனை வருஷம் பழகியும் உன்னைப் புரிந்துகொண்டது இவ்வளவு தானா? அதை எப்படிச் சொல்வேன். ஒன்றும் சொல்லவில்லை."

"அப்போ நான் இங்கே ஏன் வந்தேன் என்று கேட்பார்களே?"

"ஆமான்டா. அதுக்குத்தான் என் நண்பன் நம்ம ஊருக்கு வந்து விவசாயத்தைப் பத்தியும் கிராமத்து மக்களோட வாழ்க்கை முறையையும் ஆராய்ச்சி பண்ணப் போறான். கொஞ்ச நாள் நம்ம வீட்டுலதான் தங்குவான். நானும் கூட இருந்து ஊரைச் சுத்திக்காட்டப் போறேன்னு சொல்லியிருக்கேன்."

"அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?"

"என்ன சொன்னாங்களா? அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ரொம்ப சந்தோஷம். மாசத்தில ரெண்டே நாள் மட்டும் அவங்ககூட இருக்கிற புள்ள கொஞ்சநாள் இருக்கப் போறான்ற சந்தோஷம். அதுவும் புள்ளையோட சிநேகிதன் கூட வர்றானாம். நம்ம ஊரைப்பத்தி ஏதோ ஆராய்ச்சி செய்கிறானாம்னு ஊரெல்லாம் சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

"உண்மையாகவா சந்தோஷ்? அப்போ என்கிட்ட எதுவும் கேட்கமாட்டாங்களே. தர்ம சங்கடமா எதுவும் சொல்லிட மாட்டாங்களே."

"என்னடா நீ. இந்த மாதிரி நீ டென்ஷனாகக் கூடாதுன்னு தானே நம்ம வேலையெல்லாம் ஒதுக்கி வெச்சிட்டு உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன். இங்க வந்தும் ஏன் பதட்டப்படுகிறாய்? நீ எதையும் நினைச்சு வருத்திக்காதே. அப்புறம் உங்க அம்மாவுக்கு நான் கொடுத்த வாக்கு என்னாவது?"

அம்மா என்றதும் ரவியின் முகம் வாடியது. "அம்மா பாவம்டா. இதுவரை நான் அம்மாவைவிட்டுப் பிரிஞ்சதே இல்லை. புறப்படும்போது அழுதுவிட்டார்கள் பாவம் அம்மா" கண்கலங்கியவனை தோளில் தட்டிக் கொடுத்தான்.



"பீல் பண்ணாதேடா. இது நிரந்தரமான பிரிவில்லப்பா. கொஞ்ச நாள்ல எல்லாம் சரியாகிடும். நீ பழைய மாதிரி ஜம்முன்னு மாறியதும் உன் அம்மா முன்னால கொண்டு போய் நிறுத்திடுறேன். சரியா. உனக்கு எப்பவெல்லாம் தோணுதோ. அப்ப போன்ல பேசிக்கோ. செல்போன் ஃப்ரீயரா கிடைக்காட்டி வீட்டுலயும் போன் இருக்கு. அதுல பேசிக்கலாம். முதல்ல மத்ததெல்லாம் மறந்திடு. இப்பத் தான் புதுசா பிறந்திருக்கிறதா நினைச்சுக்கோ. வா வா முதல்ல கீழே இறங்கு." கார்க் கதவைத் திறந்துவிட்டான்.

தயக்கமாகவே இறங்கினான் ரவி. சுற்றுப்புறம் அமைதியாக இருக்க தோட்டத்தில் பம்பு செட் தண்ணீர் விழும் சத்தம் தெளிவாகக் கேட்டது. நடுநடுவே "தொம் தொம்" என்ற ஓசை கேட்க சந்தோஷை ஏறிட்டான்.

"தேங்காய் பறிச்சுப் போடுறாங்கடா. அது விழுற சத்தம் தான்"

"ஓஹோ. சரிடா. நீ முன்னே போ. நான் டாய்லெட் போயிட்டு வர்றேன்."

"சரிடா ரொம்ப தூரம் போயிடாதே. இங்க யாரும் சொல்லமாட்டாங்க. அப்படி ஓரமா போ. நான் போயி அப்பாகிட்ட பேசிட்டு இருக்கேன் வா" என்றவாறு மரத்தால் ஆன பெரிய கதவைத் திறந்துகொண்டு சந்தோஷ் உள்ளே செல்ல ரவி சுற்றும்முற்றும் பார்த்துக்கொண்டே ஒதுங்கினான்.

அங்கே ஒரு பெண் அமர்ந்து ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்க விலகி நடந்தான். ஏர்

கலப்பையோடு நாலைந்து விவசாயிகள் கடந்து போயினர். உழைத்து உரமேறிய உடம்பு. வயதானவர்களாக இருந்தாலும் நடையில் கம்பீரம் தெரிந்தது. துளியும் தள்ளாட்டம் இல்லை. சற்று தூரம் சென்றதும் வயல்வெளி வந்தது.

தூக்கிச் செருகிய புடவையோடு பெண்கள் நடவு செய்து கொண்டிருக்க மற்றொரு புறம் ஆண்கள் நிலத்தை உழுது கொண்டிருந்தனர். வாய்க்காலில் நீர் சலசலத்து ஓடிக் கொண்டிருக்க, வரப்பின் ஓரங்களில் பெரிய பெரிய பொந்துகள், லேசாய் எட்டிப்பார்த்தான் ரவி. கொழுத்த நண்டுகள் தங்கள் பருத்த உடம்போடும் விரித்த கால்களோடும் தெரிய பயந்து பின் வாங்கினான்.

தோட்டக் காடுகளில் வேலை செய்து கொண்டிருந்த பெண்களில் ஒரு வயதான பெண்மணி அருமையான நாட்டுப்புறப்பாடலை மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருக்க மற்ற பெண்கள் தன்னானே தானேனன்னே என இசையமைக்க இனிமையாய் இருந்தது.

எந்த இசையமைப்பும் இல்லாத இனிமையான பாடல் நின்று கேட்டான் ரவி, "பூவோடு வருவேன்னு சொன்ன ராசா. இந்த பூவையை மறந்து சென்றதேனோ நீ போன வழிதேடி நானும் என்று வருவேனோ. என் ராசா உன்நடையழகு பார்த்த விழி பூத்துப் போச்சே" லேசான நடுக்கத்தோடு ஒலித்த குரல் நாடி நரம்பை சிலிர்க்க வைத்தது. பாடலின் குரலில் லேசான சோகம் இழை யோடியது. பாடலைக் கேட்டு அசையாமல் நின்றான்.

"யேய் யாருப்பா அது? புதுசா இருக்க. யாரு வீட்டுக்கு வந்துருக்கீய?"



முண்டாசு அணிந்த ஒருவர் கேட்கச் சட்டெனக் கலைந்தான் ரவி.

"நான் எம் பேர் ரவி. என் பிரெண்ட் சந்தோஷ் கூட வந்தேன்."

"அட! நம்ம தர்மகர்த்தா வீட்டுக்கு வந்த புள்ளையா? நீங்கதான் நம்மூரப் பத்தி ஆராய்ச்சி பண்ண வந்தீகளா?" அவர் ஆவலாய்க் கேட்க லேசாய் சிரித்தான் ரவி.

"யேய் பாருங்கப்பா பட்டணத்துப் புள்ளையா இருந்தாலும் அடக்கமான புள்ளையாத்தான் தெரியுது. சாப்பாட்டு நேரமாகப்போகுதே தம்பி! கம்பங்கஞ்சி குடிக்கிறீகளா?" பரிவாய்க் கேட்டார்.

"இல்லங்கய்யா. ரொம்ப தேங்ஸ் கேட்டதற்கு. நான் சும்மா தோட்டத்தைச் சுத்திப் பார்க்க வந்தேன். நீங்க வேலையைப் பாருங்க. நான் கிளம்புறேன்" என்றவாறு விலகி நடந்தான்.

இந்த மனிதர்களுக்குத்தான் எத்தனை வெள்ளை மனம். யாரென்று தெரியாவிட்டாலும் கூட அன்பாய் உபசரிக்கும் தன்மை, பரிவு, உறவினர்களின் உறவுகளையும் தங்கள் உறவாக எண்ணும் தன்மை. ஆச்சர்யம்தான் இதமான நினைவுகளோடு ஆற்றங்கரை அருகே வந்திருந்தான். பரந்து விரிந்த ஆறு. அமைதியாய் ஓடிக் கொண்டிருக்கக் கரையோரமாய் சிலர் அமர்ந்து துவை கல்லில் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தனர்.

ஆற்றின் இருமருங்கிலும் வரிசையாய் பெரிய பெரிய ஆலமரங்கள் அடர்ந்து விரிந்து தங்கள் விழுதுகளைப்

பரப்பிக்கொண்டு நின்றன. மரங்களின் நிழல் தந்த குளிர்ச்சியும், காற்றின் சிலுசிலுப்பும் ஏதோ நந்தவனத்திற்குள் நுழைந்துவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. குளித்துக் கொண்டும் துவைத்துக்கொண்டும் இருந்த பெண்களின் அருகே செல்லாமல் கொஞ்சம் தூரமாகவே பொடிநடையாக நடந்து கொண்டிருந்தான்.

பள்ளி செல்லாத குழந்தைகள் ஆலம் விழுதுகளைப் பற்றிக்கொண்டு ஊஞ்சலாட அதை நின்று ரசித்தான். அப்போது தான் வீசிய இதமான காற்றில் மிதந்து வந்தது ஒரு இனிய ராகம். மெலிதான இனிமையான குரல். சட்டெனக் காதைக் கூர்மையாக்கினான் ரவி. "செந்தூரப் பூவே! செந்தூரப்பூவே! ஜில்லென்ற காற்றே! என் மன்னன் எங்கே, என் மன்னன் எங்கே நீ கொஞ்சம் சொல்வாயோ" அப்படியே ஜானகி அம்மாவின் குரலில் ஒலித்த பாடலில் தன்னை மறந்து சுற்றும் முற்றும் தேடினான்.

துணி துவைக்கும் பெண்கள் தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருக்க, குரல் வந்த திசையைத் தேடி நகர்ந்தான். பாடலின் ஓசை கொஞ்சம் சத்தமாக வர அங்கு வேகமாய் ஓடினான். சற்று தூரத்தில் அந்தப் பெண் தெரிந்தாள். பெரிய ஆலமரத்தின் தடித்த கிளையில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து பாட்டுப் பாடிக் கொண்டே ஆடிக்கொண்டிருந்தாள்.

அடர்ந்து விரிந்து இடைவரை நீண்டிருந்த கருங் கூந்தலும் காதோரமாய் இருந்த ஒற்றை சிவப்பு ரோஜாவும் தான் முதலில் தெரிந்தது. மெதுவாய் அடியெடுத்து அந்த மரத்தின் அருகே சென்று லேசாய் மறைந்துகொண்டு



பார்த்தான் ரவி. அப்போது முகம் தெரியவில்லை. காதோரமாய் ஆடிய முத்து ஜிமிக்கியும் ஊஞ்சல் கயிறைப் பற்றியிருந்த மென்கரமும் அதில் கலகலத்த வெள்ளைநிறக் கண்ணாடி வளையலும் தான் தெரிந்தது.

கறுப்பில வெண்புள்ளிகள் இட்ட பாவாடை சட்டையும் வெள்ளைநிற தாவணியும் தெரிந்தது. ஊஞ்சலில் வேகமாய் அவள் ஆட அதற்கேற்ப அவள் கூந்தலும் காற்றில் பறந்த தாவணியும் கருப்பு வெள்ளைக் கொடிகளாய் அசைந்து அவள் பின்னே ஓடியது ரம்யமாய் இருந்தது. முகம் தெரியாவிட்டாலும் அந்தக் குரலில் லயித்து நின்றான் ரவி.

"வண்ணப்பூவே! தென்றல்காற்றே என்னைத் தேடி தரம் வருமா?"

"வரும் வரும். நாம இப்ப வீட்டுக்குப் போகலன்னா அம்மாகிட்ட இருந்து விளக்குமாறுதான் வரும்..." என்ற குரலில் பாடல் நின்றுவிடக் குரல் வந்த திசையை நோக்கினான் ரவி. பதினெட்டு வயதிருக்கும் ஒரு சிறுபெண் கையில் பிழிந்த ஈரத் துணிகளோடு நின்றிருந்தாள். தலைக்குக் குளித்து முடியை உலர விட்டிருந்தாள். சிறிய அழகான வட்டமுகம்.

"ஏன்டி இவ்ளோ சீக்கிரமாக் குளிச்சு முடிச்சே. பொறுமையா குளிக்க வேண்டியது தானே? இன்னும் ஒரு அரைமணி நேரம் ஊஞ்சலாடியிருப்பேனில்ல. காக்கா குளியல் போட்டுட்டு வந்தியா. போ, போய் நல்லா குளி" பாடலைப் போலவே இனிமையான குரல் ஒலித்தது.

அந்தச் சின்னப் பெண் இடுப்பில் கைவைத்து முறைத்தாள். "நான் காக்கா குளியல் போட்டுட்டேனா? எந்த

ஊர்ல காக்கா ரெண்டு மணி நேரம் குளிக்குது. நாம வந்து ரெண்டு மணி நேரம் தாண்டியாச்சு. இறங்கிவா அப்படி என்னதான் பாடுவியோ நேரம் காலம் தெரியாம? விடாம ஊஞ்சல் ஆடுறியே. கால் கையெல்லாம் வலிக்கலியா உனக்கு?" சலிப்பாய்க் கேட்டாள்.

"இப்படி ஊஞ்சல் ஆடினாத்தான் நல்லா வளர முடியும் மீனா. வா நீயும் கொஞ்ச நேரம் ஆடு" என்றவாறு இறங்கினாள் அவள்.

"எப்படியும் அம்மாகிட்ட அடிவாங்கணும்னு முடிவு பண்ணிட்டியா. அண்ணன் வந்திருக்கும். நீ வர்றியா நான் போகட்டுமா? நான் போறேன்" என்றவாறு அந்த மீனா திரும்பி நடந்து போக, இவள் பதட்டமாய், "யேய்! விட்டுட்டு போயிடாதேடி. துணியெல்லாம் எடுத்திட்டு வர்றேன்" என்றவாறு திரும்பி ரவியை நோக்கி ஓடி வந்தாள்.

ஆளை அசத்தும் அழகு முகம். கூர்மையான மூக்கில் கடுகுபோல் ஒற்றை வெள்ளைக்கல் பதித்த மூக்குத்தி மின்னியது. கருவண்டாய் அலைந்த விழிகள், சிறிய நெற்றி, சிரித்த உதடுகள். அப்போதுதான் குளித்து முடித்திருந்த போதும் பளீரிட்ட அழகு. பவுடர் கண்மை என எதுவும் இல்லாமலே எளிய அழகு. ஜல் ஜல்லென கொலுசு சப்திக்கத் தன்னை நெருங்கி வந்த பெண்ணை பார்வையை விலக்காமல் ரவி பார்த்துக்கொண்டே நிற்க, உற்சாகமாய் ஓடிவந்தவள் திடுக்கென நின்றாள். கண்களில் சட்டென பயம் படர்ந்துவிட அவனைக் கண்டு மிரண்டு போனாள்.



## 2

துள்ளித் துள்ளிப் போகும் பெண்ணே
சொல்லிக் கொண்டு போனால் என்ன
கன்னி உந்தன் பேர் என்ன - வெள்ளிக்
கொலுசு போகும் திசையில்
பாவி நெஞ்சம் போவதென்ன!

ரவியிடம் துளியும் அசைவின்றிப் போகவே அவள் அசந்துதான் போனாள். என்ன மனிதன் இவன்? இப்படியா பார்ப்பான் கொஞ்சமும் விவஸ்தையில்லாமல்? பொறுக்கி. சட்டென முகம் கருத்துவிட அவன் கைபற்றியிருந்த கிளையில் தொங்கிக் கொண்டிருந்த தனது துணிகளைப் பரபரவென எடுத்துக்கொண்டு ஓடினாள். அவளது பதட்டமான ஓட்டமும் கொலுசின் ஓசையும்தான் ரவியை நினைவிற்குக் கொண்டு வந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்தவன் திரும்பிப் பார்க்கும் முன் அவள் சற்று தூரம் போய்விட்டிருந்தாள். அவ்வப்போது திரும்பி முறைத்துக் கொண்டும் திட்டிக் கொண்டும் அவள் போக, ரவிக்கு சிரிப்புத்தான் வந்தது. தன்னையே கடிந்து கொண்டு திரும்பியவன் நின்றான். காலடியில் கிடந்த பொருளை குனிந்து எடுத்தான். வெள்ளைநிற கண்ணாடி வளையல் துண்டுகள்.

அந்தப் பெண் துணிகளை எடுக்கும் போது மரத்தில் பட்டு வளையல் உடைந்திருக்க வேண்டும். வளையல் துண்டைப் பார்த்து விட்டு அவளைப் பார்த்தான். அவள் வெகுதூரம் சென்றிருக்க வெள்ளை நிற தாவணி மட்டும்

லேசாய்த் தெரிந்தது. சின்னச் சிரிப்போடு அந்த வளை துண்டுகளைச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு வழியே திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

பாதித்தூரம் வரும்போதே எதிரே பதட்டத்தோ வந்தான் சந்தோஷ். ரவியைக் கண்டதும் ஒரு நிம் மூச்சோடு, "எங்கடா போன. கொஞ்ச நேரத்தில பய போயிட்டேன். நீ ஏன் இங்க வந்தே?" மூச்சு வா கேட்டான். அவனைத் தோளோடு அணைத்துக்கொ "ஸாரிடா! உங்க ஊர் தோட்டம், வயல் எல்லாம் பார்த் வந்தேனா. அப்படியே திரும்பிப் பார்த்தா ஆறு வந் அதான் நேரம் போனதே தெரியாம இருந்திட்டேன். ஸாரி

"நல்லா சுத்தின போ. நான் அங்கெல்லாம் தே பார்த்துட்டு நீ ஊருக்கே கிளம்பிப் போயிட்டியோ பயந்திட்டேன். சரி, வா. அப்பா கையில இளநீ நின்னுட்டு இருந்தாங்க. வீட்லயும் விருந்து ரெடி விட்டதாம். சீக்கிரமாப் போகணும் வா." என்றவாறே மு சந்தோஷ் நடக்க, அவனைப் பின் தொடர்ந்தான் ரவி.

வயல் அருகே வரும்போது அதே நாட்டுப்புறப் பா இன்னும் முடியாமல் கேட்டுக் கொண்டிருந்தது. "சாதி கேட்குதய்யா உன் மவராசன் வரலியோன்னு நானும் காத்திருக்கேன் என் ஆயுசும் போகுதய்யா" ரவி நின் நெஞ்சை உருக்கும் பாடல் எத்தனையோ சோகங்க சொல்லாமல் சொல்லும் இசை. கேட்கும் யா உருகவைக்கும் வார்த்தைகள்.

'சந்தோஷ்! இந்தப் பாட்டைக் கேட்டியா? அப்ப உடம்பெல்லாம் என்னவோ பண்ற மாதிரி இல்ல. நா



கும் போதே இந்தப் பாட்டுக் கேட்டுதுடா யாரு றாங்க. என்ன இனிமையான ராகம் பாரன்."

சந்தோஷ் நின்றான். வயல்காட்டில் நின்று வேலை து கொண்டிருந்த ஒரு முதிய பெண்மணியைக் டினான். "அதோ நீலக் கலர்ல புடவை கட்டியிருக்காங்க த்தியா அவங்க தான் செல்லம்மா பாட்டி. பாட்டிக்கு போ எழுபது வயசாகுது. பாட்டிக்கு ரொம்ப இனிமையான ல். ரொம்ப நல்லாப் பாடுவாங்க. இப்போ பாடுறாங்களே த பாட்டை எனக்கு விவரம் தெரிஞ்சதுல இருந்தே றாங்க."

"ஏன்டா! இந்தப் பாட்டுல ஏதோ சோகம் தெரியுதே"

"நிச்சயமா. அது ஒரு பெரிய கதை. சோகமானதும் பாட்டிக்கு ஒரு முறைப் பையன் இருந்தாராம். பாட்டியும் ரும் அம்பிகாபதி அமராவதி மாதிரி இருந்தாங்களாம். க்காரங்க ஒரு ஊர்க்காரங்க. அதனால அவங்க புக்கு எந்தத் தடையும் இல்ல. ஒரு நல்ல நாள் த்துக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்திருக்காங்க. ரு வழக்கப்படித் தாலியும் முகூர்த்தப் புடவையும் பிள்ளைதான் வாங்கணும். அதனால மாப்பிள்ளை டவுனுக்கு சைக்கிளில போனாராம். கல்யாணத்துக்கு யான பொருளெல்லாம் வாங்கிட்டு வரும்போது ஒரே யாம்.

மழையும் புயல் காத்துமா இருந்ததாம். உடனே அவரு வீட்டு சுவரோரம் ஒதுங்கி நிற்கும் போது இடிவிழுந்து டாரு."

ரவி அதிர்ந்து நிற்க, சந்தோஷின் மனமும் கலங்கிப் து. ஒரு நிமிட இடைவெளிவிட்டு, "பாட்டி புதுப்

பெண்ணா தயாராகிக் காத்திட்டு இருக்கும் போது ஊர்க்காரங்க வந்து சொன்னாங்களாம். பாட்டியை அழைச்சிட்டு போனாங்களாம். கருகின உடலைப் பார்த்திட்டு பாட்டி நம்பவே இல்லையாம். இல்லே! என் வீட்டுக்காரரு பூவும் தாலியும் வாங்கிட்டு வருவார். என்னைத் தேடி வருவார்னு அடிச்சுச் சொன்னாங்களாம்.

அப்போ இருந்து இப்ப வரைக்கும் கிட்டத்தட்ட அம்பது வருடத்துக்கும் மேலே இதே பாட்டை பாடிட்டு மாப்பிள்ளை வருவாருன்னு எதிர்பார்த்திட்டே இருக்காங்க" பெருமூச்சோடு முடித்தான் சந்தோஷ்.

கண்கள் கலங்கிவிட, "சந்தோஷ்! பாட்டிக்கு பாட்டிக்கு மன நலம் பாதிக்கப்பட்டு விட்டதா?" என்றான் ரவி.

"ஒரு சிலர் அப்படியும் சொல்வாங்க. ஆனா எனக்கு அதில் உடன்பாடு கிடையாது. பாட்டியோட பெத்தவங்க இறந்த போது அழுதாங்களாம். யாருக்கும் உடம்பு சரியில்லன்னா ஓடிவந்து மருந்து கொடுப்பாங்க. துணிமணி எல்லாம் சுத்தமா துவைச்சு நீட்டா கட்டுவாங்க. எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்முதலா இதோ இப்படித் தோட்ட வேலை செய்து தானே சமைச்சு சாப்பிடுறாங்க. வீடு அவ்ளோ சுத்தமா இருக்கும். மனநலம் சரியில்லேன்னா இதெல்லாம் சாத்தியமாகுமா? என்னைப் பொறுத்த வரைக்கும் பாட்டிக்கு ஒரு நோயும் கிடையாது."

"அப்போ எப்படி செத்துப்போன ஒருத்தருக்காக இத்தனை வருஷம் காத்திருக்காங்க."

"அதுதான்டா? உண்மையான ஆழமான நேசம் தன்னை விரும்பியவர் எப்படியும் தன்னைவிட்டுப் போகமாட்டார் என்ற நம்பிக்கை. தன் வாழ்நாள் முழுக்கத் தன் மனம் கவர்ந்தவரையே எண்ணி வாழும் உறுதி. இப்படி எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனா பாட்டியோட நேசம் அழியாத காதல் காவியம்."



"உண்மைதான். என்னை அந்தப் பாட்டிகிட்ட கூட்டிட்டு போறியா அவங்ககிட்ட பேசணும் போல இருக்கு."

"பாட்டி வேலையா இருக்காங்க. அதோட வெயிலும் ஏறுது. வா மொதல்ல வீட்டுக்குப் போகலாம். பாட்டியைச் சாயந்திரமோ, நாளைக்கோ பார்த்துக்கலாம் வா" என்றவாறு நண்பனின் கைபற்றி தென்னந்தோப்பிற்குள் அழைத்துச் சென்றான்.

சந்தோஷின் அப்பா முத்துக்குமாரசாமி வாய் நிறைய சிரித்து அன்போடு வரவேற்று இருவருக்கும் இளநீரைக் கொடுத்தார். "எங்கே தம்பி போயிட்டீங்க. வீட்டுக்கு வாங்க. அம்மா! மீன் குழம்பு பண்ணி வெச்சிட்டு உங்க கார் எப்போ வரும்னு வாசல்லயே காத்து நிற்கறா."

"இல்லப்பா! அப்படியே சுத்திப் பார்த்திட்டு வந்தேன்" என்றான் ரவி.

"முதல்ல வீட்டுல போயி சாப்பிட்டுட்டு வெயில் தாழ சுத்திப் பாருங்கய்யா. வீட்டுக்குப் போங்க."

"நீங்களும் வாங்கப்பா கார்லயே போயிடலாம்."

"இல்லய்யா! இப்போ தாமு வண்டி வரும். தேங்காயை வண்டி லோடு ஏத்திவிட்டுட்டு அப்பா வர்றேன். நீங்க போங்கய்யா" என கார் வரை வந்து வழியனுப்பினார்.

காரில் ஏறியதும் ஆற்றோரமாய் ஊஞ்சலாடிய பெண் நினைவு வர புன்னகையோடு அமைதியாக இருந்தான் ரவி.

அவன் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "என்னடா முகமெல்லாம் பிரகாசமா இருக்கு. என்ன விசயம்?" சிரித்தவாறே கேட்டான் சந்தோஷ்.

"ஒண்ணுமில்லையே! எப்பவும் போலத்தான் இருக்கேன்" சமாளித்தான் ரவி.

"டேய்! பொய் சொல்ற. உனக்கு பொய்யெல்லாம் பேசவராது. ஒழுங்கா உண்மையைச் சொல்லு. இல்லன்னா காரை எடுக்கமாட்டேன்."

"அதான் ஒண்ணுமில்லன்னு சொன்னேனே."

"அதான் பொய் சொல்லாதே உண்மையைச் சொல்லுன்னு சொன்னேனே." சந்தோசும் ரவியைப் போலவே பேச சிரித்தான் ரவி.

"விடமாட்டியே! அது ஒண்ணும் பெரிய ரகசியமில்லை. ஆத்தோரமா நடந்து போயிட்டு இருந்தேனா அப்போ ஒரு அருமையான பாட்டு காதில விழுந்ததுடா"

"செல்லம்மாப் பாட்டியோட பாட்டைச் சொல்றியா?"

"இல்லடா. இது சினிமா பாட்டு. ஸ்ரீதேவி பாடின பாட்டு செந்தூரப்பூவேன்னு"

"சினிமா பாட்டா? யார் பாடினா பார்த்தியா?" ஆர்வமாய்க் கேட்டான்.

"ம்ப்ச். இல்லடா. முகம் தெரியல. நல்லா கருகருன்னு கூந்தல். காதோரமா ஒற்றை ரோஜா. வெள்ளை நிற தாவணி. முடியை விரிச்சுப் போட்டுட்டு அது காற்றில் ஆடின அழகு அற்புதமா இருந்ததுடா."



"ஏய் நிறுத்து. அது எதுவும் பேய் பிசாசா இருக்கப் போகுது. கால் இருந்ததா பார்த்தியா. இதுக்குத்தான் அத்தியான நேரம் கண்ட இடத்துக்கும் போகக்கூடாது"

"என்னடா கிண்டலா? அந்தப் பொண்ணு கூட வந்த பொண்ணுகிட்ட பேசினாளே. கால்ல ஜல்ஜல்னு கொலுசு போட்டுட்டு என்கிட்ட வந்தாளே"

"என்ன உன்கிட்ட வந்தாளா? உன்னோட பேசினாளோ?"

"இல்லடா! நான் ஒரு மரத்துக்கு பின்னால நின்னுட்டு இருந்தேன். அவ துணியைக் காயப் போட்டிருந்தா. அதை எடுக்க வந்திருக்கா. நான் அப்படியே அசந்து வாய் பேச்சில்லாம நின்னேனா என்னைப் பத்தி என்ன நினைச்சாளோ. திட்டிட்டே போனா. நானும் சுதாரிக்கிறதுக்கு முன்னால ஓடிப் போயிட்டா."

"இவ்ளோ நடந்திருக்கா. ஓஹோ. சரி. ஆள் எப்படி இருந்தா? முகத்தைப் பார்த்தியா?"

"அம்சமான அழகுடா. ஆடம்பரம் இல்லாத எளிமையான அழகு. ரொம்ப அழகுதான்டா."

"அப்போ உனக்குப் பிடிச்சிருக்கா?" சந்தோஷ் உற்சாகமாகக் கேட்க, அதுவரை புன்னகையோடு ஜொலித்த ரவியின் முகம் மாறியது. சட்டென இருண்டு போனது.

"என்னடா? நான் கேட்டது காதுல விழலையா?"

"டேய்! நான் அந்தப் பெண்ணோட குரலையும் நடையும் தான் ரசிச்சேன். நீயா எதையாவது கற்பனை பண்ணிக்காதே."

"இதை நான் நம்பணுமா? காதோர ஒற்றை ரோஸ் வரை நினைப்பு வெச்சிருக்க. அந்தப் பொண்ணு போட்டிருந்த டிரெஸ் ஞாபகம் இருக்கு. ஆனா நீ பாட்டை மட்டும்தான் ரசிச்சே. ம்? ஏன்டா எங்கிட்டயே மறைக்கிற?"

"விளையாடாதே சந்தோஷ். இந்தப் பேச்செல்லாம் தேவையா?"

"ஏன்டா? இதிலென்ன தப்பு. பிடிச்சிருந்தா பிடிச்சிருக்குன்னு சொல்லு. இந்த ஊரு பொண்ணுன்னா நமக்குத் தெரிஞ்ச பொண்ணாத்தான் இருக்கும். உனக்கு ஓ.கே.ன்னா அப்பாகிட்டச் சொல்லி பேசி முடிச்சிடலாம்."

"சந்தோஷ்" ரவியின் குரல் ஓங்கி ஒலித்தது. "இந்த மாதிரிப் பைத்தியக்காரத் தனமான பேச்சையெல்லாம் விடு. முதல்ல காரை எடு. இந்த மாதிரி எதுவும் பேசாம இருந்தால் உன் வீட்டிற்கு வருகிறேன். இல்லையென்றால் காரை சென்னைக்குத் திருப்பு" சொல்லிவிட்டு இருக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

சில நொடிகள் அமைதியாக இருந்த சந்தோஷ் பெருமூச்சுடன் நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டான். "ஸாரிடா! இனி இப்படி எதுவும் பேசமாட்டேன். தயவு செய்து அப்செட்டா ஆகிடாதே. முதல் முறையா வீட்டுக்குப் போறோம். கொஞ்சம் சிரிச்சமாதிரி வாடா. நான் ஏதோ ஜாலிக்காக அப்படிப் பேசிட்டேன். ஸாரிடா."

ரவி கண்களைத் திறந்தான். "இட்ஸ் ஓ.கே. என்னோட நிலை தெரிஞ்சும் இப்படிப் பேசறது என்னை கேலி செய்யுற மாதிரி இருக்குடா ரொம்பக் கஷ்டமா இருக்குடா." ரவியின் குரலில் வலி தெரிந்தது.



"மன்னிச்சிடுடா. இனிமே இப்படிப் பேசமாட்டேன். உன் மனசு புண்படும்படியா எதுவும் சொல்லமாட்டேன். நீ மறக்க நினைச்சதை மறக்கத்தானே இங்கே கூட்டிட்டு வந்தேன். நானே இப்படிப் பேசிட்டேன்."

"சரி. விடு. வீட்டுக்குப் போகலாம். உங்க அம்மா தேடிட்டு இருப்பாங்களே. காரை எடு."

நிம்மதியான புன்னகையோடு சந்தோஷ் காரைக் கிளப்ப, எதிரே வைக்கோல் ஏற்றிக் கொண்டு மாட்டுவண்டி வந்தது. "சந்தோஷ்! அந்த வண்டி போகட்டும். பாதை குறுகலா இருக்குதே. அது போனப்புறம் காரை எடுக்கலாம்" ரவி சொல்ல, "ஓ.கே." என்றவாறு மாட்டுவண்டி தங்களைக் கடந்து செல்லக் காத்து இருந்தனர்.

"காட்டோரம் வேலை செய்து கஞ்சி குடிக்க வீட்டுக்குப் போறேன். கூட்டிப் போகும் காளைகளே பள்ளம் பார்த்துச் செல்லுங்களேன்." வண்டிக்காரன் பாடிக்கொண்டே கடந்து போக ரவி ஆச்சர்யமாய் சந்தோஷை ஏறிட்டான்.

"என்ன சந்தோஷ் இது? இந்த ஊர்ல எல்லாருமே பெரிய பாடகர்களா இருப்பாங்க போலிருக்கே. பாட்டுத் தெரியாத ஆளே கிடையாதா?"

"உண்மைதான்டா. குழந்தை பிறந்தா அதைத் தூங்க வெக்க தாலாட்டு. அப்புறம் அது வளர்ந்தா, ஆளாகின்னா அதுக்கும் பாட்டு. கல்யாணம் பண்ணிட்டு போகறதுக்கு, சீமந்தம் பண்றதுக்கும் பாட்டு. பொங்கல், தீபாவளிக் கொண்டாட்டம்னாலும் பாட்டு. ஏர் உழவு செய்யும் போதும், நாற்று நடும்போதும், அறுவடை செய்யும் போதும்

பாட்டு. திருவிழாவில் உறியடிக்கிறதுக்கும் முளைப்பாரி வெக்கனும்னா பாட்டு. கடைசியா உலகத்தை விட்டுப் போகும் போது ஒப்பாரிப் பாட்டுன்னு பிறந்தது முதல் இறப்பது வரை எல்லாத்துக்கும் பாட்டுத்தான் இங்கே."

"அடேயப்பா! இதெல்லாம் யார்கிட்ட கத்துப்பாங்க?"

"ஏன்டா இதெல்லாம் குரு வெச்சு கத்துக்கிட்டு கச்சேரியா பண்ணப் போறாங்க. ஏதோ வாய்க்கு வந்ததைப் பாடிக்குவாங்க. இப்ப வண்டி ஓட்டிட்டு போனானே அவன் என்ன பாடினான்? வேலை முடிச்சிட்டுச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போறேன்னான். அதையே ராகத்தோட சொன்னதும் பாட்டா மாறிடுச்சு. எல்லாம் அப்படித்தான் அவங்களுக்குத் தோணினதைப் பாடுவாங்க. பாட்டு எழுதி இசையமைச்சி மெட்டுகட்டிப் பாடறதில்லை."

"ஆனாலும் கேட்க அருமையா இருக்குதுடா"

"ஆமா! இனிமையாகவும் இருக்கும். வேலை செய்யும் போதும், தொலை தூரம் நடக்கும் போதும் களைப்புத் தெரியாம இருக்கப் பாடுவாங்களாம். அப்புறம் பாட்டு இல்லாம எந்த வேலையும் இல்லாமப் போச்சு. இப்போ டி.வி., ரேடியோன்னு நுழைஞ்சதும் எங்கே பார்த்தாலும் சினிமாப் பாட்டுதான் கேட்குது. ஒரு முழம் வளர பிள்ளைங்க கூட எல்லாப் புதுப்பாட்டையும் மனப் பாடம் பண்ணிட்டு அலையுதுங்க" சலித்துக்கொண்டே காரை எடுத்துப் பாதையில் செலுத்தினான் சந்தோஷ்.

ரவிக்கு தானாக அந்தப் பெண்ணின் நினைவு வந்தது. "என்ன பாட்டாக இருந்தால் என்ன? என்ன



அருமையான குரல்... இதமான ராகம்... அந்தப் பெண்ணின் பாடலைக் கேட்டு நான் மட்டுமா மயங்கினேன்? வீசிய காற்று கூடத்தான் மயங்கியது. ஆற்றின் மீன்கள் கூட துள்ளிப் பாய்ந்ததே. கரையோரம் வளை தோண்டிக் கொண்டிருந்த நண்டுகள் மெய் மறந்திருக்கும். இந்த ஊரைவிட்டுப் போகும் முன் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பாராட்ட வேண்டும். சினிமாவில் பாடும் எண்ணம் இருக்கிறதா என்று கேட்க வேண்டும்? அப்படி எண்ணம் இருந்தால் நம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும். இன்னொரு ஜானகியோ, சுசீலாவோ உருவாகட்டுமே" அந்தப் பெண்ணின் நினைவில் உழன்றவன் கார் நின்றதும் தான் சுய நினைவிற்கு வந்தான்.

அசட்டுச் சிரிப்போடு கதவைத் திறந்து இறங்கியவன், "நீ வருவாய் என நானிருந்தேன். ஏன் மறந்தாய் என நானறியேன்" என்ற இனிய இசையில் அப்படியே நின்றான். காலையில் கேட்ட அதே இனிய குரல்.

## 3

தட்டிவிட்டேன் மனக்கதவைத் திறந்து
பார்க்க விரைந்து வா நெஞ்சம்
உந்தன் நெஞ்சம் கொண்ட சஞ்சலங்கள்
மறைய எங்கிருந்தோ இளம் குயிலின்
இன்னிசை கேட்டுக் கண்விழித்தேன்!

"**வா**டா! இது தான் நம்ம வீடு. எப்படி இருக்கு?" சந்தோஷ் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினான் ரவி. பாடல் நின்று போயிருந்தது. பிரமையோ? அந்தப் பெண்ணையே

நினைத்துக் கொண்டு வந்ததால் எனக்கு அப்படிக் கேட்டிருக்குமோ? இப்போது கேட்கவில்லையே!

"என்னடா மலைச்சுப் போய் நின்னுட்டே. வா உள்ளே" நண்பனின் கையைப் பற்றி வீட்டிற்குள் அழைத்துச் சென்றான், திண்ணையில் மூட்டைகளை அடுக்கிக் கொண்டிருந்த ஒரு வேலையாள் அவர்களைக் கண்டதும் அவசரமாய் தலைப்பாகையை அவிழ்த்துவிட்டு, "சின்னய்யா வணக்கமுங்க. நல்லாயிருக்கீங்களா?" என பவ்யமாய்க் கேட்டான்.

"ம். நல்லா இருக்கோம் மாரி. நீ நல்லாயிருக்கியா? சின்னாத்தா புள்ளைங்க எல்லாம் சவுக்கியமா?"

"எல்லாம் சௌக்யம் தாங்க. உள்ளார போங்கய்யா. அம்மா தேடிட்டே இருந்தாக."

"சரி மாரி. கார்ல லக்கேஜ் இருக்கு. கொஞ்சம் எடுத்திட்டு வர்றியா?"

"நீங்க போங்கய்யா. நான் எடுத்திட்டு வர்றேன்," என்றவாறு அவன் காரை நோக்கி விரைய, "ரவி! இது மாரிச்சாமி, நம்ம வீட்ல வேலை செய்யுறவன். ரொம்ப நல்லவன். நல்ல உழைப்பாளி. எள்ளுன்னா எண்ணெய்யா நிற்பான். சரி வா." என்றவாறு வீட்டிற்குள் நுழைந்தான்.

"அம்மா! அண்ணன் வந்தாச்சு," என்றவாறு ஓடி வந்த பெண்ணைக் கண்டதும் ரவி அசந்து போனான். இது ஆற்றங்கரையில் பார்த்த பெண்ணல்லவா? அப்படி யென்றால் அந்தப் பெண்ணும் இங்கேதான் இருக்கிறாளா?



அப்படியென்றால் பாடல் கேட்டது பிரமை இல்லையோ? கண்களை சுழற்றித் தேடினான்.

சந்தோஷ் தன் தங்கையிடம் குரலைத் தழைத்தவாறே, "அந்தப் பிசாசு எங்கே. வீட்ல இல்லையா?" எனக் கேட்டான்.

"வீட்லதான் இருக்கு. நீ வரும் போது பாடிட்டு இருந்ததே காது கேட்கலையா? உன் காரைப் பார்த்ததும் தான் உள்ளே போச்சு" மீனாவும் கிசுகிசுப்பாகவே சொல்ல, ரவிக்கு சிரிப்பு பீறிட்டது.

சந்தோஷ் நல்ல உயரம். மீனா அவன் தோளை எட்டிக் குள்ளமாய் இருக்க. அவன் குனிந்து பேசிய விதம் சிரிப்பை உண்டு பண்ணினாலும் ஒரு விஷயம் உறைக்க ...ன்றது.

இந்தப் பெண் சந்தோஷின் தங்கை என்றால் அந்தப் பெண்ணும் இவன் தங்கையாகத் தானே இருக்கும். நண்பனின் தங்கையைக் கண்டு அவனிடமே அவளைப் பற்றி பேசினோமே குற்ற உணர்வுடன் தலையைக் கவிழ்ந்துகொண்டான் ரவி. ச்சே! எத்தனை பெரிய தவறு செய்துவிட்டேன்.

"டேய் ரவி! இது மீனா. என்னோட தங்கை," என அவன் இயல்பாய் அறிமுகப்படுத்த ரவி தயக்கமாய் ...டான்.

"ஹாய் அண்ணா! நல்லா இருக்கீங்களா?" என மீனா உரிமையோடு பேச தயக்கம் மறந்து சிரித்தான்.

"ம். நல்லா இருக்கேம்மா. நீ படிக்கிறியா?"

"இப்பத்தான் ப்ளஸ் டூ முடிச்சேன். இனிமேத்தான் காலேஜுக்குப் போகணும். வாங்கண்ணே! வந்து உட்காருங்க, அம்மா இப்பத்தான் குளிக்கப் போனாங்க இதோ வந்துட்டாங்களே" அவள் கைகாட்டிய திசையில் பார்த்தான். குளித்து முடிந்து சரியாய் துடைக்காமல் அவசரமாய் புடவையைச் சுற்றிக்கொண்டு வந்தாள் சந்தோஷின் அம்மா ராஜலட்சுமி. முகம் நிறைய அன்பும் புன்னகையுமாய் வந்தவளைக் கண்டதும் தன் தாயே எதிரே வந்து நின்றது போல் உணர்ந்தான் ரவி.

"எய்யா! வாங்க. இவ்ளோ நேரம் உட்கார்ந்து பார்த்திட்டு இப்பத்தான் குளிக்கப் போனேன். உட்காருங்கய்யா. பசியோட இருப்பீங்களே. இருங்க. சாப்பாடு எடுத்திட்டு வர்றேன்." அவசரமாய் திரும்பியவளை நிறுத்தினான், சந்தோஷ்.

"அம்மா! ஒண்ணும் அவசரமில்லம்மா. இப்பத்தான் அப்பாவைப் பார்த்திட்டு இளநீர் சாப்பிட்டு வந்தோம். நீங்க முதல்ல தலையை நல்லாத் துவட்டிட்டு நெத்திக்குப் பொட்டு வையுங்க. நான் ரவியை என் ரூமுக்கு அழைச்சிட்டு போறேன்."

"எய்யா! இந்தப் புள்ள ஏதோ ஆராய்ச்சி செய்ய போகுதாமில்ல. அதனால உங்க அப்பா மெத்தையோட ரூமை ஒழிச்சு வெச்சுருக்காக. இடைஞ்சல் இல்லாம இருக்கணும்னு சொன்னியாமே."

"அட ஆமாம். சரிம்மா. நான் இவனை மாடிக்கு அழைச்சிட்டு போயிட்டு வர்றேன். நீங்க சாப்பாடு எடுத்து வெச்சிட்டுக் கூப்பிடுங்க" என்றவாறு நண்பனை



அழைத்துக்கொண்டு மரப்பலகையால் ஆன படிக்கட்டுகளில் ஏறினான்.

அது பழங்கால ஓட்டு வீடு. ஆனாலும் கம்பீரமாய் நின்றது. பெரிய வீடுதான் என்றாலும் விஸ்தாரமான அறைகள் இருக்கவில்லை. பெரிய ஹால் மட்டுமே. மற்றவை எல்லாம் நடுத்தர அளவில் சிறு சிறு அறைகளாக இருந்தது. காற்று குளுமையாக வீச முற்றத்துப் பூக்களின் மணமும் சேர்ந்தே வந்தது. பெரும்பாலும் தானிய மூட்டைகள், தேங்காய்கள் என அறைகள் நிறைந்தே இருந்தன.

மாடியை அடைந்ததும் பிரமித்துப் போனான் ரவி. மொத்தமாய் ஒரே அறையாய் மேலே ஓடுகளால் வேயப் பட்டிருக்க நான்கு புறமும் இரண்டு இரண்டு ஜன்னல்கள் காற்றையும், வெளிச்சத்தையும் வாரியிறைத்தன. வெளியே எட்டிப் பார்த்தான் ரவி. தூரத்தில் தெரிந்த மலைமுகடுகள் கண்ணமாய், ஆறு, வயல், தோட்டம், தென்னந் தோப்பு என எல்லாமே பசுமையாய் இருந்தன.

மனநிறைவோடு கண்களில் நீர் கசிய தன் நண்பனை நன்றியாய் பார்த்தான் ரவி.

"எப்படிடா இருக்கு ரூம்? உனக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது. பகல்ல வெளியே போகலாம். நைட் நீ இங்க இருந்திடு. நானே உனக்குச் சாப்பாட்டை மேலே எடுத்திட்டு வந்திடுவேன். வேற யாரும் இங்க வரமாட்டாங்க. உன்னைப் பத்தி யாருக்கும் எதுவும் தெரியப் போவதில்லை. இனி எந்த மன உளைச்சலும் இல்லட கலகலப்பா இரு. சரியா இன்னும் ஒரே மாசம்தான் ட்ரீட்மெண்ட்ல எல்லாம்

சரியாகிடும். யாருக்கும் எதுவும் தெரிய வேண்டாம். நீ தைரியமா இரு. என்னடா சொல்றே."

நண்பனைக் கட்டிக்கொண்டான். "தேங்க்ஸ்டா. எனக்கு இப்பவே குணமாகிட்ட மாதிரி இருக்குடா. எனக்கு நம்பிக்கை வந்திடுச்சு. எனக்கு சரியாயிருமில்ல. நானும் எல்லோர் மாதிரியும் நடமாட முடியுமில்ல."

"அதில என்னடா சந்தேகம் உனக்கு. இது ஆரம்ப ஸ்டேஜ்தான்னு டாக்டரே சொல்லிட்டாரே. நீதான் ரொம்ப பயந்துட்டே. மாத்திரை மருந்துலயே சீக்கிரம் குணமாக்கிட லாம்டா. நீதான் அவசரப்பட்டு கல்யாணத்தையே நிறுத்திட்ட பொறுமையா முடிவெடுத்திருக்கலாம்."

"சேச்சே! அந்தப் பொண்ணு எவ்ளோ கனவுகளோட என்னை நம்பி வரும். என்னால் எப்படி... எப்படி..." தொண்டை அடைக்கத் திணறினான் ரவி. சட்டென நண்பனைச் சமாதானம் செய்தான்.

"சரிடா! சரி. போனதைப் பத்தி பேசிப் பயனில்லை. அதெல்லாம் விட்டுடுவோம். எது நடந்ததோ அதை நல்லதாகவே எண்ணிக் கொள்வோம். அதைவிட அருமையான பெண் கிடைப்பாள் உனக்கு."

"நடக்காத காரியத்தைப் பேசாதே சந்தோஷ். எனக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லை. என்னோட சுயநலத் திற்காக ஒரு பெண்ணோட வாழ்க்கையைக் கெடுப்பதா? வேண்டாம்ப்பா. காலம் முழுக்க இப்படியே இருந்து விடுகிறேன். என்னை என் போக்கில் விட்டுடு" ரவி சொல்லிக் கொண்டிருக்கும் போதே கீழே இருந்து அழைப்பு வந்தது.



"அண்ணா! வாங்க சாப்பிடலாம்" மீனாவின் குரல் கேட்டதும்,

"சரி வாடா! பசிக்குது. அம்மா வச்ச மீன் குழம்பு நீ சாப்பிட்டதில்லையே வா. வந்து சாப்பிட்டுப்பார்." என கீழே இறங்கினான்.

"வந்து இவ்ளோ நேரமாச்சே! என்னைத் தேடினானா? நான் வேண்டாத விருந்தாளி தானே. நான்தான் அவன் வருவான்னு தேடிட்டே இருக்கேன். அவனுக்கு என்ன? அவனை யார் கேள்வி கேட்டீங்க?" காரசாரமான குரல் கேட்க, ரவியை திரும்பிப் பார்த்து மெதுவாய் வரும்படி சைகை காண்பித்துவிட்டு பூனைப் பாதம் வைத்து மெல்ல இறங்கினான் சந்தோஷ்.

"எல்லாம் நீங்க கொடுக்கிற இடம்தான். தலைக்கு மேலே வளர்ந்த பிள்ளைன்னா தட்டிக் கேட்கக் கூடாதா? தடிமாடு... தடிமாடு கீழே வரட்டும். அவனுக்கு இன்னிக்கு சாப்பாடு கிடையாது."

ராஜலட்சுமி அதட்டினாள். "மெல்லப் பேசுடி. கூட அவன் சினேகிதக்காரப்புள்ளயும் வந்திருக்கு."

"வந்தா என்ன? இதுவே ஒரு தடிமாடு. கூட வந்தது மட்டும் என்னவாம்? அதுவும் தடிமாடுதான். ரெண்டு மாடுகளுக்குமே சோறு கிடையாது?"

"அதை ஒரு கழுதை சொல்லக்கூடாது." தனக்கு வெகு அருகே கேட்ட சந்தோஷின் குரலில் அதிர்ந்து துள்ளித் திரும்பினாள் ஜோதிலட்சுமி. கடைசி படியில் இறங்கிய ரவி அப்படியே நின்றுவிட்டான்.

இவளா? காலையில் சும்மா பார்த்ததற்கே முறைத்துக் கொண்டு திட்டிவிட்டுப் போனவள். இப்போது நான் யாரென்று தெரியாமலே தடிமாடு என்கிறாள். நேரில் பார்த்தால் இன்னும் என்னவெல்லாம் சொல்வாளோ எதற்கு வம்பு என்று அங்கேயே நின்றுகொள்ள, அவளை கவனியாமல் தன்னைக் கழுதை என்றவனிடம் மல்லுக்கு நின்றாள் ஜோதி.

"யார்? யாருடா கழுதை. நீ தான் எருமை மாடு தடிமாடு"

"நீதான்டி கழுதை. நான் வந்து இறங்கும்போது நீ கனைத்ததைக் கேட்டேனே. ஆமா உனக்கு பெரிய சுசீலான்னு நினைப்பா?"

ஜோதியின் முகம் கோணியது. "டேய்! நான் பாடி பாடினா உனக்கு கழுதை கனைப்பது போல இருக்குதா நீதான்டா கழுதை. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை."

"அப்போ நீ கோட்டான். கோட்டான் மாதிரிக் குரலை வெச்சிகிட்டு சின்னக்குயில் சித்ரா மாதிரி நினைச்சி எப்பவும் பாடியே கொல்றியே? உன் பாட்டைக் கேட்டு தெருவில மூணு நாய் செத்துப் போச்சு. ஏழெட்டுக் கோழி ஊரைவிட்டே ஓடிடுச்சு. அவ்வளவு ஏன் நம்ம ஊர்ல ஒரு காக்காவைக் கூட பார்க்க முடியுதா? எல்லாமே உன் குரலைக் கேட்டு தற்கொலை பண்ணிடுச்சாம்."

பொங்கிய சிரிப்பை அடக்க முடியாமல் ரவி வாயை மூடிக்கொள்ள ஜோதி உதட்டைப் பிதுக்கி அழுகைக்குத் தயாரானாள். "அத்தே! உங்க புள்ள என்ன பேசுறான்



...ருங்கத்தே. நான் என்ன அவ்வளவு மோசமாவா ...டுறேன்." என்றவாறு கண்ணைக் கசக்கினாள்.

"டேய்! ஏன்டா வந்ததும் வராததுமா அவளைச் ...ண்டுற. அவ குரலுக்கு என்னடா தேனாட்டம் இருக்குமே. ...வள பாடச் சொல்லி நாள் பூரா கேட்டுட்டே இருக்கலாமே."

"அம்மா! சும்மா பொய் சொல்லாதீங்க. அவ ...டும்போது நீங்க காதில பஞ்சை வெச்சு அடைச்சுப்பீங்க ...னே."

"ம்? நிசமாவா அத்தை. இவன் சொல்றது ...ண்மையா?" உண்மையாகவே அழத் தொடங்கினாள்.

"ச்சே! அவன் சும்மா சொல்றான்மா. இவனுக்கு உன் ...ருமை தெரியுமா? நம்ம பாட்டி உன் பாட்டைக் கேட்காம ...ன்னிக்காவது தூங்கியிருக்காங்களா?"

"அம்மா! பாட்டிக்கு காது கேட்காதும்மா. இவ பாட்டைக் கேட்டுத்தான் பாட்டிக்கு காதே செவிடாப் போச்சு."

ஓவென அழுதாள் ஜோதி. அதற்கு மேல் நிற்க ...லாமல்,

"சந்தோஷ். திஸ் ஈஸ் டூ மச். ஏன்டா இப்படிப் பண்ற. ...வே இந்தப் பொண்ணு குரல் ரொம்ப இனிமையா ...ந்ததுடா. காலையில கேட்டேனே ஒரு பாட்டு அது ...ங்கதான் பாடினாங்க. கேட்ட நான் மட்டும் இல்லடா ...டு, ஆறு, ஆத்துல ஓடுற மீன் எல்லாருமே மெய் ...ட்டோம் தெரியுமா? சும்மா இப்படிப்பேசி அவங்களை ... வெக்காதே" என பரிந்துகொண்டு வந்தவனைக் ... மிரண்டு எழுந்து நின்றாள் ஜோதி. அவசரமாய்க் ...களைத் துடைத்தாள்.

சந்தோஷ் சத்தமாகச் சிரித்தான். "போச்சு! இன்னிக்கு எத்தனை மீன் இவ பாட்டைக் கேட்டு செத்துப் போச்சோ தெரியலையே!" ஏம்மா அந்த மீனை எல்லாம் எடுத்து வந்து குழம்பு வெச்சீங்களா? ஐயோ! எனக்கு வேண்டாம்ப்பா.

"டேய்...ய்" ஆங்காரமாய் சிலிர்த்துக் கொண்டாள் ஜோதி. "ஏதோ போனாப் போகுதுன்னு விட்டா பேசிட்டு போறியா. உன்னை என்ன பண்ணுறேன்னு பார்" அவசரமாய் அங்குமிங்குமாய் ஓடி வந்தாள்.

"ஏய்! வேண்டாம்டி, சொன்னாக் கேளு. ... வலிக்கும்" என அவன் ஓட ஜோதி துரத்த, "ச்சே! எப்ப பாரு இது ரெண்டும் சண்டை போட்டுட்டே இருக்குதுங்க. அண்ணே! நீங்க உட்காருங்க. சாப்பிடலாம்" என்றாள் மீனா.

"அட அத்தே வாங்க. எப்படி இருக்கீங்க?" என வாசலைப் பார்த்து சந்தோஷ் கேட்க, பின்னே ஓடி வந்த ஜோதி பதறி கையில் இருந்த பாளையை வீசியெறிந்தாள். "ஐயோ! அம்மாவா?"

"போச்சு! இப்பவும் நீதான் தோத்துப்போன. அத்தை எப்போ மத்தியானமே வீட்டுக்கு வருவாங்க. போ. நீ எப்பவுமே இப்படித்தான் ஏமாந்து போயிடுற" என சலித்துக் கொண்டாள் மீனா.

"தடிமாடு! பொய்யா சொன்னே? தடிமாடு தடிமாடு"

"போடி கழுதை. சாதாரண கழுதை இல்ல கோவேறு கழுதை."

"நீ ஒட்டகம், காய்ஞ்சு போன ஒட்டகம்."



"நீ நாய். சொறி பிடிச்ச நாய்" சண்டை நீண்டு கொண்டே போக மற்ற மூவரும் காதை மூடிக்கொண்டனர்.

"அண்ணே! ஏதோ காட்டுல வந்து மாட்டிக்கிட்ட மாதிரி இருக்கா?"

மீனா கேட்க ரவி மெல்லச் சிரித்தான்.

"இல்ல! சந்தோஷமா இருக்கு. வீடுன்னா இப்படித்தான் கலகலப்பா இருக்கணும். செல்லமான சண்டை போட்டுக்கணும். ஆனா எங்க வீட்ல இப்படி எல்லாம் சத்தம் கேட்காது. நானும் எங்க அம்மாவும் தான். நான் வெளியே வேலைக்குப் போயிடுவேன். அம்மா மட்டும் தனியாத்தான் இருப்பாங்க. இப்பக்கூட மாமா வீட்ல போய் விட்டுட்டுத்தான் வந்தேன். எங்க அம்மா என்னைத் தான் நினைச்சுட்டு இருப்பாங்க."

சண்டையை நிறுத்திவிட்டு இருவரும் ரவியைப் பார்க்க ரவியின் கண்கள் கலங்கியிருந்தன. அவசரமாய் நண்பனின் அருகே வந்தான்.

"அம்மா! பசிக்குதும்மா. சாப்பாடு போடுங்க" என கவனத்தைத் திருப்பினான்.

"ஆமா நீங்க போட்ட சண்டையில எல்லாம் மறந்து போச்சு. தம்பி உட்காருங்க. நீயும் அண்ணனோட உட்காரு மீனா" என்றவாறு இலையை எடுத்துப் போட்டாள் ராஜலட்சுமி.

"என்ன மகாராணி இடுப்பில கைய வெச்சுட்டு நிக்கிற. சாப்பாடு போடு" என அமைதியாக நின்றவளை அழைத்தான் சந்தோஷ்.

"கழுதை எப்படிப் பரிமாறுமாம்?" அவள் வெடுக்கெனக் கேட்க.

"ஹப்பா! எப்படியோ நீ கழுதைன்றத ஏத்துக்கிட்ட" என்றான் சிரிக்காமல்.

"திரும்பவும் ஆரம்பிச்சிடாதீங்க. முதல்ல சாப்பிடுங்க. நீ ஏன்டா சும்மா அவகிட்டயே வம்பிழுக்கிற?" ராஜலட்சுமி மகனைக் கடிந்தாள்.

"அவ மட்டும் என்ன கொஞ்சமா பேசுகிறாள். வாயாடிக் கழுதை"

"டேய்! திரும்பவும் கழுதையின்னு சொல்லாதே கடிச்சிடுவேன்" பற்களைக் கடித்தவாறே அவள் கூற ரவிக்கு புரையேறியது. அவன் தலையில் தட்டி தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள் ராஜலட்சுமி.

"ஏன்டா சந்தோஷ். இவங்க யாரு உனக்கு?"

"அட! உனக்கு அறிமுகப்படுத்தவே இல்லையே. இத பேர் ஜோதி. எங்க அப்பாவோட தங்கை பொண்ணு. ஊரில உள்ள மொத்த வாயும் இதுக்குதான் இருக்கு. பெரிய பாடகின்னு நினைப்பு. டுவென்டி போர் ஹவர்ஸா பாடிட்டு இருப்பா. இவ பாட்டுக்கு பயந்துதான் நான் ரெண்டு நாளுக்கு மேல ஊர்ல இருக்கமாட்டேன். ஏய் வாயாடி இத என்னோட பெஸ்ட் பிரண்ட் ரவி. இனிமே கொஞ்சநாள் நம்ம வீட்டிலதான் இருப்பான். தயவு செய்து பாட்டுப் பாடி விரட்டிடாதே."

"இவர் உன் பிரண்டா நம்பவே முடியலியே!"



"ஓ. உன் பாட்டை நல்லாயிருக்குன்னானே அதனால சொல்றியா?"

"உனக்கு ரொம்பக் கொழுப்பு ஏறிடுச்சு. மாமா வரட்டும்." அவள் கோபமாய்க் கூற, "சந்தோஷ்! இது உன் முறைப் பெண்ணா?" தயக்கமாகக் கேட்டான் ரவி.

வாயில் சாப்பாட்டை வைத்த சந்தோஷ் திணறிவிட்டு அதை விழுங்கி சத்தமாகச் சிரித்தான்.

"முறைப்பெண்ணா? இவளா? அப்படியெல்லாம் கேட்காதே ரவி. இவளைக் கட்டுவதற்குப் பதிலாக வரும்போது பார்த்தோமே அந்தக் கண்மாயில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளலாம்." அவன் முடிப்பதற்கு முன்.

"ஆமா! உன்னைக் கட்டத்தான் நான் காத்துக் கிடக்கிறேன். போடா சிடுமூஞ்சி. உன்னைக் கட்டுவதற்கு பதில் நான் காலம் பூரா இப்படியே இருந்திடுவேன். உன் மூஞ்சிக்கு நான் வேணுமோ?" என்றாள் ஜோதி.

"பார்த்தியா வாயை? இவளைப் போய் முறைப்பெண் என்கிறாயே? இவள் என் அத்தை மகள். அவ்வளவுதான் என் அத்தைக்காகத்தான் இவளை சகித்துக் கொண்டிருக்கிறோம். சீக்கிரமாய் ஒரு ஏமாளியாப் பார்த்து இவளை அவன் தலையில் கட்டிவிட வேண்டும்" - என்றவாறு சாப்பிட ஆரம்பித்தான் சந்தோஷ்.

ஜோதியிடம் இருந்து பதிலின்றிப் போகவே ரவி அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளது கண்கள் கலங்கி இருக்க உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள். ரவி சங்கடமாக சந்தோஷின் தோளில்

தட்டி அவளைப் பார்க்குமாறு சைகை செய்தான். அவளை பார்த்த சந்தோஷ், “என்னைக் கடிச்சித் திண்ணனும் போல இருக்கா?” என்றான் கேலியாய்.

“ஏன் அத்தான் உங்கப்பா எங்கம்மாவ ஒரு ஏமாளி கிட்ட தள்ளிவிட்ட மாதிரி நீ என்னையும் தள்ளிவிட்டுடுவியா? நான் உன்னை ரொம்ப சங்கடப்படுத்துறேனா? என்னை சகிச்சுக்க முடியலையா?”

கண்களில் கண்ணீர் மின்ன அவள் கேட்க பதறினான்.

“ஹேய் ஜோ. என்ன இது. சும்மா விளையாட்டுக்குத் தானே...”

“இல்ல நீ சும்மா சொல்லல. மனசுல இருக்கிறது தானே வார்த்தையில வரும். நான் உங்களுக்கெல்லாம் பாரமாப் போயிட்டேன் இல்ல.”

ராஜலட்சுமி எழுந்து வந்து பரிவாய் அவளது தலையை வருடினாள்.

“என்னடாம்மா இது கண் கலங்கிட்டு. அவனைப் பத்தி உனக்குத் தெரியாதோ? கேலியாகத்தான் சொன்னான்.”

“உங்க புள்ளைய விட்டுக் கொடுப்பீங்களா? என்ன இருந்தாலும் நான் அநாதைதானே...” அழுதுகொண்டே உள்ளே ஓடினாள் ஜோதி.

“சந்தோஷ்! வர வர உன் விளையாட்டுக்கு அளவே இல்லாமப் போச்சு. விளையாட்டுக்குன்னாலும் அப்படியா பேசுறது. தகப்பன் இல்லாத பொண்ணை இப்படி



அழவெக்கலாமா? ஏன்டா இப்படிப் பண்ற...?” மகனை நோக்கி கோபமாகக் கேட்டாள்.

“என்னம்மா நீங்களும் இப்படிக் கேட்கறீங்க. சும்மாத் தானே சொன்னேன். எப்பவும் பேசுறது தானே” என்று சொன்னாலும் அவன் முகமும் வாடியிருந்தது.

“ம்மா! அவ கோபமெல்லாம் ஒரு பத்து நிமிஷம்தான் இருக்கும். அதுக்காக அண்ணனைத் திட்டாதே. நீ சாப்பிடுண்ணா...” தங்கை பரிந்து கொண்டு வர, லேசாக சிரித்துவிட்டு இலையை மூடிவிட்டு எழுந்தான்.

ரவியும் எழுந்துவிட அம்மா பதறினாள்.

“என்னப்பா பாதியில எழுந்திட்டீங்க. எம்மேல கோபமா?”

“இல்லம்மா! வயிறு நிறைந்துவிட்டது. நான் போய் அவளை சாப்பிட அழைச்சிட்டு வர்றேன். அவளுக்கு சாப்பாடு போட்டு வையுங்க” என்றவாறு பின் கட்டிற்குச் சென்றான் சந்தோஷ்.

குழப்பமாக அவனைத் தொடர்ந்தான் ரவி. “என்ன சந்தோஷ். ரொம்ப அப்செட்டா இருக்க? இவ்ளோ நேரம் வேணுமின்னே தானே அவளைக் கோபப்பட வைத்தாய்” எனக் கேட்க அவனிடம் பதிலில்லை.

மாறாக அவன் கண்கள் கலங்கியிருந்தன.

## 4

கண்களில் என்ன ஈரமோ
நெஞ்சினில் என்ன பாரமோ
கையில் அதை ஏந்தவோ - ஒரு
தாயைப் போல உனைத் தாங்கவோ!

"இதோ பாரு ஜோ எத்தனை வாட்டி மன்னிப்புக் கேட்கிறது. இப்படி உம்முன்னு இருந்தா உம் முகம் நல்லாவே இல்ல தெரியுமா?"

"கழுதை முகம் எப்படி இருந்தா என்ன?" கடுப்பாய் பதில் வர இருவரின் முகமும் புன்னகை பூத்தது.

"என்ன நீ அப்படிச் சொல்லிட்டே. இன்னிக்கு ஆத்தோரமா ஏதோ பாட்டுப் பாடினியாமே ஊஞ்சல் ஆடிக் கிட்டே. பார்க்கிறதுக்கு அப்படியே ஸ்ரீதேவி மாதிரியே இருந்தியாமே. இதோ இவன் தான் சொன்னான்."

விசுக்கென நிமிர்ந்து ரவியைப் பார்த்தாள். "பேய் என்னை ஏன்டா இதில் இழுக்கிறாய்." - ரவி கிசுகிசுப்பாய்க் கேட்டான்.

"பின்னே நீதானே சொன்னாய். தெய்வீகமான அழகு அம்சமான அழகு என்று. இப்போ இந்த மூஞ்சைப் பார் அப்படியா தெரிகிறது?"

வேண்டுமென்றே சீண்டுகிறான் என்று தெரிந்ததும் ரவி புன்னகைத்தான்.

"அழகா இருக்கிறவங்க எப்படி இருந்தாலும் அழகாத்தான் இருப்பாங்க. கோபப்பட்டாலும் அழகுதான் முறைத்தாலும் அழகு தான். ஆனால்... அழும் போது தான் அழகு கொஞ்சம் குறைவாகத் தெரிகிறது."



அவசரமாய் கண்ணீரைத் துடைத்துவிட்டு லேசாய் புன்னகைத்தாள். "ம்... இது ரொம்ப அழகு. தைரியம் இல்லாத ஆண் என்றால் இந்தப் புன்னகையில் தடுமாறி விழுந்துவிடுவான்" என்றதும் சிரித்தேவிட்டாள்.

"ரவி ஒரு உம்மணாம்மூஞ்சிய சிரிக்க வெச்சிட்டே. உனக்கு என்ன வேணுமோ கேள். உடனே தருகிறேன்" என்றான் சந்தோஷ்.

"ரவி! சொத்தில் பாதியைத் தா என்று கேளுங்கள்" என்றாள் ரவியின் காதோரமாய்.

ரவியின் உடல் ஒருமுறை அதிர்ந்தது. திடீரென அவள் அருகில் நெருங்கியதும் தடுமாறிப் போனான். அவள் அழைத்த தன் பெயரை மிகவும் ரசித்தான்.

"பாதியென்ன? மொத்தமாய்த் தந்துவிடுகிறேன். முதலில் சாப்பிட வாம்மா. காலையில் இருந்து ஒரே அலைச்சல். கொஞ்ச நேரமாவது நாங்கள் ரெஸ்ட் எடுக்க வேண்டாமா?"

"போனால் போகிறது போய் படுத்துக் கொள்ளுங்கள். நான் சாப்பிடுகிறேன். சாயங்காலம் காபி கூட்டுக்கு பஜ்ஜி போடவா?"

"இவன் என்ன உன்னைப் பெண் பார்க்கவா வந்திருக்கிறான். பஜ்ஜி போட" என சந்தோஷ் இயல்பாகவே கேட்டாலும் சட்டென முகம் சிவக்க ரவியை ஏறிட்டாள் ஜோதி. அவனும் தடுமாறிக் கொண்டிருக்க, "சரி ஏதோ. ஆசைப்பட்டுக் கேட்கிற. சாப்பிடுற மாதிரி செய். இல்லன்னா

நம்ம ஊரே வேண்டாம்னு ஓடிடுவான். இவனை இங்கே கூட்டி வர நான் ரொம்பக் கஷ்டப்பட்டேன். அதைக் கெடுத்துடாதே."

"அவரைப் பார்த்தால் பாவம் போலத் தெரிகிறார். அவருக்கு நல்ல பஜ்ஜி செய்வேன். உனக்குக் காபியும் கிடையாது."

"ரவி. அப்பா நான் தப்பிச்சுட்டேன். நீதான் மாட்டிக்கிட்ட என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்" என்றான் சோகமாய்.

"ஏய்! எங்கிட்ட அடி வாங்காதே" என அவள் நெருங்க, "வந்துருடா நாம மாடிக்குப் போயிடலாம். ராட்சஸி! விரட்டி விரட்டி அடிப்பா. ஓடிவா" என சந்தோஷ் முன்னே ஓட, சிரித்தவாறே அவன் பின்னால் சென்று மாடியேறினான்.

ஜன்னல் ஓரமாய் போட்டிருந்த கட்டிலில் படுத்தனர் இருவரும். உடம்பு அலுப்பாக இருந்த போதும் ஜோதியைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவல் எழுந்தது. காற்று குளுமையாய் வீசி சூழலை இதமாக்க, நண்பனை நோக்கி ஒருக்களித்துப் படுத்தான்.

"சந்தோஷ்! ஜோதியோட அப்பா, அம்மா எங்கே?"

"நீயும் அவளைப் பத்தித்தான் நினைச்சுட்டு இருந்தியா? நானே சொல்லணும்னு நினைச்சேன். அவங்க அம்மா இங்க எங்களோடத் தான் இருக்காங்க. இப்ப பாட்டி கூட தோட்டத்துக்குப் போயிருக்காங்க. காலையில போனா சாயங்காலம் இருட்டின பிறகு தான் வருவாங்க. அத்தை எப்பவுமே சும்மா இருக்க மாட்டாங்க. ஏதாவது வேலை செய்துகிட்டே இருப்பாங்க.

"அவங்க கணவர்... அதான் ஜோதியோட அப்பா?"



"அவங்க இறந்துட்டாங்க ரவி. ஜோதி பிறக்கும் முன்னாலயே இறந்துட்டாங்க." சந்தோஷ் வேதனையாய்ச் சொல்ல அதிர்ந்து எழுந்து அமர்ந்தான் ரவி.

"என்னடா சொல்றே?"

சந்தோஷும் எழுந்து ஜன்னல் அருகே சென்று நின்றான். வெளியே சற்று நேரம் பார்த்திருந்து விட்டு பெருமூச்சோடு திரும்பினான்.

"ஆமாம் ரவி. என் அத்தை மனோகரி என் அப்பா கூடப் பிறந்த ஒரே தங்கை. அப்பாவுக்கு அத்தை மேல ரொம்பப் பிரியம். அப்பாவை விட அத்தைக்கு பதினைந்து வயது குறைவு. லேட்டாப் பொறந்தாங்களாம். அதனால அப்பாவுக்குத்தான் முதல்ல கல்யாணம் நடந்திருக்கு. நான் பிறந்து எட்டு வருஷம் கழிச்சுத்தான் அத்தைக்கு கல்யாணம் நடந்தது.

அப்பா எத்தனையோ மாப்பிள்ளை பார்த்து கடைசியா ஒரு அழகான மாப்பிள்ளையைப் பார்த்தாங்க அந்த மாமா ரொம்ப அழகுதான்.

ஆனால் கொஞ்சம் வெகுளி. யாரையும் எளிதாக நம்பிவிடும் சுபாவம். கல்யாணமாகி கொஞ்சநாள் கழிச்சி அத்தை குழந்தை பெத்துக்க இந்த வீட்டுக்கு வந்தாங்க.

மாமாவோட பொறந்தவங்க மூணு அண்ணன். அத்தை அங்கே இல்லாத சமயத்தில் ஏதோ குடும்பத் தகராறுல சொத்தைப் பிரிச்சிருக்காங்க. மாமா வெகுளின்றதால அவர்கிட்ட அன்பாப் பேசி அவர் பங்கு சொத்தை மத்தவங்க எடுத்துக்கிட்டாங்க. மாமாகிட்ட

கையெழுத்தை வாங்கிட்டு நூறு ரூபா மட்டும் கையில கொடுத்து இங்கே அனுப்பிட்டாங்களாம்."

"அச்சச்சோ! அப்புறம்?"

"அப்புறம் என்ன? மாமா வந்து விபரத்தைச் சொன்னதும் இங்க ஆளாளுக்கு மாமாவைத் திட்டியிருக்காங்க. "இப்படி என்னைக் கேட்காம கையெழுத்து போட்டுட்டு எல்லாத்தையும் இழந்துட்டு ஏமாளியா வந்து நிக்கிறீங்களே. உங்களை நம்பி எப்படி இந்தப் புள்ளையப் பெத்து நான் வளர்க்கப் போறேன்னு" அத்தை அழுதாங்களாம்.

மாமா மனசு நொந்து, தோட்டத்துக்கு வாங்கி வெச்சிருந்த மருந்தைக் குடிச்சிட்டாங்க."

"ஐயோ! அப்புறம்... என்ன ஆச்சு...!" ரவி பதறினான்.

"மாமா வீட்டுக்கு வந்திருந்தா கண்டுபிடிச்சு காப்பாத்தியிருப்பாங்க. ஆனா மாமா மருந்தைக் குடிச்சிட்டு தோட்டத்திலேயே ஒரு மரத்தடியில படுத்திட்டாங்க. எல்லாரும் தேடிப் பார்த்தப்ப மாமாவோட உயிர் போயிடுச்சு."

கண்ணீருடன் சந்தோஷ் நிறுத்த அங்கு பெரும் அமைதி நிலவியது. சில நிமிடம் சென்றபின் தன்னை சமாளித்துக் கொண்டு மீண்டும் பேசினான்.

"வயித்தில குழந்தையோட அத்தை அழுது புரண்டது இன்னும் நினைவிருக்கு எனக்கு. மாமாவோட சாவுக்குக் கூட அவங்க கூடப்பிறந்தவங்க யாரும் வரல்ல. வந்தா சொத்தைக் கேட்டுடு வாங்களோன்ற பயம். மாமா இறந்து ஒரு மாதம் கழிச்சு ஜோதி பொறந்தா. அவளைப்



பார்த்தவங்க எல்லாருமே, "அப்பனை முழுங்கிட்டு பொறந் ங்கு. தரித்திரம் பிடிச்சதுன்னு..." கரிச்சுக் கொட்டினாங்க. அத்தைகூட குழந்தையைத் தூக்கிக் கொஞ்சவே இல்லை.

மாமா இறந்ததுல இருந்தே அத்தையோட பேச்சு நின்னு போச்சு. தன்னோட பேச்சுத்தான் மாமாவைக் கொன்னுட்டதா இப்பவும் நினைக்கிறாங்க. அதனால யாரோடவும் பேசுவதே இல்லை. குழந்தை பிறந்தப்பவும் இறுகிப் போய்த்தான் இருந்தாங்க. ஜோதி அழுதாக்கூட தூக்கமாட்டாங்க.

அப்போத்தான் எங்க அம்மா அவளைத் தூக்கி எங்கிட்ட கொடுத்தாங்க. இனிமே இது உன் பாப்பா. இவளை அழாமப் பார்த்துக்கோன்னு என் கையில கொடுத்தாங்க. அப்போ நான் ஆறாவது படிச்சிட்டு இருந்தேன். ரவி! எப்போ ஜோதியை என் கையில அம்மா தந்தாங்களோ அப்போ இருந்து இப்ப வரை அவளை ஒரு குழந்தையாத் தான் பார்க்கிறேன். அவள அழவே விடமாட்டேன். அவ அழுதா என்னால தாங்க முடியாது.

என் அம்மாதான் அவளுக்கு அம்மா. நான்தான் அவ அண்ணன். அதுக்கப்புறம் மீனா பொறந்தா. ஆனாலும் அவளைவிட ஜோ மேலதான் எனக்கு அதிக அன்பு. வளர்ந்த பிறகும் கூட யாராவது அவ மனம் நோகப் பேசிட்டா எங்கிட்டதான் வந்து அழுவா. தன்னாலதான் அப்பா இறந்தாரா? என்று கேட்டு அழுவா.

படிப்பைக் கூட பாதியிலேயே நிறுத்திட்டா. தான் ஒரு அநாதை என்கிற எண்ணம் வந்திடுச்சு அவளுக்கு. அந்த எண்ணத்தை மாத்தி அவளைக் கலகலப்பா

மாத்தணும்னுதான் எப்பவும் அவளைக் கிண்டல் பண்ணி ஏடாகூடமாய் பேசி பதிலுக்கு அவளையும் பேச வைத்தேன்.

பயந்து பயந்து வீட்டுக்குள்ளேயே முடங்கினவ தைரியமா பேச ஆரம்பிச்சா. யாருக்கும் பயப்படாம எதிர்வாதம் செய்தா. அவளைக் கேலி பேசினவங்க வாயடைச்சுப் போயிட்டாங்க. அதில இருந்து அவளை அமைதியா இருக்கவே நான் விடல.

எதையாவது பேசி சிரிக்க வைத்து, வம்பிழுத்து பதிலுக்கு பதில் வாதாட வைப்பேன். ஓரளவு அதில வெற்றியும் அடைஞ்சிட்டேன். இனி அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துக் கட்டி வெக்கணும் ரவி. அப்போதான் என்னால நிம்மதியா இருக்க முடியும். அவளை நல்ல இடத்துல வாழ வெச்சாத்தான் என் அத்தையோட மனசும் ஆறும்" பெருமூச்சோடு முடித்தான்.

மனம் பாரமாகிவிட அமைதியாக இருந்தான் ரவி. ஏதோ ஒன்று உறுத்த, "ஏன்டா! மத்ததெல்லாம் சரி. ஆனால் அந்தப் பெண் குரல் எத்தனை இனிமை. நீ ஏன் அவளை அப்படி மட்டம் தட்டுகிறாய். கழுதை கோட்டான் என்று?" எனக் குறைபட்டான் ரவி.

லேசாய் சிரித்தான் சந்தோஷ் "அதுக்கும் காரணம் இருக்குடா. எப்பேர்ப்பட்ட சோகத்தையும் போக்கும் குணம் இசைக்கு உண்டு. அதுவும் எங்க கிராமத்துல எல்லாத்துக்குமே பாட்டு உயிர்மூச்சு. இவ குரல் இனிமையாகத்தான் இருக்கும். ஆனா பாடமாட்டா. எங்க அம்மா இந்த வயசுலயும் ரேடியோவில ஏதாவது பழைய பாட்டு போட்டா அதை முணுமுணுத்துக் கொண்டே வேலை



பார்ப்பாங்க. அப்போ அம்மாவோட முகத்தில எவ்வளவு சந்தோஷம் இருக்கும் தெரியுமா? அவங்க தன்னோட இளம் பருவத்துக்கே போயிட்டமாதிரி உணர்வாங்க. அதாவது எத்தனை மன அழுத்தம் இருந்தாலும் இனிமையான இசையைக் கேட்டாலோ இல்ல மனசுக்குப் பிடிச்ச பாடலை வாய்விட்டுப் பாடினாலோ தங்களோட மன அழுத்தம் குறைஞ்சு ரிலாக்ஸ் ஆகிடும்னு ஒரு மனோதத்துவ டாக்டர் சொல்லியிருக்கார். அது உண்மைன்னு தெரிஞ்சுதான் இவளைப் பாட வைத்தேன்.

அவளுக்குப் பாட்டுக் கேட்க ரொம்பப் பிடிக்கும். ஆனா சத்தமா பாடமாட்டா. நான் அவளைக் கோப மூட்டியதும் என்னை வெறுப்பேத்த சத்தமாய் பாடுவாள். அம்மாவிற்கு அவள் பாடுவது ரொம்பப் பிடிக்கும். என் பாட்டியும் அவள் பாட்டைக் கேளாமல் தூங்கமாட்டாங்க. அப்படிப் பாடத் தொடங்கி இப்போ எப்பவுமே பாடிட்டே இருப்பா. இப்ப அவ முகத்தில நான் சோகத்தைப் பார்ப்பதே இல்லை."

பஜ்ஜியின் வாசனை மூக்கைத் துளைத்தது. கூடவே இனிய ராகமும் காதில் ஒலித்தது. "பார்த்தியா. வேலை என்றதும் பாடத் தொடங்கிவிட்டாள்" என்றான் சந்தோஷ்.

மெல்ல எழுந்து மாடிப் படியருகே வந்து கீழே எட்டிப் பார்த்தான் ரவி. ராஜலட்சுமி அம்மியில் எதையோ அரைத்துக் கொண்டிருக்க, அருகே நின்று அடுப்பில் சூடாக பஜ்ஜி செய்து கொண்டே பாடிக் கொண்டிருந்தாள் ஜோதி.

"பாட்டுக்கு பாட்டெடுத்து நான் பாடுவது கேட்டாயோ துள்ளி வரும் வெள்ளலையே நீ போய் தூது சொல்ல மாட்டாயோ. கொத்தும் கிளி இங்கிருக்க" என மெல்லிய

குரலில் இனிமையாகப் பாடியவளை மனம் கனக்கப் பார்த்துக்கொண்டே நின்றான்.

அந்தப் பாரத்தோடு தன் பாரமும் சேர்ந்துகொள்ள பயமாய் தன் கையிலிருந்து கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் மாலை ஐந்து மணியைத் தாண்டிவிட்டிருக்க பயம் குளிராய் மாறி உடலை நடுங்க வைத்தது.

# 5

நிலவு தூங்கும் நேரம்
நினைவு தூங்கிடாது
இரவு தூங்கினாலும் – உறவு
தூங்கிடாது இது ஒரு தொடர்கதை
தினம் தினம் வளர்பிறை!

இதமான காற்றில் ரவி தன்னை மறந்து உறங்க அவனையே பார்த்துக் கொண்டிருந்த சந்தோஷ் ஒரு பெருமூச்சோடு எழுந்து ஜன்னல் அருகே சென்றான். பகலில் பசுமையாய் தெரிந்த நிலப்பரப்பும் மலை முகடும் இருளைப் பூசிக்கொண்டு மிரட்டின. சில நிமிடங்கள் அமைதியாக நின்று பார்த்தான். கீழே தந்தையின் குரல் கேட்டதும் விலகி கீழே இறங்கி நடந்தான். மகனைக் கண்டதும் ஆச்சரியமானார் முத்துக்குமாரசாமி.

"என்னய்யா! என்ன விஷயம்?" என்றவாறு மகனைத் தன் அருகில் தரையில் அமர்த்திக் கொண்டார்.

"அம்மா! நீங்களும் வாங்க" என்றதும் சாப்பாடு பாத்திரங்களைக் கொண்டு வந்தவள் அதை அப்படியே வைத்துவிட்டு மகனிடம் வந்தாள்.



"அம்மா ஜோதியும் மீனாவும் தூங்கியாச்சா?"

"ஒன்பது மணிக்கே தூங்கியாச்சுப்பா. அந்தப் புள்ளை சாப்பிட்டுச்சா. கீழே வந்து சாப்பிட்டா நான் பாத்து பரிமாறி இருப்பேனே. என்னையும் மேலே வரவேண்டாமுன்னு சொல்லிட்டே நல்லா சாப்பிட வெச்சியா?"

"ம்... சாப்பிட்டான்மா. சாப்பிட்டுத் தூங்கிட்டான். அப்பா! நான் இப்போ பேச வந்ததே அவனைப் பத்தித்தான்."

"சொல்லுப்பா! ஆமா இந்தப் புள்ளைக்குத்தானே கல்யாணம்னு சொன்னே. என்ன ஆச்சு? ஏன் கல்யாணம் நடக்கல. புள்ளை ரொம்ப அழகா ராஜகுமாரனாட்டம் இருக்குதே" ராஜலட்சுமி ஆவலாய்க் கேட்க "ஷ்" என அதட்டினான் சந்தோஷ்.

"சத்தமாப் பேசாதீங்கம்மா. தங்கச்சிங்க காதில விழுந்திட வேண்டாம். ரவியைப் பத்தி எதுவும் யாருக்கும் தெரியக்கூடாது. கல்யாணம் நின்னு போனதை எல்லாரும் துக்கம் விசாரிக்கிற மாதிரி போன் பண்ணியும் நேர்லயும் கேட்கிறதை சகிக்க முடியாமத்தான் அவனை இங்க கூட்டிட்டு வந்தேன். நீங்க யாரும் இதைப் பத்திக் கேட்டா அவன் மனசு இன்னும் வருத்தப்படும். அவன் நல்லாத் தேறட்டும். அதுவரை யாரும் எதுவும் அவன்கிட்ட கேட்கக்கூடாது."

"நாங்க கேட்கலப்பா ஆனா நீ சொல்லு. கல்யாணம் ஏன் நின்னு போச்சு?"

முத்துக்குமாரசாமி கேட்க சந்தோஷ் ஒரு கணம் தடுமாறினான்.

"அது அந்தப் பொண்ணுக்கு ரவியைப் பிடிக்கலியாம்...!"

ராஜலட்சுமி அதிர்ந்தாள். "என்ன? இந்தப் புள்ளையை பிடிக்கலியாமா? அவளுக்கு என்ன கண்ணு அவிஞ்சாப் போச்சு. மூக்கும் முழியுமா சிரிச்ச முகமா எவ்வளோ அழகா இருக்கான். இந்த மாப்பிள்ளைய வேணாம்னு சொல்லிட்டு ஏதாவது ஒரு குரங்குப் பயலத்தான் கட்டப்போறா பாரேன்."

"அம்மா! ஏன் சத்தமாப் பேசுற?"

"மனசு ஆறமாட்டேங்குதுடா. ஒவ்வொருத்தனும் பொண்ணுங்களைப் பெத்து வெச்சிட்டு நல்ல மாப்பிள்ளை கிடைக்கணுமேன்னு தவம் கிடக்கிறான். இந்தப் புள்ளையைப் போய் வேணாம்னு ஒருத்தி சொல்லியிருக்கிறாளே."

"அதை விடும்மா. அவன் மனசு அதை நினைச்சு வருத்தப்படக் கூடாதுன்னுதான் கிராமத்துக்கு கூட்டிட்டு வந்தேன். சென்னையிலயும் வேலையை அப்படியே விட முடியாது. எங்க மானேஜர்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சாலும் நாங்க அப்பப்ப போய் பார்க்காம சரிபடாது. அதனால வாரத்துல ஒருநாள் நான் கம்பெனிக்கு போயிட்டு வருவேன். அந்த சமயம் நீங்க எதுவும் வாய் தவறி அவன்கிட்ட எதுவும் கேட்டுடக்கூடாது. குறிப்பா ஜோதிக்கோ மீனாவுக்கோ எதுவும் தெரியக்கூடாது வாயாடி! ஏதாவது கேட்டு அவனை சங்கடப்படுத்திடுவா"

"அதையெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்ப்பா. நீ எதுவும் வருத்தப்படாதே. அதுவும் எம்புள்ளைதான். நான் பத்திரமாப் பார்த்துப்பேன். நீ வேணாப்பாரு. நம்ம ஊர்லயே



அம்சமான ஒரு பெண்ணைப் பார்த்து அந்தப் புள்ளைக்கு கல்யாணம் பண்ணி வெச்சிடுறேன்."

சந்தோஷ் பதறினான். "அம்மா! காரியத்தையே கெடுத்து விடாதீர்கள். திருமணப் பேச்சை எடுத்தாலே எரிந்து விழுகிறான்."

"அதற்காக அப்படியே விட்டுவிடுவதா? வாழ வேண்டிய பிள்ளைய அப்படி விடமுடியுமா?"

"அதெப்படிம்மா விட முடியும். கொஞ்சநாள் போகட்டும். அதற்குள் அவசரப்பட்டுப் பேசிவிடாதீர்கள் பிறகு இங்கும் இருக்கமாட்டான்."

"சரி... சரி... நம்ம வீட்ல சகஜமா இருந்தாலே அந்தப் புள்ளையோட மனசு மாறிடும். அதுக்குள்ள நீ அவசரப் படாதே." என்றார் முத்துக்குமாரசாமி.

"சாயந்திரம் மாடிக்குப் போன புள்ள கீழே இறங்கவே இல்ல. ஆளோட ஆளா உட்கார்ந்து பேசினாத்தானே வருத்தம் தெரியாது."

"அது சரிம்மா. ஆனா அவன் பகலெல்லாம் சேகரிச்ச விபரங்களை நைட்ல உட்கார்ந்து எழுதுவான். அப்போ நான்கூட அவனைத் தொந்தரவு செய்யமாட்டேன். அதனால யாரும் எதற்காகவும் ராத்திரி நேரம் மாடிக்கு வரக்கூடாது. அந்த வாயாடிகிட்டயும் கண்டிப்பாச் சொல்லி வையுங்க."

"சரிப்பா. நாங்க யாரும் மேலே வரல்ல சரியா? போனமுறை வந்தப்போ ஜோதிக்கு ஒரு பையனைப் பார்த்து வெச்சிருக்கேன்னியே. அவங்க வீட்ல பேசினியா? பையன் போட்டோ எதுவும் கொண்டு வந்தியா" அப்பா கேட்டதும் சந்தோஷ் சோர்வாய் மறுத்தான்.

"இல்லப்பா, அவன் கம்ப்யூட்டர் என்ஜீனியர், அவனை மாதிரியே படிச்சிட்டு வேலைக்குப் போற பொண்ணைத்தான் தேடுறாங்களாம். சரின்னு விட்டுட்டேன். இவதான் பதினொன்னாம் வகுப்பையே பாதியில நிறுத்திட்டாளே. வேற ஏதேனும் வரன் வந்தாப் பார்ப்போம்."

"தம்பி! மாப்பிள்ளையைப் பொறுமையா நிதானமாத் தேடி எடுக்கணும்ப்பா. அது ஆயிரங்காலத்துப் பயிர். அதனால அவசரம் வேண்டாம். ஜோதிக்கு இப்பத்தானே இருபத்திரெண்டு வயசு முடிஞ்சிருக்கு. பொறுமையாப் பார்க்கலாம். எதுக்கும் படிச்ச விபரமான கண்ணுக்கு லட்சணமான பையனாப் பாருப்பா."

"எனக்குத் தெரியாதாப்பா? அதனாலதானே சல்லடை போட்டுத் தேடுறேன். பார்க்கலாம். அவளுக்குன்னு பொறந்தவன் என் கண்ணுல படாமலா போயிடுவான்" என்றான் சந்தோஷ் பெருமூச்சோடு.

"ம்... அப்புறம் தம்பி. நம்ம வீரராகவன் வந்திருந்தார்" முத்துக்குமாரசாமி தயக்கமாய் இழுக்க, சலிப்பாய் முகம் சுளித்தான்.

"என்னவாம் அவருக்கு?"

'என்னய்யா இப்படிக் கேட்கிற. அவரும் ஆறு மாசமா நடையா நடக்குறாரே" "ஆறுமாசம் என்ன ஆறு வருஷம் ஆனாலும் என்னோட ஒரே பதில் இதுதான். ஜோவுக்கு நல்லபடியா கல்யாணம் முடிஞ்சாத்தான் மத்தது எல்லாம். அதுவரைக்கும் அவரை சும்மா இருக்கச் சொல்லுங்க."

"இப்படிச் சொன்னா எப்படிய்யா? நீயும் தான் ஜோதிக்கு மூணு வருஷமா மாப்பிள்ளை தேடுற. எதுவுமே அமைய மாட்டேங்குது. அவர் மகளுக்கும் வயது ஏறுதில்ல."



"அதுக்கு நான் என்னம்மா பண்ண முடியும்? நான் யாரையும் வெயிட் பண்ணச் சொல்லல. அவங்களுக்கு அவசரம்னா வேற இடம் பார்த்துக்கச் சொல்லுங்கப்பா. எனக்கு அதுல ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்ல."

"அட என்னப்பா நீ. இப்படி வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா பேசக்கூடாது. உனக்கு மட்டும் என்ன வயது ஏறாமலா இருக்கு? நல்ல இடம்யா பொண்ணும் மகாலட்சுமியாட்டம் இருக்கு. நீ ஒரு வாட்டி பாரேன். உனக்கு உடனே பிடிச்சிடும்."

"இந்த விளையாட்டுக்கெல்லாம் நான் வரல்ல. என்னை விட்டுடுங்க" என்றவாறு எழுந்தான் சந்தோஷ். அவன் கையைப் பற்றி அமரவைத்தாள் ராஜலட்சுமி.

"உட்காரு. எப்பக் கல்யாணப் பேச்சை எடுத்தாலும் இப்படியே ஓடிடுற. இன்னிக்கு ஒரு முடிவைச் சொல்லாம உன்னை விடப்போறதில்ல."

"அதான் எம் முடிவை ஏற்கனவே சொல்லிட்டேனம்மா"

"சரி நீ சொல்வதை நாங்க ஒத்துக்கிட்ட மாதிரி நாங்க சொல்றதையும் நீ ஒத்துக்க. நீ உடனே கல்யாணம் பண்ணிக்க வேண்டாம். முதல்ல பொண்ணைப் பார்ப்போம். உனக்குப் பிடிச்சிருந்தா நிச்சயம் பண்ணிடுவோம்.

ஆறு மாசமோ ஒரு வருஷமோ கழிச்சுக் கல்யாணம் பண்ணிக்கலாம். அதுக்குள்ள ஜோதிக்கு நல்ல மாப்பிள்ளை அமைஞ்சா அவ கல்யாணத்தையும் உன் கல்யாணத்தையும் சேர்த்தே வெச்சுடலாம் என்ன சொல்றே?"

"அந்த ரிஸ்க்கே வேண்டாம்மா. நீங்க எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் நான் ஒரு வார்த்தை மறுக்காம தாலி கட்டுறேன். ஆனா இப்ப வேண்டாம். முதல்ல ஜோ கல்யாணம். அப்புறம்தான் என் கல்யாணப் பேச்சை எடுக்கணும்" கண்டிப்புடன் கூறிய மகனை இயலாமையாய் நோக்கினாள் ராஜலட்சுமி.

தாயின் முகம் வாடியதைக் கண்டு மனமிரங்கினான். "அம்மா! கவலைப்படாதீங்கம்மா. உங்களுக்காக இன்னும் ஒரே மாசத்துக்குள் ஜோவோட கல்யாணத்தை ரெடி பண்ணிடுறேன். அப்புறம் உடனே ஏன் அடுத்த நாளே நீங்க சொல்ற மகாலட்சுமியக் கல்யாணம் பண்ணிக்கிறேன். சரியா? சிரிங்கம்மா. என் பட்டு அம்மால்ல" கன்னத்தில் கிள்ளி முத்தமிட்டான்.

புன்னகைத்தாள் ராஜலட்சுமி "போடா நல்லா தாஜா பண்ணுவ."

"இல்லம்மா! உண்மையாகத்தான் சொல்றேன். இனிமே வீரராகவன் வந்தா சொல்லிடுங்க. எம் பையன் ஒத்துக்கிட்டான்னு."

"நிஜமாவாய்யா சொல்ற?" கேட்ட தந்தையின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"நிஜம்தாம்ப்பா! ரவி இங்கே இருக்கட்டும். நான் இன்னும் ரெண்டு நாள்ல சென்னைக்குப் போயி ஜோவுக்கு தீவிரமா மாப்பிள்ளை பார்த்து முடிவு பண்ணிடுறேன். மாப்பிள்ளைய அவளுக்கும் பிடிச்சுப் போச்சுன்னா உடனே கல்யாணத்தை வெச்சுடலாமே. அவளுக்குக் கல்யாணத்திற்குத் தேவையான நகையெல்லாம் ரெடியா இருக்கே. பிறகு என்ன?"



"பார்த்துய்யா! அவசரத்துல அஜாக்கிரதையாப் பார்த்துடாதே. நல்ல மாப்பிள்ளையாப் பாக்கணும். நானும் இங்க நாலு பேர்கிட்ட சொல்லி வெச்சிருக்கேன். எது அமையுதோ பார்ப்போம்." முத்துக்குமாரசாமி சொல்ல ராஜலட்சுமி தீவிரமாக யோசித்தாள். சட்டென முகம் மலர.

"ஏங்க கையில வெண்ணெய வெச்சிகிட்டு நெய்யுக்கு அலையுறோமே."

"இப்ப யாரு வெண்ணெய்?"

"அதாங்க அந்தப்புள்ள ரவி. கண்ணுக்கு லட்சணமா அழகா இருக்கு. அடக்கமான புள்ளையாகவும் இருக்கு. பணக்கார வீட்டுப் புள்ள படிச்சபுள்ள. அதோட நம்ம புள்ளையோட உயிர் சிநேகிதன். இது போதாதா? அந்தப் புள்ளைக்கே நம்ம ஜோதியை முடிச்சிடலாங்க." மனைவியின் ஆசையைக் கேட்டு மகனைப் பார்த்தார் முத்துக்குமாரசாமி.

சந்தோஷின் முகம் இருண்டு போயிருந்தது. சற்று முன் இருந்த கலகலப்பு உற்சாகம் எதுவுமின்றி இறுகிப் போயிருந்த மகனைக் கண்டு துணுக்குற்றார்.

"என்னய்யா அம்மா சொல்றதுல உனக்கு விருப்பமில்லையா?" என்றவாறு மகனின் தோளைத் தொட்டார். அதிர்ந்து நிமிர்ந்தான் சந்தோஷ்.

"எ... என்னப்பா கேட்டீங்க?"

"அம்மா சொல்றதுல எனக்கு சம்மதம்தான். வருடக்கணக்கா நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தானே இருக்கீங்க. ஒரே கம்பெனியில பங்குதாரரா இருக்கீங்க. உனக்கு அந்தப் புள்ளையைப் பத்தி நல்லாத் தெரியுமே.

சொல்லுய்யா அந்தப் புள்ளைக்கு நம்ம பொண்ணைப் பேசி முடிக்கலாமா?"

"அப்பா என்ன நீங்க? அம்மா மாதிரி பேசிட்டு. பார்த்த ஒரே நாள்ல எப்படிம்மா பொண்ணையே கொடுக்கிற அளவுக்கு அவன் மேல நம்பிக்கை வந்தது? உங்க அறியாமைக்கு அளவே இல்லையா?"

"எங்களுக்குத்தாம்பா அந்தப்புள்ள ஒருநாள் பழக்கம். ஆனா உனக்கு அப்படி இல்லையே. நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாப் படிச்சவங்க. ஒண்ணாவே தொழிலும் செய்யுறீங்க. நீயே எத்தனையோ முறை உன் நண்பனைப் பத்தி புகழ்ந்து பேசியிருக்கே. அப்போ அது பத்தரைமாற்றுத் தங்கமாகத்தானே இருக்கும். பார்க்கவும் அருமையாய் இருக்கிறான். அதனால்தான் இந்த யோசனை எனக்கு வந்தது."

அவசரமாய் மறுத்தான் சந்தோஷ். "ஊஹும். அதெல்லாம் சரிப்படாது. அவன் ஒத்துக்கவும் மாட்டான். நம்ம ஜோவுக்கு வேற இடம் தான் பார்க்கணும்."

"பேசிப் பார்க்காமலே ஒத்துக்க மாட்டான்னு சொல்றியேப்பா"

"எப்படிம்மா ஒத்துப்பான். அவன் எவ்வளவோ பெரிய பணக்காரன். எவ்வளவு படிச்சிருக்கான்னு தெரியுமா? அவன் எப்படி இப்படி ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை மணக்க சம்மதிப்பான்."

"ஏம்ப்பா நம்ம ஜோதிக்கு என்ன கொறைச்சல். நம்ம ஊர்ல அவ அழகுக்கு யாரும் போட்டிபோட முடியாது. அருமையா குடும்பம் நடத்துவா. பணத்திலயும் தான் நாம



என்ன குறைஞ்சு போயிட்டோம். இப்பவே அறுபது பவுன் செய்து வைத்திருக்கோம். அதோட அத்தையோட பேர்லயும் சொத்து இருக்கு. அது எல்லாம் ஜோதிக்குத் தானே. என்ன படிப்புதான் கொஞ்சம் கம்மி. ஆனாலும் குடும்பம் நடத்த இந்தப் படிப்பு போதாதா? நான் வெறும் அஞ்சாம் வகுப்பு வரைதான் படிச்சேன். இதோ நம்ம குடும்பத்தை நான் நடத்தலையா?" பரிந்துகொண்டு வந்தாள் ராஜலட்சுமி.

தலையைப் பற்றிக்கொண்டான் சந்தோஷ் "இதெப்படி முடியும்? இதுவே ஒரு மாதத்திற்கு முன்பென்றால் அம்மா இந்த முடிவை எடுத்ததும் சந்தோஷமாய் துள்ளிக் குதித்திருக்கலாம். நண்பனைக் கட்டித் தழுவியிருக்கலாம். ரவிக்கு ஜோவைக் கொடுப்பதென்றால் அதைவிட வேறென்ன இன்பம் இருக்க முடியும்? ஆனால்... ரவியின் இன்றைய நிலை தெரிந்தால் என்னாகும்?

அம்மா இப்படி விடாப்பிடியாய் நிற்பாளா? ரவியை பரிதாபமாய்ப் பார்த்தே கொன்றுவிடமாட்டார்களா? ஏற்கனவே துயரத்தில் இருக்கும் என் நண்பனை இவர்கள் முன்னிலையில் கூனிக்குறுக வைப்பதா? நெவர் அதை ஒருபோதும் என்னால் அனுமதிக்க முடியாது.

அப்பாதான் குரல் கொடுத்தார். "உனக்கென்ன இத்தனை அவசரம்? அந்தப் பையன் இங்குதானே இருக்கப் போகிறான். அவன் வந்த வேலை நல்லபடியாய் நடக்கட்டும். இந்தப் பேச்சு நம்மோடயே இருக்கட்டும். அந்தப் புள்ளைக்கு நம்ம ஊரும் நம்ம சனங்களும் பிடிச்சுப் போச்சுன்னா பிறகு பேசுவோம். அதுக்குச் சம்மதம்னா சந்தோஷம். இல்லன்னா வற்புறுத்தாம விட்டுடுவோம்.

இன்னிக்குப் பேசினதை அப்படியே மறந்திடு. உன் பேச்சுல கூட அது வெளியே வரக்கூடாது. புள்ளை தூங்கட்டும். நடு சாமம் ஆகப்போகுது பார். நீ போய் படுத்துக்கப்பா. காலையில அப்பா சந்தைக்கு போயிடுவேன். நீங்க பொறுமையா எழுந்து குளிச்சுச் சாப்பிட்டு ஊரைச் சுத்திப் பாருங்க. வெயில் ஆனதும் வீட்டுக்கு வந்திடுங்க." என்றார் மகனிடம்.

விடுதலை பெற்றதுபோல் நிம்மதியாய் எழுந்தான் சந்தோஷ் "சரிப்பா! நீங்க இன்னும் சாப்பிடலியே. சாப்பிட்டுப் படுங்க." என்றவாறு மரப் படிகளில் ஏறி மாடிக்குச் சென்றான்.

அதுவரை அனைவரின் பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்த ஜோதியின் தூக்கம் சுத்தமாய்க் கலைந்துபோனது. அவர்களது மற்ற பேச்சுக்களை ஒதுக்கியவளின் மனதில் ஒரே கேள்விதான் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

'இவரைக்கூட ஒரு பெண்ணுக்குப் பிடிக்காமல் போகுமா? இவரை வேண்டாம் என்று சொல்லி திருமணத்தையே நிறுத்திவிட்டாளா? கிராமத்தில் தான் மாப்பிள்ளையைக் கண்ணில் காட்டமாட்டார்கள். சென்னையிலுமா அப்படி? திருமணம் வரை வந்து ஏன் நிறுத்த வேண்டும். என்ன காரணம்?'

கேள்விகள் வண்டாய்க் குடைந்தது. விடிய விடிய கண்களை மூடாமல் சிந்தித்தும் விடைதான் கிடைக்கவேயில்லை.



# 6

பெண்ணல்ல பெண்ணல்ல ஊதாப்பூ
சிவந்த கன்னங்கள் ரோஜாப்பூ
கண்ணல்ல கண்ணல்ல அல்லிப்பூ
சிரிப்பு மல்லிகைப்பூ!

**மெ**த்தென்ற தோசையைச் சட்னியில் தோய்த்து வாயிலிட்டான் ரவி. பஞ்சாய் கரைந்து போயிற்று. ரசித்துச் சுவைத்துச் சாப்பிட்டான். பரிமாறிய ராஜலட்சுமியைப் பார்த்து "அம்மா தோசை ரொம்ப சாப்ட்டா டேஸ்ட்டா இருக்கும்மா. நான் இதுவரை நெய் ரோஸ்ட், பேப்பர் ரோஸ்ட்னு மொறுமொறு தோசைதான் சாப்பிட்டிருக்கேன். இது வித்தியாசமாய் அதே சமயம் சுவையாகவும் இருக்கும்மா. இதை ஸ்பெஷலா செய்வீங்களா?" என்றான்.

"அப்படியெல்லாம் எதுவும் இல்லய்யா. ஆட்டுக் கல்லில நல்லா மையா ஆட்டினாலே தோசை பஞ்சுபோல வந்திடும். நாங்க எப்பவுமே மாவாட்டுற மிஷின்ல ஆட்டுறதில்ல" என்றாள் ராஜலட்சுமி.

அடுப்பிலிருந்து சூடாய் எடுத்து வந்த தோசையை அவன் தட்டில் வைத்தாள் ஜோதி. சட்னியும் சாம்பாரும் ஊற்றினாள்.

"ஐயோ போதுங்க ஏற்கனவே நாலு தோசை சாப்பிட்டுட்டேன்."

"நாலுதானே. உங்க பக்கத்தில இருக்கறவன் இதோட எட்டாவது தோசை நல்லா தின்னுட்டு உப்பில்லை, தோசை கல்லு மாதிரி இருக்குன்னு வேற சொல்வான். தடிமாடு" என்றவாறே அடுக்களைக்குள் சென்றாள்.

"உன் வாயிலேயே உண்மை வந்திடுச்சு. இந்தக் கல்லு தோசையை எவ்வளவு கஷ்டப்பட்டு விழுங்கிறேன் தெரியுமா? நான் எழுந்திட்டா ரவியும் எழுந்திடுவானேன்னு உட்கார்ந்திருக்கேன்."

"ஏய் பொய் சொன்னே வாயிலே தோசைக் கரண்டிய வெச்சிடுவேன். இவ்வளவு நேரம் சப்புக்கொட்டிச் சாப்பிடல நீ?"

"ஏன்டி நான் கஷ்டப்பட்டு விழுங்கினது உனக்கு சப்புக்கொட்டிச் சாப்பிடுற மாதிரித் தெரியுதா? இதுக்குப் பேரு தோசையா? சரி சரி. இன்னும் ஒண்ணு போடு" என்றவாறு தட்டை நீட்டினான்.

"என் தோசையைக் குறை சொன்னேல்ல. போடா, உனக்கு தோசை கிடையாது. பழைய சோறு போடுங்க அத்தை" என்றவாறு அடுத்த தோசையையும் ரவியின் தட்டில் போடவே, ரவி பதறி அதை எடுத்து நண்பனின் தட்டில் வைத்தான்.

"போதுங்க. வீட்ல நான் ரெண்டு தோசைதான் சாப்பிடுவேன். இன்னிக்கு ரொம்பவே சாப்பிட்டுட்டேன் போதும்."

"ஏங்க. உங்களுக்கும் என் தோசை பிடிக்கலியா?"

"சேச்சே! நிஜமாவே ரொம்ப சூப்பரா இருந்தது. காலையில ஒரு சொம்பு நிறைய பதநீர் கொடுத்தானே, அதுலயே வயிறு நிறைஞ்சிடுச்சு. உங்க தோசை டேஸ்டா இருந்ததாலதான் இவ்ளோ சாப்பிட்டேன். இதுக்கு மேலே சாப்பிட்டா அப்புறம் உடம்பு தாறுமாறா உப்பிடும்" என்றான் ரவி சிரித்தவாறே.



மின்னலாய் பளீரிட்ட அவன் சிரிப்பில் உள்ளம் நிறைந்தவளாய் திரும்பி உள்ளே சென்றாள். ராஜலட்சுமி கனிவோடு அவனைப் பார்த்தாள்.

"தம்பி நீ நல்ல வளர்த்திதான். அதனால எவ்ளோ சாப்பிட்டாலும் உடம்பு குண்டாகத் தெரியாது. அதோடு வயசுப் புள்ள நல்லாச் சாப்பிடணும். அப்பத்தான் உடம்புக்கு நோய் நொடி வராது. எங்க சமையல் உங்களுக்குப் பிடிச்சிருக்காப்பா? எதுவும் மாத்திச் செய்யணும்னா சொல்லுங்க."

"வேணாம்மா. எனக்காக எதையும் மாத்த வேண்டாம். உங்க மனம் அப்படியே எங்க அம்மா மாதிரியே இருக்கு. நீங்க எது செய்தாலும் சந்தோஷமா சாப்பிடுவேன். சாப்பாட்டு விஷயத்துல நான் எதையும் ஒதுக்கமாட்டேன்."

"தம்பி! உன்னைக் கட்டிக்கப் போற பொண்ணு ரொம்பக் கொடுத்து வெச்சவ" என்றாள் ராஜலட்சுமி. தோசையைத் திருப்பிப் போட்டுக் கொண்டிருந்த ஜோதி தன்னையும் மீறி புன்னகைத்தாள். அதோடு நேற்றைய இரவுப் பேச்சின் நினைவு வர லேசாய்த் திரும்பி ரவியைப் பார்த்தாள்.

ராஜலட்சுமியின் பேச்சு காதில் விழாததுபோல் கைகளைக் கழுவிக் கொண்டிருந்தான். அவனுடனே சந்தோஷும் எழுந்து கொள்ள, "அம்மா நாங்க தோட்டத்துக்குப் போயி பாட்டியையும் அத்தையையும் பார்த்திட்டு அப்படியே வெளியே போயிட்டு வர்றோம்" என்றவாறு கைகளைத் துடைத்தான்.

"போயிட்டு மத்தியான சாப்பாட்டுக்கு வந்திடுங்கப்பா."

"சரிம்மா! வாடா ரவி. எங்க பாட்டி உன்னைப் பார்க்கணும்னு நேத்து நைட்டே சொன்னாங்க. நான்தான் நீ தூங்கிட்டேன்னு சொல்லி எழுப்பலை. விடியும் போது பாட்டியும் அத்தையும் தோட்டத்துக்குப் போயிட்டாங்க. வா உன்னை அவங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்." என்றவாறு அவன் அழைத்துச் சென்றது ஒரு பெரிய வயல்காடு.

வயலில் அறுவடை ஜோராக நடந்து கொண்டிருக்க, அறுவடை செய்த நெல்பயிர்கள் களத்துமேட்டு மேடையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. ஆணும் பெண்ணுமாய் தலையில் துணிகளைக் கட்டிக்கொண்டு சரசரவென அறுவடை செய்தது ரவிக்கு ஆச்சர்யமாய் இருந்தது. பெண்களின் வாய்தான் பேசிக்கொண்டு இருந்ததே தவிர கைகள் பரபரவென தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தன.

அத்தனை சுறுசுறுப்பு, செய்யும் வேலையில் ஈடுபாடு, நேர்த்தி, அக்கறை இப்படி எத்தனை வேண்டுமானாலும் சொல்லலாம். இது பெண்களுக்கே உரிய தனித்தன்மை. இதிலெல்லாம் நம்மால் நிச்சயமாய் போட்டிபோட முடியாது. பிரமிப்பாய் அவர்களைப் பார்த்துக்கொண்டே நடந்தபோது சட்டென ஒரு பெண்மணியின் மீது மோதிக் கொண்டான்.

உடனேயே பதறி, "மன்னிச்சிடுங்க. ஸாரி. நீங்க வந்ததை நான் கவனிக்கல. வெரி ஸாரி" என்றான் அவசரமாய்.

அந்தப் பெண் கோபப்படவுமில்லை. பரவாயில்லை என்று சொல்லவும் இல்லை. மன்னித்துவிட்ட பாவனையோடு பார்க்கவும் இல்லை. முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியையும் காட்டாமல் இடுப்பில் இருந்த நெற்கதிர் கட்டோடு அவனை



விட்டு விலகி வந்தாள். பின்னால் வந்த சந்தோஷ் அழைத்ததும் நின்றாள்.

"அத்தே! இது என் பிரண்ட் ரவி. நம்ம வீட்டுக்கு வந்திருக்கான். உங்களைப் பார்க்கணும்னுதான் இங்கே வந்தோம். ரவி இது என் அத்தை மனோகரி என் அப்பாவின் தங்கை." சந்தோஷ் பரஸ்பரம் அறிமுகப்படுத்த ரவி கைகளைக் குவித்து வணங்கினான்.

மனோகரி மிக லேசாய் ஒரு புன்னகை செய்தாள். அவ்வளவுதான். வேறு ஒரு வார்த்தையும் பேசவில்லை. சந்தோஷ் மீண்டும் கேட்டான்.

"பாட்டி எங்கே அத்தை? காணோமே?"

"நெல் அளக்கற இடத்தில் இருப்பாங்க போய்ப் பாருங்க. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. போகட்டுமா?" என்றவள் அவர்களின் பதிலுக்குக் காத்திராமல் நடக்க ஆரம்பித்தாள்.

மென்மையான அதே சமயம் இனிமையான குயிலின் குரல். ஜோதிக்கு எப்படி இந்த இனிமையான குரல் வந்தது என்று புரிந்தது ரவிக்கு.

"ரவி தப்பா எடுத்துக்காதேடா. நான் தான் அத்தையைப் பத்தி சொல்லியிருக்கேனில்ல. யார்கிட்டயும் அதிகம் பேசுவதில்லை."

"புரியுது சந்தோஷ். நான் ஒண்ணும் தப்பா நினைச்சுக்கல. அவங்க அமைதியையும் அதிராத பேச்சையும் கேட்டு அப்படியே நின்னுட்டேன்."

"இந்த அமைதி மாமா இறப்பிற்குப் பிறகு வந்ததுடா. அதுக்கு முன்னெல்லாம் அத்தை சிட்டுக்குருவி மாதிரி பறந்து

திரிந்தவங்க தான். இப்பத்தான் தன்னோட சிறகுகளை ஒடுக்கிக்கொண்டு அப்படியே முடங்கிக் கொண்டார்கள். ஒரு கணவனின் மரணம் பெண்களை எப்படி பாதித்து விடுகிறது என்று பார்த்தாயா? எவ்வளவு வேதனையான விஷயம் இது?"

"உண்மை தான். பிறந்தது முதல் வளரும் வரை வைத்திருக்கும் பொட்டு, பூ, அலங்காரம் எல்லாத்தையும் இழப்பது ரொம்பக் கொடுமை. உன் அத்தைக்கு ரொம்ப வயதும் இல்லையே சந்தோஷ். நீங்க அப்பவே ஒரு நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து இவங்களுக்கு மறுமணம் செய்திருக்கலாமே?"

"ஐய்யய்யோ சத்தமாச் சொல்லிடாதே. கிராமங்கள் இன்னும் அந்த அளவுக்கு முன்னேறல. இந்த மாதிரிப் பேசினாலே அசிங்கமா நினைப்பாங்க. அதோட விதவையை அதுவும் குழந்தையோட இருக்கும் விதவைங்களை ஏத்துக்கிற அளவுக்கு பரந்த மனப்பான்மை உள்ள ஆண்கள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

இப்போ பத்திரிகைகள்ல மணப்பெண் தேவை விளம்பரத்தில்கூடப் பார்த்திருப்பியே விதவை என்றாலும் சம்மதம். ஆனால் குழந்தைகள் இல்லாத விதவைப் பெண் என்றால் விண்ணப்பிக்கவும் என்று தான் விளம்பரம் செய்திருப்பார்கள். அவனுக்கு நாலு புள்ளைங்க இருந்தாலும் வர்ற பெண் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமாம். ஆனால் குழந்தையோடு வரும் பெண்ணை ஏற்றுக்கொள்ள மாட்டானாம்.

அதுல இருந்தே தெரியவில்லையா நம் பெண்களின் நிலைமை? பெண்கள் உரிமை, பெண்கள் சுதந்திரம் என்பதெல்லாம் வெறும் பேச்சுத்தான்டா. இதையெல்லாம்



யோசித்தால் மனவேதனை தான் அதிகமாகும்." என்றான் சந்தோஷ் பெருமூச்சோடு. பேசிக்கொண்டே களத்துமேட்டிற்கு வந்துவிட்டனர்.

"ஏ ஆச்சி அதோ பாருங்க. அண்ணனுங்க வந்தாச்சு. நான் சொன்னேன்ல அந்த ரவி அதுதான்" உற்சாகமாகக் குரல் கொடுத்தாள் மீனா.

தலையெல்லாம் நரைத்திருந்தாலும் பாட்டியிடம் தளர்ச்சியில்லை. மிடுக்காக எழுந்து வந்து இருவரையும் கட்டிக்கொண்டாள் பாட்டி. வெற்றிலை வாயோடு சிரித்து "எய்யா ராசா! நல்லாயிருக்கீங்களா? சாப்பிட்டியளா?" என்றார் அன்போடு.

"வயிறு முட்டச் சாப்பிட்டாச்சு பாட்டி. இது ரவி" என அறிமுகப்படுத்த, "அதான் பேத்தி எல்லாம் சொல்லிட்டாளே. நேத்தே நான் வந்ததும் ரெண்டு பேத்திகளும் உன்னைப் பத்திதான் கதை கதையா சொன்னாங்க. உடனே உன்னைப் பார்க்கணும்னு நினைச்சேன். எம் புள்ளை தான் ராத்திரியில் உன்னைத் தொந்தரவு பண்ணக்கூடாதுன்னு சொல்லிட்டான். எய்யா எந்த ஊரு? நம்ம வீடு எல்லாம் பிடிச்சிருக்கா?" ஆவலாய்க் கேட்ட பாட்டியைப் பார்த்துப் புன்னகைத்தான் ரவி.

"ரொம்பப் பிடிச்சுருக்குப் பாட்டி. அமைதியான அழகான இந்த கிராமம். அன்பை மட்டுமே காட்டுற உங்களை மாதிரி அன்பானவங்க. உங்களை எல்லாம் பார்க்கும்போதே இங்கேயே இருந்திடலாம்னு கூடத் தோணுது."

"அப்ப இங்கேயே இருந்திட வேண்டியதுதானே" என்றவாறு கையில் சாப்பாட்டுக் கூடையோடு வந்தாள் ஜோதி. தலைகுளித்துக் கூந்தலை காற்றாட விட்டு பச்சை

நிற தாவணியில் பின்னணியில் பசுமையோடு அவள் நின்ற கோலம் லயிக்க வைத்தது.

"ஏய் வாயாடி! நீ ஏன் இங்கே வந்தே? எங்களை மோப்பம் பிடிச்சுட்டே வந்திட்டியா?" சந்தோஷ் கேட்க அவனிடம் சீறினள் ஜோதி.

"ஆமா நீ பெரிய மன்மதன் பாரு. உன்னைப் பார்க்க ஆசைப்பட்டு உன் பின்னால வர்றதுக்கு? நான் அம்மாவுக்கும், ஆச்சிக்கும் சாப்பாடு கொண்டு வந்தேன்."

"வீட்ல வேலை செய்யக் கஷ்டப்பட்டு ஏதாவது ஒரு சாக்கு போக்கு சொல்லி இங்க வந்திடுற. சோம்பேறிக் கழுதை."

"போடா நீதான் ஊர் சுத்துற மாடு, தடிமாடு."

"ஆச்சி" கீறிச்சிட்டாள் மீனா. "ஆச்சி முதல்ல இந்த இரண்டு பேர்ல ஒருத்தரை சீக்கிரமா கல்யாணம் பண்ணி அனுப்பிடுங்க. இதுங்க போடுற சண்டையைச் சகிக்க முடியலை. எப்பொழுதும் சண்டைதான். வீட்ல இருக்க முடியலை. ஒண்ணு இவனுக்குப் பொண்ணு பாருங்க, இல்ல இவளுக்கு மாப்பிள்ளை பாருங்க. எது செய்தாலும் சீக்கிரம் செய்யுங்க."

"நான் ஏன் இவனுக்குப் பயந்து கல்யாணம் பண்ணிக்கணும். இந்த மாடுக்கு முதல்ல கல்யாணம் பண்ணுங்க. அதோட இவன் வாய் மூடிடும். எங்களுக்குள்ள சண்டையும் வராது."

"எதுக்கு வர்றவளையும் சேர்த்து வறுத்தெடுக்கவா? நான் ஒருத்தன் உங்கிட்ட மாட்டிக்கிட்டு அவஸ்தைப்படுறது போதாதா? முதல்ல உன்னைச் சமாளிக்கும் அளவுக்கு



திறமை இருக்கிற ஒருத்தனைத் தேடிப் பிடிக்கணும். ஆனா அப்படி ஒருத்தன் கிடைக்கிறது தான் கஷ்டம்."

"அதான் உன் பிரெண்ட் இருக்கிறாரே?" நண்பர்கள் இருவரும் திக்கென அதிர்ந்து நிமிர, "என்ன பேயைக் கண்ட மாதிரி முழிக்கிறீங்க? அதான் உன் பிரெண்ட் இருக்காரே அவரையும் கூடச் சேர்த்துக்கிட்டுப் போய்த் தேடு. எனக்குன்னு பொறந்தவன் கிடைக்காமலா போய்விடுவான்?" என கேலியாய் சொன்னதும் இருவரும் நிம்மதியாய் மூச்சுவிட்டனர்.

ரவியின் முகம் இன்னமும் இருட்டாய் இருக்க, "என்ன ரவி சார் எனக்கு மாப்பிள்ளை தேட இவ்வளவு பயமா? முகமெல்லாம் பேயறைஞ்ச மாதிரி இருக்கு? நானும் நல்ல பொண்ணுதான். கொஞ்சம் ஜாஸ்தியாப் பேசுவேனே தவிர மத்தபடி எங்கிட்ட ஒரு குறை கிடையாது. விதவிதமா சமைப்பேன். வீட்டைச் சுத்தமா வெச்சுப்பேன். யாரையும் குறை சொல்லமாட்டேன். எந்த வம்பிற்கும் போகமாட்டேன். தெருவில நடந்தா குனிந்த தலை நிமிரமாட்டேன். அடக்கமான பொண்ணு தான். பயப்படாதீங்க." என்றாள் ஜோதி.

பாட்டி குறுக்கிட்டார். "ஏன்டி பெண்ணே! இதெல்லாம் உன்னைப் பெண் பார்க்க வரும் மாப்பிள்ளைகிட்ட நாங்க சொல்லணும். அதுதான் முறை."

"அடப்போங்க ஆச்சி. இவளே சொன்னாத்தான் உண்டு. இதுல ஏதாவது ஒண்ணு உண்மையா இருக்கா? நாம தான் பொய் பேசமாட்டோமே?"

சந்தோஷ் இயல்பாய்ப் பேசினாலும் ரவி இன்னமும் பேச்சின்றியே நிற்க அவன் அருகில் வந்தாள் ஜோதி.

"நேரடியாகவே கேட்கிறேன் ரவி. உங்களை மாதிரி படிச்ச ஒருத்தர் என்னை மாதிரி கிராமத்துப் பெண்ணா இருந்தா கட்டிக்க மாட்டீங்களா ரவி?" கண்களை நேருக்கு நேராய் பார்த்துக் கேட்க, பதறி மறுத்தான் ரவி.

"சேச்சே! யார் சொன்னது? எல்லாருமே படிச்ச பொண்ணா பட்டணத்துப் பொண்ணாத் தேடமாட்டாங்க. மனசுக்குப் புடிச்ச பொண்ணாத்தான் தேடுவாங்க. உங்களைக் கூட யாருக்கும் பிடிக்காமப் போகுமா?"

"அப்போ உங்களுக்கு என்னைப் புடிச்சிருக்கா?" ஜோதியின் நேரடிக் கேள்வியில் தடுமாறிப் போனான் ரவி. பதில் சொல்லத் திணறி நண்பனைப் பார்த்தான். சந்தோஷ் ஆத்திரத்தில் குறுக்கிட்டான்.

"ஏய் ஜோ! என்ன கொழுப்பா? வர வர உன் விளையாட்டுக்கு அளவே இல்லாமப் போச்சு. இது என்ன பேச்சு? அவன் நம்ம குடும்பத்தைப் பத்தி என்ன நினைப்பான்? உனக்கு ஏன் இப்படி புத்தி போகுது?" சந்தோஷின் உண்மையான கோபத்தில் மிரண்டு போனாள் ஜோதி.

"டேய் அவங்க ஏதோ குழந்தைத்தனமா கேட்டதுக்கு ஏன் இப்படி கோபப்படுறே? விடு பாவம். அவங்க ரொம்ப பயந்துட்டாங்க."

"நீ சும்மா இருடா. இவளை இப்படியே பேசவிட்டது தப்பாப் போச்சு. யாராவது இவ இப்போ பேசினதைக் கேட்டா என்ன நினைப்பாங்க. நாளைக்கு இவளைப் பெண் பார்க்க வருபவர்கள் காதில இந்தப் பேச்சு விழுந்தா என்னாகும்? கழுதை மாதிரி வளர்ந்தாப் போதுமா? கொஞ்சம் அறிவு வேண்டாம். இனி இப்படிப் பேசினா பல்லைத் தட்டுவேன்.



போ வீட்டுக்குப் போ." அவனது கத்தலில் பாட்டி இடையில் புகுந்தாள்.

"ஏன்டா அவ எப்பவும் போலத்தான் பேசிட்டா. அதுக்கு ஏன் உனக்கு இவ்வளவு கோபம் வருது. பொறுமையா பேசுய்யா."

"ஆமா இப்படி ஆளாளுக்கு இவளுக்கு செல்லம் கொடுத்து வெச்சிருக்கீங்க. அதான் இப்படி முட்டாள் மாதிரி வளர்ந்து நிக்குறா?"

கையிலிருந்த சாப்பாட்டுக் கூடையை திம்மென்று வைத்தாள் ஜோதி. "இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ இப்படிக் கத்துற. நான் எது பேசினாலும் தப்பு. சும்மா ஒரு பேச்சுக்குத்தானே கேட்டேன் ரவி. நீங்களே சொல்லுங்க நான் கேட்டது தப்பா?"

"ஐயோ இல்லீங்க. நான் தப்பாவே எடுத்துக்கலை. இவன் எப்பவும் போல பேசி உங்களைச் சீண்டுறான். நீங்க ஒண்ணும் தப்பா எடுத்துக்காதீங்க."

கண்களில் நீர் கசிய மறுப்பாய் தலையசைத்தாள் ஜோதி. "இல்ல ரவி அவனுக்கு எப்பவுமே எம்மேல கடுப்பு தான். அவனுக்கு வயது முப்பதுக்கு மேல ஆயிடுச்சில்ல. கல்யாணம், குழந்தை, குட்டின்னு வாழ்ந்திருக்க வேண்டியவன் இப்ப என்னால தான் எல்லாம் தடைபட்டுப் போய் நிக்குது. அந்தக் கோபம் அவனுக்கு. நான் என்ன பண்ண முடியும் ரவி எவனையாவது இழுத்துட்டா ஓட முடியும்? அப்படி என்னை வளர்க்கலையே.

எந்த ஆம்பிளையையும் ஏறெடுத்துப் பார்க்கத் தோணலையே. என்னைப் பொண்ணு பார்க்க வர்றவன்

எல்லாம் அப்பா ஏன் தற்கொலை பண்ணார்? அம்மாவோ நடத்தை பிடிக்காமலா? என்ன ஏதுன்னு? கேட்டுக் கொல்றானுங்க. என்னை வேண்டாமின்னு சொல்லிட்டுப் போயிடுறானுங்க. நான் என்ன தப்புப் பண்ணினேன் ரவி. என்னை ஏன் எல்லோரும் தண்டிக்கிறாங்க?

கல்யாணம் குடும்ப வாழ்க்கை எனக்குத் தேவை யில்லை. ஆனா என் கல்யாணம் முடிஞ்சாத்தான் இந்த வீட்ல உள்ளவங்க அடுத்த கல்யாணத்தை நடத்தத் தொடங்குவாங்க. இப்போ நான் எல்லாருக்கும் தடையா வேண்டாத சுமையா இருக்கேன் ரவி. என்ன தான் எம்மேல எல்லாரும் அன்பா இருந்தாலும் அவங்க அடி மனசில வெறுப்பு வரத்தானே செய்யும்."

"ஏய்! என்னடி உளர்ற. யாருக்கு உம்மேல வெறுப்பு ம்?" உறுமிய சந்தோஷைத் திரும்பியும் பாராமல் ரவியை நேராகப் பார்த்தாள் ஜோதி.

"ரவி இதையெல்லாம் நான் உங்ககிட்ட ஏன் சொல்றேன்னு நினைக்கிறீங்களா? என்னவோ எனக்கு உங்களைப் பார்த்தா அந்நியமாத் தெரியலை. ஏதோ எங்க குடும்பத்துல ஒருத்தர் மாதிரி ஒரு உள்ளுணர்வு. ரொம்ப நாள் பழகின மாதிரி ஒரு எண்ணம் ரவி. இவங்க எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறேன்னு சொல்லி எத்தனையோ பேரை கூட்டிட்டு வந்தாங்க.

எவனுக்கும் என்னை, என் குடும்பத்தைப் பிடிக்கலை. இப்ப நான் உங்க கிட்ட கேட்கிறேன். நீங்க பெரிய கம்பெனி வெச்சு நடத்துறீங்களாமே. அதுல வேலை பார்க்கிற ஏதாவது ஒரு கஷ்டப்பட்டவனை எனக்குப் பாருங்க ரவி. கஷ்டப்பட்டவன் கூட கிடைக்கலைன்னா பரவாயில்லை.



ஏதாவது ஊனமுற்ற மாப்பிள்ளை என்றாலும் பரவா யில்லை. நான் முகம் சுளிக்காமல் மன நிறைவோடு ஏற்றுக் கொள்வேன்" என்றாள்.

"ஏய் உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இப்படிப் பேசற அளவுக்கு இங்க என்ன நடந்துப் போச்சு?" சந்தோஷ் கத்தினான்.

"முடியும் என்னால வாழ முடியும். என்னைப் பொறுத்தவரை மாப்பிள்ளை எப்படி இருந்தாலும் சரி ரவி. ஏன்னா எனக்கு எந்த எதிர்பார்ப்பும், கற்பனைகளும் கிடையாது. அதனால கிடைத்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்வேன். அப்புறம் மாப்பிள்ளை வீட்டாரிடம் என் அப்பாவைப் பற்றி முதலிலேயே சொல்லிவிடுங்கள்.

பிறகு நாம் மறைத்துவிட்டோம் என்று சொல்லக் கூடாது பாருங்கள். ஒரு பொய் கூட சொல்லி என் திருமணம் நடக்கக்கூடாது. என்ன ரவி?" கேட்டவளை விழி எடுக்காமல் பார்த்தான் ரவி.

மனம் தவியாய் தவித்தது. அந்த அழகு முகம் கண்களில் வழியும் கண்ணீரோடு நின்ற கோலம் அவனை வதைத்தது. ஒரு முடிவுடன் உங்களுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை என்னால பார்க்க முடியும். நான் நாளைக்குச் சென்னை கிளம்புறேன். ரெண்டே நாளில் மாப்பிள்ளை யோடு வருகிறேன்.." என்ற அவனது பதிலில் அனைவருமே வாயடைத்துப் போயினர்.

# 7

கனவான காதல் நிலையாகவென்று
அழியாத சிலைகள் செய்தாயோ
ஒன்றும் அறியாத பெண்ணின்
மனவாசல் தொட்டு திறவாமல்
எங்கே சென்றாயோ!

தனது பெட்டியினுள் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான் ரவி. அம்மா, அப்பா, ஜோதி, மீனா என அனைவருமே செய்வதறியாது நிற்க சந்தோஷ் கோபமாய் திட்டிக் கொண்டிருந்தான்.

"டேய் இவ பேச்சை சீரியஸா எடுத்துக்கொண்டு இப்படிக் கிளம்புகிறாயே. வந்தது வந்தே ஒரு பத்து நாள் இருடா. அப்புறம் நாம சேர்ந்தே போய் மாப்பிள்ளை தேடலாம். சொன்னாக் கேளுடா."

"இல்ல சந்தோஷ். நான் ஏற்கனவே மாப்பிள்ளையை முடிவு பண்ணிட்டேன். அதைப் பத்தி மாப்பிள்ளையோட அம்மாகிட்ட பேசலாம்னுதான் இப்பக் கிளம்புறேன். என்னைத் தடுக்காதே."

"என்னடா சொல்றே? மாப்பிள்ளைய முடிவு பண்ணிட்டியா? யாரு? யாருடா?" அவசரமாய் கேட்டான் சந்தோஷ். ஜோதியின் முகம் லேசாய் ஏமாற்றமடைந்தது. உடனே அதை மறைத்துக் கொண்டு இயல்பாய் நின்றாள்.

"இப்பச் சொல்லமாட்டேன்டா. முதல்ல மாப்பிள்ளை யோட அம்மாகிட்ட பேசிட்டு முடிஞ்சா அவங்களைக் கையோடு கூட்டிட்டு வந்து பேசுறேன். ஆனா ஒரு கண்டிஷன். ஜோதிக்கு, உங்களுக்கெல்லாம் பிடிச்சிருந்தா மட்டும் மேற்கொண்டு பேசலாம். இல்லேன்னா விட்டுடு வோம்."



"தம்பி! அவ ஏதோ சின்னப் பொண்ணு. அவ பேச்சைக் கேட்டு எதுவும் அவசர முடிவை எடுக்க வேண்டாம். பக்கத்து ஊர் பண்ணையார் தன் மகனுக்குப் பெண் தேடுவதாகச் சொன்னார். நான் நம்ம புள்ளையைப் பத்திச் சொல்லியிருக்கேன். இன்னும் ரெண்டு நாள்ல நல்ல முகூர்த்த நாள் இருக்கு. அன்னிக்கு வந்து பேசி முடிவு பண்ணிடலாம்னு சொல்லியிருக்கார். நானும் சரின்னு சொல்லிட்டேன். நாளை மறுநாள் அவங்க வரட்டும். வந்து பார்த்துப் புடிச்சுப் போச்சுன்னா ஒரே மாசத்துல கல்யாணத்தை வெச்சிடலாம்."

"அப்பா நிஜமாவா சொல்றீங்க? இதை ஏன் முதல்லயே சொல்லல?"

"சொல்லத் தானப்பா வீட்டுக்கு ஓடிவந்தேன். அதுக்குள்ள இங்க இவ்வளவு களேபரம் நடந்திருக்கு. தம்பி! நீங்க இப்ப ஊருக்குப் போக வேண்டாம். ரெண்டு நாள் இருந்து பாருங்க. ஒருவேளை இந்தச் சம்பந்தம் அமையலைன்னா அதற்கப்புறம் வேற மாப்பிள்ளை பாருங்க சரிதானா?"

ரவி அமைதியாய் பெட்டியை மூடினான். "சரிங்கப்பா! எப்படியோ ஜோதிக்கு நல்லபடியா வாழ்க்கை அமைஞ்சா சந்தோஷம் தான். பண்ணையார் குடும்பம் என்றால் நல்ல வசதியான குடும்பமா?"

"ஆமாம்ப்பா. வசதிக்கு ஒன்றும் குறைவில்லை. நாமும் பெண்ணைச் சும்மா அனுப்பப் போவதில்லையே. எழுபது பவுன் நகை பேசி வைத்துள்ளேன். அப்புறம் ரொக்கமா ரெண்டு லட்சம். அதோட என் தங்கை பேரில் உள்ள சொத்து."

"ஏம்ப்பா இது அத்தனையும் கொடுத்துத் தான் பொண்ணைக் கட்டிக் கொடுக்கணுமா? இது என்ன பழக்கம் ச்சே! இதை வாங்கும் மாப்பிள்ளைக்குக் கூசாதா? தன்னையே விலை பேசி விற்பதைப் போல் உணர மாட்டானா?" ரவி முகத்தைச் சுளித்தான்.

"அட நீ வேற. இது இல்லாம இப்ப எவன் பொண்ணைக் கட்டுறான். ஆண்டியா இருந்தாலும் அரசனா இருந்தாலும் பொண்ணைக் கொடுத்து தட்சணையும் கொடுத்துதான் ஆக வேண்டும். நம்ம பொண்ணு போற இடத்தில சீரும் சிறப்புமா வாழ வேண்டாமா? அதற்காக வேணும் நாம கொடுத்துத் தானே ஆகணும். காலம் காலமா தொடரும் பழக்கம். இனிமேலா இது மாறப்போகுது?"

ரவி ஜோதியை ஏறிட்டான். அவள் முகத்தில் துளியும் சிரிப்போ, நாணமோ, ஆர்வமோ எதுவுமே இல்லை. எந்த உணர்ச்சியும் காட்டாமல் கல்லாய் இறுகிப் போயிருந்தது முகம். யோசனையோடு அவள் முகத்தை ஆராய்ந்தான். ஒருவேளை பண்ணையார் மாப்பிள்ளையைப் பிடிக்க வில்லையோ.

இந்த எண்ணம் தோன்றும்போதே அவன் மனம் சிறகடித்தது. இது தப்பு. அடுத்தவரின் மனநிலை புரியாமல் இப்படி எண்ணுவது தவறு என்று மனதைக் குட்டி அடக்கி வைத்தான்.

மற்றவர்கள் திருமணப் பேச்சைப் பேசிக் கொண்டிருக்க ஜோதி அவ்விடத்தை விட்டு நகர்ந்து போனாள். ரவியும் யோசனையோடு எழுந்து அவள் பின்னே போக கிணற்றடியில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள் ஜோதி. பதறிப்போனான் ரவி.



"ஏங்க ஜோதி ஏன் அழறீங்க? உங்களுக்கு அந்த மாப்பிள்ளையைத் தெரியுமா? அவரைப் பிடிக்கலையா?" மெல்லிய குரலில் கேட்டவனைத் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

தவிப்பாய்க் கேட்டவனைப் பார்த்ததும் கண்ணீர் நிற்காமல் வழிந்தது. பிடிக்கவில்லை என தலையசைத்தாள்.

"ஏன்?"

"அவன் ஏற்கனவே எங்க சொந்தக்காரங்க பொண்ணை விரும்பினான். அது எனக்குத் தெரியும்."

"இதை உங்க மாமாகிட்டச் சொல்லியிருக்கலாமே."

"வர்ற சம்மந்தம் எல்லாம் தட்டிப் போகுதுன்னு மாமா ரொம்ப வருத்தப்படுறாங்க. இந்த சமயத்தில நான் போய் எதுவும் சொல்லக் கஷ்டமா இருக்கு."

"அப்போ பேசாம கட்டிக்கங்க. ஒருவேளை அந்த மாப்பிள்ளை வேறு ஒரு பெண்ணை விரும்பியிருந்தால் உங்களை மணக்க எப்படிச் சம்மதிப்பார்?"

"அவன் சம்மதிப்பான். பணம் நகையோடு சொத்தும் கிடைக்கிறது என்றால் விடுவானா? நிச்சயம் சம்மதிப்பான். ஆனால் அவனோடு என்னால சத்தியமாய் வாழ முடியாது ரவி. இன்னொரு பெண்ணை என் கண்முன்னே விரும்பியவன், இன்று அவளைக் கைகழுவிவிட்டு என்னை மணந்தால் அவனை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?" தேம்பினாள்.

பதிலின்றி அசையாமல் நின்றான். "ஏன் ஜோதி. இத்தனை தெரிந்த பிறகும் உங்கள் மாமாவிடம் உண்மையைச் சொல்லாவிட்டால் அது தப்பு. சொல்லி விடுங்கள். மற்றவற்றை அவர் பார்த்துக் கொள்வார்."

"எப்படிச் சொல்வேன் ரவி! அந்தப் பெண் துர்கா என் மாமாவின் நெருங்கிய சொந்தம். திருமணமாகாத ஒரு பெண்ணைப் பற்றி அவள் அவனை விரும்பியதைப் பற்றி எப்படிச் சொல்ல முடியும்? அதோடு அவர்கள் விரும்பியது பெரியவர்களுக்குத் தெரியாமல். இப்போ நான் போய் பேசினால் நானே அவர்களைக் காட்டிக் கொடுத்தது போலாகிவிடாதா? அவள் என் நெருங்கிய தோழி. என்னை நம்பி அவள் நேசத்தை என்னிடம் சொன்னவள். அவள் நம்பிக்கையை நான் வீணாக்க முடியாது."

"சரி அப்போ உங்க பிரண்டுகிட்டப் போய் இந்த விஷயத்தைச் சொல்லுங்க. அவங்க அந்த மாப்பிள்ளையை போட்டு உலுக்குற உலுக்கிலே மாப்பிள்ளை இங்கே வரவே மாட்டார். துர்கா மட்டுமே போதும்னு இந்த பக்கமே திரும்பிக்கூட பார்க்கமாட்டார்."

"ஆனா அதையும் எப்படிச் சொல்வேன் ரவி. ஒருவேளை நான் சொன்னதும் அவ மனசொடிஞ்சுபோயி ஏதாவது தப்பான முடிவெடுத்துட்டா?"

"ஹோ" சலிப்போடு கிணற்றுச் சுவரில் அமர்ந்து கொண்டான் ரவி. "இது சரிப்படாது. விட்டா சிந்துபாத் கதைபோல நீண்டுட்டே போகுது. பேசாம நான் சொல்ற மாதிரிச் செய்யுங்க. நடக்கிறது நடக்கட்டும்னு கடவுள்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சுடுங்க. அதுதான் பெஸ்ட்."

"அப்போ அவன் வந்து என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னா நானும் சரின்னு தலையாட்டணுமா? என்னால முடியாது." உறுதியாய் மறுத்தாள்.

"இந்தப் பேச்சிலே ஒரு பத்து பர்ஸெண்ட்டாவது உங்க மாமாகிட்டப் பேசலாமே. பிரச்சனையாவது தீரும். இல்ல சந்தோஷிக்கிட்ட."



"வேண்டாம் வேண்டாம் அது பெரிய பிரச்சனை ஆகிடும்."

சில நொடிகள் அமைதியாக இருந்தான். சட்டென ஏதோ தோன்ற "ஆமா உங்க பிரெண்டும் அந்த மாப்பிள்ளையும் எவ்ளோ நாளா பழகுறாங்க. உங்களுக்குத் தெரியுமா?"

"ம் தெரியும். கிட்டத்தட்ட மூணு வருஷமா?"

உற்சாகமாக எழுந்து நின்றான். "அப்ப நம்ம பயப்பட எதுவுமே இல்ல. நிச்சயமா இந்தக் கல்யாணமும் நடக்காது. மாப்பிள்ளை ஒத்துக்கவும் மாட்டார்."

ஆச்சர்யமாய் அவனைப் பார்த்தாள். "அதெப்படி இவ்வளவு உறுதியாச் சொல்றீங்க?"

"ஆமா இத்தனை வருஷம் பழகிய மனசுக்குப் பிடிச்ச பொண்ணை நிச்சயம் ஒருவனால் மறக்க முடியாது. மறக்கவும் மாட்டான். மனசுல ஒரு பொண்ணு இருக்கும்போது இன்னொரு பெண்ணைப் பார்க்கச் சம்மதிக்கவும் மாட்டான்."

"நான் நம்பமாட்டேன். பிறகெப்படி நாளை மறுநாள் என்னைப் பெண் பார்க்க வருவதாகச் சொன்னார்களாம்?"

"மாப்பிள்ளையா சொல்லி அனுப்பினார்? இல்லையே. பெரியவர்களுக்குள் பேசியிருக்கிறார்கள். இன்பாக்ட் இந்த விஷயமே மாப்பிள்ளைக்குத் தெரிந்திருக்காது என்று நான் நினைக்கிறேன்."

இன்னமும் நம்பிக்கை இல்லாமல் அவனைப் பார்த்தாள் ஜோதி. "என்ன இன்னும் நம்பலையா? இப்போ உங்ககிட்ட நேரிடையாகவே கேட்கிறேன். ஒருவேளை உங்க

மனசுல ஒருத்தர் இருந்தா நீங்க வேறு ஒருவனை மணக்கச் சம்மதிப்பீர்களா?" சாதாரணமாகவே அவன் கேட்டாலும் உடல் முழுக்க அதிர அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

"நிச்சயமா மாட்டேன். நான் விரும்பியவர் எனக்குக் கிடைக்காமலே போனாலும் சத்தியமா இன்னொருத்தனை ஏத்துக்கமாட்டேன். நான் மட்டுமில்லே எங்க ஊர்ல எந்தப் பெண்ணுமே அப்படித்தான். அதுக்கு உதாரணம் எங்க செல்லம்மா பாட்டி."

செல்லம்மா பாட்டியின் கதை தெரிந்ததால் ஒரு தலையசைப்போடு அதை ஏற்றுக்கொண்டான் ரவி. "நீங்களே இவ்வளவு உறுதியா இருக்கும்போது அந்த மாப்பிள்ளை மட்டும் விரும்பியவளை மறந்து உங்களை மணக்கச் சம்மதிப்பார் என்று எப்படி நீங்கள் முடிவு செய்யலாம்? பெண்களுடைய் அன்பை விட ஆண்களுடைய அன்பு எந்த விதத்தில் குறைந்துபோனது சொல்லுங்கள்?"

அவனது கேள்விகளில் திணறித்தான் போனாள் ஜோதி. அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கிறதே. பெண்கள் கூடத்தான் குடும்பச் சூழ்நிலை காரணமாக பெற்றோர் பார்த்து வைக்கும் திருமணத்திற்கு ஒத்துக் கொள்கின்றனர். அதனால் பெண் இனத்தையே ஏமாற்றும் கூட்டம் என்று சொல்ல முடியுமா?

அதேபோல் தவிர்க்க முடியாத காரணத்தால் ஆண்களும் சிக்கிக் கொள்வார்கள் தானே. அதை இதுவரை யோசித்தே பார்க்கவில்லையே. நினைத்தவுடன் தங்களை மாற்றிக் கொள்ளும் பச்சோந்திகள் என்று தானே நினைத்துக் கொண்டிருந்தோம் தப்புத்தான்.



தான் அறிந்தவரை அந்தப் பாண்டியன் துர்காவை மனப்பூர்வமாகத் தான் விரும்பினான். மற்றபடி பெண்களைப் பார்த்து வழிபவன் அல்ல தான். அப்படி யென்றால் இது பெரியவர்கள் ஏற்பாடு தானோ?

பாண்டியனுக்கு விஷயம் தெரிந்தால் ஒத்துக்கொள்ள மாட்டானோ. அப்படியென்றால் பெண் பார்க்க வர மாட்டார்கள்!

அந்த நினைவே அவள் முகத்தில் நிம்மதியைப் பரவவிட்டது. அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ரவி புன்னகைத்தான்.

"குட் இப்படியே ரிலாக்ஸா இருங்க. தேவையில்லாம எதற்கும் டென்ஷன் ஆகக்கூடாது. அவசியமின்றி தோன்றும் கோபத்தாலும் மனவேதனையாலும் நம்ம ஆயுள் குறையுதாம். அதனால மனசை எப்பவும் அமைதியா வெச்சுக்கணும் என்ன?"

மவுனமாய் லேசான புன்னகையோடு தலை யசைத்தாள் ஜோதி. "ம் இப்போ எனக்காக ஒரு பாட்டுப் பாடுங்க. உங்க பாட்டைக் கேட்கணும் போல இருக்கு." அவன் சொன்னதும் பதட்டமாய் எழுந்தாள்.

"ஐயோ எனக்கு மத்தவங்க முன்னாடியெல்லாம் பாட முடியாது."

"என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க. நான் ஊருக் குள்ள நுழைஞ்சதும் முதல்ல உங்க பாட்டைக் கேட்டு அசந்து போயிட்டேன். உங்களுக்கு அருமையான வாய்ஸ். உங்களுக்கு விருப்பம்னா சினிமாவில பாட நான் ஏற்பாடு பண்ணித்தரேன். எனக்கு நிறைய பேரைத் தெரியும்."

"ஐய்யய்யோ! நான் ஏதோ தனியா இருக்கும் போதும் வேலை செய்யும் போதும் சும்மா பாடுவேன். அதைப் போய் பெரிசா எடுத்துக்கிட்டு வேணாங்க. எனக்கு அதெல்லாம் பிடிக்காது. சரிப்படாது."

"சரி சினிமா வேண்டாம். எனக்குப் பாடுங்களேன். நான் கேட்கிறேன்."

"ம்ஹீம்! அப்படி உங்களுக்கு எம்பாட்டைக் கேட்கணும்னா தினமும் ராத்திரி பாட்டி தூங்கும் போது பாடுவேன். பாட்டிக்கு பழைய பாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும். அதனாலயே நிறைய பழைய பாட்டை மனப்பாடம் பண்ணி வெச்சிருக்கேன். பாட்டிக்கு பாடும் போது நீங்களும் கேளுங்க. பாட்டி தூங்க ராத்திரி பத்து மணியாகும். நீங்களும் அதுவரை தூங்காமக் கேளுங்க." அவள் பேசிக் கொண்டே போக ரவியின் முகம் இருண்டது.

சட்டென அந்த இடத்தைவிட்டு விடுவிடுவென வேகமாகப் போய்விட்டான். அவனது திடீர் விலகல் புரியாமல் திண்டாடிப்போனாள் ஜோதி.

## 8

பாடுபட்டு மேகம் வானில்
கூடுகட்டும் கோலம் கண்டேன்
காற்றென்னும் முனிவனின் கோபம்
கலைந்தோட விட்டுவிட்டான் சாபம்
மேகம் அது பாவம் மழையாய் அது மாறும்!

முழுதாய் இரண்டு நாட்கள் ரவியைப் பாராமல் பேச முடியாமல் தவித்துப் போனாள் ஜோதி. உற்சாகமான பேச்சு பாட்டெல்லாம் மறந்து போனது. ஏன்? ஏன் என்னைத் திரும்பியும் பாராமல் இருக்கிறார். கீழே வந்து சாப்பிடுவது நின்றுபோனது. நண்பனுடன் வெளியே போனால் வீடு திரும்ப மாலையாகிவிடுகிறது.



வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் மாடியை விட்டு இறங்குவது இல்லை. எந்தக் காரணம் கொண்டும் மேலே வரக்கூடாது என்பது சந்தோஷின் கண்டிப்பான உத்தரவு. இரவில் இரு ஆண்கள் தனித்திருக்கும் அறைக்குள் நுழைவதற்குச் சங்கடமாகவே இருந்தது. பகலிலும் இரு நண்பர்களும் சேர்ந்தே வெளியில் செல்ல ரவியைத் தனியே பார்க்கவும் முடியவில்லை. அவர் கோபப்படும்படி என்ன பேசினோம் என்று சிந்தித்து மூளையே மழுங்கிப் போய்விட்டது.

அவனைப் பார்த்தே ஆக வேண்டும். பேசியே ஆக வேண்டும் என்ற முடிவோடு தூங்காமல் விழித்திருந்தாள். வழக்கம் போல இல்லாமல் இன்று அனைவருமே சீக்கிரமாகப் படுத்துவிட்டனர். ஏதாவது பாட்டுப் பாடும்மா என்று கொஞ்சும் பாட்டியும் இன்று சத்தமில்லாமல் படுத்துக் கொண்டார். அம்மாவைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

ஆறுமணிக்கு வீட்டிற்கு வந்தால் குளித்து முடித்து துணிகளைத் துவைத்துக் காயப்போட்டு விட்டு அமைதியாய் சாப்பிட்டுவிட்டுப் படுத்தால் மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு முன் எழுவதில்லை. பகலெல்லாம் உழைத்துக் களைத்து அடித்துப்போட்டது போல் தூங்குவாள்.

ஒருவேளை இப்படித் தன்னை மறந்து தூங்கத்தான் இப்படிப் பகல் முழுக்க மாடாய் உழைக்கிறாளோ என்னவோ? மீனா அமைதியாய் உறங்கிக் கொண்டிருக்க மெல்ல எழுந்து அமர்ந்தாள்.

அறை முழுக்க மல்லிகை மணம். பாவம் மாமா, ஆசையாய் வாங்கி வைத்திருந்த மல்லிகைப் பந்துகளும், பழங்களும், இனிப்புகளும் கேட்பாரற்றுக் கிடந்தன.

இன்று மாலை வரை கலகலப்பாய் இருந்த வீடு அத்தனை அமைதியாய் இருந்தது மனதை வாட்டத்தான் செய்தது. தன்னைத் தவிர அனைவருமே வருத்தமும், ஏமாற்றமுமாய் சோர்ந்து போயினர். மாமா ஒரு பெருமூச்சுடன் விட்டுவிட்டார். அத்தை மனம் தாளாமல் அழுதேவிட்டார்.

சந்தோஷ் தான் ஆத்திரம் தாளாமல் "மகனுக்கு விருப்பம் இல்லையாமா? ஏன் முதல்லயே மகனோட விருப்பத்தைக் கேட்க வேண்டியது தானே? இப்போ எல்லா ஏற்பாடும் செய்த பிறகு இப்படிப் பின் வாங்கினா எப்படி? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் அவர்?" எனச் சாடினான்.

முத்துக்குமாரசாமிதான் சமாதானம் செய்தார். "இப்ப உள்ள பிள்ளைகளை நம்பிப் பெத்தவங்க எந்தக் காரியமும் செய்ய முடியாதுப்பா. பண்ணையாருக்கு நம்ம குடும்பத்துல பெண் எடுக்கணும்னுதான் ஆசை. ஆனா அவர் மகன் மனசுல வேற எண்ணம் இருப்பது அவருக்குத் தெரியாதே. தெரிஞ்சதும் அவர் மனசுல உள்ளதைச் சொல்லியிருக்கிறார். இதுல யாரையும் குற்றம் சொல்ல முடியாதுப்பா."

"அப்படின்னா அவனுங்கள சும்மா விட்டுடறதா?"

"வேற என்ன செய்ய முடியும்? மனசுக்குப் பிடிக்காத பெண்ணை நாம எப்படி வலுக்கட்டாயமா கட்டி வெக்க முடியும். அப்படியே வெச்சாலும் நம்ம பொண்ணு வாழ்க்கை என்ன ஆகும்? இத்தனை பாசத்தைக் கொட்டி



வளர்த்திட்ட. தெரிஞ்சே அவ வாழ்க்கையை வீணாக்கலாமா? நாளைக்கே நம்ம பொண்ணை விட்டுட்டு விரும்பினவளோட போயிடமாட்டான்னு என்ன நிச்சயம்? பொண்ணைக் கட்டிக் கொடுக்கிறது ஒண்ணும் சாதாரண விஷயமில்லப்பா. பார்த்துப் பொறுமையாகத் தான் செய்யணும்."

"இப்படி எதையாவது சொல்லிச் சொல்லி சமாளிங்க. யாராவது ஜோதியைப் பத்தி நினைச்சீங்களா? ஒவ்வொரு முறையும் அவ மனம் என்ன பாடுபடும்னு நினைச்சுப் பார்த்தீங்களா?"

"ஆமாம்பா. அதையெல்லாம் நினைச்சுப் பார்த்து தான் இப்ப நானும் உன் அம்மாவும் ஒரு முடிவெடுத்திருக்கோம். உன் அத்தைக்கும் ஆச்சிக்கும் கூட பூரண சம்மதம். நீயும் சம்மதிச்சுட்டா வர்ற முகூர்த்தத்துலயே கல்யாணம் பண்ணிடலாம்."

"என்ன முடிவு எடுத்தீங்க?" புரியாமல் கேட்டான் சந்தோஷ்.

"இதுவரை நீயும் எத்தனையோ மாப்பிள்ளை பார்த்தே. எதுவும் சரிப்படலை. நான் பார்த்ததும் ஒத்துவரலை. வர்றவன் எல்லாம் ஏதாவது ஒரு காரணம் சொல்லிட்டுப் போயிடுறான். அதனால யாருக்கோ ஜோதியைக் கட்டிக் கொடுப்பதை விட அவளுடைய சொந்த மாமன் மகன் நீயே அவளைக் கட்டிக்கொண்டால் நல்லது தானேப்பா?"

"என்ன?" ஆயிரம் இடியை ஒரே நேரத்துல தலையில் தாங்கியது போல் அதிர்ந்து போனான் சந்தோஷ்.

அதுவரை அங்கு நடக்கும் பேச்சிற்கும், தனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல ரவி சொன்னது போலவே நடந்துவிட்டதே. மாப்பிள்ளை வரவில்லை என்ற

இன்ப நினைவில் மூழ்கியபடி தன் அறையில் படுத்திருந்தவள் உடம்பெல்லாம் தீப்பற்றியது போல் துடித்து எழுந்தாள். மாமா என்ன சொன்னார் நாம் சரியாகக் கேட்டோமா பதைபதைப்போடு கதவருகே வந்து நின்று உன்னிப்பாய் கேட்டாள்.

"இதுல என்னப்பா தயக்கம்? ஆயிரம் இருந்தாலும் அவள் உன் அத்தை மகள். கூடவே ஒன்றாய் வளர்ந்த பிள்ளைகள். ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டவர்கள். நீங்கள் திருமணம் செய்து கொண்டால் எங்கள் எல்லாருக்குமே ரொம்ப சந்தோஷம்."

"அப்பா ஆ... ஸ்டாப் இட். ஏன் இப்படி முட்டாள்தனமா பேசிட்டு போறீங்க?" ராஜலட்சுமி கோபமாய் மகனருகே வந்தாள்.

"ஏன்டா அப்பா பேசினதுல என்ன தப்பு. ஜோதிக்கு நீதானே முறைப்பையன்."

"என்ன அம்மா நீங்களும் இப்படிப் பேசுறீங்க? நான் எப்படி அவளை ஓ... நோ நினைச்சுப் பார்க்கவே முடியலை" தலையை உதறினான்.

"ஏன்டா அவ உன்னாட்டம் படிக்கலைன்னு பார்க்கிறியா?"

"வாயை மூடுங்கம்மா. அவளைக் குழந்தையில இருந்து தூக்கி வளர்த்தவன். நீ எப்போ என் கையில அவளைத் தந்தீங்களோ அப்ப இருந்தே என்னோட தங்கச்சிப் பாப்பான்னு தானே சொல்லி வளர்த்தேன். இப்ப அவளைக் கட்டிக்க சொல்றது எனக்குக் கூசுதும்மா. தயவுசெய்து அப்படியெல்லாம் பேசாதீங்க. ஜோதி காதுல விழுந்தா துடிச்சுப் போயிடுவா."



அறையினுள் படுக்கையில் விழுந்து துடித்துக் கொண்டு தான் இருந்தாள் ஜோதி. விஷயம் விபரீதமாகப் போவதை உணர்ந்து கண்ணீர் விட்டாள்.

அவளைப் பொறுத்தவரை சந்தோஷ் ஒரு தாய், தந்தையாய், சகோதரனாய் நின்று தாங்கியவன். அவனை எப்படி மணக்க முடியும்? எத்தனை முறை மட்டம் தட்டிப் பேசினாலும் யாரிடமும் தன்னை விட்டுக் கொடுக்க மாட்டான். தன் கணவனாக அவனை ஒருமுறைகூட நினைத்துப் பார்க்கவில்லையே.

அதோட இந்த இரண்டே நாளில் தன் மனம் யாரை எண்ணித் தவிக்கிறது என்று தெளிவாய் கண்டு கொண்டாளே. எப்படி நுழைந்தான் என்று அறியும் முன்பே தன் மனதிற்குள் நுழைந்து அங்கேயே உட்கார்ந்து கொண்ட ரவியை விட்டு விட்டு எப்படி இன்னொருவனைக் கணவனாக ஏற்க முடியும்? தன்னால் முடியுமா? முடியாது முடியவே முடியாது.

ரவி! இங்கே என்ன களேபரம் நடந்து கொண்டிருக்கிறது. இது எதுவுமே உங்கள் காதில் விழவில்லையா? ஏன் கீழே இறங்கி வரவில்லை. அப்படி என்ன வேலை உங்களுக்கு? மனம் தாளாத வேதனையோடு தலையணையைக் கண்ணீரில் நனைத்தாள் ஜோதி.

வெளியே இன்னும் சச்சரவு முடியாமல் நீளவே அதிசயமாய் அம்மாவின் குரல் கேட்டது. "அண்ணே வேண்டாமின்னா விட்டுடுங்க. இப்ப நீங்க தானே சொன்னீங்க. பிடிக்காத பெண்ணை எப்படிக் கட்டி வெக்க முடியும்னு. விட்டுடுங்க. அவளுக்குன்னு தலையில என்ன

எழுதியிருக்கோ அது நடக்கும். யாரையும் வற்புறுத்த வேண்டாம்..."

"அத்தை ப்ளீஸ். என்னைப் புரிஞ்சுக்கங்க. ஜோதியைக் கூட யாருக்கும் பிடிக்காமப் போகுமா? அவளை எனக்குப் பிடிக்கும். ஆனா அவளை என் மனைவியா நினைச்சுப் பார்க்க முடியாது அத்தே. அவ ஒரு குழந்தை என்னோட குழந்தை. என் குழந்தையை நானே எப்படி?" பேச்சு வராமல் தடுமாறினான் சந்தோஷ்.

மாமா தான் இறங்கி வந்தார். "சரிப்பா உன் மனசு படுறபாடு புரியுது. அப்ப நாங்க ஏற்கனவே சொன்ன மாதிரி உன் நண்பன்கிட்ட பேசிப் பார்க்கிறியாப்பா? நம்ம ஜோதிக்குகூட அந்தப் புள்ளையை ரொம்பப் பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன். அந்தப் பையன்கூட நின்னு சிரிச்சு பேசுறா. கலகலப்பா வளைய வர்றா. அவனுக்கு பார்த்துப் பார்த்துப் பரிமாறுறா. எதுக்கும் உன் நண்பனிடம் நீ ஒரு வார்த்தை கேளேன்."

இன்னமும் பெரிதாய் அதிர்ந்தான். "இல்ல இல்ல என்னால கேட்க முடியாது. அவன் ஏத்துக்க மாட்டான்."

"அதை நீயே சொன்னா எப்படி? இப்ப அந்தத் தம்பி மேலே தான இருக்கு. நான் போய் நேரிடையா கேட்டுடறேன்." என படிக்கட்டை நோக்கிச் சென்றவரை ஓடிவந்து தடுத்தான் சந்தோஷ்.

"அப்பா! எதுவாக இருந்தாலும் காலையில் பேசிக் கொள்ளலாம். இப்ப அவன் தூங்கியிருப்பான்."

"என்னடா? மணி ஏழுதானே ஆகுது. அதற்குள்ள எப்படித் தூங்குவான்? நான் போய் பார்க்கிறேன்."



"மேலே போக வேண்டாம். யாரும் போகக்கூடாது. மீறிப் போனா என்னை நீங்க மறந்துட வேண்டியதிருக்கும். இப்பவே வீட்டைவிட்டு வெளியே போயிடுவேன். திரும்ப வரவே மாட்டேன்." மகனின் உறுதியான குரலில் பயந்து பின்வாங்கினார் முத்துக்குமாரசாமி.

மற்றவர்களும் அதிர்ந்து போக யாருமே வாயைத் திறக்கவில்லை. ஜோதிக்கு முதன்முறையாக பயம் எழுந்தது. ரவி ஒருவேளை குடிகாரனாக இருப்பாரோ. இரவானால் தண்ணி இல்லாமல் தூங்கமாட்டாரோ? அதனால் தான் விடியும் வரை வராமல் காலையில் குளித்து முடித்துவிட்டு எட்டு மணிக்குப் பிறகே கீழே வருகிறார்களோ?

இப்போது போய் பார்த்தால் நண்பனின் குட்டு உடைந்து விடும் என்றுதான் சந்தோஷ் இப்படிப் பதறுகிறானோ? அப்படித்தான் இருக்கும். மாலையில் மணியைப் பார்த்து மாடிக்கு ஓடும் ரவியின் நினைவு வந்தது. இரவுச் சாப்பாட்டை சந்தோஷ் தவிர யாரும் எடுத்துப்போக அனுமதியில்லை. இன்று கூட இரவுச் சாப்பாட்டைக் கொடுத்து விட்டுத்தான் வெளியே போனான்.

எங்கு போகிறேன் என்று அவனும் சொல்லவில்லை. யாரும் கேட்கவும் இல்லை. எல்லாருமே மனதளவில் தளர்ந்து போயிருந்ததால் அவரவர் அறையில் முடங்கிக் கொண்டனர்.

இதுவரை சந்தோஷ் வீடு திரும்பவில்லைன்னு கொட்டக் கொட்ட விழித்திருந்த ஜோதிக்கு மட்டுமே தெரிந்தது. இதுதான் சமயம். இன்று எப்படியும் மாடிக்குப் போய் ரவியைப் பார்த்தே ஆக வேண்டும். இரவில் பதுங்கும் ரகசியத்தை கண்டுபிடிக்க வேண்டும். அதோடு அவன் விருப்பத்தையும் கேட்டே ஆக வேண்டும்.

அவனுக்கு விருப்பம் இல்லையென்றால் மாமாவிடம் சொல்லித் தடுத்துவிடலாம். மாமாவே அவனை நேரில் பார்த்துக் கேட்டு ஏமாறும் சங்கடத்தைத் தடுத்துவிடலாம். ஆனால் அவன் மறுப்பைத் தன்னால் தாங்க முடியுமா? முடியும். முடிவு எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொண்டு தானே ஆக வேண்டும்.

அதற்கு முன் அவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். திடீரெனப் போய் நின்றால் பாட்டிலும் கையுமாக அகப்படுவானோ, குடிகாரனைக் கண்டாலே அருவெறுப்பாக இருக்குமே. அவனை அந்தக் கோலத்தில் பார்க்க முடியுமா?

அப்படிப் பார்க்கையில் அவன் மீது வெறுப்பு வந்து விடுமே. இவனது குடிப்பழக்கம் தெரிந்து தான் மணப்பெண் இவனை வேண்டாம் என்று மறுத்துவிட்டாளோ. எதுவாக இருந்தாலும் எதிர்கொண்டு தான் ஆக வேண்டும்.

மெதுவாய் எழுந்து மீனாவின் உறக்கம் கலைந்து விடாமல் அறையை விட்டு வெளியேறி கதவைச் சாத்தினாள். கொலுசின் ஓசை மற்றவர் காதில் விழாமல் மெல்ல அடியெடுத்து வைத்து ஹாலை அடைந்தாள். சாமி படத்தின் முன் இருந்த விடிவிளக்கின் ஒளியைத் தவிர வீடு முழுக்க இருளாகவே இருக்க மெதுவாய் நடந்து ஹாலின் ஓரமாய் அமைக்கப்பட்டிருந்த மரப்படிக்கட்டை அடைந்தாள்.

அதற்குள் உடல் மொத்தமும் வியர்த்துவிட்டது. இதயம் பலமாக அடித்துக்கொண்டது. உள்ளங்கை வியர்வையில் நனைந்தது. யாரேனும் பார்த்துவிட்டால் என்ன சொல்லித் தப்பிக்க முடியும். பயமாய் சுற்றிலும் பார்த்தாள். எவ்வித அசைவும் இல்லாமல் போகவே நடுங்கும் இதயத்தோடு படிக்கட்டில் காலை வைத்தாள்.



சட்டெனக் காலை எடுத்தாள். பேசாமல் திரும்பிப் போய் படுத்துவிடலாமா? இன்று எப்படியும் அவன் ரகசியத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இன்று வீட்டில் நடந்த கூச்சல் குழப்பத்தைக் கேட்டும் கூட கல்லுளிமங்கனாய் இருந்து கொண்டானே. அதற்கு என்ன காரணம் என்று அவனைப் பார்த்துக் கேட்டே ஆக வேண்டும். மனதில் துணிவைத் திரட்டிக்கொண்டு படிகளில் ஏறினாள் ஜோதி. மனம் தடக்தடக்கென அடித்துக் கொண்டது.

## 9

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்
இது மேற்கில் தோன்றும் உதயம்
இது நதியில்லாத ஓடம்!

அறை முழுக்க இருட்டாய் இருக்க, கட்டிலில் படுத்திருந்தான் ரவி. கண்களில் நீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அதைத் துடைக்கவும் தோன்றாமல் தன் இடது கையில் உள்ள பொருளை நெஞ்சோடு வைத்துக் கொண்டிருந்தான். நெஞ்சு விம்மியது. மனம் முழுக்க அன்பிருந்தும் அதை வெளியில் சொல்ல முடியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

மாலை ஐந்து மணிக்கு வருவதாகச் சொன்ன மாப்பிள்ளை வீட்டார் வரவில்லை என்றதும் மனம் கும்மாளமிட்டது. விரும்பியவளை அந்த மாப்பிள்ளை கைவிடவில்லை என்பதா, ஜோதியிடம் விட்ட சவால் ஜெயித்துவிட்டதை எண்ணியோ மட்டும் மனம் கும்மாள மிடவில்லை. அதையும் மீறி எதுவோ ஒன்று உள்ளிருந்து ஆட்டிப் படைத்தது. அது என்னவென்று புரிந்தும் புரியாமலும் மனம் திண்டாடியது.

முதன்முறையாய் அவளைப் பார்த்த தினமும் நேரமும் கண்ட காட்சியும் மனதில் பசுமையாய் நின்றது. அப்போதே இந்தப் பாழும் மனம் அவள் பின்னே போய்விட்டதோ? வாழ வேண்டிய பெண். என்னைக் கட்டிக்கொண்டு ஏன் அழ வேண்டும்? என்று தானே என் மனதை மூடி மறைத்தேன். அன்று வயல்காட்டில் நின்று கேட்டாளே 'என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா' என்று. அன்றே வார்த்தையை விட்டுவிடாமல் இருக்க எத்தனை போராடினேன். அந்தக் காந்தவிழிகளைக் கண்டு எப்படிப் பொய் சொல்ல முடியும்?

உண்ணும் போதும் உறங்கும் போதும் விழிக்கும் போதும் அவளைத்தானே நினைக்கிறேன். இதை எப்படி அவளிடம் சொல்ல முடியும். சொல்ல எனக்குத் தகுதி இருக்கிறதா?

இன்று அவளைப் பந்தாடுகிறார்களே யாருக்குக் கட்டிக் கொடுக்கலாம் என்று. அவர்களிடம் சென்று, எனக்குத் தாருங்கள் ஐயா இந்தப் பொக்கிஷத்தை. நான் பொத்திப் பாதுகாத்து வைத்துக் கொள்கிறேன் என்று ஒரு வார்த்தை சொல்ல முடியாத பாவி ஆகிப் போனேனே.

ஊருக்கு வந்த முதல் தினமே சந்தோஷின் அப்பா தன் விருப்பத்தைச் சொன்னது காதில் விழுந்தது. சந்தோஷ் பதறி மறுத்துவிட்டானே. என்ன தான் நண்பனாக இருந்தாலும் குறை இருப்பவனை எப்படித் தன் குடும்பத்துப் பெண்ணிற்கு மணமுடிக்கச் சம்மதிப்பான்?

ஒரு பெண்ணை மணக்கும் தகுதி தனக்கு இருக்கிறதா? அவளை இன்பமாக வைத்துக் கொள்ள முடியுமா? முடியாது என்றுதானே நிச்சயம் வரை சென்ற திருமணத்தை நிறுத்தினேன். அந்தப் பெண் என்னால் கஷ்டப்படக்கூடாது என்று தானே நினைத்தேன்.



இன்று ஏன் இந்த மனம் ஜோதியை எண்ணித் தவிக்கிறது. எது என்னை அவளிடம் விழவைத்தது? அவளது இனிய குரலா? கேலியும் விளையாட்டுத் தனமுமான பேச்சா? பிறக்கும் போதே தந்தையைக் காண முடியாமல் தவித்த குழந்தை என்றா? இல்லை இது எல்லாமே சேர்ந்தா. எப்படியோ தன் மனதில் ஜோதி இருக்கிறாள் என்பது மட்டும் தெளிவாய்ப் புரிந்தது.

நாளை ஒரு வேளை சந்தோஷின் அப்பா தன் சம்மதத்தைக் கேட்கும்போது தன்னால் மறுக்கவும் முடியாது. விருப்பத்தைத் தெரிவிக்கவும் முடியாது. வீணாக எந்தக் குழப்பத்தையும் இந்தக் குடும்பத்தில் உண்டாக்க வேண்டாம்.

அதிகாலையில் புறப்பட்டு விட வேண்டும். போதும் இந்த சில நாட்கள் இன்பம் போதும். இது தந்த நினைவுகள் போதும். இன்று அவர்கள் பேசியது ஜோதியின் காதிலும் விழுந்திருக்கலாம். அவள் மனதில் தேவையற்ற எண்ணங்கள் வளரும் முன் இங்கிருந்து போய் விட வேண்டும்.

தன்னால் அந்தப் பெண்ணின் வாழ்க்கைக் கெட்டுப் போய் விடக்கூடாது. அதே சமயம் தன் குறையையும் மற்றவர்களிடம் சொல்ல முடியாது. எதுவும் யாருக்கும் தெரியுமுன் நாமாகச் சென்றுவிடுவதுதான் சரி. அந்த முடிவுடன் தான் இரவுச் சாப்பாட்டைக் கொண்டு வந்த தன் நண்பனிடம் சொன்னான் ரவி.

"சந்தோஷ்! இதுக்கு மேலயும் நான் இங்க இருக்க வேண்டாம்னு தோணுது. என்னால நீ ஏன் உன் அப்பாவோட சண்டை போடுற. நாளைக்கு விடிஞ்சதும் முதல் வேலையா என்னை சென்னைக்குக் கூட்டிட்டுப் போயிடு."

"நானும் அதைத்தான்டா நினைச்சேன். நீ சாப்பிட்டுத் தூங்கு. எனக்கு இங்க கொஞ்சம் வேலை இருக்கு. எல்லாம் முடிச்சிட்டு வர லேட்டாகும். நீ கதவைப் பூட்ட வேண்டாம். நான் வந்து பூட்டிக்கிறேன். நாம காலையில ஊருக்குக் கிளம்புறோம்" என்று சொல்லி விட்டுப் போனதும் ஏனோ மனதின் வலி தாளாமல் கண்கள் நீரை வார்த்தன.

முடிந்தது. இன்பமான பொழுதுகள் சில நாட்களிலேயே முடிந்து போனது. இனி தினமும் சூன்யமான வாழ்க்கைதான். அதுதானே நிரந்தரமானது. அதற்குப் பழகிக் கொள்ள வேண்டியதுதான்.

பெருமூச்சோடு கண்ணீரும் வெளியேற, அந்த ஓசை கேட்டது. சட்டென காதைக் கூர்மையாக்கினான். யாரோ படிகளில் ஏறி வரும் ஓசை. யாரோ என்ன? சந்தோஷாகத்தான் இருக்கும். வேலை முடிந்து திரும்புகிறான். திடீரென நினைவு வந்தவனாக கையில் பொத்தி வைத்திருந்த பொருளை தலையணைக்கடியில் மறைத்து வைத்தான்.

அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு போர்வையைக் கழுத்து வரை மூடிக் கொண்டு தூங்குவது போல் பாவனை செய்தான்.

தயங்கித் தயங்கி வந்த ஓசை நின்றுவிடவே ரவி அசையாமல் கிடந்தான். வாசல் வரை வந்தவன் ஏன் உள்ளே வரவில்லை. கதவைக் கூட பூட்டவில்லையே. இப்போது காலடிச் சத்தம் உள்ளே கேட்டது.

ஆனால் இது சந்தோஷ் இல்லை. அவனது காலடி ஓசையில் ஒரு அழுத்தம் இருக்கும். இது யாரோ பயந்து தயங்கி வருவது போல் மிக மெதுவான ஓசை.



அதோடு மெலிதான கொலுசொலி. திடுக்கிட்டுப் போய் எழுந்தமர்ந்தான் ரவி.

"யார்? யாருங்க அது?" மெதுவாகவே கேட்டாலும் இரவின் அமைதியில் அந்தச் சத்தம் பலமாகவே எதிரொலித்தது.

பதிலின்றிப் போகவே கைகளால் துளாவி அருகிலிருந்து ஸ்விட்சைப் போட்டாள். அந்தச் சிறிய பல்ப் எரிந்ததும் உடல் வெலவெலத்துப் போனாள் ஜோதி.

ரவியைப் பார்த்து மன்னிப்புக் கோரும் பாவனையில் நெருங்கியவள் அதிர்ந்து போனாள். தன் கண்களையே நம்ப முடியாமல் கண்களை நன்றாக மூடித் திறந்து பார்த்தாள்.

ரவியின் ஒதுக்கம் சட்டெனப் புரிந்து விட மனம் ஓலமிட்டு அழுதது. அதிர்ச்சியில் அசைவின்றி விக்கித்துப் போய் ஜோதி நிற்க, ரவி கைகளால் துளாவிக் கொண்டே கேட்டான்.

"ஹலோ! யாருங்க. முதல்ல லைட்டை ஆஃப் பண்ணுங்க. யார் நீங்க. மீனா... மீனாவா... பிளீஸ் சொல்லிடுங்க. ஜோ... ஜோவா?"

கேட்கும்போதே அவன் குரல் நடுங்கிற்று.

கண்களை விழித்திருந்தாலும் அவன் பார்வையில் விளக்கோ ஜோதியோ தெரியவில்லை என்பது அவனது தேடலில் புரிந்து போய் விட கதறிக் கொண்டே வந்து ரவியைக் கட்டிக் கொண்டாள் ஜோதி.

"ரவி! ரவி... என்ன இது? உங்களால பார்க்க முடியலியா? நான் உங்க கண்ணுக்குத் தெரியலையா?

ஐயோ! உங்க கண்ணுக்கு என்னாச்சு ரவி. எங்கிட்டச் சொல்லுங்க ரவி. எங்கிட்ட எதையும் மறைக்க வேண்டாம் ரவி. சொல்லுங்களேன்" - அவளது கண்ணீர் தன்னைச் சுட்டதும் சட்டென அவளை விலக்கித் தள்ளினான்.

உடல் முழுக்க நடுங்க, "ஏன்... ஏன் இங்கே வந்தே! என்னைப் பார்த்து பரிகாசம் பண்ணவா இந்தக் குருடனைத் தேடி வந்தே. போ. போயிடு. நான் யாரையும் பார்க்கவோ பேசவோ விரும்பல்ல. போயிடு!" முகத்தை மூடிக் கொண்டு அழுதான் ரவி.

"அப்படிச் சொல்லாதீங்க ரவி. எனக்குச் சத்தியமா எதுவுமே தெரியாது. நான் உங்களைத் தனியாப் பார்த்து பேசணும்னுதான் இங்கே வந்தேன். என்னை நம்புங்க ரவி."

"எங்கிட்டப் பேச என்ன இருக்கு. முதல்ல நீ கீழே போ."

"நிறைய இருக்கு ரவி. உங்ககிட்ட பேச நிறைய இருக்கு. எம் மனசு பூரா நீங்கதான் இருக்கீங்க ரவி. அதைச் சொல்லத்தான் நான் வந்தேன்."

அவனது அழுகை நின்றது. "ஆமாம் ரவி. எந்த நிமிஷம் நீங்க எனக்குள்ள வந்தீங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா இந்த நிமிஷம் என் மனசுல நீங்கதான் இருக்கீங்க. என்னோட கடைசி மூச்சு வரை நீங்கதான் இருப்பீங்க!" ஜோதி அழுதுகொண்டே சொல்ல, ரவியிடம் அசைவே இல்லை.

அவள் புறமாய் திரும்பாமல், "உனக்கென்ன பைத்தியமா? இந்தப் பார்வையற்றவனை நினைத்துக் கொண்டு உன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே. நீ



நன்றாக வாழ வேண்டும். என்னால் அந்த வாழ்க்கையை உனக்குத் தர முடியாது. பேசாமல் போய் விடு. வேண்டாத எண்ணங்களைத் தூக்கிக் குப்பையில் போட்டுவிடு."

"ஏன் போட வேண்டும்? உங்களுக்கு என்ன குறை? ஏன் என்னை உங்களால் வாழ வைக்க முடியாது?"

சட்டென அவள் புறமாய்த் திரும்பினான். முகத்தைத் துடைத்துக் கொண்டு பார்த்தான். அவள் குரல் வந்த திசையில் நிழல் போல் அவள் உருவம் தெரிய அதைப் பார்த்தே பேசினான்.

"இதோ பாரு. குழந்தை மாதிரிப் பேசாதே. இரவானால்... எனக்கு... எனக்குப் பார்வை தெரியாது. இது ஆரம்பக் கட்டம் என்பதால் மங்கலாகத் தெரியும். இனி போகப் போக சுத்தமாய் இருட்டாகிவிடும். எனக்கு மாலைக் கண் நோய்..."

"அவ்வளவுதானே. இரவு மட்டும்தானே உங்களால் பார்க்க முடியாது. வாழ்க்கை முழுவதும் பார்க்கவே முடியாத பார்வையற்றோர் எத்தனையோ பேர் சந்தோஷமாக வாழவில்லையா? அவர்களையும் பெண்கள் விரும்பி மணந்து கொள்ளவில்லையா?

அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் உங்கள் நோய் ஒரு பிரச்சனையே இல்லை ரவி. பகல் முழுக்க உங்களால் பார்க்க முடியும். உழைக்க முடியும். குடும்பத்தில் சந்தோஷமாக வாழ முடியும். இரவு எல்லாருமே கண்களை மூடித் தூங்கத்தானே போகிறோம். அதனால் உங்கள் குறை ஒன்றும் பெரிதில்லை ரவி..."

"இந்த வயதில் நீ எளிதாகச் சொல்லி விட்டாய். ஆனால் உன் அம்மாவோ அத்தை மாமாவோ என்னை

ஏற்கச் சம்மதிப்பார்களா? என்னை நோயாளி போல் ஒதுக்கி விடுவார்களே."

"அவர்களிடம் ஏன் சொல்ல வேண்டும். காலம் முழுக்க உங்களுடன் வாழப் போவது நான். நமக்குத் தெரிந்த ரகசியம் மற்றவர்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லையே..."

"மீண்டும் சிறுபிள்ளை போல் பேசாதே ஜோ. இது சிறுபிள்ளைகள் விளையாடும் விளையாட்டு இல்லை. பெரியவர்களுக்குத் தெரியாமல் இதை எப்படி மறைக்க முடியும். முதலில் சந்தோஷே இதற்குச் சம்மதிக்க மாட்டான்."

"யார் சம்மதித்தாலும் சரி. சம்மதிக்காவிட்டாலும் சரி. எனக்கு நீங்கள்தான் வேண்டும். இதில் எந்த மாற்றமும் இல்லை."

"வேண்டாம் ஜோதி. இப்போது பெரிதாகத் தெரியாத குறை நாளை திருமணமான பின் அது விஸ்வரூபம் எடுத்துவிடும். பிறகு வாழ்க்கையே கசந்துவிடும். அப்படி எதுவும் நிகழ்ந்துவிடக் கூடாது என்றுதான் என் திருமணத்தையே நிறுத்தினேன். இரவைக் கண்டாலே என் மனம் பதறும். எனது எதிர்காலம் பயமுறுத்தும். அப்படி வேதனையில் நான் உழலும்போது உன்னை எப்படி என்னால் ஏற்றுக் கொள்ள முடியும்?"

"அப்போ உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லையா? என் அன்பின் மீது நம்பிக்கையில்லையா?" கண்களில் கண்ணீரோடு கேட்டாள்.

"இல்லை, நான் அப்படிச் சொல்லவில்லை. நான்..."

"ரவி! நான் உங்களை விரும்பும் முன்பே சொன்னேனே. ஊனமுற்றவராக இருந்தாலும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன் என்று. உடம்புல உள்ள குறை பெரிதில்லை ரவி. மனசு நல்லா இருக்கணும். அதுவும் மனசுக்குப் பிடிச்சவர் வாழ்க்கைத் துணையா வந்தா அதைவிடப் பெரிய சந்தோஷம் வேற இருக்கா?"



ரவி மனம் கலங்கினான். தொண்டை அடைத்துக் கொள்ள வார்த்தை வராமல் தடுமாறினான். அவன் நிலை உணர்ந்து அவன் அருகே வந்து அமர்ந்து அவன் தலைகோதினாள். அவன் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டாள்.

அவனது கையைப் பற்றிக் கொண்டு, "நான் இருக்கேன் ரவி. உங்களுக்காகவே நான் இருக்கேன். ஒரு தாயா நான் உங்களைப் பார்த்துக் கொள்கிறேன். வேற எதையும் உங்கிட்ட நான் எதிர்பார்க்கல்ல.

இராமாயணத்தில் லட்சுமணர் ஊர்மிளையை ஏத்துக்க முடியாது என்றும் தன் அண்ணனுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து விட்டதாகவும் சொல்லுவார். அப்போ ஊர்மிளை சொல்லுவா 'மஞ்சத்திற்கு ஏங்கவில்லை நெஞ்சம். மனையாளாய் ஏற்றுக் கொண்டால் போதும். மனம் மகிழ்வேன்' என்று.

இப்போ நானும் அதையேதான் சொல்றேன் ரவி. என்னை மறுக்காதீங்க. எந்தச் சூழ்நிலையிலும் எத்தனை ஆண்டுகள் போனாலும் உங்களுக்கு கண்ணா இருந்து பார்த்துப்பேன். வீணான மனக் கஷ்டங்களை விட்டுடுங்க. உங்களுக்கு ஒரு குறையும் இல்லை. நீங்க ராஜா. என்னோட ராஜா" என்றாள் பரிவாய்.

அதற்கு மேலும் தாள முடியாமல் உடைந்து போய் அவள் மடியில் சாய்ந்து அழுதான். அவன் உடல் குலுங்க

மென்மையாய் வருடினாள் ஜோதி. "ரவி! ஆண்பிள்ளை அழக்கூடாது என்பார்களே!"

"ஏன் ஆண்பிள்ளைக்கு வலி இருக்காதா? வேதனை இருக்காதா?"

"அதைத்தானே மறந்துவிடுங்கள் என்கிறேன். எல்லாவற்றையும் மறந்து ஒதுக்கிவிடுங்கள்.

மனதை லேசாக வைத்துக் கொள்ளுங்கள். கோபமும் வருத்தமும் அதிகமானால் நம் ஆயுள் குறையுமாம். நாம் அதிக நாள் வாழ வேண்டாமா?"

ரவியின் அழுகை நின்றது. எழுந்து அமர்ந்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு லேசாய் சிரித்தான்.

"ம். குட். இது ரொம்ப அழகா இருக்கு. மனதில் இல்லாத பெண் என்றால் இந்தப் புன்னகையில் தடுமாறி விழுந்திருப்பாள்" என்றதும் சிரித்தே விட்டான்.

"நான் சொன்னதை எல்லாம் எனக்கே திருப்பி சொல்கிறாயா? சொன்னால்தான் சிரிக்கிறீர்கள்" என்றாள் சிரிக்காமல்.

கைகளால் அவள் முகத்தை வருடினான் ரவி. "உன் முகத்தைப் பார்க்க முடியவில்லையே."

"அதற்கென்ன காலையில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது அமைதியாகத் தூங்குங்கள். நான் வந்து வெகுநேரமாகி விட்டது. யாரேனும் விழித்தால் பிரச்சனையாகிவிடும். நான் கீழே போகட்டுமா?" என்றவாறு எழுந்தாள். ரவியின் முகம் வாடிப் போனது.

"என்னப்பா?" பரிவாய்க் கேட்டாள்.



"இது... இது கனவில்லையே ஜோ."

"நிஜமான நிஜம். நம்புங்கள். நாளைக் காலையில் மாமா உங்களிடம் பேச வந்தால் எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் பேசுங்கள் ரவி. எதற்கும் கலங்கக் கூடாது."

"அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்றா நினைக்கிறாய்?" ஏமாற்றமாய்க் கேட்டான்.

"முதலில் சந்தோஷ் வரட்டும். அவனிடம் பேசிவிட்டு முடிவை எடுப்போம். இதைப் பெரியவர்களிடம் சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை ரவி. ஏதோ உயிர்க்கொல்லி நோய் மாதிரி நினைச்சு அவங்களும் பயந்து நம்மையும் பயமுறுத்துவாங்க. எதுக்குத் தேவையில்லாத பயத்தை நாமே உண்டு பண்ணனும்."

"ஒருவேளை யார் மூலமாவது தெரிஞ்சா அப்போ பிரச்சனை பண்ணமாட்டாங்களா? அது இன்னும் மோசமாகிடாதா?"

"ம்... இது சரிப்படாது. உங்களைப் பேசவிடக் கூடாது. படுங்கள். பேசாமல் படுங்கள்" என்றவாறு அவனைப் படுக்க வைத்து போர்வையை இழுத்து மூடினாள்.

ஜன்னல் வழியாக சிலுசிலுவென காற்று வீசியது... "ஜோ உன்னோட பாட்டு இந்தக் காற்றை மாதிரி ரொம்ப சுகமா இருக்கும். உன் பாட்டிக்கு நீ பாடுவியே. அதுதான் எனக்கும் தாலாட்டு. அதைக் கேட்டுக்கிட்டே தூங்கிடுவேன்" என்றான் ரசனையாய்.

அவன் அருகே அமர்ந்தாள். "சரி, நான் பாடுறேன். நீங்க தூங்குங்க. சரியா!" என்றதும் ஆர்வமாய் அவளருகே ஒண்டிக் கொண்டான்.

ஜோதி புன்னகையோடு பாட ஆரம்பிக்க, சந்தோஷின் கார் வந்து நின்றது. இரவின் அமைதியைக் கலைக்காமல் மெதுவே இறங்கி கதவைச் சாத்தினான்.

## 10

நான் உனைப் பார்த்தது
பூர்வஜென்ம பந்தம் - நீண்ட
நாள் நினைவிலே வாழும் இந்த சொந்தம்
நான் இனி நீ - நீ இனி நான்
வாழ்வோம் வா கண்ணா!

சந்தோஷ் காரை விட்டு இறங்கியதும் திண்ணையில் படுத்திருந்த வேலையாள் ஓடிவந்து கேட்டைத் திறந்து வைத்தான்.

"என்ன மாரி நீ இன்னும் தூங்கலையா?"

"இல்லய்யா! வெளிய போனவுக எப்போ வருவீங்களோன்னு வாசலைப் பூட்டாம இருக்குதுய்யா. அதான் தூங்கலய்யா."

"அடடா! ஹாஸ்பிடலுக்குப் போனேன். கொஞ்சம் நேரமாச்சு. ஸாரி மாரி. உன் தூக்கத்தைக் கெடுத்திட்டேன்."

"பரவால்லங்கய்யா. உடம்புக்கு என்னய்யா நோவு?"

"என் உடம்புக்கு ஒண்ணுமில்லை. என் ஃபிரெண்டுக்கு தான் கொஞ்சம் உடம்பு சரியில்லை. நம்ம கண் டாக்டர் வெங்கட்ராமன் கிட்ட காட்டியிருந்தோம். ரிப்போர்ட்டை நாளைக்குத் தர்றேன்னு சொல்லியிருந்தார். நாளைக்குக் காலையில நாங்க ஊருக்குக் கிளம்பணும். அதனால அவரைப் பார்த்து வெயிட் பண்ணி வாங்கிட்டு வந்தேன். அதான் லேட்டாகிடுச்சி. நீ போய் படுத்துக்கோ மாரி. நான்



பூட்டிக்கிறேன்" என்றவாறு காரில் ஏறி அதை உயிர்ப்பித்து போர்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தினான்.

இறங்கி ரிப்போர்ட் அடங்கிய ஃபைலைக் கையிலெடுத்துக் கொண்டு கதவைப் பூட்டிவிட்டு வீட்டினுள் நுழைந்தான். வீடு அமைதியாய் இருக்க, மனதில் பாரம் ஏறியது.

எத்தனை மணியானாலும் அப்பாவிற்குச் சிறுசப்தம் கேட்டாலும் உறக்கம் கலைந்துவிடும். இன்று கார் வந்து நிற்கும் ஓசையோ தன் குரலோ தந்தையின் தூக்கத்தைக் கலைக்கவில்லை. அவருக்கும் தான் எத்தனை மன உளைச்சல். அலுப்பு. தூங்கட்டும். வராந்தாவில் படுத்து உறங்கிய தந்தையைச் சில கணங்கள் நின்று பார்த்தான்.

"ஸாரி அப்பா! நான் உங்களிடம் அத்தனை கோபமாய் பேசியிருக்கக் கூடாது. என் நண்பன் உங்கள் முன் பரிதாபமாய் நிற்பதை என்னால் கற்பனை செய்து பார்க்கவே தாங்க முடியவில்லை அப்பா. அதனால் தான் அவனை நீங்கள் நெருங்குவதைத் தடுத்தேன். இனி அந்தத் தடை இல்லை அப்பா. நளை விடிந்ததும் நீங்கள் தாராளமாய் என் நண்பனிடம் பேசலாம். நான் எந்தத் தடையும் விதிக்கப் போவதில்லை.

என் நண்பனே இந்த வீட்டு மருமகனாவதில் எனக்கு வெகு திருப்தி, சந்தோஷம். ரவி ஜோவை விரும்புவது எனக்குத் தெரியும். ஆனால் பயந்து தயங்குகிறான். அவன் பயப்படவோ தயங்கவோ அவசியமே இல்லை. வெகுநாட்களுக்குப் பிறகு நான் இன்றுதான் நிம்மதியாய் மூச்சு விடுகிறேன் அப்பா. நம் ஜோவிற்கு ரவியை விட நல்ல மாப்பிள்ளை அமைய மாட்டான்.

நானே அவனைச் சம்மதிக்க வைக்கிறேன். நாளையப் பொழுது நம் அனைவருக்குமே நல்ல பொழுதாக விடியும். நன்றாகத் தூங்குங்கள் அப்பா." நிம்மதி மூச்சோடு அவனை விட்டு விலகி அறைக்குள் நுழைந்தவன் மாடியின் ஜன்னல் வழியே வெளிச்சம் தெரிய துணுக்குற்றான்.

விளக்கை அணைத்து விட்டுத்தானே போனேன். ரவி லைட்டைப் போட மாட்டானே. யார்? யார் மேலே போனது பதட்டமாய் படிக்கட்டை நோக்கிப் போனான்.

எந்த உண்மையை இத்தனை நாள் அரும்பாடு பட்டு மறைத்தானோ அது இன்று வெளியாகிவிடுமோ என அவன் உடம்பும் உள்ளமும் பதறிப் போனது.

ஆனால்... மேலே ஜோதியின் இதமான தாலாட்டில் மெய்மறந்து உறங்க ஆரம்பித்திருந்தான் ரவி.

'நான் பாடிக் கொண்டே இருப்பேன்
உன் பக்கத்துணை இருப்பேன்
என் ஜென்மம் இருக்கும் வரை
என் ஜீவன் காக்கும் உனை'

இதமான மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள் ஜோதி. ரசனையோடும் பாவத்தோடும் பாட அந்த இசையில் லயித்திருந்த ரவியின் காதில்தான் அந்த ஓசை கேட்டது.

யாரோ படியேறும் ஓசை. அவசரமான நடை, சட்டென விழித்து "ஜோ! யாரோ வர்றாங்க. உன்னைத் தேடி வர்றாங்கன்னு நினைக்கிறேன்..."

ரகசியமாய் சொல்ல ஜோதியின் உடல் நடுங்கியது சட்டென எழுந்தாள். "இ... இப்ப என்ன பண்றது ரவி" நடுக்கமாய்க் கேட்டாள்.



"நீ கட்டிலுக்கு அடியில ஒளிஞ்சுக்கோ. மத்ததை அப்புறம் பார்த்துக்கலாம். கமான் க்விக்!" அவன் சொல்லி முடிக்கும் முன் அந்தப் பெரிய கட்டிலுக்கு அடியில் நுழைந்து கொண்டாள்.

உட்கார முடியாமல் போகவே குப்புறப்படுத்து தேடி வருவது யாரென்று பார்வையை வீசினாள். பேண்ட் போட்ட கால்கள் தெரிய அது சந்தோஷ் என்று தெரிந்தது.

நல்ல வேளையாக வேறு யாரும் தன்னைத் தேடி வரவில்லை என்று நிம்மதியடைந்தபோதும் இன்னொன்று உறைத்தது. இவன் இங்குதானே படுப்பான். அப்படி யென்றால் இவன் தூங்கும் வரை வெளியேற முடியாதே. எவ்வளவு நேரம் இங்கே இருப்பது? யாரேனும் விழித்துத் தன்னைத் தேடினால் நிலைமை மோசமாகி விடுமே. பயமும் நடுக்கமுமாய் மூச்சு விடாமல் அமைதியாய் படுத்துக் கொண்டாள்.

"ரவி! என்னடா லைட் எரியுது. யாரும் மேலே வந்தாங்களா?"

அறைக் கதவை பூட்டி விட்டு நண்பனை நெருங்கி பதட்டமாய்க் கேட்டான்.

"வந்திட்டியா சந்தோஷ். நான் யாரோ வர்றாங்கன்னு நினைச்சுப் பயந்துட்டேன். ஏன்டா இவ்ளோ லேட்?"

"அது இருக்கட்டும். நான் லைட்டை ஆஃப் பண்ணிட்டுத்தானே போனேன். இப்ப எரியுதே. நீயா போட்டே?"

"விளையாடாதே சந்தோஷ். இந்தக் குருட்டுப் பயலுக்கு எதுக்கு லைட். நீதான் மறந்து போட்டுட்டுப் போயிருப்பே. நீ சொன்ன பிறகுதான் லைட் எரிவதே எனக்குத் தெரியுது."

"இல்லடா. எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. ஆஃப் பண்ணிட்டுத்..."

"அதை விடுடா. நீ இவ்வளவு நேரமா எங்கே போனே. நீ இல்லாத நேரம் வேற யாரும் வந்திடுவாங்களோன்னு ரொம்ப பயந்திட்டேன்டா. தூக்கமே வரல்ல..."

"டோண்ட் வொர்ரிடா. எல்லாம் சரியாகப் போயிடும். நான் இப்போ எங்கே போனேன்னு தெரியுமா?"

"அதைத் தானேடா நானும் கேட்டுட்டே இருக்கேன்."

"நாளைக்கு வந்து ரிப்போர்ட் வாங்கச் சொன்னாரில்ல டாக்டர் வெங்கட்ராமன். அவரைத்தான் பார்த்துட்டு கையோட ரிப்போர்ட்டும் வாங்கிட்டு வந்திருக்கேன். என்ன ரிசல்ட் தெரியுமா?"

"அதுதான் ஏற்கனவே தெரியுமே. இவர் வேற என்ன சொல்லி இருப்பார்!" விரக்தியாய் பதிலளித்த நண்பனைக் கட்டிக் கொண்டான் சந்தோஷ்.

"ரவி! ரவி! இனிமே இந்த மாதிரியெல்லாம் விரக்தியா பேசக் கூடாது. நான் ஏற்கனவே சந்தேகப்பட்டது சரியாகப் போச்சு. நாம ஏற்கனவே சென்னையில பார்த்தோமே அந்த பிராடு டாக்டரால வந்த வினை. இத்தனை நாள் நம்மளை நோகடிச்சிட்டது."

அதிர்ந்து எழுந்தான் ரவி. "சந்தோஷ்! நீ என்னடா சொல்றே?"

"ஆமாம் ரவி! போன மாசம் உனக்கு ஜான்டிஸ் வந்து ரொம்பக் கஷ்டப்பட்டியே ஞாபகம் இருக்கா?"

"அதை எப்படிடா மறக்க முடியும்? அதுக்கப்புறம் தானே என் பார்வை மங்கிப் போச்சு. மஞ்சள்காமாலை



முத்திப்போனதால தான் பார்வை நரம்பு பாதிக்கப் பட்டிருக்குன்னு டாக்டர் தெளிவாச் சொன்னாரே..."

"இல்லடா! உன் பார்வை மங்கினதுக்குக் காரணம் அது இல்லடா. மஞ்சள் காமாலையால உன் கண் மஞ்சள் நிறமா மாறிப் போச்சு. அதுக்காகத்தானே நாம ஹாஸ்பிடல் போனோம். அப்ப அந்த டாக்டர் கண்ல விட ஒரு சொட்டு மருந்து தந்தாரே அதுதான் காரணம்..."

சந்தோஷைத் தடவி அவன் தோளைப் பற்றிக் கொண்டான் ரவி. "என்ன சொல்கிறாய் சந்தோஷ். நீ என்ன சொல்ற?"

"உண்மையைத்தான் சொல்கிறேன் ரவி. நாம அந்த டாக்டர் தந்த பிரிஸ்கிரிப்ஷன், ரிப்போர்ட் எல்லாம் இவர்கிட்ட காட்டினோமே, அவர் கம்ப்ளீட்டா செக் பண்ணிக் கண்டுபிடிச்சிட்டார். அந்த மருந்து கண் ஆப்பரேஷன் பண்ணிக்கிறவங்களுக்கு கிளியர் செக்-அப்புக்கு கண்ல விடுற மருந்தாம்."

"என்ன?" அதிர்ந்து போனான் ரவி.

"ஆமாம்பா. அந்த மருந்தை ஊத்தினா நாலு மணி நேரத்திற்குப் பார்வை தெளிவாத் தெரியாதாம். உனக்கு அதைத்தான் தந்திருக்கான். அதை ஊற்றிய பிறகுதான் உனக்கு பார்வை மங்கலாத் தெரிகிறது என்றாய்."

"கடவுளே! திரும்பவும் அதே டாக்டரிடம் தானேடா போனோம். அப்போது கூட அவர் மருந்தைக் கவனிக்க வில்லையா? திரும்பவும் அதைத்தானே தந்தார்" ரவியின் குரல் சில்லிட்டுப் போனது.

"உனக்கு என்ன பிரச்சனைன்னு அவரால கண்டுபிடிக்க முடியலடா. அதனால, தினமும் இரவு

படுக்கும்போது இதே மருந்தை விட்டுட்டு படுங்கன்னார். உனக்குத் தொடர்ந்து இரவு நேரம் மட்டும் பார்வை சரியாத் தெரியலன்னதும் அவரே அது மாலைக்கண் நோய் என்று முடிவு பண்ணிட்டார்."

ரவி விக்கித்துப் போய் அமர்ந்திருக்க, கட்டிலுக்கு அடியில் இருந்த ஜோதியின் இதயமோ எம்பிக் குதித்தது. சந்தோஷின் கைகளைப் பற்றிக் கொண்டான் ரவி.

"இப்ப... என் கண்ணுக்கு என்னடா ஆச்சு. நிரந்தரமாப் பார்வை போயிடுமா. கிட்டத்தட்ட இருபது நாளா அதே மருந்தை யூஸ் பண்ணியிருக்கேனே. என் கண்ணு அவ்வளவுதானா?"

"சேச்சே! அதெப்படி விட்டு விடுவேன். அந்த டாக்டர் மேல எனக்குக் கொஞ்சம் டவுட்தான். அதனாலதான் உன்னை கம்பெல் பண்ணி இங்க கூட்டிட்டு வந்தேன். எங்க ஊர் பக்கம் வெங்கட்ராமன் பெஸ்ட் டாக்டர். அதனால தான் அவர்கிட்ட கூட்டிட்டுப் போயி மறு பரிசோதனை செய்யச் சொன்னேன். அது எவ்வளவு நல்லதாப் போச்சு."

"வெங்கட்ராமன் என்னடா சொன்னார்?"

"பயப்பட வேண்டாம்னு சொன்னார். அதே மருந்தை மூணு வேளை யூஸ் பண்ணியிருந்தா ஒண்ணுமே பண்ணியிருக்க முடியாதாம். நல்லவேளை ஒரு முறைதான் யூஸ் பண்ணியிருக்கோம். அந்த மருந்தை நிறுத்திட்டா பார்வை கொஞ்சம் கொஞ்சமா சரியாகிடுமாம்.

ஒருவேளை கண்ல எரிச்சலோ உறுத்தலோ இருந்தா மட்டும் விடுங்கன்னு இந்த மருந்தைத் தந்தார். ரெண்டு நாள் கழிச்சு உன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னார். நாம



நாளைக்கு மருந்து விட வேண்டாம். பார்வை தெளிவாக இருந்தால் வேறு எந்தப் பயமும் இல்லை."

ஒரு சந்தோஷப் பெருமூச்சோடு கட்டிலில் சாய்ந்தான் ரவி. "சந்தோஷ்! நீ எனக்கு எவ்வளவு பெரிய நன்மை செய்து இருக்கே. என் வாழ்க்கையையே மீட்டுக் கொடுத்திருக்கடா. என் லைஃப்பே இப்படியே இருட்டாகிடுமோன்னு எவ்ளோ பயந்திட்டேன் தெரியுமா? தேங்க்ஸ் நண்பா. இந்த உறவை என் வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டேன். யப்பா! முழுசா இருபது நாள் நரக வேதனை அனுபவிச்சிட்டேன்டா. நல்ல வேளை இதை அம்மாவிடம் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் தாங்கியிருக்க மாட்டார்கள்."

"ஆமான்டா! நாமளும் வெளியே சொல்ல பயந்துதான் வேற ஹாஸ்பிடலுக்குக் கூடப் போகல்ல. நம்மள மாதிரி இந்த டாக்டர்கிட்ட எத்தனை பேர் மாட்டினார்களோ?"

கோபமாய் எழுந்தான் ரவி. "சந்தோஷ்! அந்த டாக்டரைச் சும்மா விடக்கூடாதுடா. அவன் மேல அந்த ஹாஸ்பிடல் மேல கேஸ் போடணும்டா. இத்தனை நாள் என்னை எப்படி நோகச் செய்து விட்டான் அவன்.

மாலை நேரம் ஆனாலே பயந்து போய் அறைக்குள் அடைந்து கொண்டு எத்தனை கொடுமையான வாழ்க்கையில் என்னைத் தள்ளி விட்டான். அவனை ஏதாவது செய்ய வேண்டும் சந்தோஷ்.

என்ன செய்யலாம்? அவன் மேல் கேஸ் போட்டு அவனைக் கோர்ட்டுக்கு இழுத்து அந்த ஹாஸ்பிடலை சீல் வைக்க வேண்டும். அவனைச் சும்மா விடக்கூடாது.

என்னைப் போல் அவனும் துடிக்க வேண்டும். என்ன செய்யலாம் சொல்லு..."

"ரிப்போர்ட் எப்போ என் கைக்கு வந்ததோ அப்பவே சென்னைக்கு போன் பண்ணினேன். ஹாஸ்பிடல்ல யாருமே போனை எடுக்கல்ல. உடனே நம்ம ராஜேஷ்க்கு போன் பண்ணி பார்த்துட்டு வரச் சொன்னேன். நாம என்ன நினைச்சோமோ அது நேற்றுதான் நடந்ததாம்."

"என்னடா சொல்றே?"

"அட ஆமாம்ப்பா. இப்பக் கொஞ்சநாளா போலி டாக்டர்கள் கைது நடக்குதே. அதுல நம்ம பிராடும் மாட்டிக்கிட்டானாம். ஹாஸ்பிடல்ல சீல் வெச்சாச்சாம். டாக்டர் இப்போ கம்பி எண்ணிட்டு இருக்காராம்."

"அடப்பாவி! அவன் போலி டாக்டரா? அவ்ளோ பெரிய ஹாஸ்பிடல் கட்டியிருந்தானேடா. எத்தனை பேஷண்ட்ஸ் இருந்தாங்க. என்ன தைரியம் அவனுக்கு."

"பகுதி நேர டாக்டர்களை வெச்சு சமாளிச்சிட்டு இருந்திருக்கான். நம்ம நேரம் அவனே ட்ரீட்மெண்ட் எடுத்துட்டான். எப்படியோ பாதிப்பு அதிகமாகும் முன் தப்பித்துக் கொண்டோம்."

"நாம தப்பிச்சிட்டோம். எத்தனை பேர் அவனிடம் மாட்டி பார்வையையும் வாழ்க்கையையும் தொலைத் தார்களோ. ஏன்டா! டாக்டர் தொழில் என்பது சாதாரண வேலையா? உயிரோடு போராடும் உன்னதமான சேவை ஆயிற்றே. அதில் கூடவா இப்படிப் போலியானவர்கள் இருப்பார்கள்? இவர்களுக்கெல்லாம் இதயமே இல்லையா? மற்றவர்களின் உயிர் முக்கியமில்லையா?" படபடத்தான் ரவி.



"எல்லாம் கொழுப்புத்தான். பணக்கொழுப்பு. என்னிடம் மட்டும் அவன் மாட்டியிருந்தால் துவம்சம் பண்ணியிருப்பேன். தப்பித்து விட்டான். வெளியே வராத வரைதான் அவனுக்கு நல்லது. வந்தான்னுவை அவனைக் கைகாலை உடைச்சு நிரந்தரமா முடமாக்கிப் போடணும். அப்பத்தான் ஹாஸ்பிடலுக்கு போகத் தோணாது அவனுக்கு!" பற்களைக் கடித்தவாறே கொந்தளித்தான் சந்தோஷ்.

மீண்டும் நண்பனைக் கட்டிக் கொண்டான் ரவி. "இப்போ நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்டா. இப்போ உன் முகம் லேசாத் தெரியுதுடா. விடியப் போகுதா என்ன?"

"டேய்! உனக்கு ஏழு மணிக்கு மருந்தை ஊற்றினேன். மணி இப்போ பதினொன்னு தாண்டியாச்சு. மருந்தோட பவர் குறைந்திருக்கும். எதுக்கும் போய் முகத்தையும் கண்ணையும் கழுவிட்டு வா. நல்லாத் தெரியுதான்னு பார்ப்போம். கீழே போக வேண்டாம்டா. இதோ செம்பில தண்ணி இருக்கு பார். இப்படிச் சுவரோரமா வந்து கழுவு" நண்பனின் கைபற்றி அழைத்துச் சென்று நீரைக் கொடுத்தான்.

முகத்திலறைந்து கழுவினான் ரவி. கண்களைத் திறந்து கை நிறைய நீரை விட்டுக் கழுவினான். சொம்புநீர் முழுவதும் தீரும் வரைக் கழுவினான்.

கையில் டவலோடு வந்தான் சந்தோஷ். "நல்லாத் துடைச்சிட்டு என்னைப் பாருடா. நல்லாத் தெரியுறேனான்னு பாரு!" என்றவாறு டவலைக் கொடுத்தான். தயக்கமும் ஆர்வமுமாய் வாங்கித் துடைக்க ஆரம்பித்தான் ரவி.

# 11

வாடைப் பூங்காற்று என்னைத்
தீண்டும் வாழ்க்கை யாவும் நீ வேண்டும்
கடலோடு அலைபோல உறவாட வேண்டும்
இலைமூடும் மலர்போல எனை மூட வேண்டும்.

புரண்டு படுத்தாள் மீனா. எப்போதும் மெத்தென்று மோதிக் கொள்ளும் ஜோதியின் இடம் வெறுமையாகத் தெரியக் கண்களைத் திறவாமலே கைகளால் துளாவித் தேடினாள். கைகளுக்குத் தட்டுப்படவில்லை என்றதும் சட்டென விழித்தாள். கதவு வெறுமனே சாத்தப்பட்டு இருக்க, பாத்ரூம் போயிருப்பாள் என்ற எண்ணத்தோடு படுத்தாள்.

கண்களை மூடிய போதும் தூக்கம் வரவில்லை. ஐந்து நிமிடம், பத்து நிமிடம் என பொறுத்திருந்து அரை மணி நேரம் சென்றும் ஜோதியைக் காணாமல் பதறி எழுந்தாள்.

"பாத்ரூம் போய் வர இவ்வளவு நேரமா?" எழுந்து அறையின் விளக்கைப் போட்டாள். கதவைத் திறந்து ஹாலுக்கு வந்தால் விளக்கு எதுவும் எரியவில்லை. பின்கட்டிற்குப் போகும் கதவு உள்புறமாய் பூட்டப்பட்டிருந்தது.

ஒருவேளை அத்தையிடம் போய் படுத்திருப்பாளோ. இதுவரை அப்படிச் செய்ததில்லையே. எதற்கும் பார்க்கலாம் என மெதுவாகச் சென்று அத்தையின் அறையை எட்டிப் பார்த்தாள் மீனா.

வாசல் அருகே உள்ள கட்டிலில் ஆச்சி தூங்கிக் கொண்டிருக்க, அத்தை உள்ளே தரையில் பாய் விரித்துப் படுத்திருந்தாள். தனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் அத்தை கட்டிலில் படுத்துப் பார்த்ததே இல்லை. கட்டில்



வெறுமையாய்க் கிடக்க, அத்தை மட்டுமே பாயில் படுத்திருந்தாள். அருகில் ஜோதி இல்லை.

உள்ளம் பதற அன்னையைத் தேடினாள். மாலையில் ஏற்பட்ட பிரச்சனையில் அம்மா பூஜையறை வாசலில் தரையில் துணிகூட விரிக்காமல் வலது கையைத் தலைக்கு வைத்துப் படுத்திருந்தாள். அம்மாவிடமும் இல்லையென்றால் ஜோதி எங்கே போய் விட்டாள்?

வராந்தாவில் அப்பா மட்டுமே படுத்திருக்க, கதவு கேட் எல்லாமே உட்புறமாய் பூட்டப்பட்டிருக்க மீனாவின் முகம் கலவரமானது. இதற்கு மேலும் தாமதிக்கக்கூடாது என்ற முடிவுடன் அறையின் விளக்கைப் போட்டாள்.

விளக்கின் ஒளி பட்டதுமே முகத்தைச் சுருக்கிக் கொண்டு விழித்தாள் ராஜலட்சுமி. மகள் பதட்டமாய் நிற்கக் கண்டு எழுந்து அமர்ந்தாள்.

"என்னம்மா! வெளியே போகணுமா?" கொட்டாவி விட்டவாறே கேட்டாள். தாயின் அருகே உட்கார்ந்த மீனா மெதுவான குரலில்,

"அம்மா! அம்மா ஜோதியைக் காணோம்மா!" என்றாள்.

ராஜலட்சுமியின் தூக்கம் சட்டென விலகிவிட, கூந்தலைக் கொண்டையாக முடிந்து கொண்டே, "என்னடி சொல்ற, ஜோதியைக் காணோமா? இங்கதான் வெளியே போயிருப்பா பாரு..." என்றவாறே எழுந்தாள்.

"இல்லம்மா! கதவு உள்ளேதான் பூட்டியிருக்கு. நான் எல்லா அறையிலும் தேடிட்டேன். அவளை எங்கேயும் காணல்ல. பயம்மா இருக்கும்மா!"

"ஐயோ! நான் என்ன பண்ணுவேன். அப்பாவை எழுப்பேண்டி. ஆத்தா மகமாயி நான் என்ன பாவம் செய்தேன்? ஏன் இப்படி என் குடும்பத்தைச் சோதிக்கிற மனோகரி! அத்தே!" எனக் குரல் கொடுத்துக் கொண்டே ஓட, அதற்குள் மனோகரி எழுந்து விளக்கைப் போட்டாள்.

"என்ன மதினி. ஏன் பதுருறீங்க. அண்ணன் உடம்புக்கு எதுவும் பண்ணுதா? என்ன மதினி?" என்றாள் பதட்டமாய்.

"என் மவனுக்கு என்ன? ராத்திரி வரைக்கும் நல்லாத்தானே இருந்தான். ராசா!" என்றவாறு பாட்டி கட்டிலை விட்டு இறங்க,

"அத்தே! அவுகளுக்கு ஒண்ணுமில்ல. நம்ம ஜோதியைத் தான் காணோம்!" என்றாள் ராஜலட்சுமி அழுகையோடு.

"எம்புள்ளையக் காணோமா? எங்கே போனா, அம்மாடி ஜோதி. ஜோதி..." என மனோகரி கூவிக் கொண்டே ஒவ்வொரு அறையாகத் தேட, பதறி எழுந்து வந்தார் முத்துக்குமாரசாமி.

"மீனாம்மா! நீ நல்லாத் தேடிப் பார்த்தியா? அரைகுறையாகத் தேடிப் பார்த்துட்டு பயமுறுத்தாதே."

"இல்லப்பா! நான் எல்லா ரூம்லயும் தேடிப் பார்த்திட்டேன் மாடியைத் தவிர."

"அங்கெல்லாம் போக மாட்டாளே. வேற எங்கே போயிருப்பா?" பதட்டமாகப் பின்பக்கக் கதவைத் திறந்து குளியலறை, கழிப்பறை, கிணற்றடி என ஒரு இடம் விடாமல் தேடித் தவித்தபோது, எல்லா அறைகளையும் தேடிப் பார்த்து விட்டு மனோகரி பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.



"ஐயோ! எம்புள்ள ஆத்துலயோ கொளத்திலயோ விழப் போயிட்டாளே. ஆசைப்பட்டவன் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டான்னு இந்த முடிவுக்குப் போயிட்டியாம்மா. நீ அவன் மேலே இம்புட்டு ஆசை வெச்சிருந்தியா! உன் ஆசைக்கு அவன் தீயை வெச்சிட்டானே.

எனக்குன்னு இருந்த ஒரே உசுரையும் பறிச்சிட்டியே ஆண்டவா! உனக்குக் கண்ணே இல்லையா!" தலையில் அடித்துக் கொண்டு அவள் அழ அனைவரும் விக்கித்துப் போயினர்.

ஜோதி அழுதுகொண்டே இருந்தது அனைவருக்கும் தெரியும். ஆனால் அதற்குக் காரணம் சந்தோஷின் பேச்சு என்பது இப்போதுதான் புரிய அனைவரும் வாயடைத்துப் போய் நிற்க, முத்துக்குமாரசாமியின் கண்கள் நெருப்புக் கங்குகளாய் ஜொலித்தது.

பதறும் இதயத்தோடு ஜோதியும், தவிப்பாய் சந்தோஷும் பார்த்துக் கொண்டிருக்க, கண்களைத் திறந்தான் ரவி. சில நொடிகள் விழிகளை மூடித் திறந்து பார்த்துவிட்டு சந்தோஷமாய் கூச்சலிட்டான்.

"சந்தோஷ்! நீ நல்லாத் தெரியுறடா. எனக்கு எல்லாமே தெளிவாகத் தெரியுது. ஓ. தேங்க் காட். தேங்க்ஸ்டா. ரொம்பத் தேங்க்ஸ்!" நண்பனைக் கட்டிக் கொண்டான்.

தான் எந்தச் சூழ்நிலையில் மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து ஜோதி நிம்மதியாய் மூச்சுவிட்டாள். மனம் முழுக்க உற்சாக அலையடிக்க, உடனே ஓடிப்போய் ரவியைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று தோன்றிய ஆவலை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

இதுபோதும். இனி என் ரவி எதற்கும் கலங்க மாட்டார். எதற்கும் தயங்க மாட்டார். இனி அவர் மனதைத் திறந்து என்னை ஏற்றுக் கொள்வார். மாமாவிற்கும் அத்தைக்கும் ஏற்கனவே ரவியைப் பிடித்திருக்கிறது. விடிந்ததும் மாமா திருமணப் பேச்சை எடுப்பார். இனி ரவி மறுக்கப் போவதில்லை.

விரும்பியவனையே பெற்றோர், உற்றார் உறவினரின் சம்மதத்தோடு மணம் முடிப்பது எத்தனை ஆனந்தம். எந்த போராட்டமும் தடையும் இல்லாமல் என் நேசம் கை கூடிவிட்டது. இதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு?

சந்தோஷ மிகுதியில் கண்கள் கசிந்தன.

அந்த நேரம்தான் மனோகரியின் ஓலம் கேட்டது. சத்தம் கேட்டு நண்பர்கள் பதட்டமாய்க் கீழே ஓட, பயமாய் வெளியே வந்தாள் ஜோதி.

இப்போது எப்படிக் கீழே போவது? அனைவரும் ஹாலில் கூடி நிற்கும்போது எப்படிப் போக முடியும்? வேறு கதவோ வழியோ இல்லையே. இதுவரை இருந்த உற்சாகம் மொத்தமாய் வடிந்து போக முகம் வெளிறிப் போனாள். கைகால்கள் நடுங்க, ஜன்னல் வழியே கீழே எட்டிப் பார்த்தாள்.

அம்மா சந்தோஷின் சட்டையைப் பற்றி உலுக்கிக் கொண்டிருந்தார்.

"ஏன்டா எம் பொண்ணை வேண்டாமுன்னு சொன்னே. அவகிட்ட என்னடா குறையைக் கண்ட. சும்மா இருந்த பிள்ளையை கூடகூடப் பேசி வம்பிழுத்து எப்போதும் சிரிப்பும் கும்மாளமுமா இருப்பியே. அதெல்லாம் வெறும் நாடகமா?



உன் நாடகத்தை நம்பி எம்பொண்ணு ஏமாந்து போயிட்டாளே. எம்புருஷனைப் போலவே எம் புள்ளையும் ஏமாந்து போச்சே!" கதறினாள் மனோகரி.

சந்தோஷ் பதறினான். "அத்தே என்ன சொல்றீங்க. எனக்கு எதுவுமே புரியல்ல. ஜோதி எங்கே? அவளுக்கு என்னாச்சு?"

மற்றவர்கள் உறைந்து போயிருக்க, பாட்டிதான் அழுது கொண்டே குரல் கொடுத்தாள்.

"வீடு முழுக்கத் தேடியும் புள்ளையைக் காணோம்யா."

"என்ன?" துல்லியமாய் அதிர்ந்து போனான்.

சாட்டையால் அடிபட்டது போல் துடித்து நிமிர்ந்தான் ரவி. "எப்படி மறந்தேன். கட்டிலுக்கு அடியில் மறைந்து கொள்ளச் சொன்னோமே. கடவுளே! சந்தோஷின் பேச்சில் சுத்தமாய் மறந்து விட்டோமே. இப்போது வீடு முழுக்க கலவரமாகிப் போனதே."

சொல்லிவிடலாம் என்று வாயைத் திறக்க முனைந்த போது இன்னொன்று உறைத்தது. என்னவென்று சொல்வது? இந்த நள்ளிரவில் உங்கள் பெண் என்னைப் பார்க்கத்தான் மாடிக்கு வந்தாள் என்று சொல்ல முடியுமா? அதை இவர்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள். ஐயோ! இது கிராமம் ஆயிற்றே. உண்மையைச் சொன்னால் புரிந்து கொள்வார்களா? உண்மையைச் சொல்லும் வரை பொறுமையாகக் கேட்பார்களா? அப்படியே சொன்னா இது ஜோதிக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிடுமே.

சொல்லாமலும் இருக்க முடியாதே. சந்தோஷின் மீதல்லவா வீண் பழி விழுகிறது. என் நண்பனை இந்த இக்கட்டிலிருந்து காக்க வேண்டியது என் கடமை ஆயிற்றே.

அப்படியென்றால் ஜோதியின் நிலை... இருதலைக் கொள்ளியாய் தவித்துக் கொண்டே மாடியை எட்டிப் பார்த்தான் ரவி. நைஸாக இறங்கி வந்துவிட மாட்டாளா? பிறர் அறியாமல் அந்தப் படிக்கட்டில் இறங்கவும் முடியாது. அது பழையகால மாடலில் உண்டான மரத்தாலான படிக்கட்டு. எத்தனை மெதுவாய் இறங்கினாலும் ஓசை எழுப்பிக் காட்டிக் கொடுத்துவிடும். எப்படியும் இவர்கள் பார்வையிலிருந்து தப்ப முடியாது.

பிரச்சனை மேலும் வளரும் முன் சொல்லிவிடலாம் என நினைத்துத் தயக்கமாய் வாயைத் திறந்தபோது, முத்துக்குமாரசாமி வாயைத் திறந்தார்.

"எங்கேடா என் மருமக?" உரக்க ஒலித்த தந்தையின் குரலால் மிரண்டான் சந்தோஷ்.

"சத்தியமா எனக்குத் தெரியாதுப்பா. நான் வெளியே போயிட்டு இப்பக் கொஞ்சம் முன்னாடிதான் வந்தேன்."

"நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ! போ... போய் எம்மருமக எங்க இருந்தாலும் கையோட கூட்டிட்டு வா. நாளைக்கே உங்களுக்குக் கல்யாணம்!" உறுதியாய் ஆணையிட்டார்.

"அப்பா!" அதிர்ந்து போனான். ரவியும் இடியை நேரடியாய் தலையில் வாங்கியது போல் துடிக்க, "பேசாதே. நான் சொன்னா சொன்னதுதான். வந்தா எம்மருமகளோடு வா. இல்லேன்னா நீயும் அப்படியே போயிடு. உனக்கும் சேர்த்துத் தலைமுழுகிடறேன்."

"அப்பா! என்ன பேசுறீங்க? ஜோதியைப் பற்றி எனக்குத் தெரியும். அவளுக்கு எம்மேல எந்த ஆசையும் கிடையாது. நீங்கள்லாம் தப்பாப் புரிஞ்சிகிட்டு பேசுறீங்க."



"உம்மேல ஆசையில்லாமலா நீ கட்டிக்க மாட்டேன்னதும் தேம்பித் தேம்பி அழுதா. அண்ணா! நான் தூங்குற வரைக்கும் ஜோதி அழுதிட்டேதான் இருந்தா."

"இதோ பாருடா! ஜோதி மனசுல நீ இல்லன்னு எப்படிச் சொல்ற. எப்பவும் வம்பு பண்ணி சண்டை போட்டுக்கிட்டாலும் நீ ஊருக்கு வந்தா உன்னை விட்டு நகரவே மாட்டாளே. உம்மேல ப்ரியம் இல்லாமலா இருப்பா!" ராஜலட்சுமி கோபமாய்க் கேட்டுத் திண்டாடினாள்.

"அம்மா! அன்பு இருக்கும்மா. ஆனா நினைக்கிற ப்ரியம் இல்ல."

"நீ படிச்சவன். ஆயிரம் விதமா பேசுவ. எங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் ஒண்ணுதான். அவ உம்மேலே ப்ரியமாத் தானே இருந்தா. உனக்கும் அவமேல ப்ரியம்தானே."

"ஆமா."

"அப்போ ஏன் கல்யாணம் வேண்டாம்னு சொன்னே. இப்பவும் அவ குழந்தைதான். அந்தக் குழந்தையை உன் கையிலதான் ஒப்படைக்கப் போறேன். உம்மேல எவ்வளவு ஆசை வெச்சிருந்தா நீ மறுத்ததும் சாவைத் தேடிப் போவா."

"ஏன் எல்லாரும் இப்படிச் சொன்னதையே சொல்றீங்க. ஜோதி எங்க போனான்னு முதல்ல தேடுவோம். அப்புறம் மத்ததைப் பேசுங்க. மீனா! நீ தூங்குற வரைக்கும் ஜோதி இருந்தாளா?"

"ஆமாண்ணா. ரொம்ப நேரம் அழுதிட்டே இருந்தா. சாப்பிடவும் இல்ல."

"நீ எத்தனை மணிக்குத் தூங்கின?"

"ம். பத்து மணி இருக்கும். சீக்கிரம் படுத்தாலும் லேட்டாத்தான் தூங்கினேன்."

"அப்போ அதுக்கப்புறம் நிச்சயமா வெளியே போயிருக்க முடியாது. ஏன்னா நான் வர்றவரைக்கும் மாரி திண்ணையில முழிச்சிட்டுத்தான் இருந்தான். ஸோ, அவனுக்குத் தெரியாம வெளியே போயிருக்க முடியாது."

"அப்போ நாங்களே அவளை ஒளிச்சி வெச்சிருக்கோ முன்னு சொல்றியா?" அத்தை வெடுக்கெனக் கேட்கவும் நிமிர்ந்தான்.

அப்படியும் இருக்குமோ. ஜோதியை இவர்களே மறைத்து வைத்துவிட்டுத் தன்னை மிரட்டித் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க முயல்கிறார்களோ? ஆனால் இதற்கு ஜோதி எப்படி சம்மதித்தாள்? இத்தனை ஆண்டுகளில் ஒருமுறை கூடத் தன்னை விரும்புவதாகவோ மணமுடிக்கும் எண்ணம் இருப்பதாகவோ ஒரு வார்த்தை கூட சொன்னதில்லையே.

செயல்களில் கூடக் காட்டியதில்லையே. எப்போதாவது ஆச்சி அந்தப் பேச்சை எடுத்தால், "போயும் போயும் இவனையா கட்டுவேன். இவனைக் கட்டுவதற்குப் பதில் சன்னியாசியாகப் போய் விடலாம்" என்பாளே தவிர, வெட்கமோ நாணமோ கொண்டதில்லை. நிச்சயம் சம்மதிக்க மாட்டாள்.

பிறகெங்கே போனாள்? வீட்டினுள் அவளை எல்லா இடத்திலும் தேடியாச்சு. மாடியைத் தவிர, சட்டென மின்னல் வெட்டியது. மாடியில் இருப்பாளோ, போகும்போது விளக்கை அணைத்து விட்டுத்தான் போனேன். வரும்போது விளக்கு எரிந்ததே.



கேட்டதற்கு ரவியும் சரியாகப் பதில் சொல்லவில்லை. அப்படியென்றால் மாடியில்தான் ஜோதி இருக்கிறாளா? ஏன்? எதற்காக இந்த நள்ளிரவில் நான் இல்லாத சமயம் மேலே போனாள்? ரவியைப் பார்க்கவா? அப்படியென்றால் இருவருமே தன்னிடம் மறைத்து விட்டார்களா? கோபமாய் தன் நண்பனைத் திரும்பிப் பார்க்க, அவனோ தவிப்பாய் மாடியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சந்தோஷின் மனம் உலைக்களமாகி கொதிக்க ஆரம்பித்தது.

## 12

உன்னைக் காணாமல் கண்கள்
பொங்கும் அதுவே நெஞ்சின்
ஆதங்கம் பூமேகம் இங்கே
ஆகாயம் எங்கே? - நீ சென்ற
வழி பார்த்துத் தேடும் உன் பூ இங்கே!

பளாரென கன்னத்தில் அறைந்தார் முத்துக்குமார சாமி. பொறி கலங்கிப் போனாள் ஜோதி. வாழ்க்கையில் முதல்முறையாய் விழுந்த அடி. அதுவும் மாமாவின் கையால். துளியும் கலங்காமல் நின்றவளைப் பார்த்து மனோகரி அருகில் வந்தாள்.

"எத்தனை நெஞ்சழுத்தம் இருந்தா இப்படி ஒரு காரியத்தைச் செய்துவிட்டு கல்லாட்டம் நிற்பே. இந்தக் குடும்பத்தில பொறந்துட்டு எப்படி இந்தக் காரியம் செய்ய மனசு வந்தது. சண்டாளி!" என முதுகில் தாறுமாறாய் அறைந்தாள்.

சந்தோஷ் இன்னமும் அசையாமல் நிற்க, ரவிதான் பதறித் தடுத்தான்.

"அடிக்காதீங்க ஆன்ட்டி. நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்கல்ல. சும்மா பேசிட்டுத்தான் இருந்தோம்."

"ஓஹோ! உங்க பட்டணத்துல இப்படி அர்த்த ராத்திரிலதான் சந்திச்சுப் பேசுவீங்களோ! எங்க ஊர்ல அதுக்கு வேற பேரு!" என்றாள் ஆத்திரமாய்.

"ப்ளீஸ் ஆன்ட்டி. தப்பாப் பேசாதீங்க. நான் அப்படிப் பட்டவன் இல்லை. நல்ல குடும்பத்துல பொறந்து ஒழுக்கமா வளர்ந்த புள்ளை."

முத்துக்குமாரசாமி வாயைத் திறந்தார். "நாங்களும் அப்படித்தான் நினைச்சு உன்னை உள்ளே விட்டோம். ஆனா வந்து பத்து நாள் கூட ஆகல்ல. அதுக்குள்ள எங்க வீட்டுப் பெண்ணை மயக்கி நேரம் கெட்ட நேரத்தில உன்னைத் தேடி வர்ற மாதிரி பண்ணிட்டியே. இதுக்குத்தான் வயசுப் பொண்ணு இருக்கிற வீட்ல கண்டவனையும் நுழையவிட மாட்டோம். எம் மகன் பேச்சை ஒத்துக்கிட்டது எவ்வளவு பெரிய தப்பு. ச்சே! உன்னைப் பத்தி என்னவெல்லாம் நினைச்சு வெச்சிருந்தோம். எல்லாத்திலயும் நெருப்பை அள்ளிக் கொட்டிட்டியே."

ராஜலட்சுமி மெதுவாய் கணவன் அருகே வந்தாள். "ஏனுங்க நடந்தது நடந்து போச்சு. அதையே பேசிப் பிரச்சனையைப் பெரிசுபடுத்தாம நடக்க வேண்டியதைப் பாருங்க. நாமளே இந்தப் புள்ளைக்கு ஜோதியைக் குடுக்கலாம்னு தானே பேசிக்கிட்டோம். இப்ப அதுகளே விரும்புதுக. நல்லபடியா கல்யாணத்தை முடிச்சிடலாங்க!" அவள் முடிக்கும் முன்பே சீறினார் அவர்.



"வாயை மூடுடி. இவன் யோக்யமானவனா இருப்பான்னு நினைச்சித்தான் பேசினோம். ஆனா இப்பத்தான் இவன் யோக்யதை தெரிஞ்சு போச்சே. வந்து பத்து நாள்ல நம்ம பொண்ணு மனசைக் கெடுத்தவன் எப்படி யோக்யனா இருக்க முடியும். இங்கேயே நம் கண் முன்னே இப்படி என்றால் பட்டணத்தில் எப்படி இருந்திருப்பான். எத்தனை பெண்களைக் கெடுத்தானோ! இவன் லட்சணம் தெரிந்துதான் திருமணம் வரை வந்த பெண் இவனை வேண்டாம் என்று உதறியிருக்கிறாள்.

இவனுக்கு நம் பெண்ணைக் கொடுப்பதா? அதற்குப் பதிலாக அவளைக் கல்லைக் கட்டி கடலில் தள்ளலாம். இனி திருமணப் பேச்சுக்கு இடமே இல்லை. சந்தோஷ்! விடியும் முன் உன் நண்பனை வீட்டை விட்டு விரட்டிவிடு!" மகனிடம் கடுமையாக உத்தரவிட்டார்.

"மாமா!" என வீறிட்டவாறே அவரது காலில் விழுந்தாள் ஜோதி.

"நீங்க நினைக்கிறது தப்பு மாமா. அவர்மேல எந்தத் தப்பும் கிடையாது மாமா. நான்தான் அவரை விரும்பினேன். அவர் என்னை விட்டு விலகி விலகிப் போனார். அதற்கான காரணத்தைத் தெரிஞ்சுக்கத்தான் மாடிக்குப் போனேன். சத்தியமா வேற எதுக்கும் போகல்ல. ஆனா நான் போனவுடனே சந்தோஷ் வந்துட்டான். அது சந்தோஷ்ன்னு தெரிஞ்சிருந்தா நான் ஒளிஞ்சிருக்க மாட்டேன். நீங்க யாரோ வர்றீங்கன்னு தான் கட்டிலுக்குக் கீழே போய் ஒளிஞ்சிகிட்டேன்.

நான் போனதோ ஒளிஞ்சிகிட்டதோ இவருக்குத் தெரியாது மாமா. அவர் தூங்கிட்டு இருந்தாரு. ஏதோ

விளையாட்டுத்தனமா மேலே போயிட்டேனே தவிர, அவரை எழுப்பிப் பேச என்னால முடியல்ல. வேற எதுவும் நான் தப்புச் செய்யல மாமா.

நீங்க யாரும் என்னைத் தேடலன்னா நானே சந்தோஷ்கிட்ட எல்லாம் சொல்லியிருப்பேன். அதுக்குள்ள இப்படி ஆகிடுச்சு. என் மேலே உள்ள தப்புத்தான். அதுக்காக நீங்க என்ன தண்டனை வேணும்னாலும் கொடுங்க.

ஆனா ரவியை மட்டும் அனுப்பிடாதீங்க மாமா. அவரைத்தான் என் கணவரா நினைச்சிட்டு இருக்கேன். அவரைத் தவிர வேறு யாருக்கும் கழுத்தை நீட்ட மாட்டேன். இது சத்தியம் மாமா!" காலைக் கட்டிக் கொண்டு கதறியவளைக் கண்டு விக்கித்துப் போனார்.

ரவியின் கண்களில் நீர் நிறைந்தது. என்னைக் காப்பாற்றத் தன்னையே வருத்திக் கொள்கிறாளே. என்னை யாரும் அவதூறு சொல்லி விடக்கூடாது என்று தன் மீதே அனைத்துப் பழியையும் போட்டுக் கொண்டாளே. இனி என்ன நேர்ந்தாலும் இவள்தான் என் மனைவி. மனதிற்குள் உறுதியான முடிவெடுத்தான் ரவி.

அதற்குள் ஜோதியின் கூந்தலைப் பற்றி எழுப்பினாள் மனோகரி.

"என்னடி சொன்னே! அவனை விரும்புறியா? அவனைப் பார்க்க நீயேதான் போனியா? என்ன திமிருடி உனக்கு. இந்தப் பேச்சைக் கேட்கவா உன்னை வளர்த்தேன். இந்தக் குடும்பத்தோட மானம், மரியாதை எல்லாத்தையும் குழி தோண்டிப் புதைச்சிட்டியே. நீ



உயிரோடு இருக்க வேண்டாம். செத்து ஒழி" - மகளைப் பேய்த் தனமாய் அடித்தாள்.

"மனோ! விடு அவளை" தங்கையைத் தடுத்தார். ஜோதியைத் தன் அருகில் அழைத்துக் கண்ணீரைத் துடைத்து விட்டார்.

"குழந்தையை ஏன் அடிக்கிற? அவதான் மனசில் உள்ளதைத் தைரியமா சொல்லிட்டாளே. இனிமே கோபப் பட்டு என்ன ஆகப் போகுது. இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம்."

"என்ன அண்ணே சொல்றீங்க?"

"ஆமாம்மா. நானும் உன் மதினியும் ஏற்கனவே இவங்களுக்குக் கல்யாணம் பேசி முடிச்சிடலாம்னு பேசிக் கிட்டோம்."

"அதுக்குப் பிறகுதான் மாமா அவரை விரும்பினேன். இது தப்பா?" கண்ணீரோடு கேட்டாள் ஜோதி.

"அண்ணே! இப்பத்தானே இவன் யோக்யதை பத்திச் சொன்னீங்க. அதுக்குள்ள எல்லாம் மறந்து போச்சா?"

"இல்லம்மா! நாம பொண்ணைக் காணோம்னு பதறித் துடிச்சுத் தேடியபோது இந்தப் புள்ளை நம்மிடம் ஒன்றுமே சொல்லவில்லையே. அதனால்தான் அவள் மாடியிலிருந்து இறங்கி வந்ததும் அவளை வைத்துக் கொண்டே நம்மிடம் எதுவும் சொல்லாமல் மறைத்துவிட்டானே என்ற ஆத்திரத்தில் அப்படிப் பேசினேன்.

ஆனால் இவ மேலே போனதே அந்தப் புள்ளைக்குத் தெரியாம இருந்திருக்குதே. பிறகெப்படி

அந்தப் புள்ளை மேல தப்புச் சொல்ல முடியும். தப்பு நம்ம பொண்ணு மேல இருக்கு. அதுக்குக் காரணமும் தெரிஞ்சு போச்சு. அதை நாமதானே சரி பண்ணனும்."

"அதுக்கு?" என்றார் மனோகரி கேள்வியாய்.

"இந்தப் புள்ளைக்கே நம்ம பொண்ணைக் கட்டி வெச்சிடலாம்."

"முடியாது. இப்படிக் கண்டவனுக்கும் எம்பொண்ணைக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன். இவ என்னன்னா நான் போனதே அவனுக்குத் தெரியாதுன்றா. அவன் நான் சும்மா பேசிட்டுத்தான் இருந்தேன்றான். இதுல யார் சொல்றது உண்மை.

இவளே தேடிப் போனதா இருந்தாலும் அவன் ஏன் நம்மகிட்ட பொய் சொல்லணும். இந்தச் சின்ன விஷயத்துக்கே பொய் சொன்னவன் எப்படி நல்லவனா இருக்க முடியும்?"

அதுவரை அமைதியாய் இருந்த பாட்டி வாய் திறந்தாள். "மனோ! இது கூடவா புரியல உனக்கு? உம்பொண்ணை அவன் கண்ணு முன்னால போட்டு அடிச்சியே. அதைத் தாங்க முடியாம உம்பொண்ணுக்காக பரிந்து கொண்டு வந்திருக்கிறான். அதை ஏன் பொய் சொன்னதாய் நினைக்கிறாய்?

உன் மகள் மீது அவனுக்கு இருக்கும் அன்பையும் அக்கறையையும் காட்டுகிறான் என்று எடுத்துக் கொள்ளேன். எனக்கென்னவோ இது ஒரு பெரிய தவறாகத் தெரிய வில்லை" என்றார்.



"அம்மா! புரியாமல் பேசாதே. எதையும் ஆராயாமல் என்னைக் கொடுத்ததால் என் நிலை என்ன ஆயிற்று என்று தெரிந்தும் இப்படி அலட்சியமாய் எப்படி விட முடியும்? நாளை ஒரு பொய்யனைக் கட்டிக் கொண்டு இவள் ஏமாந்து நின்றால் அதுவும் என் தலையில்தானே விடியும்? இவன் வேண்டாம்மா!"

"ஆன்ட்டி! நீங்கள் நினைப்பது போல் எல்லாம் நடக்காது ஆன்ட்டி. என்னிடம் எந்தக் கெட்டப்பழக்கமும் கிடையாது. பெண்ணைப் பெற்றவர் நீங்கள். உங்கள் பயமும் நியாயமானதுதான். ஆனால் என்னிடம் ஜோதியை நம்பிக் கொடுங்கள். கண்ணாய்ப் பார்த்துக் கொள்வேன். உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லையென்றால்... சென்னையில் வந்து விசாரித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு முழு திருப்தி என்றால் சம்மதியுங்கள். இல்லையென்றால் விட்டுவிடுங்கள். அதன் பிறகு உங்களிடம் நான் எந்த இடையூறும் செய்ய மாட்டேன். வேண்டுமானால் இப்போதே நான் போய் விடுகிறேன்" என்றான் அமைதியாய்.

ஒரு கணம் அமைதியானாள் மனோகரி. அவள் அருகில் வந்தார் முத்துக்குமாரசாமி.

"இன்னும் என்னம்மா யோசனை? அதுதான் அந்த மாப்பிள்ளையே சொல்லி விட்டதே... வேண்டுமானால் நாளையே நாம் போய் விசாரிப்போமா?"

"விசாரிப்பது இருக்கட்டும் அண்ணா! முதலில் நான் கேட்கும் கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்லச் சொல்லுங்கள். அப்படி சொல்லிவிட்டால் எம்பொண்ணைக் கொடுக்க எனக்குச் சம்மதம்."

அனைவரின் முகமும் சட்டென மலர்ந்தது. "கேளுங்க ஆன்ட்டி, நீங்கள் எது கேட்டாலும் நான் உண்மையைத்தான் சொல்வேன். கேளுங்க."

முகம் மலர்ந்த புன்னகையோடு கேட்டவனைக் கூர்ந்து பார்த்தாள் மனோகரி. "உன்னோட கல்யாணம் ஏம்ப்பா நின்னுப் போச்சு? அந்தப் பொண்ணு உன்னை ஏன் வேண்டாம்னு சொன்னா? என்ன காரணம்னு உள்ளதை உள்ளபடியே சொல்லு. நான் உன்னை நம்புகிறேன்!" தெளிவாய் அவள் கேட்ட கேள்வியில் வாயடைத்துப் போனான்.

'எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? கண்பார்வையில் ஒரு கோளாறும் இல்லை என்றால் நம்புவார்களா, இல்லை அதையே காரணம் காட்டி திருமணத்தையே நிறுத்தி விடுவார்களா?' என அவன் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில் அதுவரை சிலையாய் நின்ற சந்தோஷ் குரல் கொடுத்தான்.

"அதை நான் சொல்கிறேன்."

# 13

ஏழ்பிறப்பும் இணைந்திருக்கும்
சொந்தம் இந்தச் சொந்தமம்மா
வாழ்விருக்கும் நாள் வரைக்கும்
தஞ்சம் உந்தன் நெஞ்சம் அம்மா!

அனைவரின் பார்வையும் சந்தோஷிடம் சென்றது. அவன் அங்கு நின்றதே அப்போதுதான் அனைவருக்கும் நினைவுவந்தாற் போல் இருந்தது.



"அத்தே! நான் பொய் சொல்ல மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் என் நண்பனுக்காக நான் எதையும் மறைத்து விட்டேன் என்று நீங்கள் நினைக்கக்கூடாது என்பதற்காக நான் என் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். இப்போ நான் சொல்லப் போவது அனைத்தும் உண்மை" என்று தன் தலைமீது கை வைத்துச் சொன்னான் சந்தோஷ்.

உண்மையாகவே பதறிப் போனாள் மனோகரி. "என்னப்பா இது. நீ சொன்னால் நம்பமாட்டேனா. ஏன் சத்தியம் செய்கிறாய்?"

"இல்ல அத்தே! சில சமயங்கள்ல உண்மையை நிலைநாட்ட நம்ப வைக்க சத்தியம் செய்துதான் ஆகவேண்டும். இப்ப நான் சொல்லப் போகிற உண்மை என் அம்மா அப்பாவிற்கே தெரியாது.

ரவியின் திருமணம் நின்றுபோனது உண்மைதான். ஆனால் அதை நிறுத்தியது மணப்பெண் அல்ல. ரவிதான் நிறுத்தினான்."

"என்ன?" அனைவரும் மொத்தமாய் அதிர்ந்தனர். "தம்பி! என்னடா சொல்ற. அந்தப் பொண்ணுக்குத்தானே ரவியைப் பிடிக்காம வேண்டாம்னு சொல்லிட்டதாச் சொன்னே. நான்கூட அன்னிக்கு அந்தப் பொண்ணை வைதேனே!" படபடப்பாகக் கேட்டாள் ராஜலட்சுமி.

"என்னை மன்னித்து விடுங்கள் அம்மா. அது என் நண்பனுக்காக நான் சொன்ன சிறு பொய். அதையும் காரணமில்லாமல் சொல்லவில்லை. ரவியேதான் நிறுத்தினான் என்று சொல்லியிருந்தால் ஏன், எதற்கு என்று கேட்டிருப்பீர்கள்.

அதற்கான உண்மையான காரணத்தைச் சொல்லி என் நண்பன் உங்கள் முன் பரிதாபமாக நிற்கக் கூடாது என்றுதான் அப்படிச் சொன்னேன். நல்ல விஷயத்திற்குப் பொய் சொல்வது தப்பில்லை அம்மா."

"அது சரிப்பா. ஆனா உன் நண்பன் ஏன் பரிதாபமாக நிற்க வேண்டும். எதற்காக? முதலில் அதைச் சொல்."

"சொல்கிறேன் அப்பா. கொஞ்ச நாள் முன்னால ரவிக்கு மஞ்சள் காமாலை வந்திருந்தது. சரியாக கவனிக்காமல் விட்டதில் கண்கள் வரை பரவி கண்ணில் வெள்ளை நிறம், நிறம் மாறி மஞ்சளாய்த் தெரிந்தது."

"அச்சச்சோ காமாலை முத்தியிருக்கும். அப்புறம் என்னாச்சு. ஆஸ்பத்திரிக்குப் போனீங்களா? சரியாகிடுச்சா? பத்தியமெல்லாம் இருக்கணுமே." பதைப்புடன் கேட்டாள் ராஜலட்சுமி.

"அது சரியாப் போச்சும்மா. கண்ணைக் காட்ட ஒரு கண் ஆஸ்பத்திரிக்குப் போனோம். அங்கேயுள்ள பிராடு டாக்டர் ஒருத்தன் கண்ணுல விட ஒரு சொட்டு மருந்து கொடுத்தான். 'தினமும் இரவு படுக்கும்போது ரெண்டு சொட்டு விடுங்கன்னு' சொன்னான்."

"மருந்தை சரியா விட்டீங்களா?"

"நான் ரவியை அவன் வீட்ல விட்டுட்டு என்னோட பிளாட்டுக்குப் போயிட்டேன். மறுநாள் காலையிலயே ரவிகிட்ட இருந்து எனக்கு போன் வந்தது. ராத்திரி பாத்ரூம் போக எழுந்தேன்டா. எனக்குக் கண்ணே தெரியல. விடிஞ்ச பிறகுதான் தெரிஞ்சதுன்னான்."

"ஐய்யய்யோ..." இப்போது பதறியது மனோகரி.



"நாங்களும் இப்படிப் பதறியடிச்சுட்டு அந்த டாக்டருகிட்ட போனோம். அவன் அப்படி இப்படி டெஸ்ட் பண்ணிட்டு உங்களுக்கு மாலைக்கண் நோய் ஆரம்பமாகி யிருக்குன்னு ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டுட்டான்."

"என்ன? மாலைக்கண் நோயா? அப்போ ராத்திரியெல்லாம் கண் தெரியாதா? இவனுக்கு எப்படி என் பெண்ணை..."

"அத்தே! நான் முழுதும் சொல்லி முடிச்சுடறேன். டாக்டர் சொன்னதும் நாங்க துடிச்சுப் போயிட்டோம். ரவி இடிஞ்சு போனான். மாலை நேரமானதும் பயந்து போய் அறைக்குள் முடங்கிக் கொண்டான். வெளியே யாரிடமும் சொல்லவும் பயம். அம்மாவிடம் கூட சொல்லவில்லை.

இந்த நிலையில் திருமண நாளும் நெருங்கியது. நிச்சயம் வரை போயிருந்த ரவி அந்தப் பெண்ணை நேரில் பார்க்கவில்லை. அவன் அம்மா வழி உறவுப் பெண் என்பதால் எல்லாம் அவர்களின் ஏற்பாடுதான். இவன் தலையிடவில்லை.

தனக்கு மாலைக்கண் என்பது தெரிந்த பிறகும் எப்படி அந்தப் பெண்ணை மணப்பது என்று தவித்தான். உண்மையைச் சொல்லிவிடலாம் என்று யாருக்கும் தெரியாமல் அந்தப் பெண்ணைப் போய் பார்த்தோம். ரவி தன் நிலையைச் சொல்லி திருமணத்தை நிறுத்தச் சொன்னான்."

"அந்தப் பெண் என்ன சொன்னாள்?"

"அவள் படித்தவள். சுலபமாய் புரிந்து கொண்டாள். பரவாயில்லை. எனக்குச் சம்மதம் என்றாள். ஆனால்

ரவிதான் விடாப்பிடியாய் நின்று மறுத்து விட்டான். கண் தெரியாத என்னோடு ஒரு சினிமா போக முடியுமா? இரவில் உனக்கு ஒன்று என்றால் என்னால் என்ன செய்ய முடியும்? என்னைக் கட்டிக் கொண்டு உன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே. என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடு. உனக்கேற்ற மாப்பிள்ளையைப் பார்த்துத் திருமணம் செய்து கொள் என்று கூறி விட்டான்."

ஜோதியின் கண்களில் நீர் தளும்பிற்று. உதடு கடித்து அமைதியாய் நின்றாள்.

"திருமணமும் நின்று போயிற்று. பார்ப்பவர்கள் எல்லோரும் ஏன் எதற்கு என்று காரணம் கேட்டு வெறுப்பேற்றினர். ஏற்கனவே தன் நிலையை எண்ணி நொந்த ரவி தற்கொலை முடிவிற்கே போய் விட்டான்."

"என்ன?" அதிர்ந்து போனார் அப்பா.

"ஆமாம்ப்பா. நான்தான் காப்பாற்றினேன். பிறகுதான் எனக்கு நம்ம வெங்கட்ராமன் ஞாபகம் வந்தது. வேண்டாம் என்று மறுத்தவனை வற்புறுத்தி அழைத்து வந்தேன். உங்களிடம் ஊரைச் சுற்றிப் பார்ப்பதாகச் சொல்லிவிட்டு அவரிடம் அழைத்துப் போனேன். அவர் ரவியை நன்றாகப் பரிசோதித்து விட்டு இது மாலைக்கண் நோயல்ல. தவறான மருந்தை ஊற்றியதால் வந்த கோளாறு என்றார்."

"என்ன தப்பான மருந்தா? நீ டாக்டர்கிட்டதானே போனே?"

"ஆமாம்ப்பா! அவன் ஒரு போலி டாக்டரா இருந்திருக்கான். முதலிலே தெரியாமல் போயிற்று.



இன்றுதான் டாக்டர் வெங்கட்ராமன் ரிப்போர்ட் வந்த பிறகுதான் எல்லாம் புரிந்தது. இன்று பார்வையும் தெளிவாகத் தெரிகிறது என்கிறான்."

"இனி அந்த மருந்தை ஊற்றாமல் விட்டாலே சரியாகிவிடும் என்று சொல்லியிருக்கிறார். அதனால் பயப்பட வேண்டியதில்லை. நம் ஜோதியை தாராளமாகக் கொடுக்கலாம். அத்தே! உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீங்களும் அப்பாவும் நாளைக்கே போய் டாக்டர்கிட்ட விசாரித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு நம்பிக்கை வந்த பிறகு சம்மதம் சொன்னால் போதும்!" என சந்தோஷ் முடித்ததும் அனைவரும் இரக்கமும் அன்புமாய் ரவியைப் பார்த்தனர். மனோகரியின் முகத்தில் மட்டும் தெளிவு வரவில்லை.

"இதுக்காகத்தான் நீ நாங்க உன் நண்பனை மாப்பிள்ளையாகக் கேட்ட போதெல்லாம் வேண்டாம் என்று மறுத்தாயா?"

"ஆமாம்ப்பா! ரவி என் உயிர் நண்பன். அவனுக்கு ஜோதியைக் கொடுக்க எனக்குக் கசக்குமா? ஆனால் அவனுக்குள்ள குறை தெரிந்தால் நீங்கள் யாரும் சம்மதிக்க மாட்டீர்கள். அதோடு அவனை யாரும் பரிதாபமாகவோ ஏளனமாகவோ பார்ப்பதை என்னால் தாங்க முடியாது. அவன் மனவருத்தம் மாற வேண்டும் என்றுதானே இங்கு அழைத்து வந்தேன். வந்த இடத்தில் நம்மால் அவன் மனம் வருந்தலாமா? அதனால்தான் திருமணப் பேச்சை எடுக்கும் போதெல்லாம் மறுத்தேன்."

ரவி கணகலங்க நண்பனைக் கட்டிக் கொண்டான். "என்னை மன்னித்துவிடு நண்பா. நான் கூட உன்னைச்

சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஜோதியை எனக்குத் தர விரும்பவில்லை நீ என்றுதான் நினைத்தேன்."

"சேச்சே! உனக்கு நினைவிருக்கிறதா ரவி! நாம் இங்கு வந்தமுதல் நாளன்று ஏதோ ஒரு பெண்ணின் பாடலைக் கேட்டு மெய் மறந்து போனேன் என்றாயே. அன்று உன் முகத்தில் இருந்த மலர்ச்சியை இன்னும் நான் மறக்கவில்லை. அன்றே முடிவு செய்தேன். அது எந்தப் பெண்ணாக இருந்தாலும் உனக்கே மணமுடித்து வைக்க வேண்டும் என்று. அது நம் ஜோ என்று தெரிந்ததும்தான் உன்னை குணமாக்கியே தீருவது என்ற வைராக்கியம் எழுந்தது."

"எப்படியோ என் வாழ்க்கையையும் என் வாழ்க்கைத் துணையையும் நீதான் எனக்குத் தந்திருக்கிறாய். நீ என் தெய்வம்!" ரவி உணர்ச்சிமயமாய்ப் பேச அவனை இடித்தான் சந்தோஷ்.

"டேய்! இப்போதைக்கு உன் தெய்வம் உன் மாமியார்தான். பார்! இன்னும் அவர்கள் மனம் இரங்கவில்லை. பேசாமல் அவர்கள் காலில் போய் விழு. மாமியார் என்றால் இன்னொரு அம்மாதான். அம்மா காலில் விழுவது தப்பில்லை. போய் விழு!" என்றான். மனோகரி அசையாமல் நின்றாள்.

"அதற்குள், இன்னும் என்னம்மா யோசனை உனக்கு. நம்ம புள்ளைங்க ஆசைப்பட்டுக் கேட்குதுங்க. நாமதானே அதுகளுக்கு நல்லதைச் செய்து வைக்கணும். ரவி தங்கமான புள்ளைம்மா. எந்தத் தயக்கமும் பயமும் இல்லாம நம்ம பொண்ணைக் கொடுக்கலாம். அம்மா



சொல்றேனில்ல. கேளுமா!" என்றார் பாட்டி. அப்போதும் மனோகரியின் முகம் தெளிவடையாமல் போகவே,

"வேண்டாம் பாட்டி! ஆன்ட்டியை யாரும் தொந்தரவு பண்ண வேண்டாம். அவங்க பெண்ணைப் பெத்தவங்க. அவங்க மனசு என்னை ஏத்துக்கலன்னா விட்டுடலாம். யாரும் கம்ப்பல் பண்ண வேண்டாம். அவங்க பொண்ணுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்த்துக் கட்டி வெக்கணும்னு அவங்களுக்கும் கனவு இருக்குமில்லையா? நான் அதைக் கெடுக்க விரும்பல்ல.

ஆன்ட்டி. நான் ஊருக்குக் கிளம்பிடுறேன். உங்களுக்கு என்னால எந்தக் கஷ்டமும் வராது. சின்ன வயசுல இருந்தே நீங்க ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்கீங்க. என்னால உங்க மனம் இன்னும் ரணப்பட வேண்டாம். உங்க விருப்பம் போல உங்கள் பெண்ணிற்குத் திருமணம் செய்து வையுங்கள். அதற்கு நான் ஒருபோதும் தடையாக இருக்க மாட்டேன். நான் இங்கேயே இருந்து உங்க யாரையும் சங்கடப்படுத்த விரும்பல்ல. நான் கிளம்புறேன். சந்தோஷ்! நான் லக்கேஜை எடுத்திட்டு வர்றேன். நீ காரை ரெடி பண்ணு!" என்றவாறு படிகளில் ஏறி பத்தே நிமிடத்தில் பேக்கோடு கீழே இறங்கினான்.

அவன் உண்மையாகவே புறப்பட்டுவிட்டான் என்பதை அறிந்து பதறி அவனைத் தடுக்க மற்றவர்கள் முயலும் முன்பே அனைவரிடமும் பொதுவாக விடை பெற்றுவிட்டு காரில் ஏறி அமர்ந்து கொள்ள, சந்தோஷ் காரை உசுப்பி வெளியேறினான். ஊர் விடிய ஆரம்பிக்க, ஜோதியின் முகம் இருண்டது.

# 14

ஒரு மடமாது உருகுகின்றாளே
உனக்கா புரியவில்லை - இது
சோதனையா நெஞ்சின் வேதனையா
உன் துணை ஏன் கிடைக்கவில்லை
நெஞ்சம் மறப்பதில்லை - அது
நினைவை இழக்கவில்லை!

**நா**ன்கே நாட்களில் மகள் பாதியாய் இளைத்துப் போனதில் பயந்துதான் போனாள் மனோகரி. ஓயாது பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் திரியும் பெண் இப்போது சிறகொடிந்த பறவையாய் முடங்கிப் போனதில் பெற்றவளின் மனம் தவித்தது. அப்படியென்றால் இந்தப் பெண் அந்தப் பையனைத்தான் விரும்புகிறாளா? அவனை நினைத்துத் தான் இப்படித் துரும்பாய் தேய்கிறாளா?

தான் நினைத்தது போல் தன் அண்ணன் மகனைத் தன் மகள் விரும்பவில்லையா? சந்தோஷ் ஊருக்கு வரும்போது கேலி, கிண்டல், சண்ட என்று வீடு கலகலப்பாக இருக்கும். அவன் திரும்பிப் போன பிறகும் இவள் இப்படி முடங்கிப் போவதில்லையே. எதையாவது பாடிக் கொண்டும் பாட்டியை வம்பிழுத்துக் கொண்டும் இயல்பாகத்தான் இருப்பாள்.

அப்படியென்றால் சந்தோஷ் சொன்னது போல இவர்களுக்கிடையில் எந்தவிதப் பிரியமும் இல்லையோ. ஒன்றுக்குள் ஒன்றாய் வளர்ந்ததில் ஏற்படும் பாசப் பிணைப்பை நான்தான் தவறாக எண்ணிக் கொண்டேனா? அன்று அத்தனை களேபரத்திலும் தன் மகள் அழுதாளே



தவிர, சந்தோஷை விரும்புகிறேன் என்று சொல்ல வில்லையே.

ரவியைத்தானே விரும்புகிறேன் என்று சொன்னாள். சந்தோஷை விரும்பிய தன் மகள் திடீரென இடையில் புகுந்தவன் மேல் மையல் கொண்டு மனம் தடுமாறிவிட்டாள். அவனால் ஏமாந்து போகக்கூடாது என்றுதானே மறுத்தேன். நான் நினைத்தது எல்லாமே தவறுதானோ!

சந்தோஷும் ரவியும் சென்று முழுதாய் நான்கு நாட்கள் ஆகியிருந்த போதும் அதுவரை யாரும் மனோகரியிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. எப்போதும் தோட்டம், வயல் வேலை என்று தன்னை வேலையில் அமுத்திக் கொள்வதால் மற்றவர்களிடம் ஏன் தன் மகளிடமே அதிகம் பேசுவதில்லை மனோகரி.

ஆனால் கூடவே இருக்கும் பாட்டி கூட மனோகரியிடம் பேசுவதைத் தவிர்க்கத் தோட்டத்திற்கே செல்லாமல் திண்ணையிலேயே படுத்துக் கொண்டாள். மற்றவர்கள் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்விட ஜோதியோ வெறித்த பார்வையோடு ஆற்றங்கரையில் காவல் கிடந்தாள்.

மகளைப் பார்க்கும் போதெல்லாம் மனம் பதறிப் போக, தன் தாயிடம் வந்தாள் மனோகரி. தாயின் காலடியில் அமர்ந்து கொண்டு, "அம்மா தூங்குறியா?" என்றாள்.

கண் விழித்தாள் பாட்டி. "நிம்மதியாத் தூங்குற மாதிரியா இருக்கு. விழிச்சுத்தான் இருக்கேன் சொல்லு."

"அம்மா! எம்புள்ளை ஏம்மா இப்படி இருக்கா? நாளுக்கு நாள் தேய்ஞ்சிட்டே போறாளே. எம்முகத்தைக்

கூட பார்க்க மாட்டேங்கிறாளே. நான் என்ன தப்பு செய்தேன். ஏன் என்கிட்ட யாரும் பேசமாட்டேங்கிறீங்க?"

பாட்டி மௌனமாய் இருக்க, "ஏதாவது சொல்லும்மா. இப்படி இருந்தா எப்படி?" எனக் கோபமாய்க் கேட்டாள் மனோகரி.

"நீ இப்படி இருந்துதானே அந்தப் பையனைப் போக வெச்சே. நாங்க எல்லாம் எத்தனை தரம் சொன்னோம். அந்தப் பையன் எவ்வளவு தன்மையாய் பேசினான். நீ வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினியா? மௌனமாய் இருந்தே சாதிச்சிட்டியே. உனக்கு விருப்பமில்லன்னு தானே அவன் போயிட்டான்."

"அம்மா! அப்படிச் சொல்லாதம்மா! அந்தப் பையனைப் புடிக்காம நான் அமைதியாக இருக்கல்லம்மா. நான் வேற நினைச்சிருந்தேன். அந்தக் குழப்பத்தில் தடுமாறி நின்னேன். அதுக்குள்ள அவன் போயிட்டான்."

பாட்டி மெல்ல எழுந்து அமர்ந்தாள். "உனக்கு என்னடி குழப்பம்?"

"இல்லம்மா! ஜோதிக்கு சந்தோஷை முடிக்கணும். அப்பத்தான் புள்ள நம்ம கண் முன்னே சந்தோஷமா வாழறதைப் பார்க்கலாம்னு நினைச்சிருந்தேன். அவங்களும் அப்படித்தானே பழகினாங்க. இவன்தான் நடுவுல வந்து நம்ம புள்ள மனசைக் கலைச்சிட்டான்."

"அடி கூறுகெட்டவளே! இதுதான் உன் புள்ளையக் கவனிச்ச லட்சணமா? நீ என்னிக்காவது அவகூடவே இருந்து அவ முகத்தைக் கவனிச்சுப் பேசியிருக்கியா? உன் புருஷன் மருந்தைக் குடிச்சது அவனோட கோழைத்தனம்.



அதுக்கு நீ பேசினது தான் காரணம்னு நீயா ஒரு காரணத்தை நினைச்சிக்கிட்டு யாருகூடயும் பேசுறதில்ல.

உன் பொண்ணை சின்ன வயசுல இருந்து தாயா, தகப்பனா கவனிச்சவன் என் பேரன். அவங்க மனசுல எப்படி வேற எண்ணம் வரும். நீ கூட இருந்து கவனிச்சிருந்தா உனக்குப் புரிஞ்சிருக்கும். நீதான் வீட்டுக்கு வர்றதே தூங்க மட்டும்தானே.

உன் பொண்ணு மனசிலயோ எம் பேரன் மனசிலோ கடுகளவும் கள்ளத்தனம் கிடையாது. ஒருத்தர் மேல ஒருத்தர் ஆசை வெச்சிருந்தா எப்படி அவனே இவளுக்கு மாப்பிள்ளை பார்ப்பான்? இவ கல்யாணத்தை முடிச்ச பிறகுதான் தனக்குக் கல்யாணம்னு ஏன் இத்தனை வருடம் காத்திருக்கான். அப்பவே புரிஞ்சிருக்க வேண்டாமா நீ?"

"அம்மா... நீ... நீ... என்ன சொல்றே?"

"ஆமான்டி. நீ உனக்கு ஒரு புள்ளை இருக்கிறதையே மறந்திட்டே. ஆனா அவன் ஜோதியை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து அவ சந்தோஷமா வாழறதைப் பார்த்த பிறகுதான் தன் கல்யாணம்னு ஒத்தைக்கால்ல நிக்கிறான்.

நம்ம வீட்டுக்கு வீரராகவன் அடிக்கடி வர்றாரே ஏன்னு தெரியுமா? அவர் பொண்ணுக்கு நம்ம சந்தோஷைக் கேட்டுத்தான். உன் அண்ணனுக்கும் அண்ணிக்கும் ரொம்ப ஆசைதான். ஆனா சந்தோஷ்தான் ஒத்துக்கல்ல. எதுக்காக? உன் மகளுக்காக... அவ கல்யாணம் நல்லபடியாக நடந்து முடியனுமேன்னு தன் கல்யாணத்தையே தள்ளிப் போடுறான். அது தெரியுமா உனக்கு?"

"இதெல்லாம் எப்போ நடந்ததும்மா?"

"அது ஆறு மாசமா நடக்குது. அவனும் எம் பேத்திக்கு எத்தனையோ மாப்பிள்ளை பார்த்திட்டுத்தான் இருக்கான். உனக்குத்தான் தெரியுமே வர்றவன் எல்லாம் என்ன சொல்லிட்டுப் போறான்னு..."

மனோகரிக்குக் கண்ணீர் குபுக்கென்று வந்தது. "பொண்ணோட அப்பா ஏன் தற்கொலை செய்தார்? புருஷன் பொண்டாட்டிக்குள்ள ஏதும் மனஸ்தாபமா? இல்லை பொண்டாட்டியோட நடத்தை பிடிக்காம செத்துப் போனாரா? தாயைப் போலத்தான் பெண்ணும் இருப்பாள். நாங்க வேற இடம் பார்த்துக்கிறோம் என்று சொன்னார்களே ஒரு மாப்பிள்ளை வீட்டார். மறக்க முடியுமா?"

"நடந்தது என்ன என்று தெரியாமலே சேற்றை வாரியிறைப்பவர்களை என்ன செய்வது? அழத்தானே முடியும்." பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்தாள் மனோகரி.

"அம்மா! அப்போ சந்தோஷிற்கு ஜோதி விருப்பம் இல்லையா?"

"ஒருபோதும் கிடையாது. அன்பு உண்டு. அதை நாம தப்பாக நினைத்தது தவறு. தன் நண்பன் விரும்புகிறான் என்றதும் எவ்வளவு சந்தோஷமாய் நம்மிடம் சொன்னான். அப்போதாவது நீ புரிந்திருக்க வேண்டாமா?

அந்த ரவி ஒண்ணும் சாதாரண ஆள் கிடையாது. நம்மைவிட பணத்திலும் அந்தஸ்திலும் உயர்ந்தவன்தானாம். அடிக்கடி சந்தோஷ் சொல்வான். அதைவிட குணத்தில் தங்கமாம். ஒரு கெட்ட பழக்கம் கிடையாதாம். அம்மா மட்டும்தான் இருக்கிறாளாம். அப்பா இறந்து சில வருடம் ஆகிறதாம்.



அதனால்தான் உன் வேதனை அவனுக்கும் புரிந்திருக்கிறது. அதோடு நம் விஷயம் எல்லாம் தன் நண்பனிடம் சொல்லிவிட்டானாம் உன் அண்ணன் மகன். எல்லாம் தெரிந்த பின்னும் ஒரு வார்த்தை தவறாகப் பேசாமல் நம் ஜோதியைத் திருமணம் செய்ய விரும்பினானே. அவனைப் போய் விரட்டி விட்டாயே. உன் மனம் வருந்தக்கூடாது என்றுதான் போனான். அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்.

உன் மகள் இங்கே துடிப்பது போல் அவன் அங்கே துடித்துக் கொண்டிருப்பான். இதோ பாருடி! நான் பேசினது தாளாமத்தான் எம் புருஷன் செத்தாருன்னு சொல்லியே. இப்போ பேசாம இருந்து அந்தச் சிறுசுகளைக் கொன்னுடாதடி. அதுக வாழ வேண்டிய பச்சை மண்ணுங்க."

மனோகரி அழ ஆரம்பித்தாள். முகத்தை மூடிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். தன் தவறை, அறியாமையை எண்ணி அழுதாள்.

**செ**ன்னை. தன் வீட்டில் கட்டிலில் படுத்திருந்தான் ரவி. தன் நெஞ்சோடு இருந்த பொருளைப் பார்த்தான். முதன் முதலாய் ஜோதியைப் பார்த்தபோது கிடைத்த வெள்ளை நிற கண்ணாடி வளையல் துண்டுகள். இறுதி வரை இது மட்டும்தான் தன்னுடன் இருக்குமா?

இந்த நெஞ்சில் ஜோதியை அணைத்துக் கொண்டு தூங்க மாட்டேனா. அவளது பால்முகத்தைப் பார்த்துக் கொண்டு அவளது இனிமையான பாடல்களைக் கேட்டுக் கொண்டு தன் வாழ்க்கையை வாழ்ந்து விடலாம் என்று நினைத்தேனே.

எல்லாம் கனவாகிப் போனதே. இனி அவளை எப்படிப் பார்ப்பது. அவளைப் பாராமல் இந்த நான்கு நாட்களே நான்கு யுகமாகிப் போய்விட்டதே. மீதம் உள்ள காலத்தை எப்படிக் கழிப்பது? ஜோதி அம்மாவிற்கு ஏன் என்னைப் பிடிக்காமல் போனது.

நானும் அவசரப்பட்டு வந்திருக்கக் கூடாதோ. பொறுமையாய் பேசி தன்னைப் பற்றி அவர்களுக்கு நம்பிக்கை வரும்படி பேசியிருக்க வேண்டுமோ. இல்லை ஒருவேளை அதுவே தன் மீது வெறுப்பை ஏற்படுத்தி இருக்கும். அது இன்னும் மோசமாகி விடும்.

இப்போது ஜோதி எப்படி இருப்பாள்? என்னையே நினைத்துக் கொண்டிருப்பாளோ? அன்று கண்ணீரோடு பின்னே ஓடிவந்தாளே. திரும்பியும் பாராமல் வந்து விட்டேனே. திரும்பி நின்று அவளைப் பார்த்தால் அவளை விட்டுவிட்டு வர முடியுமா?

ஏதோ வேகத்தில் கிளம்பி வந்துவிட்டாலும் வேலையில் மனம் செல்லவில்லை. இயல்பாய் நடமாட முடியவில்லை. தாயின் முகத்தை நேராய் சந்திக்க முடியவில்லை. ஒரு சில நாட்களே பார்த்துப் பழகிய ஒரு பெண்ணால் இத்தனை பெரிதாய் பாதிக்க முடியுமா? அலுவலகப் பொறுப்பை சந்தோஷிடம் ஒப்படைத்து விட்டு அறைக்குள்ளே அடைந்து கிடக்கும் மகனை எண்ணிக் கலங்கினாள் தாய்.

அம்மாவை நினைக்கையில் வருத்தமாகத்தான் இருந்தது. பேசாமல் அம்மாவிடம் சொல்லி அம்மாவை அழைத்துக் கொண்டு போய் ஜோதியைப் பெண் கேட்கலாமா? பெரியவர்கள் முறைப்படி பேசினால் ஏற்றுக்கொள்வார்கள்தானே.



எப்படியும் ஜோதி இல்லாமல் வாழ முடியாது. அது தெளிவாகப் புரிந்தது. காரணம் புரியாமல் தவிக்கும் அம்மாவையும் தவிக்க விடக்கூடாது. நடந்தவற்றை அம்மாவிடம் சொல்லி முடிவை அம்மாவிடமே விட்டுவிடலாம்.

ஒரு முடிவுடன் எழுந்து, கையிலிருந்த வளையல் துண்டுகளைச் சட்டைப் பையினுள் போட்டுவிட்டு அறைக் கதவைத் திறந்து வெளியே வரவும், சந்தோஷ் அவசரமாக உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

"ரவி! அம்மா! ரெண்டு பேரும் சீக்கிரமா கிளம்புங்க. உடனே என் வீட்டுக்குப் போறோம். வெகு அவசரம்!" ரவி பதறிப் போனான்.

"சந்தோஷ் என்னாச்சு? எதுவும் அபசகுணமாய் நடந்துவிட்டதா? ஜோவுக்கு எதுவும்... ஒன்றும் ஆகிவிடவில்லையே."

"யாருப்பா ஜோ! என்ன சந்தோஷ்! ஏன் உடனே கிளம்பணும்? என்ன விஷயம்?" புரியாமல் கேட்டாள் வசந்தா.

"அம்மா! நின்னு பேச நேரமில்ல. உடனே கிளம்புங்க. எல்லா விபரமும் கார்ல போகும்போது சொல்றேன். நாம உடனே போயாகணும்!" சந்தோஷின் அவசரம் ரவியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

**மா**லைச் சூரியன் மறைந்து கொண்டிருந்தது. வானம் முழுக்க ஆரஞ்சு நிறமாய்த் தோன்ற அதையே வெறித்துக் கொண்டிருந்தாள் ஜோதி. ஆற்றில் நீராடியவர்கள் குளிரத் தொடங்கியதும் எழுந்து வெளியேறினர். சற்று நேரத்தில் சலசலப்பு மறைந்து அமைதியானது.

காற்றில் குளிர் சேர்ந்து கொள்ள, மெல்ல எழுந்து முதன் முதலாய் ரவியைப் பார்த்த ஆலமரத்தின் அருகே வந்தாள். இதோ இந்த மறைவில் இருந்துதானே என்னைப் பார்த்தார். அந்த மரத்தை ஆசையாய் வருடினாள். ரவியின் முகத்தை வருடியது போல் சிலிர்த்தது. தூரத்தில் யாரோ வருவது தெரிந்தது.

"யாரு? மனோகரி மகளா? என்ன கண்ணு இருட்டிப் போன நேரம் இங்கன நிக்குற?" என்றவாறு வந்தாள் செல்லம்மா பாட்டி. வேலை முடிந்து சுள்ளிக் கட்டோடு வீடு திரும்பிக் கொண்டிருந்த பாட்டியைக் கண்டதும் மனம் பாரமானது. இன்றைய சூழ்நிலையில் நானும் செல்லம்மா பாட்டியும் ஒன்றுதானே. இருவருமே இணையைத் தேடிக் காத்திருக்கும் பறவைகள்தானே.

"சும்மாதான் பாட்டி. அப்படியே காத்து வாங்கலாமேன்னு..."

"அதான் நாள்பூரா வாங்கலாமே. இப்படி இருட்டின பிறகு இங்கெல்லாம் வராத கண்ணு. வயசுப்புள்ள. காத்துக்கருப்பு படாம வீட்டோட இருக்கணும்."

"சரி பாட்டி! நீங்க போங்க. நான் வர்றேன்."

"சரி ஆத்தா. நான் வாறேன். மாலை மயங்கிப் போச்சு. இருளும் சூழ்ந்து போச்சு. தூரம் போன மச்சான் பாதை வழி மறந்து போச்சோ. பச்சைக்கிளி நான் இங்க காத்திருக்க என் மவராசா வர தாமதமேன்..." - செல்லம்மா பாடிக் கொண்டே சென்றுவிட, ஜோதியின் கண்களில் நீர் தளும்பிற்று.

"பாட்டி! நீ இன்னும் எத்தனை காலம் இப்படி பாட்டுப் பாடிட்டே காத்திருப்பியோ! இதோ உனக்கு அடுத்த வாரிசு



உருவாகி விட்டது. நானும் உன்னை மாதிரி காடு கழனின்னு பாடிப்பாடி என் ரவியைத் தேடியே என் ஆயுசு முடிஞ்சிடும் போலிருக்கு."

"அதெப்படி? உன்னை அப்படி விட்டுவிடுவோமா? உன் பாட்டைக் கேட்டு நம் ஊரே காலியாகி விடுமே. இத்தனை வருடமாய் வாழ்ந்த மக்களை ஊரை விட்டு ஓடிப் போக விடுவோமா?" என்ற குரலில் துள்ளித் திரும்பினாள்.

"சந்தோஷ் நீயா? நீ எப்போ வந்தே? நீ மட்டுமா வந்தே?" ஆவலாய் அவன் பின்னே தேடினாள் ஜோதி.

"பின்னே? உன்னைத் தேடி மாப்பிள்ளை வீட்டுக் காரங்களையுமா கூடவே கூட்டிட்டு வர முடியும். இருட்டிடுச்சு. சீக்கிரம் வா. அங்கே மாப்பிள்ளை வெயிட்டிங்."

ஜோதியின் சிரிப்பு சட்டென மறைந்தது. "மாப்பிள்ளையா? என்ன உளர்ற?"

"இதுல உளர என்ன இருக்கு. மாப்பிள்ளை என் ஃபிரெண்ட்தான். உன்னைப் பத்தி எல்லாத்தையும் சொல்லிட்டேன். நீ பாட்டுப்பாடி எல்லாரையும் கொல்றதைக்கூட சொல்லிட்டேன். உடனே கிளம்பிட்டான். கட்டுனா உன்னைத்தான் கட்டுவானாம். கடைசி வரை உன்னைப் பாட வைத்துக் கேட்டுக் கொண்டே இருப்பானாம். அவன் காது என்ன பாவம் பண்ணியதோ?"

"சந்தோஷ். வாயை மூடு. நான் உன்னிடம் கேட்டேனா எனக்கு மாப்பிள்ளை பார் என்று."

"இது நல்ல கதையா இருக்கே. வீட்டுப் பெண்கள் கேட்டா நாங்கள் மாப்பிள்ளை பார்ப்போம். நல்ல பையனா கிடைத்தால் பேசி முடிக்க வேண்டியதுதான். முதலில் வீட்டுக்கு வா."

"நான் வரமாட்டேன். அவர்களைப் போகச் சொல். அப்புறம் வர்றேன்."

"அந்த மாப்பிள்ளை லேசுப்பட்டவனில்லை. உன்னைக் கட்டிக் கொண்டுதான் இந்த ஊரை விட்டே போவானாம். பேசாமல் வா."

"அவனிடம் போய்ச் சொல். இந்தப் பிறவியில் நான் அவனுக்குக் கிடைக்க மாட்டேன் என்று."

"நல்லா யோசிச்சு சொல்லு ஜோ. அவன் வேண்டாமா உனக்கு?"

"எவனும் எனக்கு வேண்டாம். நான் கல்யாணமே செய்யப் போவதில்லை!" உறுதியாக மறுத்தாள் ஜோதி.

"நீ கொடுத்து வெச்சுது அவ்வளவுதான். ரவி! வாடா உனக்கு இவளைவிட நல்லா பாடுற அழகான பொண்ணை நான் உனக்குப் பார்க்கிறேன். வா நாம ஊருக்குப் போகலாம்!" சந்தோஷ் அருகிலிருந்த ஆலமரத்தை நோக்கிப் பேச மரத்தின் பின்னே இருந்து ரவி நகர்ந்து வந்தான்.

ஜோதி மூச்சு விடவும் மறந்து போனாள். கண்ணெதிரில் ரவியைப் பார்ப்போம் என்று துளியும் எதிர்பாராததில் பேச்சற்றுத் திணறினாள். கண்களில் நீர் சுரந்து பார்வையை மறைத்தது.

கண்ணீர்ப் பெருக்குடன் சந்தோஷின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள். "தேங்க்ஸ்டா தேங்க்ஸ். எங்கே இவரைப் பார்க்காமலே உயிரை விட்டு விடுவேனோ என்று நினைத்தேன். தேங்க்ஸ்டா."

சந்தோஷின் கண்களும் கலங்கின. சமாளித்துக் கொண்டு, "போதும் என்னை விட்டு விடு. உன்னைப் பார்க்க



முடியாமல் சேதுவாகப் போன என் நண்பனைக் கவனி. நான் முன்னே போகிறேன்!" என்றவாறு சற்று முன்னே சென்று நின்று கொண்டான்.

பொழுது நன்றாக இருட்டிப் போயிருக்க, நிழல் உருவமாய் நின்ற ரவியைக் கட்டிக் கொண்டாள் ஜோதி. அவனும் பேச்சற்று அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

"பார்த்துடா, வளையல் குத்திடப் போகுது." திரும்பியும் பாராமல் சந்தோஷ் சொல்ல, இருவரும் பதறி விலகினர்.

"ஏய், பெரிய இவனாட்டம் நகர்ந்து போயிட்டு அங்கே இருந்து எங்களைப் பார்க்கிறியா?" ரவி கேட்க,

"சேச்சே, அந்தக் கெட்ட பழக்கமெல்லாம் எனக்குக் கிடையாதுப்பா. எத்தனை சினிமா பார்க்கிறோம். அதுல வர்ற ஹீரோ, ஹீரோயின் பண்றதைத் தானே நீங்களும் பண்ணுவீங்க. குத்துமதிப்பாச் சொன்னேன்!" என்றான் சந்தோஷ்.

"சரி, அது என்னடா வளையல் குத்திடும்னு சொல்றே. நான் என்ன உடைந்த வளையலா போட்டுட்டு இருக்கேன்."

"நீ போடல்ல ஜோ. பட், நீ உடைச்சுப் போட்ட வளையல் எப்பவும் உன் அவர் சட்டைப் பாக்கெட்டுலயே இருக்கும். தூங்கும்போது அவரோட தலையணைக்கடியில இருக்கும். உண்டா, இல்லையான்னு கேள்."

"அடப்பாவி, எல்லாமே உனக்குத் தெரிஞ்சுப் போச்சா?" ரவி பதறினான்.

"ஆமா, இது பெரிய தங்கமலை ரகசியம். இதைக் கூட நாங்க சினிமாவில பார்த்திருக்கோம். சரி வாங்க.

வீட்ல எல்லோரும் காத்திட்டு இருப்பாங்க. இப்ப நாம போகலைன்னா நம்மளத் தேடி வந்திடுவாங்க!" என்றவாறு முன்னே நடந்தான் சந்தோஷ்.

ரவி ஜோதியை நெருங்கி அவளது கைகளைப் பற்றிக் கொள்ள, இருவரும் பூரிப்புடன் இணைந்தே அவனைப் பின் தொடர்ந்தனர். நம்ப முடியாமல் அவனை நிமிர்ந்து பார்த்தாள் ஜோதி.

"ரவி, இதெல்லாம் நிஜம்தானே. எப்படி? எப்படி நடந்தது. அம்மா... அம்மா எப்படி ஒத்துக் கொண்டார்கள்?"

"எல்லாம் சொல்கிறேன். ஆனால் இப்போதல்ல..."

"பிறகு, பிறகுதான். நம் திருமணத்துக்குப் பிறகு முதல் இரவில் அனைத்தையும் சொல்கிறேன்!" ரவி கிசுகிசுப்பாய் சொல்ல ஜோதியின் முகம் வெட்கத்தால் சிவப்பதை அந்த இருட்டிலும் கண்டு கொண்டான் ரவி.

"ஜோ...."

"ம்!"

"ஒரு பாட்டுப் பாடேன். கேட்கணும் போல இருக்கு."

"காதோடுதான் நான் பாடுவேன்
மனதோடுதான் நான் பேசுவேன்
விழியோடுதான் விளையாடுவேன்
உன் மடி மீதுதான் கண் மூடுவேன்!"

ஜோதியின் மென்மையான குரலில் அவளது கைகளை இறுகப் பற்றிக் கொண்டான் ரவி. அந்தப் பற்றுதலில் அன்பு, நேசம், ஆசை அனைத்தும் கலந்திருந்தது.